


*விவரிக்க முடியாத அன்பு*

*வேதப்பாட கையேடு*

*பதிப்புரிமை (C) ரெவலேஷன் வெளியீடு*

*உலகளாவிய காப்புரிமைப் பெற்றது*

*வினியோகத்திற்கு அனுமதிக்க நிபந்தனைகள்*

நீங்கள் இதை நகலெடுத்து மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொள்ளவில்லை என்றால் நீங்கள் கர்த்தருக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும் என்பதே எங்களுடைய அர்ப்பணிப்பு, எனவே காப்புரிமை -இலவசமாக நீங்கள் இதை

பகிர்ந்துக்கொள்ள கீழ்காணும் நிபந்தனைகளுடன் உங்களை உற்சாகப்படுத்துகிறோம். இந்த கையேடானது பிடிஎப் முறையில் சேமித்து வைத்துக்கொள்ளலாம் அல்லது பகிருதலுக்கு நகலோ மற்றும் அச்சுப்பிரதியோ எடுத்துக்கொள்ளலாம். அவைகள் விற்கப்படக்கூடாது, அல்லது எவ்வகையிலும் மாற்றப்படக்கூடாது மற்றும் இந்த காப்புரிமை அறிவிக்கையானது ஒவ்வொரு நகலிலும் கண்டிப்பாக இடம்பெற வேண்டும்.

**www.RevelationPublications.com**

**PublisherForGod@gmail.com**

கேள்விகளும் தொகுப்பும் மெர்லின் பீர்மேன்.
ஈ.ஜி. வொய்ட் வெளியீடுகளின்
புத்தகங்களிலிருந்து விளக்கவுரைகள்
தொகுக்கப்பட்டுள்ளன.
அட்டைப்பட சித்தரிப்பு – (C) Bigstockphoto.com
உள் சித்தரிப்பு -மெர்லின் பீர்மேன்.

ISBN 978-1-934924-14-3

வினாக்களுக்கான விடைகள் பரிசுத்த வேதாகமம் (TAOVBSI)
பதிப்புரிமை © 2017 பைபிள் சொசைட்டி ஆஃப் இந்தியா-லிருந்து எடுக்கப்பட்டது.



## பாடம் 1

## அன்பு என்றால் என்ன?

(1) **அவருடைய குமாரனின் வெகுமதியால் கொடுக்கப்பட்ட அன்பின் ஒரே உண்மையான மற்றும் நம்பகமான விளக்கம் எது?**

*தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (1யோவான் 4: 16)*

தேவனை குறித்து வேதம் எவ்வாறு விளக்குகிறது? "தேவன்" அன்பாக இருக்கிறார்." இந்த உலகத்திற்கு கிறிஸ்துவை கொடுத்து, தம்முடைய அன்பை மனிதகுலத்திற்கு வெளிப்படுத்தினார்.

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" ஆம், "நித்திய ஜீவனை தந்தார்". நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிற அன்பு இது தான். வீழ்ச்சியடைந்த மனிதருக்காக மனதுருகுகிற ஒருவன், ஒரு நோக்கத்திற்காக நேசிக்கிற ஒருவன், தன்னுடைய அன்பை கிறிஸ்துவைப்போன்ற நடக்கைகளில் காட்டுகிறவன், காணப்படாத தேவனைக் குறித்து சகிப்புத்தன்மைக் கொண்டிருப்பான். அவன் தேவனை அறிய வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் தன் சக மனிதனைநேசிக்கிறவன். பிதா தங்களுக்கு எவ்வளவாக

செய்திருக்கிறார் என்று தேவனை பற்றி அறியாதவர்களை அவன் நேசிக்கமாட்டான். நம்முடைய சபைகளில் உண்மையான உற்சாகம் குறைந்துக் காணப்படுவதற்கு இதுவே காரணம். இறையியலானது கிறிஸ்துவின் அன்பினால் நனைக்கப்பட்டிருக்காவிட்டால் அதற்கு ஒரு மதிப்பும் கிடையாது.

(2) தேவனைப்பற்றியும் அவருடைய பூரண அன்பைப் பற்றியும் நம் அறியும்போது,
அவரை குறித்து எது நம்முடைய மனதை விட்டு அகன்றுப்போகிறது?

*அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. (1 யோவான் 4:18)*

தேவன் அன்பாக இருக்கிறார் என்பது ஒரு வெளிப்பாடு, ஏனென்றால் மனிதர்கள் சத்தியங்களை தாங்களாகவே ஒருபோதும் கண்டுபிடித்துக்கொள்ள முடியாது. இந்த வெளிப்பாடானது மனிதனுடைய நலனுக்கான அதி முக்கியமான வெளிப்பாடாகும். தேவன் ஆவியாக இருக்கிறார் (யோவான்4:24) என்பது முக்கியமான ஒன்று, ஆனால் ஒரு ஜீவியுடனான நம்முடைய சந்தோஷமான உறவின் சாத்தியக்கூறுகளை பற்றி அது எதுவும் கூறுவது கிடையாது. "தேவன் ஒளியாக (1 யோவான் 1:5) இருக்கிறார்" என்பது அறிவுப்பூர்வமாக திருப்தியளிக்கக்கூடியது, ஆனால் அனைத்திலும் பரிசுத்தமான, எல்லாவற்றையும் காண்கிற தேவனானவர் ஆறுதலுக்கு பதிலாக

பயத்தையே தருவார், ஏனெனில் ஒளியான தேவன் நம்மை வெளிச்சத்தில் பார்க்கும்போது அவர் நம்மில் எந்த நன்மையை காணக்கூடும்? ஆனால் தேவன் அன்பாக இருக்கிறார் என்று நாம் கற்றுக்கொள்ளும்போது, பயத்திற்கு பதிலாக நம்பிக்கை இடம்பெறுகிறது, மேலும் பரலோக பிதா நம்மை விசாரிக்கிறார் (1 பேதுரு 5:7) என்று அறிந்து, நம்முடைய பரலோகப் பிதாவின் கரங்களில் நம்மை நம்பிக்கையுடன் அர்ப்பணிக்க கூடும்.

(3) தேவனுடைய மாறாத அன்பு மற்றும் இரக்கம் எவ்வளவு காலம் நம்மை தாங்கும்?

*பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன். (எரேமியா 31:3)*

தேவன் அன்பாக இருக்கிறார் என்பது அவர் அன்பில் இருந்திராதக் காலம் அல்லது அன்பாயிராதக் காலம் ஒன்று இருக்காது என்பதை சுட்டிக்காட்டுகிறது. அவருடைய பண்புகள் மாறாதது; கடந்தக் காலத்தில் இருந்த அவருடைய அன்பின் ஆதிக்கமானது எதிர்காலத்திலும் தொடரும். நாம் அதை நம்முள்ளே சான்றுப்படுத்தக்கூடும், தேவனுடனான உறவை குறித்து “அன்பினாலே உமது இயல்பும் உமது நாமமும் நித்திய காலமாய் நிரூபிப்பதற்கு நிரூபிக்கப்படுகிறது” என்று சார்ல்ஸ் வெஸ்லி கூறுகிறார்.

(4) தமதுஅன்பினாலே தேவன் நம்மை நுண்ணறிவுடன் அவருடைய சாயலாகவும் தெரிவுச்செய்யும்

உரிமையோடும் சிருஷ்டித்தார், இதன் காரணமாக அவரோடு இணைந்து நாம் எதை செய்ய வேண்டுமென்று வினவுகிறார்?

*"வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்". (ஏசாயா 1:18)*

தேவன் அன்பாக இருக்கிறார் என்று கருத்தானது இரட்சிப்பின் திட்டத்தை புரிந்துக்கொள்வதில் எல்லையற்றதாக இருக்கிறது. அன்பு மட்டுமே அவருடைய சிருஷ்டிகளுக்கு சுதந்திரமான விருப்பத்தைத் தருவதோடு, தேவனுக்கும், தேவதூதர்களுக்கும், மற்றும் வீழ்ச்சியடைந்த மனிதர்களுக்கும் பாவம் கொண்டு வந்த துன்பங்களை ஏற்படுத்தும் அபாயத்தை கொண்டு வந்தது. தங்கள் சொந்த வழியில் சுதந்திரமாக செல்பவர்களின் மகிழ்ச்சியான தன்னார்வ சேவையைப் பெறுவதில் அன்பு மட்டுமே ஆர்வம் காட்டுவதாக இருக்கும். பாவம் வந்தப்போது அன்பு மட்டுமே பொறுமையோடிருந்து, பாவம் வந்தபோது, நன்மைக்கு தீமைக்கும் இடையிலான பெரும் விவாதத்தின் அடிப்படை சத்தியங்களைப் பற்றி முழுமையாக புரிந்துக்கொள்ள, இந்த உலகத்திற்கு உதவும் ஒரு திட்டத்தை வகுப்பதற்கான பொறுமையும் விருப்பமும் அன்புக்கு மட்டுமே இருக்க முடியும், மேலும் இதனால் சுய-தேடுதல் மற்றும் வெறுப்பு ஆகியவற்றின் மேல் அதிக எழுச்சிக்கு எதிராக உறுதி செய்யும்.

பாவத்திற்கு எதிரான போரில், தேவன் உண்மையிலேயே அன்பாக இருப்பதால், சத்தியத்தையும் அன்பையும் மட்டுமே பயன்படுத்த முடியும், அதேசமயம் சாத்தான் தந்திரமான பொய்களையும் கொடூரமான சக்தியையும் பயன்படுத்துகிறான்.
மனித இனத்தை தமது பூமிக்குரிய வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றால் பாவத்தின் குற்றத்திலிருந்தும் வல்லமையிலிருந்தும் மீட்பதற்கு குமாரனை அனுமதிக்கும் திட்டத்தை முதலில் அன்பால் மட்டுமே தூண்ட முடியும், பின்னர் அவரை ஒரு புதிய மற்றும் பாவமற்ற இனத்தின் தலைவராக்கினார் (cf. on v. 9).
அவருடைய இயல்பால், இந்த அற்புதமான திட்டத்தை வகுக்கவும் செயல்படுத்தவும் தேவன் தூண்டப்பட்டார் (யோவான் 2:16).

(5) தேவன் அன்பாக இருக்கிறப்படியால் நம்முடைய கிறிஸ்தவ அனுபவத்தின் மிகப்பெரிய மற்றும் அடிப்படையான மூலக்கூறு எது?

*இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.*
*(1 கொரிந்தியர் 13:13)*

தேவனுடைய அனைத்து தன்மைகளையும் உணருகையில், தேவனுடைய இயல்பை விவரிக்க அன்பு ஒன்றே தூண்டுகோலாக பயன்படுகிறது, இந்த அன்பை ஆவியின் வரங்கள் எல்லாவற்றிலும் விட மிகப் பெரியது என்று பவுல் ஏன் கூறுகிறார் என

பார்ப்பது மிகவும் எளிது (1 யோவான்4:7, 8, 16).

ஒரு வாழ்க்கை முறையாக பார்க்கும்போது, 1கொரிந்தியர் 12 ஆம் அதிகாரத்தில் கணக்கிடப்பட்டுள்ள ஆவியின் பல்வேறு வரங்களை பெற்றுக்கொள்வது மற்றும் அதை பயிற்சிப்பதைப் பார்க்கிலும், அன்பு மிகவும் பயனுள்ளதாகவும், அதிக வெற்றியைப் தருகிறதாகவும் மற்றும் திருப்திகரமாகவும் இருக்கிறது. (1 கொரி. 12:31 ஐக் காண்க). தேவனுக்கும் நம்முடைய சக மனிதர்களுக்குமான அன்பு தேவனுடனான இணக்கத்தின் மிக உயர்ந்த வெளிப்பாடாகும் (மத் 22: 37-40; 8T 139 ஐப் பார்க்கவும்).
விசுவாசியின் வாழ்க்கையில் வாழ்கின்ற அன்பானது ஒருவருடைய கிறிஸ்தவத்தின் நேர்மைக்கான பெறும் பரிசோதனையாகும். ஒரு

கிறிஸ்தவனாக வாழ்வதென்பது “நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்த” கிறிஸ்துவை போன்றிருப்பதாகும். (அப்போஸ்தலர் 10:38). கிறிஸ்தவர்கள், இயேசுவின் ஆவியால், தேவையிலுள்ளவர்களுக்கு உதவி செய்கிறவர்கள். அவர்கள் அதை சுய-ஆர்வத்தோடு செய்யாமல், தேவனுடைய அன்பு அவர்களுடைய இருதயத்தில் இருக்கிறப்படியால் அவர்களுடைய இருதயத்தை வேறு காரியங்கள் எதையும் செய்வதற்கு சாத்தியமற்றதாக்குகிறது

அன்பு ஒரு தலைச் சிறந்த வழியாகும், ஏனெனில் அதன் நடைமுறை வெளிப்பாடானது அனைத்து மனிதர்களின் நித்திய முடிவை தீர்மானிக்கும் பரிசோதனையாகும். விதிமுறைகள் மற்றும் சடங்காச்சார

அனுசரிப்புகளுடன் வெளிப்புறமாக இணங்குபவர்களின் மதமானது தேவனுக்கு ஏற்கத்தக்க மதமல்ல என்று விரைவில் கண்டறியப்படும்.

சுய வெறுப்பின் அன்பு, விசுவாசிகளின் மத்தியில் ஐக்கியத்தை உண்டுப்பண்ணி மனித குலத்தை இரட்சிக்க தேவன் இந்த உலகத்திற்கு தம்முடைய குமாரனை அனுப்பினார் என்று ஏற்றுக்கொள்ள வைக்கிறது. சுவிசேஷத்தின் சத்தியத்திற்கு சாட்சியம் அளிக்க தேவன் தம்முடைய மக்களுக்காக தேர்ந்தெடுத்த முறை இதுவாகும் (யோவான் 17:21, 23 ஐப் பார்க்கவும்). இப்படிப்பட்ட அன்பு, சுயத்தை உயர்த்தவோ, நியாயப்படுத்தவோ அல்லது திருப்திப்படுத்தவோ விரும்பாது, மாறாக தேவையில் உள்ளவர்களுக்கு தன்னலமற்ற ஊழியத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கும், மனமாற்றமடையாத மனிதர்களால் இதனை பெற முடியாது என்பதே வாதம். தங்கள் வாழ்க்கை தத்துவத்திற்கு புரியாத ஒன்றை அவர்கள் அதில் பார்க்கிறார்கள். அவர்களுடைய இருதயம் தொடப்பட்டிருக்கிறது, மற்றும் மனமாற்றமடைந்த மனிதர்களின் வாழ்க்கையில் தெய்வபக்தியின் வல்லமை இருப்பதற்கான ஆதாரங்களுக்கு அவர்களின் புத்திசாலித்தனம் பதிலளிக்கிறது. இவ்வாறு அன்பு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கும் தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டியெழுப்புவதற்கும் மிகச் சிறந்த வழியாக இருக்கிறது. {6BC 785-786}

(6) முன்னுரிமையின் அளவையும், அன்பின் அடையாளத்தையும் இந்த வசனம் எவ்வாறு விவரிக்கிறது?

*இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். (கொலோசேயர் 3:14)*

தேவனிடம் அன்புகூருவது, அண்டை வீட்டாரிடம் அன்பு செய்வது மனிதனின் முழு கடமையை கட்டமைக்கிறது. சகோதர இரக்கம் இல்லாமல், அன்பின் கிருபையை நாம் தேவனிடமோ அல்லது சக மனிதர்களிடமோ வெளிப்படுத்த முடியாது.

அறிவிற்கெட்டாத ஒரு அன்பை கிறிஸ்து அளிக்கிறார். இந்த அன்பு நம் வாழ்க்கையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய ஒன்றல்ல, மாறாக அது முழு வாழ்வையும் கட்டுப்படுத்த வேண்டிய ஒன்று. இந்த கிருபையின் கிரீடத்தை பெற்றவர்கள் மாத்திரமே கிறிஸ்தவர்கள் செல்லப்போகிற பரலோகத்தை பெற முடியும்.
இது ஆத்துமாவில் பரவும் ஒரு புதிய பாசம். பழையவைகள் பின்னால் தள்ளப்பட்டன. அன்பே கட்டுப்படுத்தும் பெரும் சக்தி. அன்பு வழிநடத்தும்போது, மனம் மற்றும் ஆவியின் அனைத்து திறன்களும் பட்டியலிடப்படுகின்றன. தேவனிடம் அன்பு, மனிதனுக்கு அன்பு என்பது பரலோகத்திற்கு ஒரு தெளிவான தலைப்பைக் கொடுக்கிறது.

(7) தீர்க்கதரிசனங்கள், அந்நிய பாஷைகள் மற்றும் அறிவு ஆகியவை ஓய்ந்துப்போனாலும், ஒருபோதும் அழியாது என்பதைப் பற்றி நாம் என்ன எண்ணக்கூடும்?

*- நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற*

*வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன். (1 கொரிந்தியர் 13:8)*

உண்மையான அன்பு ஒரு இலை அல்லது பூவைப் போல உதிராது (யாக்கோபு 1:11; 1 பேதுரு 1:24 ஐக் காண்க).

சூரிய ஒளி இருக்கும் நேரத்தில் ஒரு மலர் அதன் நறுமணத்தையும் அழகையும் அளிக்கும் போது, அது அதன் நோக்கத்தை நிறைவேற்றிவிடுகிறது, அதன் பின்னர் குளிர்ந்த காற்று மற்றும் உறைபனி அதை வாடச் செய்து, தாவரத்திலிருந்து விழச் செய்துவிடுகிறது ஆனால்,

அன்பு அப்படி அல்ல. மன அழுத்தம் மற்றும் கஷ்டத்தின் நாட்களிலும் மற்றும் அனைத்தும் ஒளிமயமாகவும், நியாயமாகவும் இருக்கும்போது, அன்பு எப்போதும் ஒரே மாதிரியாகவே இருக்கும், அது நம்பிக்கை, மற்றும் விசுவாசத்தின் மணத்தை சுற்றிலும் வீசச்செய்யும். அது அவ்வாறு தான் இருக்க வேண்டும், ஏனென்றால் அன்பு என்பது நியாயப்பிரமாணத்தின் அடித்தளம், தேவனுடைய நியாயப்பிரமாணம் நித்தியமானது (சங். 119: 160; மத் 5:17, 18; லூக்கா 16:17 ஐக் காண்க).

ஒவ்வொரு விசுவாசியும் ஆவியின் இந்த கனியை வளர்த்துக்கொள்ளும்படி கட்டளையிடப்படுகிறார்கள், மேலும் அன்பு ஏற்பாடு செய்யாத ஒவ்வொரு வாழ்வும் எந்த அனுபவத்தையும் தர முடியாது என்று ஒவ்வொரு விசுவாசியும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்; எல்லா பிரச்சினைகளையும் தீர்க்க அன்பை எல்லா நேரங்களிலும் நம்பலாம்.

(8) அன்பு தேவனுடைய குணாதிசயமாக இருக்கிறப்படியால், அவருடைய அரசாங்கத்தின் நான்கு பண்புகள் யாது?

*நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும். (சங்கீதம் 89:14)*

தேவனுடைய அன்பானது அவருடைய இரக்கத்தில் எவ்விதத்திலும் குறைவில்லாமல் நீதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நீதியானது அவருடைய சிங்காசனத்தின் அஸ்திபாரமாகவும், அவருடைய அன்பின் கனியாகவும் இருக்கிறது. சத்தியம் மற்றும் நீதியிலிருந்து அன்பை விலக்கிவிட செய்வதே சாத்தானின் நோக்கம். தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் நீதியானது சமாதானத்தின் விரோதி என நிரூபிப்பதற்கு அவன் எத்தனிக்கிறான். ஆனால் தேவனுடைய திட்டத்தில் அவைகள் பிரிக்க முடியாதப்படி இணைந்திருப்பதை கிறிஸ்து காட்டுகிறார்; ஒன்றில்லாமல் மற்றொன்று இருக்க முடியாது. “கிருபையும், சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்”. (சங்கீதம் 85:10).

தேவனுடைய நீதி அவருடைய இரக்கத்தை அழிக்கவில்லை என்பதை தம்முடைய வாழ்வு மற்றும் மரணத்தின் மூலம் கிறிஸ்து நிரூபித்தார், ஆனால் பாவம் மன்னிக்கப்படக்கூடும், நியாயப்பிரமாணம் நீதியானது, மற்றும் நியாயமானது, மேலும் முழுமையாகக் கீழ்ப்படியத்தக்கது. சாத்தானுடைய குற்றச்சாட்டானது மறுக்கப்பட்டது. கிறிஸ்துவின் கிருபையும்

தேவனுடைய நியாயப்பிரமாணமும் பிரிக்க முடியாதவை. இயேசுவில் இரக்கமும் சத்தியமும் ஒன்றாகச் சந்திக்கப்படுகின்றன. {AG 74}

(9) **தேவன் அன்பாக இருக்கிறப்படியாலும் அவருடைய அரசு அன்பின் அடிப்படையில் இருக்கிறப்படியாலும், அன்பையும் நியாயப்பிரமாணத்தையும் இந்த தொகுப்பு எவ்வாறு சமன்படுத்துகிறது?**

*அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. (ரோமர் 13:10)*

தேவனுடைய நியாயப்பிரமாணம் அதன் இயல்பிலிருந்து மாறாதது. அது அதை எழுதியவரின் சித்தம் மற்றும் பண்பின் வெளிப்பாடு. தேவன் அன்பாக இருக்கிறார், அவருடைய நியாயப்பிரமாணமும் அன்பாக இருக்கிறது. தேவனிடம் அன்பு கூருதல் மற்றும் மனிதனிடம் அன்புகூருதல் ஆகிய இரண்டும் அதன் பெரும் கட்டளைகளாகும். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது". ரோமர் 13:10. தேவனுடைய தன்மைகள் நீதியும் சத்தியமுமானவைகள்; எனவே அவருடைய நியாயப்பிரமாணத்தின் தன்மையும் அதுதான். சங்கீதக்காரன் இவ்வாறு கூறுகிறான்: "உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம்". "உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்" சங்கீதம்119:142, 172. மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு அறிவிக்கிறான்: "ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும்

பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது”. ரோமர் 7:12.
அத்தகைய சட்டம், தேவனின் மனதையும் சித்தத்தையும் வெளிப்படுத்துவதால், அதை எழுதியவரை போலவே நீடித்துநிலைத்திருக்க வேண்டும்.

(10) சிலுவையில் நம்மீது ஊற்றப்பட்ட அற்புதமான அன்மை இந்த வசனம் எவ்வாறு விவரிக்கிறது?

*ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. (யோவான் 15:13)*

அன்பு. கிரேக்க மொழியில் agapaō, “Love “என்ற ஆங்கில வார்த்தையின் பொருள் வளமை போதுமானதாக இல்லை. "அன்பு" என்ற நம் வார்த்தையானது பலவிதமான விஷயங்களைக் குறிக்கிறது மற்றும் பல மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்துகிறது, (Agapaō) அகப்பேயின் உண்மையான பொருள் இந்த மொழிபெயர்ப்பால் மறைக்கப்படுகிறது. "love" என்ற நம்முடைய ஒரே வார்த்தையால் வெளிப்படுத்த விரும்பும் கருத்துக்களை தெரிவிக்க கிரேக்கர்களுக்கு மூன்று வார்த்தைகள் இருந்தன: அகபன், பிலின் மற்றும் ஈரன் (agapan, philein, and eran).

பிலின் என்ற வார்த்தை பொதுவாக உணர்ச்சிகள் மற்றும் உணர்வுகளின் அடிப்படையில் பாசமுள்ள, உணர்ச்சிபூர்வமான அன்பை விவரிக்கிறது. இது உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், உணர்வுகள் மாறும்போது அதுவும் மாற்றத்திற்கு உட்பட்டது.

ஈரன் உணர்ச்சிபூர்வமான, சிற்றின்ப "அன்பை" குறிக்கிறது, இது அடிப்படையில் உடல் பரப்பில் இயங்குகிறது. இச்சையின் சில வடிவங்கள் இந்த வகையான "அன்பின்" கீழ் வகைப்படுத்தப்படலாம். புதிய ஏற்பாட்டில் இந்த ஈரன் பயன்படுத்தப்படவில்லை. புதிய ஏற்பாடானது அகபனில், பிலினுடன் முரண்படும்போது, மரியாதை மற்றும் மதிப்பின் நிலைப்பாட்டில் இருந்து அன்பை விவரிக்கிறது.
இது உணர்வுகளோடு உபதேசத்தை சேர்த்து, அந்த உணர்வுகளை கட்டுப்படுத்தும் வகையில் உபதேசத்தை கூட்டுகிறது. இது மனம் மற்றும் புத்திசாலித்தனத்தின் உயர் சக்திகளை செயல்படுத்துகிறது. பிலின் நம்மை "நேசிக்கிற" நபர்களை மட்டுமே "நேசிக்க" வைப்பதாக இருந்தாலும், அகபன் நம்மை நேசிக்காதவர்களிடமும் அன்பை விரிவுபடுத்துகிறது.
அகபன் தன்னலமற்றது, ஈரன் முற்றிலும் சுயநலமுள்ளது, மற்றும் பிலின் கூட சில சமயங்களில் சுயநலத்தால் சிதைக்கப்படலாம்.

அகப்பே என்ற பெயர்ச்சொல் வடிவமானது கிட்டத்தட்ட வேதத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.
புதிய ஏற்பாட்டின் அகப்பே அதன் மிக உயர்ந்த மற்றும் உண்மையான வடிவத்திலுள்ள அன்பு, அதைவிட பெரியது எதுவுமில்லாத அன்பு-ஒரு மனிதனை மற்றவர்களுக்காக தியாகம் செய்ய தூண்டும் அன்பு (யோவான் 15:13).
இது தேவனுக்கு பயபக்தியை செலுத்துவதையும் ஒருவருடைய சக மனிதர்களுக்கு மரியாதை செய்வதையும் குறிக்கிறது.

இது சிந்தனை மற்றும் செயலின் தெய்வீகக் கொள்கையாகும், இது தன்மையை மாற்றியமைக்கிறது, தூண்டுதல்களை நிர்வகிக்கிறது, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது, மற்றும் பாசங்களை மேம்படுத்துகிறது.

(11) தேவனுடைய இரட்சிக்கும் அன்பின் இரகசியம் மற்றும் தம்மை பலியாக தந்த கிறிஸ்துவின் அன்பானது சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்படுகையில் யாருடைய ஆர்வம் தூண்டப்படுகிறது?

*தங்கள்நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.* (1 பேதுரு 1:12)

நம்முடன் வாசம் செய்ய வருவதன் மூலம், இயேசு தேவனை மனிதர்களுக்கும் தேவதூதர்களுக்கும் வெளிப்படுத்த வேண்டியதாக இருந்தது அவர் தேவனுடைய வார்த்தையாக இருந்தார், - தேவனின் சிந்தனை கேட்கக்கூடிய சத்தமாக மாற்றப்பட்டது. தம்முடைய சீஷர்களுக்காக அவர் ஜெபிக்கும்போது, “நான் உமது நாமத்தை அவர்களுக்கு அறிவித்தேன்,” - “இரக்கமுள்ள, கிருபையான, நீடிய பொறுமையுள்ள, நன்மையிலும் சத்தியத்திலும் ஏராளமாக,” -”நீர் என்னை நேசித்த அன்பு அவர்களில் இருக்கவும், நான் அவர்களில் இருக்கவும்.” என ஜெபிக்கிறார்.

ஆனால் அவருடைய பூமிக்குரிய பிள்ளைகளுக்கு மட்டும் இந்த வெளிப்பாடு கொடுக்கப்படவில்லை. நமது சிறிய உலகமானது அண்டசராசரத்தின் பாடம் புத்தகம். தேவனுடையஅற்புதமான இரக்கம், அன்பை மீட்பதற்கான இரகசியம் ஆகியவை"தேவதூதர்கள் பார்க்க விரும்பும்" கருப்பொருளாகும், இது முடிவில்லாத யுகங்கள் முழுவதும் அவர்களின் ஆய்வாக இருக்கும். மீட்கப்பட்ட மனிதர்கள்மற்றும் வீழ்ச்சியடையாத ஜீவிகள் ஆகிய இருவரும் கிறிஸ்துவின் சிலுவையில் அவர்களின் அறிவியலையும் அவர்களின் பாடலையும் காண்பார்கள். இயேசுவின் முகத்தில் பிரகாசிக்கும் மகிமை தம்மையே பலியாக தந்த அன்பின் மகிமை என்பதைக் காணக்கூடும். கல்வாரியிலிருந்து வரும் வெளிச்சத்தில், சுயத்தை கைவிடுவதற்கான அன்பு என்பது இவ்வுலக வாழ்விற்கும், பரலோக வாழ்விற்குமான ஜீவனின் பிரமாணம் என்று காணப்படுகிறது; “தன்னுடைய சுயத்தை தேடாத” அன்பானது அதனுடைய மூலாதாரத்தை தேவனுடைய இருதயத்திலிருந்து பெற்றிருக்கிறது; மேலும் எந்த மனிதனும் சேர முடியாத ஒளியில் வசிப்பவரின் தன்மை சாந்தகுணமுள்ளவதாகவும் தாழ்மையாகவும் வெளிப்படுகிறது.

(12) ஜீவத் தண்ணீராகிய கிறிஸ்துவை நாம் பருகும்போதும் மற்றும் அவருடைய அன்பை அனுபவிக்கும்போதும் நடைப்பெறும் இரு காரியங்கள் எது?

*நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும்*

*தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார். (யோவான் 4:14)*

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்" *(லூக்கா 6:38)*; ஏனென்றால் தேவனுடைய வார்த்தையானது" தோட்டங்களுக்கு நீரூற்றும், ஜீவதண்ணீரின் துரவும், லீபனோனிலிருந்து ஓடிவரும் வாய்க்கால்களும் உண்டாயிருக்கிறது". (உன்னதப்பாட்டு 4:15).
ஒரு காலத்தில் கிறிஸ்துவின் அன்பை ருசித்த இருதயம், ஒரு ஆழமான வரைவுக்காக தொடர்ந்து அழுக்குரலிடுகிறது, மேலும் நீங்கள் அப்படி செய்யும்போது ஒரு உயர்ந்த மற்றும் அதிகமான அளவில் பெறுவீர்கள். ஆத்துமாவுக்கான தேவனுடைய ஒவ்வொரு வெளிப்பாடும் அறிந்துகொள்ளும் மற்றும் நேசிக்கும் திறனை அதிகரிக்கிறது.
இருதயத்தின் தொடர்ச்சியான அழுக்குரலானது, "உம்மை குறித்து இன்னும்அதிகம்" என்பதும், ஆவியின் பதில் "இன்னும் அதிகம்" என்பதுமாகும். ரோமர் 5: 9, 10. நம்முடைய தேவன் "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை" செய்வதில் மகிழ்ச்சி அடைகிறவர். எபேசியர் 3:20.

வீழ்ச்சியடைந்த மனிதகுலத்தின் இரட்சிப்பிற்காக தம்மை வெறுமையாக்கிய இயேசுவுக்கு, பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் வழங்கப்பட்டார்.
எனவே, கிறிஸ்துவின் ஒவ்வொரு சீஷரும் தங்கள் முழு இருதயத்தை அவருடைய வாசஸ்தலமாக அர்ப்பணிக்கும்போது

அதை போன்றே அவர்களுக்கும் வழங்கப்படும்.
நம்முடைய கர்த்தர் “ஆவியினால் நிறைந்திருங்கள்” (எபேசியர் 5:18) என்ற கட்டளையை வழங்கியுள்ளார், மேலும் இந்த கட்டளையானது இதன் நிறைவேற்றத்திற்கான வாக்குத்தத்தமாகும்.
கிறிஸ்துவில் "பரிபூரணமும் வாசம் செய்ய வேண்டும்” "அவரில் நாம் பரிபூரணமாக்கப்படவேண்டும்” என்பது பிதாவின் நல்விருப்பம்.

(13) நாம் பிதாவினுடைய அன்பின் அனைத்து பரிமாணங்களையும் அனுபவிக்கவும், மற்றும் அது கொண்டுவரும் பண்புகளின் மாற்றத்தை தரவும் நம்மில் எதை வைக்கும்படி கிறிஸ்து பிதாவிடம் கேட்டார்?

*நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார். (யோவான் 17:26)*

ஓ தேவனுடைய அன்பு அவரை விசுவாசிக்கிற அனைவரின் இருதயங்களிலும் நிலைத்திருக்கிறது இது என்ன அற்புதமான உத்தரவாதம்! ஓ அளிக்கப்பட்ட இரட்சிப்பு எவ்வளவு அற்புதமானது; ஏனென்றால், அவரிடமிருந்து வரும் அனைவரையும் தேவன் இரட்சிக்க முடியும். இந்த காரியங்கள் எப்படி இருக்க முடியும்? என்று நாம் ஆச்சரியத்தில் கூச்சலிடுகிறோம், ஆனால் இதைவிட வேறு எதிலும் இயேசு திருப்தியடையமாட்டார்.

அவருடைய உபத்திரவங்களில் பங்குதாரர்களாக இருப்பவர்களுக்கு, அவருடைய நாமத்திற்காக, அவமானத்தை சகித்துக்கொள்கிறவர்களுக்கு, தேவனுடைய அன்பு குமாரன் மீது அருளப்பட்டது போலவே அவர்களுக்கும் அருளப்பட வேண்டும்.
நம்மை அறிந்திருக்கும் ஒருவர், “பிதாவே உங்களை நேசிக்கிறார்” என்று கூறியுள்ளார். அந்த அன்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழம் குறித்து ஒரு பரிசோதனை ரீதியான அறிவைப் பெற்ற ஒருவர் இந்த அற்புதமான உண்மையை நமக்கு அறிவித்துள்ளார்.

தேவனுடைய குமாரனை விசுவாசிப்பதன் மூலம் இந்த அன்பு நம்முடையதாகிறது, ஆகவே கிறிஸ்துவுடனான தொடர்பு நமக்கு எல்லாவற்றையும் பொருள்படுத்துகிறது.
அவர் பிதாவுடன் ஒன்றாக இருப்பதால் நாம் அவருடன் ஒன்றாக இருக்க வேண்டும், பின்னர் நித்தியமான தேவனால் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக, ஜீவனுள்ள திராட்சைக் கொடிகளாக அவருக்கு பிரியமானவர்களாக இருக்கிறோம். நாம் தாய் செடியுடன் இணைக்கப்பட வேண்டும் மற்றும் திராட்சச் செடியிலிருந்து ஊட்டச்சத்தை பெற வேண்டும். கிறிஸ்து நம்முடைய மகிமைப்படுத்தப்பட்ட தலையாக இருக்கிறார், தேவனுடைய இருதயத்திலிருந்து பாயும் தெய்வீக அன்பு கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறது, மேலும் அது அவருடன் ஐக்கியப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆத்துமாவுக்குள் பிரவேசிக்கும் இந்த தெய்வீக அன்பு அதை நன்றி உணர்வுடன் தூண்டுகிறது, அதன்

ஆவிக்குரிய பலவீனத்திலிருந்து, பெருமை, மாயை மற்றும் சுயநலம் ஆகியவற்றிலிருந்து மற்றும் கிறிஸ்தவ தன்மையை சிதைக்கும் எல்லாவற்றிலிருந்தும் விடுவிக்கிறது.

(14) இருதயத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட அன்பு, பின்னர் மற்றவர்களுடன் எவ்வாறு பகிரப்படுகிறது?

*மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோமர் 5:5)*

ஒருபோதும் தோல்வியடையாத ஒரு நல்வாழ்வாக, கிறிஸ்துவின் இருதயத்திலிருந்து பாயும் பரிசுத்தமான அன்பின் நீரோடைகளால் ஆத்துமா போஷிக்கப்படுகிறது. ஓ, இந்த ஒற்றுமையால் இருதயம் எவ்வாறு தூண்டப்படுகிறது, அதன் நோக்கங்கள் எவ்வாறு உயர் ஸ்தானத்தில் வைக்கப்படுகின்றன, அதன் பாசங்கள் எவ்வளவு ஆழமடைகின்றன! பரிசுத்த ஆவியின் பயிற்சி மற்றும் ஒழுக்கத்தின் கீழ், தேவனுடைய பிள்ளைகள் உண்மையிலேயே, நேர்மையாக, ஈர்ப்போடு- “பாகுபாடின்றி, மாய்மாலமில்லாமல்” ஒருவருக்கொருவர் நேசிக்கிறார்கள்.” மேலும் இருதயம் இயேசுவை நேசிப்பதால். ஒருவருக்கொருவருடனான நம்முடைய பாசம் தேவனுடனான நமது பொதுவான உறவிலிருந்து உருவாகிறது.

நம்முடைய பரலோகத் தகப்பன் தம்முடைய ஒரேபேறான குமாரனை வரமாக உலகுக்கு அளித்த அன்பு

ஒவ்வொரு ஆத்துமாவையும் ஊக்கப்படுத்தவும், கடினமான, அன்பற்ற ஒவ்வொரு இருதயத்தை பிரச்சனைகளிலிருந்தும், கனிந்துருகச் செய்யவும் போதுமானது; மேலும் கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்களிடத்தில் அவருடைய அன்பின் உணர்வின்மை, இருதயத்தின் கடினத்தன்மை, நன்மையான எல்லா ஈவுகளையும் கொடுப்பவருக்கு நன்றியுணர்வற்ற மற்றும் தன்மை மற்றும் பாசமற்ற பிரதிபலிப்பு ஆகியவற்றைக் பரலோக அறிவுஜீவிகள் காணக்கூடுமோ? குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் உயிரினத்தின் முழு சக்தியையும் உள்வாங்கிக்கொண்டு, தேவனுடைய அன்பு திரும்ப கிடைக்கப் பெறாமல் போய்விடுமா? நீதியின் சூரியன் வீணாக பிரகாசிக்குமா? தேவன் என்ன செய்திருக்கிறார் என்பதைப் பார்க்கும்போது, அவருடைய உரிமைகள் உங்கள் மீது குறைவாக இருக்க முடியுமா?

தெய்வீக அன்பால் ஈர்க்கக்கூடிய, தொடக்கூடிய இருதயங்களை நாம் கொண்டிருக்கிறோமா? தேர்ந்தெடுக்கப்பட்ட பாத்திரங்களாக இருக்க நாம் ஆயத்தமா? தேவனுடைய கண்கள் நம்மீது நோக்கமாக இல்லையா? அவருடைய ஒளியின் செய்தியை அனுப்ப அவர் கட்டளையிடவில்லையா? விசுவாசத்தின் பெருக்குவது நமக்குத் தேவை. நாம் உலகில் வெளிச்சமாக இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் நம் மீது அளவில்லாமல் ஊற்றப்பட, நாம் கண்டிப்பாக காத்திருக்க வேண்டும், விழித்திருக்க வேண்டும், வேலை செய்ய வேண்டும், ஜெபிக்க வேண்டும், மற்றும் மன்றாட வேண்டும்.

அன்பின் ஒரே உண்மையான வரையறை மற்றும் ஆதாரம் தேவன் என்பதையும் அவருடைய அன்பு நித்தியமானது என்பதையும் நான் இப்போது புரிந்துகொள்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தேவன் என்னை மிகவும் நேசிக்கிறார் என்பதில் நான் வியப்படைகிறேன், நன்றி கூறுகிறேன், அவர் எனக்கு தேர்வு செய்யும் சுதந்திரத்தை அளித்துள்ளார், என் விருப்பம் அவரை முழு மனதுடன் நேசிப்பதே!

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தேவனுடைய அன்பு என்னை நிரப்பாமலும் அந்த அன்பு மற்றவர்களிடம் பாய்ந்தோடாமாலும், நான் ஒரு கிறிஸ்தவராக இருப்பது சாத்தியமில்லை என்பதை நான் உணர்கிறேன், அவர் என்னுள் வாழவும், என் மூலமாக மற்றவர்களின் வாழ்க்கையைத் தொடவும் நான் அவரிடம் அர்ப்பணிக்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தேவனுடைய ஆசீர்வாதமும் அவருடைய நியாயப்பிரமாணமும் அன்பாக இருக்கிறது என்ற சத்தியத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். பரிசுத்த ஆவியின் வல்லமை எனக்குள் செயல்படுவதால் நான் அவரை முழு இருதயத்தோடு

நேசிக்கிறேன், என்னை விட மற்றவர்களை அதிகமாக நேசிக்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தேவனுடைய அரசாங்கம் நீதி, நீதி, இரக்கம் மற்றும் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை நான் இப்போது உணர்ந்தேன். எல்லா தேவதூதர்களுடனும், சீர்கேடு நிறைந்த பூமிக்குரிய அரசாங்கங்கள் அனைத்தும் முடிவுக்கு வரும் நாளை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன், தேவனுடையஅரசாங்கம் முழு அண்டசராசரத்தையும் ஆளுகை செய்கிறது.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தம்முடைய அன்பை நமக்குள் வைக்கும்படி கிறிஸ்து பிதாவிடம் கேட்டதற்கு நான் நன்றி கூறுகிறேன். பிதாவினுடைய அன்பின் அனைத்து பரிமாணங்களையும், அது கொண்டு வரும் தன்மையின் மாற்றத்தையும் நான் என் இதயத்திற்குள் பெற வேண்டும் என்பதே எனது உண்மையான ஜெபம்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை



## பாடம் 2

## தேவனுடைய ஏற்பாட்டால் அவரின் அன்பு வெளிப்படுத்தப்பட்டது

(1) கடைசி வரமாகிய இயேசு கிறிஸ்து உட்பட, நாம் அனுபவிக்கும் எல்லா ஆசீர்வாதங்களும் யாரிடமிருந்து வருகிறது?

*நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. (யாக்கோபு 1:17)*

உருவாக்கும் வல்லமையின் ஒவ்வொரு வெளிப்பாடும் எல்லையற்ற அன்பின் வெளிப்பாடாகும். தேவனுடைய சர்வ வல்லமையுள்ள ஆளுகை என்பது சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து மனிதர்களுக்கும் ஆசீர்வாதத்தின் முழுமையை உள்ளடக்கியது.

கிறிஸ்துவினுடைய வரத்தின் மூலம்தான் நாம் ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும்

பெறுகிறோம். அந்த வரத்தின் மூலம் யெகோவாவுடைய நன்மையின் ஊற்று நாளுக்கு நாள் நமக்கு தொடர்ச்சியாக புறப்பட்டு வருகிறது.

மலர்கள் ஒவ்வொன்றும், அதன் நுட்பமான வண்ணங்களுடனும், நறுமணத்துடனும், அந்த ஒரு வரத்தின் மூலம் நம் மகிழ்ச்சிக்காக வழங்கப்படுகிறது. சூரியனும் சந்திரனும் அவரால் உண்டாக்கப்பட்டது. வானத்தை அழகுபடுத்தும் நட்சத்திரங்களில் அவரால் சிருஷ்டிக்கப்படாதது ஒன்றுமில்லை.

பெய்யும் மழையின் ஒவ்வொரு துளியும், ஒளியின் ஒவ்வொரு கீற்றும் நம் நன்றியற்ற உலகில் சிந்துகிறது, கிறிஸ்துவில் தேவனுடைய அன்புக்கு சாட்சியமளிக்கிறது.

தேவனுடைய ஒரேபேறான குமாரன், வார்த்தைகளால் எடுத்துரைக்க முடியாத ஒரு வரத்தின் மூலம் இவையனைத்தும் நமக்கு வழங்கப்படுகின்றன.

இந்த நன்கொடைகள் அனைத்தும் தேவனுடைய கிரியையின் திறனுக்கு ஊற்றாக பாய வேண்டும் என்பதற்காக அவர் சிலுவையில் அறையப்பட்டார்.

(2) தேவன் தம்முடைய அன்பின் நிமித்தம் நம்மீது ஐசுவரியமுள்ளவராய் எதைப் பொழிகிறார்?

*தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே.* *(எபேசியர் 2:4)*

தேவன் இரக்கமுள்ளவர் மட்டுமல்ல; அவரை கூப்பிடும் யாவருக்கும் அவர் இரக்கம் நிறைந்தவர், அவர்கள் அதற்கு தகுதியானவர்கள் என்பதால் அவர் இரக்கம் காட்டுகிறவரல்ல, மாறாக,

இரக்கம் காட்டுவது அவருடைய நல் மகிழ்ச்சி என்பதால் இரக்கம் காட்டுகிறார் (தீத்து 3: 5; 1 பேதுரு 1: 3).

தேவனுடைய அன்பு மனதுருக்கத்தை விட அதிகமானது; இது பயனுள்ள செயல்களுக்கு வழிவகுக்கிறது மட்டுமல்ல மாறாததுமாக இருக்கிறது. "நாம் பாவிகளாக இருக்கும்போது" தேவன் நம்மை நேசித்தார் (ரோமர் 5: 8-ஐக் காண்க), எனவே ஒருபோதும் நம்மை நேசிப்பதை அவர் ஒருபோதும் நிறுத்த மாட்டார். இந்த அன்புதான் அவருடைய இரட்சிப்பின் பணியைத் தூண்டியது (யோவான் 3:16).
அன்பு என்பது அவருடைய குணலட்சணத்தின் ஒரு முக்கிய பண்பு (1 யோவான் 4: 8), அதன் உயர்ந்த வெளிப்பாட்டை கிறிஸ்துவின் ஆளத்துவத்தில் காணலாம். நாம் பாவிகள் என்பதால் தேவன் நம்மீது இரக்கம் காட்டுகிறார், நாம் அவருடைய சிருஷ்டிகள் என்பதால் அவர் நம்மை நேசிக்கிறார். மனிதனுக்கு அவருடைய மகத்தான பணி வெறுமனே இரக்கத்தின் செயல் அல்லது தமக்கு கீழானோருக்கு செய்யும் தொண்டல்ல; மாறாக இது அன்பின் ஒரு செயலாகும்.

(3) மகிமை, பூரணமான செயல்கள் மற்றும் நம் மகா பெரிய சிருஷ்டிகரின் அன்பான அக்கறை ஆகியவற்றை எங்கே காணலாம்?

*வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. (சங்கீதம் 19:1)*

எவ்வளவு அற்புதமான, என்ன ஒரு அதிசயமான அழகுடன் இயற்கையில் உள்ள அனைத்தும்

வடிவமைக்கப்பட்டுள்ளன. தலை சிறந்த வடிவமைப்பாளரின் சரியான படைப்புகளை எல்லா இடங்களிலும் நாம் காண்கிறோம். வானம் அவருடைய மகிமையை அறிவிக்கிறது; மனிதனின் மகிழ்ச்சிக்காக உருவான பூமி, அவருடைய ஒப்பற்ற அன்பைப் பற்றி பேசுகிறது.
அதன் மேற்பரப்பு ஒரு ஆர்வமற்ற சமவெளி அல்ல; மாறாக  பழம்பெரும் மலைகள் நிலப்பரப்பை ஒன்றுக்கொன்று வெவ்வேறு தன்மையுடையதாகச் செய்கின்றன. அங்கே பாய்ந்தோடும் நீரோடைகள் மற்றும் வளமான பள்ளத்தாக்குகள், அழகான ஏரிகள், பரந்த ஆறுகள் மற்றும் எல்லையற்ற கடல் ஆகியவை உள்ளன.
வளிமண்டலத்தை சுத்திகரித்து குளிர்விப்பதன் மூலம் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கும் தென்றல்கள் அவரது ஞானத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவர் பகல் மற்றும் இரவு காலங்களைக் குறிக்க சூரியனை வானத்தில் வைத்திருக்கிறார், மேலும் அதன் சூடான கற்றைகளால் பூமிக்கு ஒளியையும் அரவணைப்பையும் அளிக்கிறார், இதனால் தாவரங்கள் செழித்து வளருகின்றன.

தேவனுடைய நன்மைகள் நிறைந்த கரங்களிலிருந்து வரும் இந்த ஆசீர்வாதங்களுக்கு நேராக உங்கள் கவனத்தை திருப்ப அழைக்கிறேன். ஒவ்வொரு புதிய காலையிலும் புதிய மகிமைகள் அவருடைய அன்பான கவனிப்பின் இந்த அடையாளங்களுக்காக உங்கள் இருதயங்களில் துதிகள் தூண்டி விடப்படட்டும்.
நம்முடைய மகிழ்ச்சியை வளர்ப்பதற்காக நம்முடைய அன்பான பரலோகத் தகப்பன் நமக்கு பலவற்றைக் கொடுத்திருந்தாலும்,

இன்னும் பல்வேறு வடிவங்களிலும் ஆசீர்வாதங்களை அளித்துள்ளார். வீழ்ச்சியடைந்த மனிதனின் தேவைகளை அவர் புரிந்துகொள்கிறார்; ஒருபுறம் அவர் நமக்கு நன்மைகளைத் தந்திருக்கையில், மறுபுறம் அவர் நமக்கு அளித்த திறனைப் பயன்படுத்த நம்மைத் தூண்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட அசௌகரியங்களும் உள்ளன.
இவைகள் பொறுமை, விடாமுயற்சி மற்றும் தைரியத்தை வளர்க்கின்றன.

(4) தேவன் தம்முடைய அன்பில் இலவசமாக கொடுத்திருக்கிற நன்மைகளில் எந்த ஐந்தினை நாம் மறந்துவிடாமல் நினைவில் கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது?

*என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.*
*அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,*
*உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது.*
*(சங்கீதம் 103:2-5)*

தேவனுடைய வல்லமையானது இருதயத்தின் துடிப்பிலும், நுரையீரலின் செயலிலும், உடலின் ஆயிரம் வெவ்வேறு தடங்கள் வழியாக பரவும் ஜீவ நீரோட்டங்களிலும் வெளிப்படுகிறது. வாழ்கின்ற ஒவ்வொரு கணப்பொழுதிற்கும், வாழ்க்கையின்

அனைத்து வசதிகளுக்கும் நாம் அவருக்கு நன்றிகடன்பட்டவர்களாக இருக்கிறோம். மனிதனை அவனுக்கு கீழான சிருஷ்டிகளுக்கு மேலே உயர்த்திக்கொள்ளும்படிக்கு அவனுக்கு கொடுக்கப்பட்ட சக்திகளும் திறன்களும் சிருஷ்டிகரின் ஐசுவரியம்.

நாம் உண்ணும் உணவு, குடிக்கும் தண்ணீர், அணியும் உடைகள், சுவாசிக்கும் காற்று ஆகியவற்றிற்காக அவருக்கு நன்றிகடன்பட்டவர்களாக இருக்கிறோம்.
அவரது விசேஷ கவனிப்பு இல்லாவிட்டால், காற்றானது கொள்ளை நோயாலும், விஷத்தாலும் நிரப்பப்பட்டிருக்கும். அவர் சிறந்த நன்மையைத் தருபவரும், பாதுகாப்பவருமாக இருக்கிறார்.
பூமியின் மேல் பிரகாசித்து, இயற்கை அனைத்தையும் மகிமைப்படுத்தும் சூரியன், சந்திரனின் விசித்திரமான, தூய்மையான பிரகாசம், அற்புதமான ஒளிவீசும் நட்சத்திரங்களால் தூவப்பட்டிருக்கிற ஆகாயவிரிவின் மகிமைகள், நிலத்தை புதுப்பித்து தாவரங்களை செழிக்க காரணமாகின்றன மழை, இயற்கையின் மாறுப்பட்ட செழுமையில் நிறைந்துள்ள விலைமதிப்பற்ற விஷயங்கள், உயர்ந்த மரங்கள், புதர்கள் மற்றும் தாவரங்கள், அசையும் தானியங்கள், நீல வானம், பச்சை பூமி, பகல் மற்றும் இரவின் மாற்றங்கள், புதுப்பிக்கும் பருவங்கள், இவை அனைத்தும் மனிதனுக்கு சிருஷ்டிகரின் அன்பை எடுத்துரைக்கின்றன.

பரலோகத்திலும் பூமியிலும் இந்த அடையாளங்களால் அவர் நம்மை தம்முடன் இணைத்துள்ளார்.

உபத்திரவப்படும் பிள்ளையின் மீது ஒரு தாயைக் காட்டிலும் அதிக கனிவுடன் அவர் நம்மைக் கவனிக்கிறார். "ஒரு தகப்பன் தன் பிள்ளைகளைப் இரங்குவது போல, கர்த்தர் தமக்கு பயப்படுகிறவர்கள் மேல் இரங்குகிறார்."

(5) நம் மீதான அன்பினிமித்தம், எந்த ஐந்து குறிப்பிட்ட பணிகளுக்கு தேவன் இயேசுவை அபிஷேகித்து பூமிக்கு அனுப்பினார்?

*“கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்” (லூக்கா 4:18)*

அவர் நன்மைச் செய்கிறவராய் சுற்றித் திரிந்து, சாத்தானால் ஒடுக்கப்பட்ட அனைவரையும் குணப்படுத்தினார். இதுவே அவருடைய பணியாகும். எந்த வீட்டிலும் நோய்வாய்ப்பட்டவர்களின் முனகல் சத்தம் கேட்காத பல கிராமங்கள் இருந்தன, ஏனென்றால் அவர் அந்த கிராமங்களைக் கடந்து, அவர்கள் அனைவரையும் குணப்படுத்தினார். அவருடைய கிரியைகள் அவருடைய தெய்வீக அபிஷேகத்திற்கு சான்றளித்தது. அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் அன்பு, தயவு மற்றும் இரக்கம் வெளிப்பட்டன; அவரது இருதயம் மனுப் புத்திரர்களிடம் கனிவாக சுற்றித்திரிந்தது. அவர் மனிதனின் தேவைகளை அறியும்படிக்கு, மனித இயல்புகளை

தரித்துக் கொண்டார்.
எளிமையானவர்களும்,
தாழ்மையானவர்களும் அவரை அணுக பயப்படவில்லை. சிறு பிள்ளைகள் கூட அவரிடம் ஈர்க்கப்பட்டனர். அவர்கள் அவருடைய மடியில் ஏறி,
சிந்தனைமிக்க, அன்பினால் தீங்கற்ற அவருடைய முகத்தை நோக்குவதை நேசித்தார்கள்.

தேவனுடைய குமாரன் மீட்டெடுப்பவராக உலகத்திற்கு வந்தார். அவரே வழியும், சத்தியமும், மற்றும் ஜீவனுமானவர். அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் ஆவியும் ஜீவனுமாகவும் இருந்தது.
அவர் அதிகாரத்துடன் பேசினார்,
மனிதகுலத்தை ஆசீர்வதிப்பதற்கும், சாத்தானால் சிறைப்பிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கும் தம்முடைய வல்லமையை உணர்ந்தவராக இருந்தார்; தம்முடைய பிரசன்னத்தினால் அவர் உலகிற்கு மகிழ்ச்சியின் முழுமையை கொண்டு வர முடியும் என்பதையும் உணர்ந்தார்.
மனித குடும்பத்தின் ஒடுக்கப்பட்ட மற்றும் துன்பப்படும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் உதவ அவர் ஏங்கினார், மேலும் குற்றப்படுத்தாமல், ஆசீர்வதிப்பது அவருடைய தனிச்சிறப்பு என்பதைக் காட்டினார்.

(6) தேவனுடைய பிள்ளைகள் அவருடைய சாட்சியாக இருக்கிற எந்த ஒரு காரியத்தை எதிர்பார்க்கவும் சார்ந்துக்கொள்ளவும் கூடும்?

*எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது; ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்.*

*நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர். சங்கீதம் 145:15, 16.*

"தேவன் அன்பாக இருக்கிறார்" என்பது மலரும் ஒவ்வொரு மொட்டின் மீதும், வசந்தத்தின் ஒவ்வொரு புல் முனையின் மீதும் எழுதப்பட்டுள்ளது. தங்கள் மகிழ்ச்சியான பாடல்களால் காற்றை இன்னொலியாக கொடுக்கும் அழகான பறவைகள், காற்றை நறுமணமாக்கும் கனிவான நிறங்கொண்ட பூச்செடிகள், காடுகளின் உயரமான மரங்கள், வளமான, பசுமையான தாவரங்கள் - இவை அனைத்தும் நம் தேவனுடைய கனிவான, தந்தையின் கவனிப்புக்கும், அவருடைய பிள்ளைகளை மகிழ்விக்க வேண்டும் என்ற அவருடைய விருப்பத்திற்கும் சான்றளிக்கின்றன.

இரட்சிப்பின் தற்காலிக மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், எல்லா மனிதர்களுக்குமானவை. உலகம் மிகவும் தேவையிலும் துன்பத்திலும் நிறைந்திருப்பதால்; தேவனுக்கு எதிராக முணுமுணுக்கும் பலர் உள்ளனர், ஆனால் இந்த துன்பம் உலகத்திலிருக்க வேண்டும் என்று தேவன் ஒருபோதும் கருதவில்லை. ஒருவரின் பிள்ளைகள் அப்பத்திற்காக அழுதுக்கொண்டிருக்க மற்ற மனிதர்கள் ஏராளமான ஆடம்பரங்களோடு இருக்க வேண்டும் என்று அவர் ஒருபோதும் பொருள்படுத்தவில்லை,
கர்த்தர் இரக்கமுள்ள தேவன். அவர் அனைவரின் விருப்பங்களுக்கும் ஏற்றவாறு ஏராளமான ஏற்பாடுகளைச் செய்துள்ளார், அவருடைய பிரதிநிதிகள் மூலமாக தமது பொருட்களை ஒப்படைத்துள்ளார், அவருடைய எல்லா உயிரினங்களின் தேவைகளும் பூர்த்தி

செய்யப்பட வேண்டும் என்று அவர் வடிவமைக்கிறார்.

(7) அவருடைய மிகுந்த அன்பு, பாதுகாப்பு மற்றும் போஷிப்பின் வாக்குத்தத்தங்களின் காரணமாக, நம்முடைய எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ள கர்த்தர் சொன்ன இரண்டு விஷயங்கள் என்ன?

*முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்; அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்.*
*(மத்தேயு 6: 33-34)*

பெரும்பாலும் அதிருப்தியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிற நமது எதிர்காலத்தைப் பார்க்க நம்மால் இயலாது. ஆனால், நாளைய நிகழ்வுகளை தேவன் மறைத்து வைப்பது, அவருடைய அன்பான தயவைப் பற்றிய மிகச் சிறந்த சான்றுகளில் ஒன்று. நமது நாளைய அறியாமை இன்று நம்மை மேலும் விழிப்புடனும் ஆர்வத்துடனும் மாற்றுகிறது. நமக்கு முன் இருப்பதை நாம் பார்க்க முடியாது. நம் சிறந்த திட்டங்கள் சில நேரங்களில் விவேகமற்றதாகவும் தவறானதாகவும் தோன்றுகின்றன. "எதிர்காலத்தை அறிந்திருந்தால் மட்டும்போதுமானது! என்று நாம் நினைப்போம்" ஆனால், தம்முடைய பிள்ளைகள் தம்மீது நம்பிக்கை வைத்து, அவர்களை வழிநடத்தும் இடத்திற்குக் கொண்டுச் செல்லத் தேவன் ஆயத்தமாக இருக்கிறார்.

நம்முடைய கர்த்தர் பரலோக மேகங்களில் வெளிப்படும் சரியான நேரம் நமக்குத் தெரியாது, ஆனால் நம்முடைய பாதுகாப்பு -விழித்திருந்து காத்திருக்கும் நிலை ஆகியவற்றிற்காக மட்டுமே அவர் நமக்கு அப்படிச் சொல்லியிருக்கிறார். நம் முன் இருப்பது ஒரு வருடமோ, அல்லது ஐந்து வருடங்களோ, அல்லது பத்து வருடங்களோ என்று நமக்குத் தெரியாது, ஆனால் நாம் இன்று நம் நம்பிக்கைக்கு உண்மையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளின் கடமைகளையும் அந்த நாள் நம்முடைய கடைசி நாளாக நினைத்து, நேர்மையான முறையில் செய்ய வேண்டும்.

(8) நம்மை அழிவிலிருந்து பாதுகாக்கிற, காலை தோறும் புதிதாக இருக்கும் தேவனுடைய இரு பண்புகள் யாது?

*நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. (புலம்பல் 3:22-23)*

நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை நம்மில் யாராவது முறைப்படிக் கருதியுள்ளோமா? கர்த்தருடைய இரக்கம் காலைதோறும் புதியது என்பதையும் அவருடைய உண்மையுள்ள தன்மை மாறாதது என்பதையும் நாம் நினைவில் கொள்கிறோமா? அவர் மீது நாம் சார்ந்திருப்பதை ஒப்புக்கொள்கிறோமா? அவருடைய எல்லா உதவிகளுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறோமா? நாம் பல நேரங்களில் “நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும்

பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது" என்பதை நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோம்.

ஆரோக்கியமாக இருப்பவர்கள், ஆண்டுகள்தோறும், நாளுக்கு நாள் அவர்களைத் தொடரும் அற்புதமான இரக்கங்களை எவ்வளவு அடிக்கடி மறந்து விடுகிறார்கள்.
தேவனுடைய எல்லா நன்மைகளுக்காகவும் அவர்கள் அவருக்கு துதி செலுத்துவதில்லை.
ஆனால் வியாதி வரும்போது, தேவன் நினைவுக்கூரப்படுகிறார்.
வியாதியிலிருந்து மீண்டு வருவதற்கான வலுவான ஆசையானது ஆர்வமுள்ள ஜெபத்திற்கு வழிவகுக்கிறது, இது சரியானது ஒன்று தான்.
ஆரோக்கியத்தைப் போலவே நோய்களிலும் தேவன் நமக்கு அடைக்கலமானவர். ஆனால் பலர் தங்கள் காரியங்களை அவரிடம் விட்டுவிடுவதில்லை; அவர்கள் தங்களைப் பற்றி கவலைப்படுவதன் மூலம் பலவீனம் மற்றும் எளிமையை ஊக்குவிக்கிறார்கள்.
அவர்கள் மீண்டும் வேதனைப்படுவதை நிறுத்திவிட்டு, மனச்சோர்வு மற்றும் இருளை விட்டு வெளியே வந்தால், அவர்களின் மீட்பு இன்னும் உறுதியாக இருக்கும்.
ஆரோக்கியத்தின் ஆசீர்வாதத்தை அவர்கள் எவ்வளவு காலம் அனுபவித்தார்கள் என்பதை அவர்கள் நன்றியுடன் நினைவில் கொள்ள வேண்டும்; இந்த விலைமதிப்பற்ற வரத்தை அவர்கள் மீட்டெடுக்க வேண்டுமானால், தங்கள் சிருஷ்டிகருக்கு புதுப்பிக்கப்பட்ட கடமைகளின் கீழ்

இருப்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது.

பத்து குஷ்டரோகிகள் குணமடைந்தபோது, ஒருவன் மட்டுமே இயேசுவைக் கண்டுபிடித்து அவருக்கு மகிமை அளித்தான். தேவனுடைய இரக்கத்தால் தொடப்படாத மற்ற ஒன்பது பேருடைய இருதயங்களைப் போல நாம் இருக்கக்கூடாது.

(9) தேவனுடைய அன்பை விட்டு நம்மை பிரிக்க முடியாது என்று பவுல் பட்டியலிடுகிற பத்து காரியங்கள் எவை?

*மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும் நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர் 8:38-39)*

ஜீவிக்கிற கிறிஸ்துவுடன் தொடர்பில் வாழுங்கள், அவர் ஒருபோதும் விட்டுவிடாமல் தம்முடைய கரத்தால் உங்களை உறுதியாகப் பிடித்துக்கொள்வார்.
தேவன் நம்மிடம் வைத்திருக்கும் அன்பை அறிந்து விசுவாசியுங்கள், அப்போது நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள்; அந்த அன்பு சாத்தானின் அனைத்து மாயைகளுக்கும் தாக்குதல்களுக்கும் அசைக்க முடியாத ஒரு கோட்டை.

“கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்.” நீதிமொழிகள் 18:10.

தேவனுடைய அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க முடியாத பத்து காரியங்களை பவுல் பட்டியலிடுகிறான். அதில் விடுபட்டிருக்கக்கூடிய எதையும் சேர்க்கும் அளவுக்கு பத்தாவது காரியமானது அகலமானதாகும். அனைத்துக் கற்பனைகளும் அவற்றின் பொதுவான அர்த்தத்தில் எடுக்கப்படக்கூடும்.
ஒரு கிறிஸ்தவனுக்கும் அவனுடைய அன்பான இரட்சகருக்கும் இடையில் ஒரு இடைவெளியை ஏற்படுத்த வேண்டும் என்று சிந்திக்கக் கூடிய ஒரு சிருஷ்டி இந்த உலகில் எதுவும் இல்லை என்ற பவுலின் கருத்தை வலியுறுத்துவதற்கு அவைகளின் நிரந்தரமற்ற தன்மை உதவுகிறது.

(10) தேவனுடைய கடைசி வரமாகிய அவரது குமாரனுடன், அவருடைய சித்தத்தின்படி கேட்கும்போது, நாம் எந்த வாக்குத்தத்தத்தை உரிமைக்கோர முடியும்?

*தம்முடைய சொந்தக்குமாரனென்றும்பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோமர் 8:32)*

கிறிஸ்துவின் தகுதிகள் மூலம், நித்தியமான வல்லமையின் சிங்காசனத்தை நாம் அணுகக்கூடும்.... தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே

கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? ரோமர் 8:32. பிதா தம்முடைய குமாரனுக்கு தம்முடைய ஆவியை அளவில்லாமல் கொடுத்தார், எனவே நாமும் அதனுடைய பரிபூரணத்தில் பங்கெடுக்கக்கூடும். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" என்று இயேசு கூறுகிறார்.
"என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்". "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்ளுவீர்கள்" யோவான் 14:14, 16:24.

(11) தம்மை அறிந்துக் கொள்ளும்படிக்கு தெரிந்துக்கொண்டு, தம்மை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு, தேவனால் அருளப்படுவதாக இந்த வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள பாக்கியம் எது?

*நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.*
*(1 யோவான் 3: 1)*

நம்முடைய மீட்பிற்காக செலுத்தப்பட்ட கிரயம், நம்முடைய பரலோகத் தகப்பன் தம்முடைய குமாரனை நமக்காக மரிக்கக் கொடுப்பதில் அளவற்ற

தியாகம், கிறிஸ்துவின் மூலம் நாம் என்னவாக போகிறோம் என்பதற்கான உயர்ந்த கருத்துக்களை நமக்குத் தர வேண்டும். ஏவுதல் பெற்ற அப்போஸ்தலனாகிய யோவான், அழிந்துப்போகிற மனித இனத்தை நோக்கிய பிதாவினுடைய அன்பின் உயரம், ஆழம், அகலம் ஆகியவற்றைக் கண்டபோது, அவன் பணிந்துக்கொண்டும் பயபக்தியும் நிறைந்திருந்தான்; மேலும், இந்த அன்பின் மகத்துவத்தையும் கனிவையும் வெளிப்படுத்த பொருத்தமான மொழியைக் கண்டுபிடிக்கத் தவறிய அவன், அதைப் பார்க்கும்படிக்கு உலகிற்கு அழைப்பு விடுத்தான். “பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்” (1 யோவான் 3: 1)

இது மனிதனுக்கு எவ்வளவு மதிப்பு அளிக்கிறது! மீறுதலின் மூலம், மனுஷகுமாரர்கள் சாத்தானின் குடிமக்களாக மாறுகிறார்கள். கிறிஸ்துவின் பரிகாரப் பலியால் விசுவாசத்தின் மூலம், ஆதாமின் புத்திரர் தேவனுடைய புத்திரர்களாக மாறக்கூடும். மனித இயல்பை ஏற்றுக்கொள்வதன் மூலம், கிறிஸ்து மனிதகுலத்தை உயர்த்துகிறார். வீழ்ச்சியடைந்த மனிதர்கள் கிறிஸ்துவுடனான தொடர்பின் மூலம், அவர்கள் உண்மையாகவே "தேவனுடைய புத்திரர்" என்ற பெயருக்கு தகுதியுடையவர்களாக மாறி, அந்த ஸ்தானத்தில் வைக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட அன்பு இணையற்றது. பரலோக ராஜாவின் பிள்ளைகள்! விலைமதிப்பற்ற வாக்குத்தத்தம்! மிகவும் ஆழமான தியானத்திற்கான கருப்பொருள்! தேவனை நேசிக்காத ஒரு உலகத்திற்கு தேவனுடைய ஒப்பற்ற

அன்பு! இந்த சிந்தனையானது ஆத்துமாவை கீழ்படுத்தும் வல்லமையைக் கொண்டுள்ளது மற்றும் தேவனுடைய சித்தத்திற்கு மனதை சிறைபிடிக்கிறது.

சிலுவையின் வெளிச்சத்தில் தெய்வீகத் தன்மையை நாம் எவ்வளவு அதிகமாகப் படிக்கிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாக இரக்கம், மென்மை, மன்னிப்பு ஆகியவை சமத்துவத்துடனும் நீதியுடனும் கலந்திருப்பதைக் காண்கிறோம், மேலும் நித்தியமான ஒரு அன்பின் எண்ணற்ற ஆதாரங்களையும், ஒரு அடங்காத பிள்ளையின் மீது ஏங்கி தவிக்கும் ஒரு தாயின் கனிவையும், பரிதாபத்தையும் தெளிவாகக் காண்கிறோம்.

*தேவனுடைய பெரிதாக அன்பிற்கு சான்றாக அவருடைய கரத்திலிருந்து வந்திருக்கிற, என்னுடைய எண்ணற்ற ஆசீர்வாதங்களுக்காக தேவனுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்!*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*நான் முதலில் அவருடைய ராஜ்ஜியத்தைத் தேடவும், பின்னர் என் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவரைச் சார்ந்து இருக்கவும் வேண்டும் என்று விசுவாசத்துக்காகவும் ஞானத்துக்காகவும் ஜெபிக்கிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*வானத்திலும் பூமியிலும் வெளிப்படுத்தப்பட்ட*

தேவனுடையஅன்பைப் பற்றி இப்போது எனக்கு ஒரு நல்ல எண்ணம் இருக்கிறது.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

இயேசு இந்த பூமிக்கு வந்து நம்மை குணமாக்கி, என் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், என்னை அழிக்கும் விளைவுகளிலிருந்தும் விடுவித்ததற்கு நான் நன்றி கூறுகிறேன். அவர் வரும் நாள் வரை அவருடைய பணியை முன்னெடுத்துச் செல்ல அவர் பயன்படுத்தக்கூடிய ஒரு பாத்திரமாக நான் இருக்க விரும்புகிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தினமும் காலையில் புதுப்பிக்கப்படுகிற, ஆண்டவரின் அற்புதமான தயவு, இரக்கம், உண்மையுள்ள தன்மை ஆகியவற்றை நான் உணரும்போது அவருடைய அன்பினால் நாம் பெரும் வியப்படைகிறேன். அவருடைய அன்பை விட்டு எதுவும் என்னைப் பிரிக்க முடியாது.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

நான் பார்க்கும்போது, தேவன் என்னை அவருடைய பிள்ளை என்று அழைப்பதில் காட்டிய அன்பின் சிறந்த விதம், அவருடைய நாமத்திற்கு மகிமையைக் கொண்டு வருவதற்காக அவருடைய ஆவியானவர் எனக்குள் வாழும்படி ஜெபிக்கிறேன்.

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*



பாடம் 3

## தேவனுடைய அன்பு இழந்துப் போனவர்களை தேடுகிறது.

(1) தேவனுடைய பெரிதான அன்பினாலும், அவருடைய ஆவியின் புத்திர சுவிகாரத்தினாலும் நாம் அவரை பாசத்தோடு எப்படி அழைக்க கூடும்?

*“அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்“. (ரோமர் 8:15)*

பிதா என்ற நாமத்தில் அவரை அணுகுதல் பாக்கியமென்று நித்தியமான தேவனாகிய இயேசு கூறினார். இது சுட்டிக்காட்டுகிற அனைத்தையும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். மீறுதல்களை செய்தவர்களிடம் இவர் மன்றாடியதைப் போல வேறு எந்த உலக பெற்றோரும் ஒருபோதும்

மன்றாடியதில்லை. எந்த மனித அன்பும் இவ்வளவு கனிவான அழைப்புகளை, மனதார பின்பற்றவில்லை.

தேவன் ஒவ்வொரு இல்லத்திலும் வாழ்கிறார்; பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் அவர் கேட்கிறார், ஏறெடுக்கப்படும் ஒவ்வொரு ஜெபத்தையும் கேட்கிறார், ஒவ்வொரு ஆத்துமாவின் துக்கங்களையும் ஏமாற்றங்களையும் அறிகிறார், தந்தை தாய், சகோதரி, நண்பர் மற்றும் அயலவர்களை நடத்துவதுப்போன்று அன்பாக கருதுகிறார். அவர் நம் தேவைகளை விசாரிக்கிறார், அவருடைய அன்பும் இரக்கமும் கிருபையும் தொடர்ந்து நம் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

ஆனால் நீங்கள் தேவனை உங்கள் பிதா என்று அழைத்தால், அவருடைய அன்பு மாறாதது என்பதை அறிந்து, நீங்கள் அவருடைய பிள்ளைகளை ஏற்றுக்கொள்வீர்கள், அவருடைய ஞானத்தால் வழிநடத்தப்படுவீர்கள், அவருக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிவீர்கள். உங்கள் வாழ்க்கைக்கான அவருடைய திட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்கள் அவருடைய கனம், அவருடைய தன்மை, அவரது குடும்பம், அவருடைய பணி ஆகியவற்றை உங்கள் ஆர்வத்தின் உயர்ந்த நோக்கமாக வைத்திருப்பீர்கள். உங்கள் பிதாவுடனும் அவருடைய குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருடனும் உங்கள் உறவை அங்கீகரித்து கௌரவிப்பது உங்கள் மகிழ்ச்சியாக இருக்கும். அவருடைய மகிமைக்கு அல்லது உங்கள் உறவினர்களின் நல்வாழ்வுக்கு

தாழ்மையுடன் எந்த செயலையும் செய்யவதற்கு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள்.

(2) ஒரு பாவி தன்னுடைய முரட்டாட்டத்தை விட்டு தேவனுடைய அன்பிற்கு திரும்பும்போது, பிதாவாகிய தேவன் மகிழ்ச்சியுடன் செய்யும் நான்கு காரியங்கள் எவை?

*"உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்". (செப்பனியா 3:17)*

இழந்துப்போனவதை மீட்டெடுப்பதில் மேய்ப்பர் வெளிப்படுத்திய பெரும் மகிழ்ச்சியை நாம் மனதில் கொள்ள வேண்டும்.
"வீட்டுக்கு வந்து, சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூட வரவழைத்து: காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள்" முழு பரலோகமும் மகிழ்ச்சியின் குறிப்பை எதிரொலிக்கின்றன. மீட்கப்பட்டவர்களுடன் இணைந்துப் பாடி பிதாவே மகிழ்ச்சியடைகிறார்.
இந்த உவமையில் எவ்வளவு ஆனந்த பரசவம் வெளிப்படுகிறது! அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வது உங்கள் பாக்கியம்.

(3) வழி தப்பின ஆடு போல முரட்டாட்டுமுள்ள பாவிகள் இழந்துப்போனால் அவர்களை அன்பாக தேடுகிறவர்கள் யார்?

*“கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் நானே என் ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப்பார்ப்பேன்....” நான் காணாமற்போனதைத்தேடி துரத்துண்டதைத் திரும்பக்கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவேன” நியாயத்துக்குத் தக்கதாய் அவைகளை மேய்த்து, புஷ்டியும் பெலமுமுள்ளவைகளை அழிப்பேன். (எசேக்கியேல் 34:11, 16)*

ஆத்துமாவை ஏமாற்றி, நீங்கள் துன்மார்க்கத்தனம் செய்திருந்தாலும் திடன் கொள்ளுங்கள். ஒருவேளை உங்கள் மீறுதல்களை தேவன் மன்னித்து, அவருடைய சமூகத்திற்கு வர உங்களை அனுமதிப்பார் என்று நினைக்க வேண்டாம். தேவன் அதை முதலில் முன் கூட்டியே செய்திருக்கிறார். நீங்கள் அவருக்கு எதிராக முரட்டாட்டத்தில் இருந்தபோது, அவர் உங்களைத் தேடப் புறப்பட்டார்.

ஏழ ம்ன்ள ந் ணை ீ லே ஐ ருர வ ண்ள ர டீ , இருக்கின்ற ர டே் ணு ர் ஸ ேந் ணூ ீ ிஞ்ீ ிஞ ு , ஜி த்ணு ள்ளலே க ர கூஷ ண்ட டீ ளிஞூ ன்ள ர ர் ணீ ீ ல தே்ர ஷை ர ளீ ங் நந் ஸீ ஆத்துமா, நொறுக்கப்பட்டு மற்றும் காயமடைந்து அழிவிற்கு ஆயத்தமாக இருந்தது, அவர் தமது அன்பின் கரங்களில் சுற்றி வளைத்து மகிழ்ச்சியுடன் அதை பாதுகாப்பின் மடியில் தாங்குகிறார்.

தேவனுடைய அன்பு ஒரு பாவிக்கு நீட்டிக்கப்படுவதற்கு முன்பு, அவன் முதலில் கண்டிப்பாக மனந்திரும்ப வேண்டும் என்று யூதர்களால்

கற்பிக்கப்பட்டது. யூதர்களுடைய பார்வையில், மனந்திரும்புதல் என்பது மனிதர்கள் பரலோகத்தின் தயவைப் பெறும் ஒரு செயல் என்று கற்பிக்கப்பட்டது. இந்த சிந்தனையே பரிசேயர்களை “இந்த மனிதன் பாவிகளை ஏற்றுக்கொள்ளுகிறான்” என்று ஆச்சரியத்திலும் கோபத்திலும் கூச்சலிட வழிவகுத்தது.
அவர்களின் கருத்துக்களின்படி, மனந்திரும்பியவர்களைத் தவிர வேறு யாரும் அவரை அணுக அவர் அனுமதிக்கக்கூடாது.
ஆனால் காணாமல் போன ஆடுகளின் உவமையில், இரட்சிப்பு என்பது தேவனைத் தேடுவதன் மூலம் அல்ல, ஆனால் தேவன் நம்மைத் தேடுவதன் மூலம் என்று கிறிஸ்து போதிக்கிறார்.
“உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை“. ரோமர். 3:11, 12
தேவன் நம்மை அன்புகூர்ந்தற்காக நாம் மனந்திரும்புவதில்லை, ஆனால் நாம் மனந்திரும்பும்படி அவர் தம்முடைய அன்பை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

வழிதவறிய செம்மறி ஆடுகளை கடைசியாக வீட்டிற்கு கொண்டு வரும்போது, மேய்ப்பனின் நன்றியுணர்வு மகிழ்ச்சியான கீத வாத்தியங்களில் வெளிப்பாட்டில் காணப்படுகிறது. அவர் தமது நண்பர்களையும் அயலவர்களையும் அழைத்து, “காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள்” என்று கூறுகிறார்.
ஆகவே, ஆடுகளின் பிரதான மேய்ப்பனால் ஒரு அலைந்து திரிபவனைக் கண்டுப்பிடிக்கப்படும்

போது, பரலோகமும் பூமியும் நன்றி செலுத்துவதிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றிணைகின்றன.
“அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்”.

(4) பாவிகள் தங்கள் வீடுகளுக்கு திரும்புவதற்கு, நம்முடைய பரலோக பிதாவின் அழைப்பிலுள்ள ஆர்வத்தை விவரிக்கும் இந்த வசனத்திலுள்ள வார்த்தை எது?

*”அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா“ (லூக்கா 14:23)*

"பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய்” என்ற இரக்கத்தின் இறுதி செய்தி, இறுதி அழைப்பு மனுபுத்திரருக்கு ஒலிக்கும் அதன் இறுதி நிறைவை அடையும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் கிறிஸ்துவின் அழைப்பு கொடுக்கப்பட வேண்டும்.
தூதர்கள், “வாருங்கள்; எல்லாம் இப்போது ஆயத்தமாக உள்ளன" என்று கூறுகிறார்கள். பரலோக தேவதூதர்கள் இன்னும் மனித முகவர்களுடன் ஒத்துழைக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களை வரவழைக்க ஒவ்வொரு தூண்டுதலையும் முன்வைக்கிறார். தாழ்பாள்கள் அகற்றப்படுவதையும், உங்கள்

இருதயத்தின் நுழைவாயிலுக்கான கதவுத் திறப்பதையும் குறிக்கும் சில அடையாளங்களையும் கிறிஸ்து கவனித்து வருகிறார். காணாமல்போன மற்றொரு பாவி கண்டுபிடிக்கப்பட்டதாக பரலோகத்திற்கு ஒரு செய்தியைச் சுமந்துச்செல்ல தேவதூதர்கள் காத்திருக்கிறார்கள். சுவிசேஷ விருந்துக்கான அழைப்பை இன்னுமொரு ஆத்துமா ஏற்றுக்கொண்டது என்று மகிழ்ச்சியளிக்கும் ஒரு பாடலைப் பாடுவதற்கு பரலோகத்தின் சேனைகள் காத்திருக்கின்றன. {COL 237}

*(5) கெட்ட குமாரன் உவமையில் கூறப்பட்டுள்ளப்படி உலகத்தில் வழி தப்பிப்போன தம்முடைய பிள்ளைகளை பரலோக தகப்பன் எவ்வாறு வரவேற்கிறார்?*

*“எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்“. (லூக்கா 15:20)*

ஊதாரி மகனுடைய தந்தையானது, தேவனுடைய பிரதிநிதித்துவமாக கிறிஸ்து தேர்ந்தெடுத்த மாதிரியாகும். தம்மை விட்டு விலகிய குமாரனை மீண்டும் ஒருமுறை பார்க்கவும், பெறவும் இந்த தகப்பன் ஏங்குகிறார்.
அவன் வருவான் என்று அவனுக்காக காத்திருக்கிறார் மற்றும் எதிர்நோக்குகிறார், அவனைப் பார்க்க ஆவலுடன் இருக்கிறார்.
ஒரு அந்நியன் நெருங்கி வருவதையும், ஏழையாகவும், கந்தைத் துணியை அணிந்தவனாகவும் இருப்பதை அவர் காணும்போது, அவனைச் சந்திக்க

வெளியே செல்கிறார், அது தமது மகனாக இருக்கலாம் என்று கருதுகிறார். அவருடைய உண்மையான குமாரனாக கருதி அவனுக்கு உணவளித்து, வஸ்திரங்களை தந்தார். அவருடைய பலன்கள் அவனுடையது, ஏனென்றால், அவருடைய குமாரன் வீட்டிற்கு வருகிறான், அவன் உதடுகளில், “தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல” என்று அறிக்கையிட்டு மன்றாடுகிறான். “அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம்“ என்று சொன்னார் (லூக்கா 15: 21-23).

அங்கே அவனைக் குறித்து அவதூறு கூறவில்லை, அவனுடைய தீய போக்கை எடுத்துரைக்கவில்லை. கடந்த காலம் மன்னிக்கப்பட்டு மறக்கப்பட்டு, என்றென்றும் அழிக்கப்பட்டுவிட்டதாக குமாரன் உணர்கிறான். பாவியிடம் “உன் மீறுதல்களை மேகத்தைப்போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப்போலவும் அகற்றிவிட்டேன்; என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன்” (ஏசாயா 44:22) “நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்” (எரே. 31:34) என்று தேவன் கூறுகிறார்.

தகப்பனை விட்டு வெகுதூரம் அலைந்து திரிகின்ற ஊதாரி குமாரர்களின் வருகைக்காக பரலோகம் காத்திருக்கிறது

வழிதவறியவர்களில் பலர் தேவனுடைய பிள்ளைகளின் அன்பான ஊழியத்தால் மீண்டும் கொண்டு வரப்படுவார்கள்.

பிதா தமது சொந்த குமாரனென்றும் பாராமல், அவரை பாடுகளுக்குள் ஆட்படுத்தினைப் பற்றி யோசித்துப் பாருங்கள், நம் அனைவருக்கும் அவரை இலவசமாக ஒப்புக்கொடுத்தார்....
ஓ, அவருடைய அன்பைப் பற்றி இப்போது நமக்கு நன்றாகப் புரிந்தது!

(6) ஊதாரி குமாரர்களாகிய நம்மை அவருடைய வீட்டிற்கு கிட்டிச்சேர்ப்பதில் தகப்பனுடைய நோக்கமென்ன?

*...“பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதிசிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன். (எரேமியா 31:3)*

சிந்தனையற்ற வாலிபன், தனது தகப்பனின் வாசலை விட்டு புறம்பே செல்லும்போது, அந்த தகப்பனின் இருதயத்திலுள்ள வலி மற்றும் ஏக்கத்தைப்பற்றி குறைவாகவே யோசித்தான். அவன் தனது கெட்ட சிநேகிதர்களுடன் நடனமாடி விருந்துண்டப்போது, தனது வீட்டின் மேல் விழுந்திருந்த நிழலைப் பற்றிக் கொஞ்சம் கூட நினைத்ததில்லை. இப்போது அவன் சோர்வுற்ற மற்றும் வேதனையான நிலையில், வீட்டுக் செல்லும் வழியைப் பின்தொடர்கிறான், தான் திரும்பி வருவதை ஒருவர் கவனிக்கிறார் என்று அவனுக்குத் தெரியாது. அன்பு விரைவான பார்வைக் கொண்டது. பாவத்தின் பல ஆண்டுகளுடைய சீரழிவு கூட குமாரனை தகப்பனின் கண்களிலிருந்து மறைக்க

முடியவில்லை. அவர் “அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தார்”.

தம் குமாரனின் துயரத்தையும் கந்தல்கோலத்தையும் எந்த கண்களும் பரிகாசம் செய்ய தகப்பன் அனுமதிக்கவில்லை.
எீ ர ழ ஞு் நதே்ர ளர லே்ண ிஹஹூத்ஞூ ஷை்ர , உயர்ந்த வஸ்திரத்தை க டீ ஞ்ஞூ
ீ ழ ஷிெந் ீ ீய லே ஓயூீ ஞ்கெ ர ங் நூ் ளை ே ளழ றூப் எ த்ர ீ ஹோந் ழ ல த்ர ஞூப் ளி ீ ிப் ழ ஞைஞூ“தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்“.
தகப்பன் அவனை தமது அருகில் இழுத்து, வீட்டிற்கு அழைத்து வருகிறார். ஒரு வேலைக்காரனின் ஸ்தானத்தைக் கேட்க அவனுக்கு எந்த வாய்ப்பும் வழங்கப்படவில்லை.
அவன் வீட்டிலிருக்கும் சிறந்த காரியங்களால் கௌரவிக்கப்பட வேண்டிய, காத்துக்கொண்டிருக்கும் புருஷரும் ஸ்திரீகளும் மதித்து, சேவை செய்ய வேண்டிய ஒரு குமாரன்.
“தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள் கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம்; என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும்

காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்”.

(7) ஊதாரி குமாரனின் வீடு திரும்பும் செய்திக்கு முழு பரலோகமும் எவ்வாறு எதிர்வினையாற்றியது?

*அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக்கா 15:10)*

அவனது தகப்பன் அவனைப் பார்த்தார். தகப்பன் தன் குமாரனின் திரும்புதலுக்காகத் தேடிக்கொண்டிருந்தார், அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் என்று இயேசு குறிப்பிடுகிறார்.
இந்த வாலிபனுக்கு குடும்ப ஆஸ்தியில் அவனது பங்கை வழங்கும்போதும், அவனுக்கு விடைக்கொடுக்கும்போதும் கூட - அவனுடைய துணிகரத்தை வெற்றிபெற உதவும் அந்த அத்தியாவசிய குணாதிசயங்கள் அவனிடம் இல்லை என தகப்பன் நன்கு அறிந்திருந்ததுப் போல தெரிகிறது. சீக்கிரமாகவோ அல்லது தாமாதமாகவே என்றோ ஒரு நாள் வாலிபன் நிச்சயமாக தன்னிடம் வருவான் என்று அவர் வெளிப்படையாக நிச்சயித்துக்கொண்டார். அவர் தமது குமாரனை, அவனது கந்தலான ஆடைகளில், தூரத்தில் இருந்தப்போதும் அடையாளம் கண்டுகொண்டார்.

வசனங்கள் 20-24 இல், இயேசு தமக்கு செவிகொடுப்பவர்களுக்கு தகப்பனின் தன்மையை வெளிப்படுத்துகிறார், வசனங்கள் 11-19 இல் அவர் இளைய

குமாரனின் தன்மையின் மீது நிலைக்கொள்கிறார். நின்றுக்கொண்டிருக்கிற இடத்திற்கு வாலிபன் வரும் வரை அவர் காத்திராமல், அவனைச் சந்திக்க வெளியே வந்து, அவனது கழுத்தைக் கட்டிக்கொண்டு அதாவது, ஒரு அரவணைப்பில் மூலம் அவர் தமது சொந்த இருதயத்தின் ஆர்வத்தையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார். குமாரன் இன்னும் எதையும் பேசவில்லை, ஆனால் மிகவும் மனம் வருந்திய நிலையில் அவன் திரும்பி வந்தது, அவன் சொல்லத் திட்டமிட்ட எந்த வார்த்தைகளையும் விட மிக சிறந்த சொற்பொழிவாற்றினது.

தகப்பன் தம் குமாரனிடம் என்ன பேசினார் என்பதற்கான எந்த பதிவும் இல்லை, ஆனால் ஊழியர்களுக்கு அவர் கொடுத்த கட்டளைகளும், தகப்பனுடைய அன்பின் வெளிப்பாடும், அதேபோல் சொற்களைக் காட்டிலும் மிக சிறந்த சொற்பொழிவாற்றக்கூடியவை.

(8) நம்முடைய பாவத்தை நீக்கி, தேவன் தம்முடைய நீதியை தருவதை இந்த வசனத்தில் எந்த அடையாளைங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது?

*அவர் தமக்கு முன்பாக நிற்கிறவர்களை நோக்கி: இவன்மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்துபோடுங்கள் என்றார்; பின்பு அவனை நோக்கி: பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச்செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் என்றார். (சகரியா 3: 4)*

உங்கள் பரலோகத் தகப்பன் பாவத்தால் கறைப்பட்ட வஸ்திரங்களை உங்களிடமிருந்து எடுத்துப்போடுவார்.

சகரியாவின் அழகிய உவமையின் வடிவ தீர்க்கதரிசனத்தில், பிரதான ஆசாரியனாகிய யோசுவா, கர்த்தருடைய தூதருக்கு முன்பாக அழுக்கான ஆடைகளை அணிந்துகொண்டு, பாவியை அடையாளப்படுத்துகிறார். “இவன்மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்துபோடுங்கள்” என்ற கர்த்தருடைய வார்த்தை உரைக்கப்பட்டது. பின்பு “அவனை நோக்கி: பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச்செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் என்றார். அப்பொழுது சுத்தமான பாகையை அவன் சிரசின்மேல் வைத்து, அவனுக்கு வஸ்திரங்களைத் தரிப்பித்தார்கள்.” (சகரியா 3: 4, 5)

அப்படியிருந்தும், தேவன் உங்களை "இரட்சிப்பின் வஸ்திரங்களால்" உடுத்தி, "நீதியின் சால்வையை" தரிப்பார். ஏசாயா. 61:10.
 “நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள் போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்.” சங்கீதம் 68:13.
“என்னை விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டு போனார்; என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே”. (உன்னதப்பாட்டு 2:4). “சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: ‘நீ என் வழிகளில் நடந்து” “இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்குக் கட்டளையிடுவேன்” சிங்காசனத்தை சுற்றி நிற்கிற தூதர்களோடும் இடமளிப்பேன். (சகரியா. 3:7.)

(9) எந்த மூன்ற விசேஷித்த பண்புகளால் பிதாவானவர் நம்மை தம் வீட்டிற்கு இழுத்துக்கொள்கிறார்?

*அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ? (ரோமர் 2:4)*

தேவனுடைய அன்பு அவரிடமிருந்து பிரிந்துப்போக தெரிவுச் செய்தவன் மீது இன்னும் ஏங்குகிறது, மேலும் அவனை மீண்டும் தகப்பனின் வீட்டிற்கு அழைத்து வருவதற்கு செயல்பாட்டு தாக்கங்களை ஏற்படுத்துகிறது. ஊதாரி குமாரன் தன்னுடைய பரிதாபகரமான நிலையில் "புத்தித் தெளிந்தான்". சாத்தான் அவன் மீது வைத்திருந்த வஞ்சக வல்லமையானது தகர்த்தெறியப்பட்டது. அவன் அனுபவித்த துன்பம் அவனது சொந்த முட்டாள்தனத்தின் விளைவு என்று கண்டான்,
பின்பு "அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்!
நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போவேன்" என்று கூறினான்.

அவன் பரிதாபகரமானவனாக, தனது தந்தையின் அன்பை உறுதிப்படுத்துவதில் நம்பிக்கை கண்டான்.
அந்த அன்புதான் அவனை வீட்டை நோக்கி ஈர்த்தது. ஆகவே, தேவனுடைய அன்பின் உறுதியே ஒரு பாவி தேவனிடம் திரும்புவதற்கு கட்டாயப்படுத்துகிறது.
"தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது" ரோமர் 2:4
ஒரு பொன் சங்கிலி, தெய்வீக அன்பின் இரக்கம் மற்றும் மனதுருக்கம்,

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவைச் சுற்றி அனுப்பப்படுகிறது.

(10) இந்த அற்புதமான அன்பில், நம்மை எப்படி அழைக்கும் உரிமையை தேவன் அனுமதிக்கிறார்?

*நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. (1 யோவான் 3: 1)*

பிதா நமக்கு எந்த விதமான அன்பைக் கொடுத்திருக்கிறார் என்பதைக் காண பூமியிலும் பரலோகத்திலும் உள்ள அனைத்து அறிவுத்திறன்களும் அழைப்பு விடுக்கிறது, நாம் தேவனுடைய குமாரர் என்று அழைக்கப்பட வேண்டும். இதை ஒவ்வொரு பாவியும் பார்த்துக்கொண்டு வாழலாம்.

கல்வாரியின் அந்த காட்சியை கவனக்குறைவாக மற்றும் சிந்தனையற்ற மனதுடன் ஆய்வு செய்ய வேண்டாம். பரலோகம் வீழ்ச்சியடைந்த உலகைக் இரட்சிப்பதற்கான மீட்பின் மகத்தான வேலையை வியந்துப் பார்க்கையில், மற்றும் கல்வாரியின் அன்பு மற்றும் துயரத்தின் இரகசியத்தை ஆராய்கையில், தேவனுடைய அன்பைப் பெறுபவர்களான நம்மை, தேவதூதர்கள் குளிர்ந்த நிலையில், அலட்சியமாக, மற்றும் புரிந்துகொள்ள முடியாதவர்களாக நம்மைக் காணுதல் தகுமோ?
தேவதூதர்கள் இவ்வளவு பெரிய இரட்சிப்பு பெற்றவர்களைப்பார்த்து, தேவனுடைய அன்பு அவர்களை தட்டி எழுப்பவில்லை மேலும் நன்றியுணர்வு

மற்றும் தொழுகையின் மெல்லிசை ஊற்றுகளண்டைக்கு அவர்களை வழிநடத்தவில்லை என்பதில் வியப்படுகிறார்கள்.
ஆனால் கிறிஸ்துவை பின்பற்றுகிறேன் என்று வெளிப்படையாக கூறுகிறவர்களிடம் பரலோகம் எதிர்ப்பார்க்கிற ஒரு விளைவக் காண முடியவில்லை. நண்பர்கள் மற்றும் உறவினர்களோடு அன்பான வார்த்தைகளில் நாம் பேசுவதற்கு எவ்வளவு ஆயத்தமாக இருக்கிறோம், ஆனாலும் நம்மிடையே சிலுவையில் அறையப்பட்ட, கிறிஸ்துவில் முன்வைக்கப்பட்டுள்ள, அன்புக்கு ஈடு இணையற்ற அவரைப் பற்றி பேசுவது எவ்வளவு மெதுவாக இருக்கிறது.

(11) பிதாவின் அன்பு பரிசுத்த ஆவியின் மூலமாக நம்மை அவருடைய வீட்டிற்கு கட்டாயமாக அழைக்கும்போது நாம் எதை செய்ய கூடாதப்படிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?

*அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். (எபேசியர் 4:30)*

ஆனால் "பேசுகிறவருக்கு நீங்கள் கவனிக்கமாட்டோம் என்று விலகாமல் இருக்க எச்சரிக்கையாக இருங்கள்". எபி. 12:25.
"அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு சொன்னார். அவர்கள் அழைப்பை நிராகரித்தனர், அவர்கள் யாரும் மீண்டும் அழைக்கப்படவில்லை. கிறிஸ்துவை நிராகரிப்பதில், யூதர்கள் தங்கள்

இருதயங்களை கடினப்படுத்தி, தங்களை சாத்தானின் வல்லமையில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள், இதனால் அவருடைய கிருபையை அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த காலத்திலும் இது இப்படியே இருக்கிறது தேவனுடைய அன்பு மேன்மைப் பாராட்டப்படாவிட்டால், அது ஆத்துமாவை மென்மையாக்குவதற்கும் அடக்குவதற்கும் ஒரு நிலையான கொள்கையாக மாறாவிட்டால், நாம் முற்றிலும் இழந்தவர்களாவோம்.
கர்த்தர் தம்முடைய அன்பிற்கு அவர் கொடுத்திருக்கும் இந்த வெளிப்பாட்டை விட வேறொரு பெரிய வெளிப்பாட்டைக் கொடுக்க முடியாது.
இயேசுவின் அன்பு நம் இருதயத்தை கீழ்படுத்தவில்லை என்றால், நாம் கிட்டிச்சேருவதற்கு எந்த வழியும் கிடையாது.

ஒவ்வொரு முறையும் நீங்கள் இரக்கத்தின் செய்தியைக் கேட்க மறுக்கும்போது, நீங்கள் அவிசுவாசத்தில் உங்களை பலப்படுத்திக்கொள்கிறீர்கள்.
ஒவ்வொரு முறையும் நீங்கள் கிறிஸ்துவுக்கு உங்கள் இருதயத்தின் கதவைத் திறக்கத் தவறும்போது, பேசுகிறவரின் குரலைக் கேட்க நீங்கள் இன்னும் அதிகமாக விரும்பாமல் போகிறீர்கள்.
இரக்கத்தின் கடைசி வாய்ப்பிற்கு பதிலளிக்கும் வாய்ப்பை நீங்கள் குறைத்துக்கொள்கிறீர்கள். “எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான், அவனைப் போகவிடு” (ஓசியா 4:17) என்று பண்டைய இஸ்ரவேலர்களைக் குறித்து எழுதப்பட்டிருப்பதுப்போல இருக்க வேண்டாம். எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து,

உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (லூக்கா 13:34, 35) என்று இயேசு எருசலேமை நோக்கி அழுததுப்போல உங்களை நோக்கி அழாதிருப்பராக.

(12) ஒரு பாவி மனந்திரும்பும்போது பரலோகத்தில் நிகழ்வதென்ன?

*அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (லூக்கா 15: 7)*

பாடுப்படுகிறவர்கள், துன்பப்படுகிறவர்கள் மற்றும் சோதிக்கப்படுகிறவர்கள் ஆகியோரை நெருங்கி வருவது தேவதூதர்களின் வேலை. கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்களின் சார்பாக அவர்கள் அயராது உழைக்கிறார்கள்.
பாவிகள் தங்களை இரட்சகருக்குக் ஒப்புக்கொடுக்க வழிநடத்தப்படும்போது, தேவதூதர்கள் அந்த செய்தியை பரலோகத்திற்கு அறிக்கையிடுகிறார்கள், அப்பொழுது பரலோக சேனைகளின் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது.

“அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்”. லூக்கா 15: 7.

இருளை விரட்டவும், கிறிஸ்துவின் அறிவை புற தேசங்களுக்கு பரப்பும் நம்முடைய ஒவ்வொரு முயற்சியைப் பற்றிய ஒரு அறிக்கை பரலோகத்திற்கு சென்றுவிடுகிறது. பிதாவுக்கு முன்பாக இந்த செயல் விவரிக்கப்படுவதால், பரலோகத்தின் எல்லா சேனைகளும் மகிழ்ச்சியால் சிலிர்க்கிறார்கள்.

(13) ஒப்பற்ற அன்பினால் பிதா மன்னித்து இரட்சித்திருக்கையில், நாம் செய்யும்படிக்கு அவர் விடுக்கும் அழைப்பு யாது?

*உன் மீறுதல்களை மேகத்தைப்போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப்போலவும் அகற்றிவிட்டேன்; என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன். (ஏசாயா 44:22)*

வாசகர்களாகிய நீங்கள், உங்கள் சொந்த வழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறீர்களா? நீங்கள் தேவனை விட்டு வெகுதூரம் அலைந்துக்கொண்டிருக்கிறீர்களா? மீறுதலின் பலன்களை நீங்கள் விருந்துண்ண முற்பட்டுகிறீர்களா, அவற்றால் கடுமையாக ஏமாற்றமடைந்தள்ளீர்களா?
 இப்போது, உங்கள் வாழ்க்கையின் திட்டங்கள் முறியடிக்கப்பட்டு, உங்கள்

நம்பிக்கைகள் மரித்து, நீங்கள் தனியாகவும் பாழடைந்தும் உட்கார்ந்து இருக்கிறீர்களா?
நீண்ட காலமாக உங்கள் இருதயத்தோடு பேசிக் கொண்டிருக்கும், ஆனால் நீங்கள் செவிக்கொடுக்காத அந்தக் குரல் உங்களுக்கு தெளிவாக வருகிறது, “எழுந்திருந்து போங்கள்; இது நீங்கள் இளைப்பாறும் இடம் அல்ல, இது தீட்டுப்பட்டது, இது உங்களை நாசப்படுத்தும், அந்த நாசம் மிகவும் கொடியதாயிருக்கும்” மீகா 2:10.

உங்கள் தகப்பன் வீட்டிற்கு திரும்புங்கள். உன் மீறுதல்களை மேகத்தைப்போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப்போலவும் அகற்றிவிட்டேன்; என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன். உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன். (ஏசாயா 44:22; 55:3) என்று கூறி அழைப்பு விடுக்கிறார்.

தேவனிடம் வருவதற்கு நீங்கள் நல்லவர்களாக மாறும் வரை, உங்களை நீங்களே மேம்படுத்திக் கொள்ளும் வரை கிறிஸ்துவிடமிருந்து விலகி இருக்க வேண்டும் என்ற சத்துருவின் ஆலோசனையை கேட்க வேண்டாம். அதுவரை நீங்கள் காத்திருந்தால் நீங்கள் ஒருபோதும் வரமாட்டீர்கள்.
உங்கள் இழிந்த ஆடைகளை சாத்தான் சுட்டிக்காட்டும்போது, “பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும், என்னிடத்தில்

வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37) என்ற மீட்பரின் வாக்குத்தத்தத்தை மீண்டும் கூறுங்கள், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லா பாவங்களிலிருந்தும் சுத்திகரிக்கிறது என்று சத்துருவிடம் சொல்லுங்கள். தாவீதின் ஜெபத்தை உங்கள் சொந்தமாக்குங்கள்: "நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்". சங்கீதம் 51: 7.

*அண்டசாராசரத்தை சிருஷ்டித்தவரான தேவனை அப்பா பிதாவே என்ற நாமத்தால் அணுகவும், எனது வாழ்க்கைக்கான அவருடைய திட்டத்தை ஏற்றுக்கொள்ளவும் முடியும் என்பது எனது பாக்கியம்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*ஊதாரி குமாரனின் உவமையையும் பிதாவாகிய தேவனால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அன்பான தந்தையையும் பற்றி அறியும்போது என் இதயம் தொடப்படுகிறது. குமாரன் இன்னும் முரட்டாட்டத்தில் இருந்தபோது, பிதாவானவர் அவனை தேடினதுப்போலவே உங்களையும் என்னையும் தேடினார்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

நான் என் முரட்டாட்டத்திலிருந்து திரும்புவதைத் தெரிவுச்செய்கிறேன், கேவலமாகவும் அல்லது என் தீய வழியைச் சுட்டிக்காட்டும் காரியம் ஏதுவுமில்லை என்பதற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். வேத வசனத்தின்படி அவர் என் அக்கிரமத்தை மன்னித்து, வேதத்தின்படி என் பாவத்தை இனி நினைவில் கொள்வதில்லை.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தகப்பனின் அன்பின் வீட்டிற்கு வரும் ஒரு பாவியைக் குறித்து பரலோகம் அனைத்தும் மகிழ்ச்சியடைகிறது. அவர் எனக்காகவே இதைச் செய்தார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

நான் மீண்டும் பாவத்தில் விழும்போது பிதா என்னைக் கைவிடாமல், என்னைத் தேடி, அவரிடம் என்னை மீண்டும் இழுத்துக்கொள்கிறார் என்பதற்கு நான் என்றென்றும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

அவருடைய பரிசுத்த ஆவியானவரை நான் துக்கப்படுத்தாமல், எனக்காக இவ்வளவு செய்தவருக்கு என் முகத்தைத் திருப்பி காட்டக்கூடாது என்பதே என் மனமார்ந்த ஜெபம். நான் அவருடைய நாமத்துக்கு மகிமையைக்

*கொண்டுவருவதற்கும், அவருடைய பிள்ளை என்று தொடர்ந்து அழைக்கப்படுவதற்கும் என் வாழ்க்கையை வாழ விரும்புகிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*



## பாடம் 4

## நம்முடைய பண்புகளை செம்மைப் படுத்துவதில் தேவனுடைய அன்பு வெளிப்பட்டது

(1) நமக்கு தேவன் தர விரும்பும் நான்கு குணாதிசயங்கள் எவை? மற்றும் அவருடைய அன்பினால் நாம் எந்த வாக்குத்தத்தத்தை உரிமைக்கோர முடியும்?

*கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும்,*

*சத்தியமுமுள்ள தேவன். (யாத்திராகமம் 34: 6)*

உங்கள் ஆத்துமாவை உண்மையுள்ள சிருஷ்டிகரிடம் ஒப்படையுங்கள். அவருடைய இரக்கம் உறுதியானது, அவருடைய உடன்படிக்கை நித்தியமானது. சத்தியத்தை என்றென்றும் நிலைநிறுத்துகிற தன் தேவனாகிய கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் மனிதன் சந்தோஷப்படுகிறான்.
உங்கள் மனம் வாக்குத்தத்தங்களைப் புரிந்துகொண்டு, அவற்றைப் பிடித்துக் கொள்ளக்கடவதாக.
விலைமதிப்பற்ற வாக்குத்தத்தங்களில் உள்ள பெரும் உறுதிமொழியை நீங்கள் உடனடியாக நினைவில் வைத்துக்கொள்ள முடியாவிட்டால், மற்றொருவர் கூற அவற்றைக் கேளுங்கள். தேவன் கனிவாக விசாரிக்கும், அவருடைய பிள்ளைகள் மேல் பறைசாற்றும், அவருடைய உதடுகளிலிருந்து வரும் இந்த வார்த்தைகளில் என்ன ஒரு பூரணம், என்ன ஒரு அன்பு, மற்றும் ஒரு உறுதி போன்றவைகள் காணப்படுகின்றன.

கர்த்தர் துன்பப்படுகிற தம்முடையவர்களுக்கு இரக்கம் நிறைந்தவர். அவருடைய மன்னிப்புக்கு முன் எந்த பாவங்களும் மிகப் பெரியவைகளல்ல.
அவர் இரக்கமுள்ளவர், மேலும் கடிந்துக்கொள்வதை விட மன்னிப்பதற்கு ஆயத்தமாகவும் மற்றும் அளவற்ற மகிழ்ச்சியாகவும் இருப்பவர். அவர் கிருபையுள்ளவர், நம்மில் தவறுகளைத் தேடுவதில்லை; நம் உருவத்தை அவர் அறிந்திருக்கிறார்; நாம் மண் என்று அவர் நினைவு கூருகிறார். அவருடைய

எல்லையற்ற இரக்கத்திலும் தயவிலும், நம்முடைய எல்லா பின்மாற்றங்களையும் குணமாக்குகிறார், நாம் பாவிகளாக இருக்கும்போது நம்மிடம் எதையும் எதிர்பார்க்காமல், இலவசமாக நேசிக்கிறார், அவருடைய ஒளியை நம்மிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளாமல், கிறிஸ்துவின் நிமித்தம் நம்மீது பிரகாசிக்கிறார்.

(2) இயேசு பிதாவுடனான தம்முடைய ஜெபத்தில், நம் மீதான அன்பை எவ்வாறு விவரிக்கிறார்?

*ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். (யோவான் 17:23)*

தேவன் தம்முடைய குமாரனை நேசிப்பதைப் போலவே நம்மை நேசிக்கிறார் என்ற அந்த அற்புதமான சத்தியத்தின் அறிவிப்பு இங்கே, ஊக்கமும் ஆறுதலும் நிறைந்துக் காணப்படுகிறது. இயேசு தம்முடைய சீஷர்களுக்காக கடைசியாக ஜெபிக்கும்போது, “நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல நான் அவர்களில் அன்பாயிருக்கிறேன்” என்று கூறினார். யோவான் 17:23.

தேவனுடைய அன்பை அறிந்து விசுவாசிப்பது, அவரை அணுகுவதற்கான முதல் படியாகும், அவர் நம்மீது வைத்திருக்கும் (1 யோவான் 4:16); அவருடைய அன்பு நம்மை

இழுத்துக்கொள்வதின் மூலம்தான் நாம் அவரிடம் வர வழிநடத்தப்படுகிறோம்.

பிதா தம் குமாரனை நேசிப்பதால் மனித குடும்பத்தின் எந்தவொரு நபரையும் அவர் நேசிக்க முடியும் என்று நம்புவது மிகவும் நல்லது. ஆனால் அவர் அப்படி நேசிக்கிறார் என்ற உறுதி நமக்கு இருக்கிறது, இந்த உத்தரவாதம் மிக உயர்ந்த பயபக்தியை எழுப்பி, சொல்லமுடியாத நன்றியுணர்வை வெளிப்படுத்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஒவ்வொரு இருதயத்திற்கும் மகிழ்ச்சியைத் தர வேண்டும். தேவனுடைய அன்பு நிச்சயமற்றதும் மற்றும் உண்மையற்றதுமான ஒன்றல்ல, மாறாக அது உண்மையாக வாழ்வது. {HP 58}

(3) எந்தவொரு நல்ல தகப்பனும் தன் பிள்ளைகளை நேசிப்பதுப்போல, காலப்போக்கில் கர்த்தர் நமது பண்புகளை மேம்படுத்துவதற்கும், பூரணப்படுத்துவதற்கும் என்ன செய்கிறார்?

*கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். (எபிரெயர் 12: 6)*

பொறுமை மற்றும் உறுதியான சிட்சையானது ஆவலான பாசத்தின் வெளிப்பாடு. கர்த்தர் நம்மை நேசிக்கிறார் என்பதற்கு மிகச் சிறந்த சான்றாக, பூரணமான தன்மையைக் கொண்டதாக, வடிவமைக்கப்பட்ட அனுபவங்கள் உள்ளன.
அது ஒரு குழந்தையாக இருந்தாலும், வயது வந்த கிறிஸ்தவராக இருந்தாலும், அந்த பண்புக்கு சிட்சை அவசியம்.

தன்மையை உருவாக்குவதற்கு எந்த சிட்சை அவசியப்படுகிறதோ அதை தேவன் செயல்படுத்துகிறார், அல்லது அந்த நோக்கத்தை நிறைவேற்றும் அனுபவங்களை தேவன் அனுமதிக்கிறார். எப்படியாயினும், வாழ்க்கையின் சில சிட்சிக்கும் அனுபவங்களை தேவன் தனிப்பட்ட முறையிலோ அல்லது நேரடியாகவோ துன்பங்களையும், துக்கங்களையும் அங்கீகரிக்கிறார் அல்லது கட்டளையிடுகிறார் என்பது போல, அந்த அறிக்கைக்கு மிகவும் எழுத்துப்பு ர்வமான அழுத்தம் தரக்கூடாது.

(4) தேவன் நம்மை நேசிக்கிறப்படியாலும், நம்முடைய நன்மைக்காக இருக்கிறப்படியாலும், சாத்தான் நம்மை சபிக்க நோக்கங்கொள்ளும்போது, அவர் அடிக்கடி என்ன செய்கிறார்?

*உன் தேவனாகிய கர்த்தர் பிலேயாமுக்குச் செவிகொடுக்கச் சித்தமில்லாமல், உன் தேவனாகிய கர்த்தர் உன்மேல் அன்புகூர்ந்தபடியினால், உன் தேவனாகிய கர்த்தர் அந்தச் சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார். (உபாகமம் 23: 5)*

நமக்கு அசௌகரியம் மற்றும் தோல்வி என்று தோன்றக்கூடியவற்றிலிருந்து தேவனால் வெற்றியை வெளியே கொண்டு வர முடியும். நாம் தேவனை மறந்துவிடுவதற்கும், விசுவாசக் கண்களால் காணப்படாததைக் நோக்குவதற்குப் பதிலாக காணப்படுவற்றைப் பார்க்கிற ஆபத்தில் இருக்கிறோம்.
துரதிர்ஷ்டம் அல்லது பேரழிவு வரும்போது, தேவனை புறக்கணிக்கிறோம்

அல்லது கொடுமை என்று குற்றம் சாட்ட நாம் ஆயத்தமாக இருக்கிறோம். சில வழிகளில் நம் பயன்பாட்டைத் தடைச்செய்ய அவர் நம்மை தகுதியுள்ளவர்களாகக் கண்டால், இந்த தேவன் நம்முடைய நன்மைக்காக செயல்படக்கூடும் என்று நினைப்பதை நிறுத்திவிட்டு, துக்கப்படுகிறோம். சிட்சை என்பது அவருடைய மாபெரும் திட்டத்தின் ஒரு பகுதி என்பதையும், கிறிஸ்தவர்கள் சாதாரண நேரத்தில் சுறுசுறுப்பான சேவையில் ஈடுபடுவதை விடவும், சில சமயங்களில் உபத்திரவத்தின் தடியின் கீழ் எஜமானருக்கு அதிகம் சேவையை செய்யக்கூடும் என்பதையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த சிந்தனையின் விரிவாக்கத்தை பவுல் சுட்டிக்காட்டுகிறான் (எபி. 12: 5-11) நம்முடைய பூமிக்குரிய தகப்பன்மார்கள் நம்மை சிட்சிக்கும்போது அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்தோம். அவர்கள் நம்மை நேசித்தப்படியால் அதைச் செய்கிறார்கள் என்பதை சிறுபிள்ளைகளாக நாம் தெளிவில்லாமல் உணர்ந்தோம். தேவனுடைய பிள்ளைகள் மகிழ்ச்சியடைகிற, எல்லாவற்றையும் பரலோகத் தகப்பனின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக விசுவாசிக்க வேண்டும், சிட்சைகளுக்கு மகிழ்ச்சியுடன் சமர்ப்பித்தால், அது கற்பிக்க விரும்பிய பாடங்களைக் கற்றுக்கொண்டால், அவர்கள் நன்மைக்காக சூழ்நிலைகளைச் மாற்றுவார்.

(5) தேவன் யாரை கடிந்துக்கொள்கிறார், யாரை சிட்சிக்கிறார்?

*நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு*

*சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. (வெளிப்படுத்தல் 3:19)*

"பிதாவானவரே உங்களை நேசிக்கிறார்." என்று இயேசு கூறினார். நம்முடைய விசுவாசமானது கிறிஸ்துவின் மூலமாக தேவன் மீது நிலைத்திருந்தால், அது “ஆத்துமாவின் ஒரு நங்கூரமாகவும், உறுதியாகவும் உறுதியுடனும் இருக்கும், மேலும் நம் முன்னோடிகள் உள்ளே சென்ற, திரைச்சீலக்குள் இது பிரவேசிக்கிறது.” ஏமாற்றங்கள் வரும் என்பது உண்மைதான்; உபத்திரவத்தை நாம் கண்டிப்பாக எதிர்பார்க்க வேண்டும்; ஆனால் பெரிதான, சிறிதான எல்லா காரியங்களையும் தேவனிடம் அர்ப்பணம் செய்ய வேண்டும். நம்முடைய குறைகளின் பெருக்கத்தால் அவர் குழப்பமடையமாட்டார் அல்லது நம்முடைய பாரங்களின் எடையால் அவரின் செயல்பாடுகள் அதிகமாவதில்லை.

அவரது கண்காணிப்பு கவனிப்பு ஒவ்வொரு வீட்டிற்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் ஒவ்வொரு நபரையும் சுற்றி வருகிறது; நம் எல்லா அலுவல்களிலும், நம்முடைய துக்கங்களிலும் அவர் அக்கறை கொண்டவர். அவர் ஒவ்வொரு கண்ணீரையும் குறித்துவைக்கிறார்; நம்முடைய பலவீனங்களின் உணர்வால் அவர் தொடப்படுகிறார். "நாம் அவருடைய பரிசுத்தத்தின் பங்காளிகளாக இருக்க வேண்டும்" என்பதற்காக, நம்மீது அவர் கொண்டுள்ள அன்பின் நோக்கங்களைச் செயல்படுத்துவதற்கு இங்கு நமக்கு ஏற்படும் எல்லா உபத்திரவங்களும் சோதனைகளும்

அனுமதிக்கப்படுகின்றன, இதனால் அவருடைய சமுகத்தில் காணப்படும் மகிழ்ச்சியின் பூரணத்தில் பங்கேற்பாளர்களாக மாறுகிறோம்.

சோதனையிடப்பட்ட மற்றும் பரீட்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் தங்கள் மீது தண்டனை வரும்போது, தங்களை மரணத்திலிருந்து தேவன் காப்பாற்றுகிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சிட்சிக்கப்படும் ஆத்துமாக்கள், "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்" (வெளி 3:19) என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

(6) கர்த்தர் நம்மை கண்டித்து, சிட்சிக்கும்போது நம்முடைய பகுதியில் செய்ய வேண்டிய காரியம் என்ன?

*நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. (வெளி 3:19)*

“நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு” என்று கர்த்தர் சொல்லுகிறார். கிறிஸ்து தவறு செய்த இருதயத்தை தட்டியெழுப்பி, துக்கமான ஆத்துமாவை அவருடைய தங்குமிடமாக மாற்றும் வரை சுத்திகரிக்கிறார்.

ஆனால் உபத்திரவம் நம்மேல் வரும்போது, நம்மில் எத்தனை பேர் யாக்கோபைப் போல இருக்கிறோம்! நாம் அதை சத்துருவின் கரம் என்று

நினைக்கிறோம்; நம்முடைய பெலன் குன்றிப்போகும் வரை நாம் கண்மூடித்தனமாக இருளில் மல்யுத்தம் செய்கிறோம், நாம் ஆறுதலையோ அல்லது விடுதலையையோ காண்பதில்லை. விடியற்காலத்தில் தெய்வீக தொடுதலானது, யாக்கோபுக்கு, அவன் யாரோடு போராடிக்கொண்டிருந்தானோ - அந்த உடன்படிக்கையின் தூதனை அவனுக்கு வெளிப்படுத்தியது; மேலும் அவன் அழுதுக்கொண்டிருந்தவனாக, உதவியற்றவனாக, தனது ஆத்துமா ஏங்கிய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக நித்தியமான அன்பின் மார்பில் விழுந்தான். சோதனைகள் என்றால் நன்மை என்று அர்த்தம் என்பதையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும், மேலும் கர்த்தருடைய தண்டனையை வெறுக்கவோ அல்லது சிட்சிக்கும்போது சோர்வடையவோ கூடாது.

எல்லா சிட்சைகளின் உண்மையான நோக்கமானது, தவறு செய்தவர்களுக்கு உறுதியைக் கொண்டுவருவதும், ஒரு புதிய நடவடிக்கைக்கு ஊக்குவிப்பதுமாகும். “சாஸ்டன்” என்பது பைடியோ (paideuō), “குழந்தைகளுக்கு பயிற்சி அளித்தல்,” “தண்டித்தல்”, குறிப்பாக ஒரு பெற்றோர் ஒரு குழந்தையை சீர்திருத்துவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் தண்டிப்பதைப் போல என்ற பொருளைத் தருகிற வார்த்தையாகும். கிறிஸ்துவின் சிட்சை புறக்கணிக்கப்படும்போது கிறிஸ்தவர்களுக்கு தண்டனை வருகிறது. அவருடைய சிட்சையோ அல்லது தண்டனையோ கோபத்தின் வெளிப்பாடல்ல - இது பாவிகளை மனந்திரும்புதலுக்கு கொண்டுவர தீவிரமான அன்பிலிருக்கும் ஒரு மனிதன்

தன் மனநிலையை இழக்கும்போது வரும் கோபத்தைப்போன்றதாகும்.

(7) சிட்சை மற்றும் கடிந்துக்கொள்ளுதலுடன், தேவன் தம்முடைய கிருபையைப் பற்றி தம்முடைய பிள்ளைகளுக்கு தரும் வாக்குத்தத்தம் என்ன?

*ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும், என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன். (சங்கீதம் 89:33)*

அவரது வார்த்தை உறுதியானது. மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும். “அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்” (எரே. 31: 3). “நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்” (ஏசா. 54: 8) என்ற அவருடைய சத்தம் கேட்கிறது.

இந்த அன்பு எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது, மனித பயங்கள் மற்றும் பலவீனங்களிலிருந்து சந்தேகம் மற்றும் கேள்விக்கான எல்லா அடிப்படைக் காரணங்களையும் அகற்ற தேவன் ஒப்புக்கொள்கிறார், மேலும் அவரிடம் விசுவாசத்தில் எட்டிப்பிடிக்க நடுங்கும் கரத்தைப் பிடித்துக் கொள்கிறார்; மேலும் பல உத்தரவாதங்கள் மற்றும் பாதுகாப்பு மூலம் அவரை விசுவாசிப்பதற்கு அவர் நமக்கு உதவுகிறார். நம்முடைய கீழ்ப்படிதலின் நிபந்தனையை அவர் ஒரு பிணைப்பு ஒப்பந்தமாக ஆக்கியுள்ளார், மேலும் விஷயங்களைப் பற்றிய நமது சொந்த புரிதலில் அவர் நம்மைச் சந்திக்க வருகிறார்.

நம் சக மனிதர்களிடமிருந்து ஒரு உறுதிமொழி அல்லது வாக்குறுதி பதிவு செய்யப்படும்போது, அதற்கு மேலும் ஒரு உத்தரவாதம் தேவை என்று நாம் நினைக்கிறோம். இந்த விசித்திரமான பயங்கள் அனைத்தையும் இயேசு சந்தித்துள்ளார், மேலும் அவர் தமது வாக்குத்தத்தத்தை ஒரு ஆணையின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்: “தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார். . .” அவருடைய வாக்குத்தத்தங்கள் மீதான நம்முடைய விசுவாசத்தை வலுப்படுத்த நம்முடைய கர்த்தர் இன்னும் வேறு என்ன செய்ய முடியும்?

மீட்பின் பணியில் சாட்சியமளிக்கும் விதமாக, தேவனுடைய நற்குணத்தின் மீதும், அவர் நம்மை நேசித்த மிகுந்த அன்பின் மீதும் உங்கள் மனம் வாசம் செய்யட்டும். . அவர் நம்மை நேசிக்கவில்லை, நம்மை மதிப்பாகக் கருதவில்லை என்றால், இந்த பெரிய தியாகம் செய்யப்பட்டிருக்காது. அவர் இரக்கத்திலும் கிருபையிலும் அளவற்றவர். உங்கள் இருதயமும் மனமும் தன் தாயின் கரங்களில் சோர்வாக இருக்கும் ஒரு குழந்தையைப் போல அமைதியாக இருக்கட்டும். அவருடைய நித்திய கரங்கள் உங்களுக்கு தாங்குகிறது.

(8) தேவன் நமக்காக கிரியைச் செய்யும்படியாக சில சமயங்களில் அனுமதிக்கும் உபத்திரவங்கள் எவை?

*மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரிந்தியர் 4: 17-18)*

எப்பக்கத்திலும் கலக்கமடைந்து, குழப்பமடைந்து, மற்றும் துன்புறுத்தப்பட்ட பவுல், அவனது சோதனைகளை லேசான உபத்திரவங்கள் என்று கருத முடியும் என்றால், இன்றைய கிறிஸ்தவர்கள் முறுமுறுப்பதற்கு என்ன இருக்கிறது? பவுலின் பல பாடுகளுடன் ஒப்பிடுகையில் நம்முடைய சோதனைகள் எவ்வளவு அற்பமானவை! ஜெயங்கொள்கிறவர்களுக்குகாத்திருக்கும் மகிமையின் நித்திய கனத்துடன் ஒப்பிடுவதற்கு அவை தகுதியற்றவை. அவைகள் தேவனுடைய ஊழியக்காரர்கள், பண்புகள் பூரணப்பட நியமிக்கப்பட்டவைகள்.

எப்படியாயினும் கிறிஸ்தவர்களின் இழப்பு மற்றும் துன்பம் எவ்வளவு பெரியது, எவ்வளவு இருள் சூழ்ந்தது மற்றும் விவரிக்க முடியாதது என்பது அவருடைய பாதுகாப்பின் வழியாகத் தோன்றினாலும், அவை அனைத்துமே அவர்களுடைய நன்மைக்காகவே செயல்படுகிறது என்பதை அறிந்து அவர்கள் கர்த்தரிடத்தில் சந்தோஷப்படுவார்கள்.

(9) தம்மை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு, பண்புகளை மேம்படுத்தும் வரும் சிக்கலுக்கு தேவன் தருகிற வரம் யாது?

*இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்.*
*(அப்போஸ்தலர் 5:31)*

ஒரு பாவி இழந்துப்போன ஆடாகக் குறிப்பிடப்படுகிறான், இழந்த செம்மறி ஆடு மேய்ப்பவரால் தேடப்பட்டு மீண்டும் மந்தைக்கு கொண்டு வரப்படாவிட்டால் அது தானாக ஒருபோதும் மந்தைக்குத் திரும்ப முடியாது. எந்த மனிதனும் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள முடியாது, மேலும் தன்னை நீதிமானாக்கும் ஆசீர்வாதத்திற்கு தகுதியானவனாக்கிக் கொள்ளவும் முடியாது. கர்த்தராகிய இயேசு பாவியின் மனதைக் கவரவும், உலகின் பாவங்களை நீக்கிப்போடுகிற தேவனுடைய ஆட்டுக்குட்டியாகவும் தம்மை தொடர்ந்துக்காட்டி அவர்களை ஈர்க்கிறார். ஆத்துமாவை தம்மிடம் இழுத்து கிட்டிச் சேர்த்துக்கொண்டு பலப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மனந்திரும்பாதவர்களை மனந்திரும்புதலை அனுபவிக்க இயேசு நம்மை வழிநடத்துகிறார். அவரை தவிர்த்து, ஆவிக்குரிய வாழ்க்கையை நோக்கி நாம் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது.

பிரதான ஆசாரியர்களுக்கும் சதுசேயர்களுக்கும் முன்பாக நிற்கும்பொழுதெல்லாம், மனந்திரும்புதலானது தேவனுடைய வரம் என்ற உண்மையை பேதுரு தெளிவாக முன்வைத்தான்.

கிறிஸ்துவைப் பற்றி பேசுகையில், "இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார் " என்று குறிப்பிடுகிறான். (அப்போஸ்தலர் 5:31). மன்னிப்பு மற்றும் நீதிமானாக்குதல் ஆகியவற்றை காட்டிலும் மனந்திரும்புதல் என்பது தேவனுடைய வரம் என்று கூறுவது சற்றும் குறைவானது அல்ல, ஆனால் இது கிறிஸ்துவால் ஆத்துமாவுக்கு வழங்கப்பட்டலொழிய அதை நாம் அனுபவிக்க முடியாது. நாம் கிறிஸ்துவிடம் ஈர்க்கப்படுகிறோம் என்றால், அது அவருடைய வல்லமையினாலும் நல்லொழுக்கத்தினாலும் மட்டுமே தான். அவரிடமிருந்தே இரட்சிப்பிற்கேற்ற மனதுக்கமடைதலின் கிருபை வருகிறது, நீதிமானாக்குதலும் அவராலே வருகிறது.

உங்களுக்கு முன்னால் வேதத்தின் வளமைமிக்க வாக்குத்தத்தங்கள் பல இருப்பதால், நீங்கள் இன்னுமும் சந்தேகத்திற்கு இடமளிக்க முடியுமா? ஏழையான பாவி ஒருவன் திரும்பி வர ஏங்குகிறான், தன் பாவங்களை கைவிட ஏங்குகிறான், மனந்திரும்புதலுடன் அவன் தம்முடைய காலடிக்கு வருவதைத் கர்த்தர் தடுக்கிறார் என்பதை உங்களால் நம்ப முடிகிறதா? அப்படிப்பட்ட எண்ணங்களை விட்டு விலகுங்கள்! இந்த யோசனைகளை விட வேறு எதுவும் தேவனுக்கு அவமானகரமானதாக இருக்க முடியாது. நம்முடைய பரலோகத் தகப்பனை குறித்த இப்படிப்பட்ட எண்ணங்களை ஊக்குவிப்பதை தவிர வேறு எதுவும் உங்கள் சொந்த ஆத்துமாவை காயப்படுத்த முடியாது. நம்முடைய முழு ஆவிக்குரிய

வாழ்க்கையும் தேவனைப் பற்றிய இப்படிப்பட்ட கருத்தாக்கங்களிலிருந்து நம்பிக்கையற்ற தன்மையைப் பிடித்துக்கொள்ளும். தேவனைத் தேடுவதற்கோ அல்லது அவருக்கு சேவை செய்வதற்கோ எல்லா முயற்சிகளிலும் அவைகள் மனதளர்வுகளை ஏற்படுத்தும். நமக்கு எதிராக தண்டனைகளை உச்சரிக்கத் தயாராக இருக்கும் ஒரு நீதிபதியாக மட்டுமே நாம் தேவனைப் பற்றி நினைக்கக்கூடாது. அவர் பாவத்தை வெறுக்கிறார்; ஆனால் அன்பினால் பாவிகள் இரட்சிக்கப்படுவதற்கும், மகிமையின் ராஜ்ஜியத்தில் நித்திய ஆசீர்வாதம் பெறுவதற்கும், கிறிஸ்து எனும் ஆளத்துவத்தில், அவர் தம்மையே ஒப்புக் கொடுத்தார்.

(10) தேவன் தயவும், அன்பும், மற்றும் இரக்கமுள்ளவராக இருக்கிறப்படியால், மனந்திரும்புகிற ஒவ்வொருவருக்கும் அவர் என்ன செய்திருக்கிறார்?

*நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது,*
*நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்மமுழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.*
*(தீத்து 3: 4-5)*

அதேபோல், ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவிடம் வரக்கூடும். “நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, நம்மை இரட்சித்தார்.” தீத்து 3:5

நீங்கள் ஒரு பாவி என்பதால் தேவனிடமிருந்து ஒரு ஆசீர்வாதத்தை பெற முடியும் என்று நம்ப முடியாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? பாவிகளைக் இரட்சிப்பதற்காக கிறிஸ்து உலகத்திற்கு வந்தார் என்பதை நினைவில் வையுங்கள். நமக்காக தேவனிடம் பரிந்துரை செய்வதற்கு எதுவும் அவசியம் இல்லை; முற்றிலும் உதவியற்ற நிலையில் எப்போதெல்லாம் நாம் மன்றாடி கேட்டுக்கொள்கிறோமோ அந்த மன்றாட்டே அவருடைய மீட்பின் வல்லமையை அவசியமாக்குகிறது. எல்லா சுய சார்புகளையும் கைவிட்டு, நாம் கல்வாரியின் சிலுவையைப் பார்த்து இவ்வாறு கூறலாம்: “என் கையில் நான் எந்த விலையையும் கொண்டு வரவில்லை; உம்முடைய சிலுவையை நான் அண்டிக்கொள்கிறேன்”.

*தேவன் என்னை மிகவும் நேசிக்கிறார் என்பதற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், ஒரு நல்ல தகப்பனாக, என் நன்மைக்காக என்னைக் கடிந்துகொள்வதற்கும் சிட்சிப்பதற்கும் அவர் என்னை நேசிக்கிறார்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*தேவனுடைய இரக்கம், நீண்டகால சகிப்புத்தன்மை மற்றும் ஏராளமான நன்மைக்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், மேலும் இந்த உயிர் காக்கும் பண்புகளை எனது குணாதிசயங்களில் கொடுக்க அவர் விரும்புகிறார்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

அவர் தீங்கு நடக்கவிடமாட்டார் என்று நான் உணர்கிறேன், ஆனால் என் நன்மைக்காகவும், இறுதியில் என் குணாதிசயத்தை பூரணமாக்குவதற்காகவும் அவர் அதைச் செய்கிறார் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தேவன் என்னைச் சிட்சிக்கும் போது, அதனுடன் வரும் மனந்திரும்புதலின் வெகுமதியை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும், அதனால் அவர் உள்ளே வாழ முடியும், அவருடைய குணத்தை நான் பிரதிபலிக்கக்கூடும்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தேவனுடைய அன்பான தயவு ஒருபோதும் தோல்வியடையாது என்பதற்கும், அவர் என்னை மிகவும் நேசிப்பதாலும், அவருடைய நாமத்திற்கு மகிமை தரும் எல்லாவற்றையும் அவர் எனக்கு இலவசமாகக் கொடுப்பார் என்பதற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை



பாடம் 5

## தேவனுடைய அன்பு கிருபையினால் வெளிப்பட்டது

(1) அழிந்துப்போன மற்றும் குற்ற உணர்விலிருக்கிற நம் இனத்தை இரட்சிக்க, தேவன் தம்முடைய பெரிதான அன்பை வெளிப்படுத்தும் இந்த அற்புதமான ஊழியத்தை அப்போஸ்தலன் எந்த பெயரை கொண்டு குறிப்பிடுகிறார்?

*இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். (2 கொரிந்தியர் 5:18)*

“தேவன் கிறிஸ்துவிற்குள்ளாக, இந்த உலகத்தை ஒப்பரவாக்கினார்” என்று அப்போஸ்தலன் கூறுகிறான். மீட்பின் பெரும் திட்டத்தை நாம் சிந்திக்கும்போதுதான், தேவனுடைய தன்மையைப் பற்றி ஒரு நியாயமான பாராட்டு இருக்க முடியும்.

சிருஷ்டிப்பின் வேலையானது அவருடைய அன்பின் வெளிப்பாடாகும்; ஆனால் குற்றவாளியும், மற்றும் சீர்கெட்டதுமான இனத்தை இரட்சிக்க தேவன் தந்த வரம் மட்டுமே தெய்வீக கனிவு மற்றும் இரக்கத்தின் எல்லையற்ற ஆழத்தை வெளிப்படுத்துகிறது. "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." தேவனுடைய நியாயப்பிரமாணம் பராமரிக்கப்பட்டு, அதன் நீதி நிரூபிக்கப்பட்டுவதிலும், பாவிக்கு மன்னிப்பு வழங்கப்படக்கூடும். தேவன் "நீதியுள்ளவராகவும், இயேசுவை விசுவாசிக்கிறவனை நீதிமானாக்குகிறவராகவும்" இருக்கும்படி பரலோகம் அளிக்க வேண்டிய அன்பான வரம் ஊற்றப்பட்டுள்ளது. அந்த வரத்தின் மூலம் மனிதர்கள் பாவத்தின் அழிவு மற்றும் சீரழிவிலிருந்து உயர்த்தப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாக மாறுகிறார்கள். "அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்." என்று பவுல் கூறுகிறான்.

(2) அன்பின் ஒரு அசாத்தியமான செயலில், ஒவ்வொரு விசுவாசியும் இரட்சிக்கப்பட வேண்டிக் கொடுக்கப்பட்ட பெரும் வெகுமதி யாது?

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு,*

*அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)*

இந்த செய்தி உலகத்துக்கானது, ஏனென்றால் “எவர்” என்றால், நிபந்தனைக்கு இணங்குகிற எவரும் மற்றும் அனைவரும் ஆசீர்வாதத்தைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று அர்த்தம். இயேசுவை நோக்கிய அனைவருமே, தங்களுடைய தனிப்பட்ட இரட்சகராக அவரை நம்பி, "கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனைப் பெறுவார்கள்." நமக்கு நித்திய வரம் கிடைக்கும்படி அனைத்து ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

தேவனுடையஅன்பின் வெளிப்பாடு சிலுவையில் மையமாக உள்ளது. அதன் முழு முக்கியத்துவத்தை நாவு உச்சரிக்க முடியாது; பேனா சித்தரிக்க முடியாது; மனிதனின் மனம் அதை புரிந்து கொள்ள முடியாது. கல்வாரியின் சிலுவையைப் பார்த்தால் நாம் மட்டுமே இப்படி சொல்ல முடியும்: “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” (யோவான் 3:16)

நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார், கிறிஸ்து உயரத்தில் ஏறினார் என்பது நாம் கற்றுக்கொள்வதற்கும் கற்பிப்பதற்குமான இரட்சிப்பின் அறிவியல்.

(3) நம்மீதான பெரும் அன்பினால், எந்த ஒரு குறிப்பிட்ட காரியத்தை

செய்யும்படிக்கு தேவன் தம் குமரானை <u>அனுப்பவில்லை</u>?

*உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான் 3:17)*

உலகைக் கண்டிக்க தேவன் தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பியிருக்கக்கூடும். ஆனால் அற்புதமான கிருபை! கிறிஸ்து இரட்சிக்க வந்தார், அழிக்கவரவில்லை. இரட்சகரின் நிகரற்ற அன்பின் உத்வேகத்துடன் அவர்களின் இருதயங்கள் ஒளிராமல் அப்போஸ்தலர்கள் இந்த கருப்பொருளை ஒருபோதும் தொடவில்லை.

எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்பினார், அவருடைய குமாரனின் மகத்தான வரத்தினால் அவர்களுக்கு இரட்சிப்பு வழங்கப்பட்டது. ஆனால் அது அது அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்படிக்கு தேவனுடைய சித்தம் ஒவ்வொரு மனிதனின் விருப்பத்தினாலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இரட்சிப்பு என்பது கிறிஸ்துவை விசுவாசித்து பெறுபவர்களுக்கு மட்டுமேயாகும். (யோவான் 1:12; 3:16 ஐக் காண்க).

(4) இழந்துப்போனவர்களை தண்டிக்க வேண்டிய காரணமென்ன?

*ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாய் இருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை*

*விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. (யோவான் 3:19)*

குமாரனை விசுவாசியாதவர்கள் "ஏற்கெனவே ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டு இருக்கிறார்கள்" என்று யோவான் அவசரப்படுகிறான், ஏனெனில் அவர்கள் விசுவாசிக்க மறுக்கிறார்கள். உலகைக் காப்பாற்றுவதே தேவன் தமது குமாரனை உலகத்திற்கு அனுப்புவதின் நோக்கமாகும். இரட்சகரின் வருகையால், சில மனிதர்கள் ஆக்கினைக்கு ஆளானால், அதற்கு தேவனைக் குறை கூற முடியாது. உண்மையான ஒளியின் வருகையிலிருந்து ஆக்கினைத் தீர்ப்பின் விளைவுகள் வருகிறதில்லை, மாறாக இருளுக்கு முன்னுரிமை இருப்பதால் வேண்டுமென்றே ஒளியிலிருந்து மனிதர்கள் திரும்பிச்செல்கின்றனர்.

(5) நமக்கு தகுதியான அழிவிலிலிருந்து நம்மை தடுக்க, தேவன் தம்முடைய மகத்தான அன்பை எவ்வாறு வெளிப்படுத்தினார்?

*தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. (1 யோவான் 4: 9)*

ஆதாம் செய்த பாவம் மனித இனத்தை நம்பிக்கையற்ற துயரத்தில் ஆழ்த்தியபோது, தேவன் தம்மை விழ்ச்சியடைந்த மனிதர்களின் தொடர்பிலிருந்து விடுவித்துக்கொண்டிருக்கக்கூடும். பாவிகள் எப்படி நடத்தப்படுவதற்கு

தகுதியானவர்களோ அப்படி அவர் அவர்களை நடத்தியிருக்கக்கூடும். அவருடைய கோபத்தின் கலசங்களை நம் உலகில் ஊற்றும்படி அவர் வானத்தின் தூதர்களுக்கு கட்டளையிட்டிருக்கக்கூடும். அவர் தமது பிரபஞ்சத்திலிருந்து இந்த இருண்ட கறையை அகற்றியிருக்கக்கூடும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. அவர் தம் சமுகத்திலிருந்து அவர்களை வெளியேற்றுவதற்குப் பதிலாக, வீழ்ச்சியடைந்த இனத்திற்கு இன்னும் அருகில் வந்தார். நம்முடைய எலும்பின் எலும்பாகவும், நம்முடைய மாம்சத்தின் மாம்சமாகவும் மாற அவர் தம்முடைய குமாரனைக் கொடுத்தார்.
மனிதனுக்கு தேவன் அளித்த வரம் எல்லா கணக்கீடுகளுக்கும் அப்பாற்பட்டது. எதுவும் விலக்கிக்கொள்ளப்படவில்லை. இன்னும் அதிகமாகச் செய்திருக்கலாம் அல்லது மனிதகுலத்திற்கு இன்னும் அதிக அளவிலான அன்பை வெளிப்படுத்தியிருக்க முடியும் என்று சொல்வதற்கு தேவன் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். கிறிஸ்துவின் வரத்தில், அவர் பரலோகமனைத்தையும் கொடுத்தார்.

(6) தேவனுடைய மகத்தான அன்பின் காரணத்தால், தம்முடைய குமரனை இந்த உலகத்திற்கு எந்த நோக்கத்திற்காக <u>அனுப்பினார்</u>?

*நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.*

*(1 யோவான் 4:10)*

மீறுதலின் விளைவாக, ஆதாமும் ஏவாளும் எல்லா நம்பிக்கையிலிருந்தும் துண்டிக்கப்பட்டபோது, பாவியின் மரணத்தை நீதி கோரியபோது, கிறிஸ்து தம்மை ஒரு பலியாகக் கொடுத்தார். “நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.” “நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.” 1யோவான் 4:10; ஏசாயா 53: 6.

மனிதர்களின் வரம்பு மீறல்களை மன்னிக்க கூடிய ஒரே ஒரு வழக்காடுகிறவர், ஒரே ஒரு மத்தியஸ்தர் மட்டுமே இருக்கிறார். நம்முடைய பாவங்களுக்கு பரிகார பலியாக இயேசுவைக் கொடுத்தவருக்கு நம்முடைய இருதயம் நன்றியுடன் உருக வேண்டாமா? பிதா நம் சார்பாக வெளிப்படுத்திய அன்பு, அவர் நமக்காக வெளிப்படுத்திய அன்பைப் பற்றி ஆழமாக சிந்தியுங்கள், இந்த அன்பை நாம் அளவிட முடியாது. அளவீடு எதுவும் கிடையாது. இதை அளவிட உலக தோற்றமுதல் கல்வாரியில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரை மட்டுமே சுட்டிக்காட்ட முடியும். அது நித்திய தியாகம். முடிவற்றவரை நாம் புரிந்துகொண்டு எப்படி அளவிட முடியும்?

(7) அவருடைய நிகரற்ற அன்பிற்கு மாசற்ற சான்றாக நமக்கு வெளிப்படுத்த எதை செய்யும்படிக்கு தேவன் கிறிஸ்துவை அனுப்பினார்?

*நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5: 8)*

சுவிசேஷத்தின் மகிமைதான், தெய்வீக சாயலை, வீழ்ச்சியடைந்த இனத்தில் ஒரு நல்ல வெளிப்பாட்டின் மூலம் மீட்டெடுக்கும் நிலையான இரக்கத்தின் கொள்கையின் அடிப்படையில் நிறுவப்பட்டது. இந்த வேலை பரலோக நியாய சபையில் தொடங்கியது. அங்கே தேவன் மனிதர்களுக்கு அவர்களை அணுகி தம்முடைய அன்பின் மாசற்ற சான்றுகளுக்கான தெளிவான ஆதாரங்களை வழங்க முடிவு செய்தார். அவர், "தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." யோவான் 3:16.

தேவத்துவம் இந்த இனத்தின் மீது பரிதாபத்துடன் தூண்டப்பட்டார், பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் மீட்பின் திட்டத்திலிருந்து செயல்படுவதற்கு தங்களைத் தாங்களே கொடுத்தார்கள். இந்த திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்காக, தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய கிறிஸ்து பாவத்திற்கு பலியாக கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த அன்பின் ஆழத்தை எந்த கோடால் அளவிட முடியும்? அவர் இன்னும்

அதிகமாக செய்திருக்க வேண்டும் என்று மனிதன் சொல்வதற்கு சாத்தியமில்லாமல் செய்தார். மனிதனின் முன்னேற்றத்திற்கான திட்டத்தில் எதுவும் குறைவுப்படக்கூடாது என்பதற்காக, கிறிஸ்துவுடன், அவர் பரலோகத்தின் அனைத்து வளங்களையும் கொடுத்துவிட்டார். இங்கே அன்பு இருக்கிறது - அதன் சிந்தனை ஆத்துமாவை விவரிக்க முடியாத நன்றியுடன் நிரப்ப வேண்டும்! ஓ, என்ன அன்பு, என்ன ஒரு நிகரற்ற அன்பு! இந்த அன்பின் சிந்தனை எல்லா சுயநலத்திலிருந்தும் ஆத்துமாவை சுத்திகரிக்கும். சீஷர் சுயத்தை வெறுக்கவும், சிலுவையை எடுத்துக் கொள்ளவும், மீட்பரைப் பின்பற்றவும் இது வழிநடத்தும். {CH 222}

(8) பரலோகம் செல்லும் வரை நாம் அதை முழுமையாக புரிந்துக்கொள்ள முடியாது என்றாலும், கார்த்தருடைய அன்பைக் குறித்த நம்முடைய ஜெபம் என்னவாக இருக்கவேண்டும்?

*சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம்பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். (எபேசியர் 3: 18-19)*

வீழ்ச்சியடைந்த மனிதர்களின் இரட்சிப்பிற்காக அவருடைய குமாரன்

அளித்த பரிசில் வெளிப்பட்ட தேவனுடைய அன்பின் சிந்தனை இருதயத்தை அசைத்து, ஆத்துமாவின் சக்திகளை வேறு எதுவும் செய்யாதபடி தூண்டிவிடும். மீட்பின் பணி ஒரு அற்புதமான வேலை; இது தேவனுடைய உலகத்தில் ஒரு இரகசியமாகும். ஆனால் இதுபோன்ற நிகரற்ற கிருபையின் நோக்கங்கள் எவ்வளவு அலட்சியமாக நோக்கப்படுகின்றன!

சாத்தான் நம்முன்வைத்துக் கொண்டிருக்கும் இருண்ட படங்களைப் பற்றி தொடர்ந்து சிந்திப்பதன் மூலமாக நம்முடைய உணர்வுகள் பாவத்தால் மழுங்கடிக்கப்படாமல், முற்றிலும் தகுதியற்ற நமக்கு தினந்தோறும் நன்மைகளால் நிரப்புகிறவருக்கு, ஒரு தீவிரமான மற்றும் தொடர்ச்சியான நன்றியுணர்வு நம் இருதயங்களிலிருந்து தினந்தோறும் ஊற்றெடுத்து அவரை நோக்கி புறப்பட வேண்டும். மீட்கப்பட்டவர்களின் நித்திய கீதமானது, நம்மை நேசித்த, நம்முடைய பாவங்களிலிருந்து அவருடைய இரத்தத்தினாலே நம்மைக் கழுவியவரைப் போற்றிப்பாடும் கீதமாகும்; மேலும் அந்தக் கீதத்தை நாம் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்னால் நித்தியமாக பாட வேண்டியிருப்பதால், அதை இங்கேயே கற்றுக்கொள்ள வேண்டும்.

(9) நாம் மிகுந்த துன்மார்க்கத்திலும், விரக்தியிலும் மற்றும் தகுதியற்ற நிலையில் விழ நேர்ந்தாலும், நம்முடையஅன்பான தேவன் எந்த மூன்று வாக்குத்தத்தங்களை தருகிறார்?

*“நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை*

*மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களை விட்டு நீங்கிற்று.” (ஓசியா 14: 4)*

தேவனுடைய நகரத்திற்குள் பிரவேசிக்கும் அனைவரும் நேரான வாசல் வழியாக பாடுகளின் மூலம் பிரவேசிப்பார்கள்; ஏனென்றால், "தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை." வெளிப்படுத்துதல் 21:27.
ஆனால் வீழ்ச்சியடைந்த எவரும் விரக்தியடையும் அளவிற்கு செல்லத் தேவையில்லை.
முன்பு தேவனால் கௌரவிக்கப்பட்ட, வயதில் மூத்தவர்கள் தங்கள் ஆத்துமாக்களை தீட்டுப்படுத்திக்கொண்டிருக்கக்கூடும், காம பலிபீடத்தின் மீது தங்கள் நல்லொழுக்கத்தை தியாகம் செய்திருக்கலாம்; ஆனால் அவர்கள் மனந்திரும்பி, பாவத்தை கைவிட்டு, தேவனிடம் திரும்பினால், அவர்களுக்கு இன்னும் நம்பிக்கை காத்துக்கொண்டிருக்கிறது.

“நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் " என்று அறிவிப்பவர், " துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும்விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்." என்ற அழைப்பையும் தருகிறார். வெளிப்படுத்துதல் 2:10; ஏசாயா 55: 7.

(10) கிறிஸ்துவுடன் நம்மை ஜீவனோடு வைப்பதற்காக, தேவன் தமது வளமான இரக்கத்தை காட்டியதற்கு என்ன காரணம்?

*தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். (எபேசியர் 2: 4-5)*

தேவன் இரக்கமுள்ளவர் மட்டுமல்ல; அவரை நோக்கி கூப்பிடும் யாவருக்கும் அவர் இரக்கம் நிறைந்தவர், அவர்கள் அதற்கு தகுதியானவர்கள் என்பதால் அல்ல, ஆனால் இரக்கம் காட்டுவது தேவனுக்கு நல்ல மகிழ்ச்சி தரும் செயல் என்பதால் நமக்கு இரக்கம் காட்டுகிறார் (தீத்து 3: 5; 1 பேதுரு 1: 3).

தேவனுடைய அன்பு இரக்கத்தை விட அதிகமானது; அது இரக்கமுள்ள செயலுக்கு வழிவகுக்கிறது மற்றும் மாறாது. "நாம் பாவிகளாக இருந்தபோதும்" தேவன் நம்மை நேசித்தார், எனவே ஒருபோதும் நம்மை நேசிப்பதை நிறுத்த மாட்டார். இந்த அன்புதான் அவருடைய இரட்சிப்பின் வேலையைத் தூண்டியது (யோவான் 3:16). அன்பு என்பது அவருடைய குணாதிசயத்தின் ஒரு முக்கியமான பண்பு (1 யோவான் 4: 8), அதன் உயர்ந்த வெளிப்பாட்டை கிறிஸ்துவின் ஆளத்துவத்தில் நாம் காணலாம். நாம் பாவிகள் என்பதால் தேவன் நம்மீது இரக்கம் காட்டுகிறார், நாம் அவருடைய சிருஷ்டிகள் என்பதால் அவர் நம்மை நேசிக்கிறார். மனிதனுக்காக அவர் செய்த

மிகப் பெரிய பணி வெறுமனே நற்பண்பு அல்லது தொண்டு செயல்களின் செயல் அல்ல; அது அன்பின், பாசத்தின் செயல்

தேவனுடைய கிருபை இதுதான், அக்கிரமங்களிலும் பாவங்களிலும் நாம் மரித்தவர்களாகவும், பொல்லாத செயல்களால் நம் மனதில் பகைஞர்களாக, பலவிதமான காம இச்சைகளுக்கு ஊழியம் செய்து, இழிவான இச்சை ரோகங்களுக்கும் அடிமைகளாக, பாவம் மற்றும் சாத்தானுக்கு ஊழியம் செய்தபோதும் அவர் நம்மை நேசித்தார். பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தின் மூலம் ஆத்துமாக்கள் பாவ மன்னிப்பைக் கண்டுபிடிக்க வழிநடத்தப்படுகிறார்கள்.

(11) யார் மூலம் தமது அன்பின் பண்புகளை தேவன் வெளிப்படுத்துகிறார்?

அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? (யோவான் 14: 9) தேவனை தவறாக புரிந்துக்கொண்டதினால் உலகில் இருளில் இருந்தது. இருண்ட நிழல்கள் பிரகாசிக்கும்படியாகவும், உலகம் மீண்டும் தேவனிடம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதற்காகவும், சாத்தானின் வஞ்சக வல்லமைகள் உடைத்தெரியப்பட வேண்டும். இதை பலவந்தமாக செய்யப்பட முடியாது. வல்லமையைப் பயன்படுத்துவது தேவனுடைய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முரணானது; அவர் அன்பின் ஊழியத்தை மட்டுமே விரும்புகிறார், அன்பைக் கட்டளையிட முடியாது; அதை வல்லமை

அல்லது அதிகாரத்தால் வெல்ல முடியாது. அன்பினால் மட்டுமே அன்பு விழித்தெழுகிறது.

தேவனை அறிவதானது அவரை நேசிப்பதாகும்; அவரது தன்மை சாத்தானின் தன்மைக்கு முரண்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும். இந்த உலகத்திலுள்ள எல்லாரிலும் இந்த பணியை ஒரே ஒருவரால் மட்டுமே செய்ய முடியும். தேவனுடைய அன்பின் உயரத்தையும் ஆழத்தையும் அறிந்த ஒருவரால் மட்டுமே அவர் அதை அறியப்பட செய்ய முடியும். உலகத்தின் இருண்ட இரவின் மீது நீதியின் சூரியன் உதிக்கும்; "அதின் செட்டையின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்"
மல்கியா 4:2.

(12) நம் மீதான தேவனுடைய அன்பா அல்லது நம்மை இரட்சிக்க தந்த அவருடைய குமாரனாகிய வெகுமதியா? எது முதலில் வந்தது?

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16)*

ஆனால் கொடுக்கப்பட்ட இந்த மாபெரும் பலி தந்தையின் இருதயத்தில் மனிதனுக்கான அன்பை உருவாக்குவதற்காக அல்ல, மனிதரைக் இரட்சிக்க ஆயத்தமாக இல்லை என ஒருபோதும் கூற முடியாது! "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." யோவான் 3:16

பிதா நம்மை நேசிப்பது, பெரிய பிராயச்சித்தம் செய்யப்பட்டதன் காரணமாக அல்ல, ஆனால் நம்மை நேசிப்பதால் தான் அவர் பிராயசித்தம் செய்தார். வீழ்ச்சியடைந்த உலகில் தன் எல்லையற்ற அன்பை ஊற்றக்கூடிய வழி கிறிஸ்து. “தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார்”. 2 கொரிந்தியர் 5:19. தேவன் தம்முடைய குமாரனுடன் பாடுபட்டார். கெத்செமனின் வேதனையில், கல்வாரியின் மரணத்தில் எல்லையற்ற அன்பின் இருதயம் மீட்பிற்கான விலைக்கிரயத்தின் விலையை செலுத்தியது.

“நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக்கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்” என்று இயேசு சொன்னார், யோவான் 10:17. அதாவது, “என் பிதா உங்களை மிகவும் நேசித்தார், உங்களை மீட்பதற்காக என் உயிரைக் கொடுத்ததற்காக அவர் என்னை அதிகமாக நேசிக்கிறார். உங்கள் பதிலீடாக மற்றும் உத்தரவாதம் தருவதில், என் வாழ்க்கையை அர்ப்பணித்தின் மூலம், உங்கள் பொறுப்புகளை, உங்கள் மீறுதல்களை எடுத்துக்கொள்வதன் மூலம், நான் என் பிதாவிற்கு பிரியமுள்ளவனாக இருக்கிறேன்; என் பரிகார பலியால், தேவன் நீதியுள்ளவராக இருக்க முடியும், ஆனால் இயேசுவை விசுவாசிக்கிறவர்களை நீதிமானாக்குகிறவர்.”

(13) பாவத்தில் மரித்தவர்களாக இருந்தாலும், தேவன் தம்முடைய பேரன்பினாலும், இரக்கத்தினாலும்

கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு செய்த இரு காரியங்கள் எவை?

*அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, (எபேசியர் 2: 5-6)*

கிறிஸ்துவினுடைய வரத்தின் மூலம் தேவன் நம்மை அவருடன் ஒன்றிணைப்பார் என்பதை மனிதனுக்கு நிரூபிக்க ஜீவனுக்கும் மகிமைக்குமான கர்த்தர் அவருடைய தெய்வீகத்தை மனிதத்தன்மையுடன் அலங்கரித்தார். தேவனுடன் தொடர்பு இல்லாமல் யாரும் மகிழ்ச்சியாக இருக்க சாத்தியமில்லை. வீழ்ச்சியடைந்த மனிதன், நம்முடைய பரலோகத் தகப்பனின் அன்பு மனந்திரும்பிய பாவியைத் தழுவி, அவருடைய மாசற்ற ஆட்டுக்குட்டியின் தகுதிகளின் மூலம் மறுரூபமாகும் வரை திருப்தி அடைய முடியாது என்பதைக் கற்றுக்கொள்வது அவசியம்.

பரலோகத்தின் எல்லா அறிவு ஜீவிகளின் வேலையானது இத்துடன் முடிவுக்கு வருகிறது. தங்கள் தளகர்த்தாவினுடைய கட்டளையின் கீழ், மீறுதல் மூலம் பரலோக பிதாவிடமிருந்து பிரிந்துப்போனவர்களை மீட்டெடுப்பதற்காக அவர்கள் செயல்பட வேண்டியதாக இருந்தது. கிறிஸ்துவின் அற்புதமான கிருபையும் அன்பும் உலகுக்கு வெளிப்படும்படிக்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மனிதனை மீட்க தேவனுடைய குமாரன் செலுத்திய நித்தியமான விலைக்கிரயத்தில், தேவனுடைய அன்பு வெளிப்படுகிறது. மீட்பின் இந்த மகிமையான திட்டம் முழு உலகையும் இரட்சிப்பதற்கான அதன் ஏற்பாடுகளில் மகிழ்ச்சி அளிக்கிறது. கிறிஸ்துவின் சரியான சகிப்புத்தன்மையினாலும் பாவமுள்ள மற்றும் வீழ்ந்த மனிதன் இயேசுவின் மூலம் வரும் பாவ மன்னிப்பினாலும், கணக்கிடப்பட்ட நீதியினாலும் அது பூரணமாக்கப்படக்கூடும்.

*பிதாவின் அன்பை வெளிப்படுத்தவும், நம்மை அழிவிலிருந்து காப்பாற்றவும் கிறிஸ்துவில் உள்ள தேவத்துவத்தின் இரகசியம் மனித மாம்சத்தில் பூமிக்கு வந்ததை கண்டு நான் வியப்படைகிறேன்!*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*அவருடைய குமாரனின் வெகுமதிக்கு நான் என்றென்றும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், தேவன் மிகவும் தாராளமாகக் கொடுத்திருக்கிறார், நோய், துன்பம் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு அவரது சமுகத்தில் எனக்கு ஒரு எதிர்காலமும் நம்பிக்கையும் பெற்றுக்கொள்ள முடியும்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*இந்த உலகில் பாவத்தின் இருண்ட நிலையை நான் நேசிக்காதப்படிக்கும், இருளின் ஆக்கினையை தேர்ந்தெடுப்பதை விட அவருடைய அற்புதமான ஒளியின்*

அன்பை தேர்ந்தெடுக்க தேவன் தம்முடைய ஆவியினால் என்னை நிரப்ப வேண்டும் என்பது எனது ஜெபம்.

வட்டம்:    ஆம் தீர்மானிக்கவில்லை

என் பின்மாற்றத்தை குணமாக்குவதற்கும், என்னை தாராளமாய் நேசிப்பதற்கும், உம்முடைய கோபத்தை என்னிடமிருந்து திருப்புவதற்கும் நீர்அளித்த வாக்குத்தத்தங்களுக்கு நன்றி தகப்பனே.

வட்டம்:    ஆம் தீர்மானிக்கவில்லை

வீழ்ச்சியடைந்த எங்கள் இனத்தைக் குறித்து தேவத்துவம் பரிதாபத்தினால் அசைக்கப்பட்டார் என்பதையும், என்னுடைய மீட்பின் திட்டத்திற்கு தங்களையே தந்ததை நான் மெச்சிக்கொள்கிறேன்.

வட்டம்:    ஆம் தீர்மானிக்கவில்லை

இன்றைக்கு நான் என் இருதயத்தையும் மனதையும் ஆத்துமாவையும் கர்த்தருக்குக் கொடுக்கிறேன், அவருடைய கிருபையினாலும் ஆவியினாலும், அவருடைய மகிமைக்காக என் வாழ்க்கையை வாழ நான் ஜெபிக்கிறேன். கிறிஸ்துவின் வாழ்க்கையிலும் மரணத்திலும் வெளிப்படுத்தப்பட்ட அன்பு நன்மையின் தேவத்துவத்தின் இரகசியத்திற்கு, ஒரு வல்லமை வாய்ந்த சாட்சியாக இருக்க விரும்புகிறேன்.



## பாடம் 6

## தேவனுடைய அன்பு அவருடைய நீதி மற்றும் இரக்கத்தினால் வெளிப்பட்டது

**(1) எதை நிறைவேற்றவும் கனப்படுத்தவும், பூரணப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் கிறிஸ்து பூமிக்கு வந்து, அவரது ஜீவனை கொடுத்தார்?**

*“நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். (மத்தேயு 5:17)*

தேவனுடைய எல்லையற்ற அன்பு, இழந்துப்போன மனித இனத்தை மீட்பதற்காக அவருடைய ஒரேபேறான குமாரனின் வரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தம்முடைய பிதாவின் தன்மையை மனிதர்களுக்கு

வெளிப்படுத்த கிறிஸ்து பூமிக்கு வந்தார், அவருடைய வாழ்க்கையானது தெய்வீக கனிவு மற்றும் இரக்கத்தின் செயல்களால் நிறைந்திருந்தது. "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 5:18) என்று இயேசு பிரகடனப்படுத்தினார்.

இயேசுவின் மூலம், தேவனுடைய இரக்கம் மனிதர்களுக்குவெளிப்படுத்தப்பட்டது; ஆனால் இரக்கம் நீதியை ஒருபோதும் ஒதுக்கி புறம்பே தள்ளுவதில்லை. . தேவனுடைய குணாதிசயத்தின் தன்மைகளை நியாயப்பிரமாணம் வெளிப்படுத்துகிறது, மேலும் ஒரு மனிதனை அவனது வீழ்ச்சியடைந்த நிலையில் சந்திக்க, அதனுடைய தலைப்பில் ஒரு எழுத்தையாகிலும் ஒரு உறுப்பையாகிலும் மாற்ற முடியாது. தேவன் தம்முடைய நியாயப்பிரமாணத்தை மாற்றாமல், மனிதனின் மீட்பிற்காக கிறிஸ்துவில் தம்மை பலியாக தந்தார். "கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார். 2 கொரிந்தியர் 5:19. நியாயப்பிரமாணம் நீதியை, ஒரு நீதியின் வாழ்வை, ஒரு பூரணமான குணத்தை வலியுறுத்துகிறது; மேலும் இதனை மனிதனால் தர முடியாது. தேவனுடைய பரிசுத்த நியாயப்பிரமாணம் கோருவதை அவனால் நிறைவேற்ற முடியாது. ஆனால் கிறிஸ்து, மனிதனாக பூமிக்கு வந்து, பரிசுத்த வாழ்க்கையை வாழ்ந்து, ஒரு பூரணமான தன்மையை வளர்த்துக் கொண்டார்.

அவற்றைப் பெறுக்கொள்ளும் அனைவருக்கும் அதை ஒரு இலவசமான வரமாக வழங்குகிறார். அவரது வாழ்க்கை மனிதர்களின் வாழ்க்கையின் பக்கம் நிற்கிறது. இவ்வாறு அவர்கள் தேவனுடைய சகிப்புத்தன்மையின் மூலம் கடந்த கால பாவங்களை நீக்கப் பெறுகிறார்கள். அது மட்டுமல்லாமல், கிறிஸ்து தேவனுடைய பண்புகளுடன் மனிதர்களை ஊக்குவிக்கிறார். ஒரு நல்ல ஆவிக்குரிய வல்லமை மற்றும் அழகை தரித்து, தெய்வீக பண்புகளை ஊக்குவித்தப்பின்னர், மனித தன்மைகளை கட்டியெழுப்புகிறார். இவ்வாறு நியாயப்பிரமாணத்தின் நீதியானது கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்குள் நிறைவேறுகிறது.

"கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்." ரோமா. 3:26.

(2) எதை உடைய "தேவனாகிய கர்த்தர்" இரக்கத்துடன் சமமாக நிலைநிறுத்தி, இறுதியாக சிலுவையில் அதை வெளிப்படுத்தினார்?

*ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கிவான்கள். (ஏசாயா 30:18)*

தேவனுடைய அன்பு அவருடைய இரக்கத்திற்கு எவ்விதத்திலும் குறையாமல் அவருடைய நீதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நீதயானது அவருடைய சிங்காசனத்தின் அஸ்திபாரமும் அவருடைய அன்பின்

கனியுமாகும். இரக்கத்தை சத்தியத்திலிருந்தும் நீதியிலிருந்தும் விலக்கச் செய்வது சாத்தானின் நோக்கமாக இருந்தது. தேவனுடைய நியாயப்பிரமாணம் சமாதானத்திற்கு எதிரி என்று நிரூபிக்க அவன் முயன்றான். ஆனால் தேவனுடைய திட்டத்தில் அவைகள் ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பதை கிறிஸ்து காட்டுகிறார்; ஒன்றில்லாமல் மற்றொன்று இருக்க முடியாது. “கிருபையும், சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்” சங்கீதம். 85:10.

தேவனுடைய நீதியானது அவருடைய இரக்கத்தை அழிக்கவில்லை என்பதை கிறிஸ்து நிரூபித்தார், ஆனால் பாவமானது மன்னிக்கப்படக்கூடும், நியாயப்பிரமாணம் நீதியானது, மற்றும் முழுமையாகக் கீழ்ப்படிய கூடியது. சாத்தானின் குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டன. தேவன் மனிதனுக்கு அவருடைய அன்பின் தெளிவான ஆதாரங்களை அளித்திருந்தார். {DA 762}

(3) இந்த மகத்தான அன்பினாலும், தெய்வீக வல்லமையினாலும், கிறிஸ்துவின் தகுதிகளினால் நாம் பங்காளிகளாகும்படிக்கும் நமக்குள் வாசம் செய்வதற்கும் எதை அனுமதித்திருக்கிறார்?

*தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும். அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால்*

*உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*
*(2 பேதுரு 1: 3-4)*

மனிதனுடைய மீட்பின் பணியை மேற்கொண்ட பின்னர், பிதாவானவர் செய்துமுடிக்க வேண்டிய அவசியமான அவருடைய வேறு வேலை எதையும் விட்டுவைக்கவில்லை.
அவர் மனிதர்களுக்கு வாய்ப்பளிப்புகளை உருவாக்குவார்; அவர் யாரை மீட்க வந்தாரோ அவர்களுக்கு வானத்தின் முழு கருவூலமும் திறக்கப்படும் வரை, தயவின் மேல் தயவு, வரத்தின் மீது வரத்தை குவிப்பார். உலகத்தின் அனைத்து செல்வங்களையும் சேகரித்து, அவருடைய தெய்வீக இயல்பின் அனைத்து வளங்களையும் திறந்து வைத்த தேவன், மனிதனின் பயன்பாட்டிற்காக அவைகள் அனைத்தையும் கொடுத்தார். அவைகள் யாவும் அவருடைய இலவச பரிசு. தெய்வீக வளிமண்டலத்தைப் போல, அன்பின் கடல் உலகெங்கிலும் எவ்வளவாய் பரவுகிறது, இது எந்த வகையான அன்பு! நித்திய தேவன் தம்முடைய குமாரனாகிய மனிதன் மூலம் மனித இயல்பைப் பின்பற்ற வேண்டும், அதையே மிக உயர்ந்த பரலோகத்திற்குள் கொண்டு செல்ல வேண்டும்!

நம்முடைய மீட்பர் அதற்குக் குறைவானது எதையும் தீர்மானிக்கவில்லை, அவருடைய தகுதிகளின் மூலம் தேவனுடைய அன்பு அவரை

விசுவாசிக்கிற ஆத்துமாவிற்கு மாற்றப்பட வேண்டும்.
தேவனுடைய அன்பின் உயிர்ச்சக்தி என்பது நம் இயல்பின் ஒவ்வொரு பகுதியிலும் நம்முடைய வாழ்க்கையாக பரவுவதாகும், அது கிறிஸ்து இயேசுவில் வாழும்போது நம்மில் நிலைத்திருக்கக்கூடும். விசுவாசத்துடன் வாழ்வதன் மூலம் கிறிஸ்துவோடு ஐக்கியமாகி, கிறிஸ்துவின் இரகசிய சரீரத்தின் அங்கங்களாக பிதா நம்மை நேசிக்கிறார், அதில் கிறிஸ்து மகிமைப்படுத்தப்பட்ட தலையாக இருக்கிறார்.

(4) நம்முடைய வீழ்ச்சியடைந்த ஆத்துமாக்களுக்காக இரக்கம் மற்றும் பரிவு தூண்டப்படுகையில் எந்த ஒரு பாவியும் எதை செய்வதை தேவத்துவம் விரும்பவில்லை?

*தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2 பேதுரு 3: 9)*

சுவிசேஷத்தின் மகிமைதான், வீழ்ச்சியடைந்த மனித இனத்தில் ஒரு நல்ல வெளிப்பாட்டின் மூலம் மீட்டெடுக்கும் நிலையான இரக்கத்தின் கொள்கையின் அடிப்படையில் தெய்வீக சாயலை நிறுவியது. இந்த வேலை பரலோக நியாய சபையில் தொடங்கியது. அங்கே தேவன் மனிதர்களை அணுகி அவர்களுக்கு தம்முடைய அன்பின் மாசற்ற சான்றுகளுக்கான தெளிவான

ஆதாரங்களை வழங்க முடிவு செய்தார். அவர், "தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." யோவான் 3:16.

தேவத்துவம் இந்த மனித இனத்தின் மீது பரிதாபத்துடன் தூண்டப்பட்டார், பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி ஆகியோர் மீட்பின் திட்டத்திலிருந்து செயல்படுவதற்கு தங்களைத் தாங்களே கொடுத்தார்கள். இந்த திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்காக, தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய கிறிஸ்துவை பாவத்திற்கு பலியாக கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
இந்த அன்பின் ஆழத்தை எந்த கோடால் அளவிட முடியும்? அவர் இன்னும் அதிகமாக செய்திருக்க வேண்டும் என்று மனிதன் சொல்வதற்கு சாத்தியமில்லாமல் செய்தார். மனிதனின் முன்னேற்றத்திற்கான திட்டத்தில் எதுவும் குறைவுப்படக்கூடாது என்பதற்காக, கிறிஸ்துவுடன், அவர் பரலோகத்தின் அனைத்து வளங்களையும் கொடுத்துவிட்டார். இங்கே அன்பு இருக்கிறது - அதன் சிந்தனை ஆத்துமாவை விவரிக்க முடியாத நன்றியுடன் நிரப்ப வேண்டும்! ஓ, என்ன அன்பு, என்ன ஒரு நிகரற்ற அன்பு! இந்த அன்பின் சிந்தனை எல்லா சுயநலத்திலிருந்தும் ஆத்துமாவை சுத்திகரிக்கும். சீஷர் சுயத்தை வெறுக்கவும், சிலுவையை எடுத்துக் கொள்ளவும், மீட்பரைப் பின்பற்றவும் இது வழிநடத்தும். {CH 222}

(5) பாவிகளாகிய நாம் நீதியையும், இரக்கத்தையும், மற்றும் தேவனுடைய அன்பையும் சிலுவையின் வெளிச்சத்தில் புரிந்துகொள்ளும்போது, பவுலைப் போன்று, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் மையமாக எது இருக்கும்?

*இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். (1 கொரிந்தியர் 2: 2)*

இயேசு, வானத்திலிருந்து வரும் ஒளிக்கு ஏற்ப சிலுவையை வைத்தார், ஏனென்றால் அது மனிதனின் கண்களைப் கவரும். சிலுவை பார்ப்பதன் மூலம் மனிதர்களையும், தேவனையும் அவர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிந்து கொள்ளும்படி அது தெய்வீக முகங்களின் பிரகாசத்துடன் நேரடி வரிசையில் உள்ளது. தேவனைப் பார்ப்பதில், தம் ஆத்துமாவை மரணத்திற்கு ஊற்றியவரைக் காண்கிறோம். சிலுவையைப் பார்ப்பதில் பார்வையானது தேவனிடம் விரிவுபடுத்தப்படுகிறது, மேலும் அவர் பாவத்தை வெறுக்கிறார் என்பது பகுத்தறியப்படுகிறது. ஆனால் சிலுவையில், தேவன் பாவத்தை வெறுப்பதைக் காணும்போது, பாவிகளிடத்தில் அவர் கொண்டுள்ள, மரணத்தை விட வலிமையான அன்பையும் நாம் காண்கிறோம். உலகிற்கு, சிலுவையை குறித்த வாதமானது தேவன் சத்தியமும், ஒளியும் மற்றும் அன்புமாக இருக்கிறார் என்ற மறுக்க முடியாததாக இருக்கிறது.

(6) பாவத்தின் மூலமாக நாம் தேவனிடமிருந்து நீதியாக பிரிக்கப்பட்டிருந்தாலும், இரக்கத்தின் எந்த செயல் அதை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது?

*நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம். (ரோமர் 5: 10-11)*

மனிதன், பாவத்தின் மூலம் தேவனுடைய ஜீவனிலிருந்து பிரிக்கப்பட்டான். பாவத்தின் காரண கர்த்தாவான சாத்தானின் சூழ்ச்சிகளால் அவனது ஆத்துமா செயலிழந்துப்போயிருக்கிறது. அவனைப் பொறுத்தவரை, அவன் பாவத்தை உணர இயலாது, தெய்வீக தன்மையைப் பாராட்டவும் கையகப்படுத்தவும் இயலாது. அப்படி அவனது வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டிருந்தால், அதில் விசேஷம் ஒன்றுமில்லாமல் அவனுடைய இயல்பான இருதயம் அதை விரும்பியிருக்கும்.

ஆனால் தேவன் சாத்தானால் தோற்கடிக்கப்பட மாட்டார். அவர் தமது குமாரனை உலகத்திற்கு அனுப்பினார், அவர் மனித வடிவத்தையும் இயல்பையும் தரித்துக்கொண்டு, மனிதத்தன்மையும் தெய்வீகத்தன்மையும் அவருடன்

இணைந்திருப்பதின் மூலம் மனிதனை தேவனோடு தார்மீக மதிப்பின் அளவில் உயர்த்தினார்.

தேவன் தம்முடைய குமாரனை அனுப்பியதால் அவருடைய அன்பு வெளிப்படவில்லை, ஆனால் அவர் உலகை நேசித்ததால், தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பினார், மனிதநேயத்தை தரித்த தெய்வீகம் மட்டுமே மனிதகுலத்தைத் தொடக்கூடும், அதே நேரத்தில் தெய்வீகம் தெய்வீகத்தைப் தொடும். பாவம் மனிதனுக்கும் அவனுடைய தேவனுக்கும் இடையில் ஒரு இடைவெளியை உருவாக்கியிருந்தாலும், தெய்வீக இரக்கமானது அந்த இடைவெளியை இணைக்க ஒரு திட்டத்தை வழங்கியது. தம்மையல்லாமல் அவர் அந்த இணைப்பிற்கு எந்த பொருளைப் பயன்படுத்தக்கூடும்? பிதாவின் மகிமையின் பிரகாசம், சாபத்தால் சிதைந்துபோன ஒரு உலகத்திற்கு வந்து, மற்றும் அவரது சொந்த தெய்வீக தன்மையில், அவருடைய சொந்த தெய்வீக சரீரத்தில், பிளவை கட்டுப்படுத்தியது. வானத்தின் ஜன்னல்கள் திறக்கப்பட்டன, குணப்படுத்தும் நீரோடைகளில் பரலோக கிருபையின் மழை நம் இருளில் சிக்குண்ட உலகத்திற்கு வந்தது.

(7) நித்தியத்தின் ஆண்டுகள் உருண்டோடுகையில், அவற்றுடன் தேவனுடைய அன்பு, நீதி, மற்றும் இரக்கம் ஆகியவற்றின் ஒரு ஆழமான வெளிப்பாடு வந்துள்ளப்படியால், நம்முடைய ஸ்தோத்திரப்பாட்டு என்னவாக இருக்கும்?

*அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன். (வெளிப்படுத்தல் 5:13)*

நித்திய ஆண்டுகள், அவை உருண்டோடும்போது, தேவன் மற்றும் கிறிஸ்துவின் வளமான மற்றும் இன்னும் மகிமையான வெளிப்பாடுகளைக் கொண்டுவரும். அறிவு முற்போக்கானது என்பதால், அன்பும், பயபக்தியும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும். மனிதர்கள், தேவனைப் பற்றி எவ்வளவு கற்றுக்கொள்கிறார்களோ, அவருடைய குணத்தைப் துதிப்பதும் அவ்வளவு அதிகமாக இருக்கும்.
மீட்பின் செல்வங்களையும், சாத்தானுடனான பெரும் விவாதத்தில் ஆச்சரியமான சாதனைகளையும் இயேசு அவர்கள் முன் திறக்கும்போது, மீட்கப்பட்ட இருதயங்கள் மிகுந்த பக்தியுடன் சிலிர்ப்படைகின்றன, மேலும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்கள் பொன்னால் ஆன வீணையை மீட்டுகிறார்கள்; ஆயிரமாயிரக்கணக்கான குரல்கள் ஒன்றிணைந்து துதியின் வலிமையான பாடலின் சத்தத்தை அதிகரிக்கச் செய்கின்றன.

பெரும் விவாதம் முடிவுக்கு வந்தது. பாவமும் பாவிகளும் இனியும் கிடையாது. அண்டசராசரம் முழுவதும் சுத்தமாக இருக்கிறது. ஒற்றுமை மற்றும்

மகிழ்ச்சியின் ஒரு நாடித் துடிப்பு பரந்த சிருஷ்டிப்பின் மூலம் துடிக்கிறது. அனைத்தையும் சிருஷ்டித்தவரிடமிருந்து, ஜீவனும் ஒளியும் மகிழ்ச்சியும், வரம்பற்ற இடத்தின் பகுதிகள் முழுவதும் பாய்கிறது. மிகச்சிறிய அணுவிலிருந்து மிகப் பெரிய உலகம் வரை, உயிருள்ள மற்றும் உயிரற்றவைகள் அனைத்தும், அவற்றின் அசைக்க முடியாத அழகிலும், முழுமையான மகிழ்ச்சியிலும், அவைகள் தேவன் அன்பாக இருக்கிறார் என்று அறிவிக்கும்.

(8) பிதாவானவர் நம்முடைய பின்மாற்றத்தை சுத்திகரித்து, மூடினப் பிறகு நம்முடைய மீறுதல் எவ்வளவு தூரம் அகற்றப்பட்டது?

*மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். (சங்கீதம் 103: 12)*

மன்னிப்பு என்பது பலரும் கருதுவதை விட பரந்த பொருளைக் கொண்டுள்ளது. தேவன் "ஏராளமாக மன்னிப்பேன்" என்ற வாக்குத்தத்தத்தை கொடுக்கும்போது, அந்த வாக்குத்தத்தத்தின் அர்த்தம் நாம் புரிந்துகொள்ளக்கூடிய அனைத்திற்கும் மேலானது. மேலும் அவர் இவ்வாறு கூறுகிறார்: "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. ஏசாயா 55: 7-9. தேவனுடைய மன்னிப்பானது நம்மை ஆக்கினையிலிருந்து

விடுவிக்கும் வெறும் நீதித்துறை சார்ந்த செயல் மட்டுமல்ல, இது பாவத்திற்கான மன்னிப்புமல்ல, மாறாக பாவத்திலிருந்து மீண்டு வந்து திரும்பவும் உரிமையை கோருவதாகும். இரட்சிக்கும் அன்பின் வெளிச்சம் தான் இருதயத்தை மாற்றுகிறது. தாவீது இவ்வாறு பாடும்போது மன்னிப்பின் உண்மையான கருத்தை பெற்றிருந்தான் “தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.” சங்கீதம் 51:10.

(9) *நாம் பாவிகளாக சிலுவையில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய அன்பின் முக்கியத்துவத்தை உணரும்போது, பவுலைப்போன்று நாம் எவ்வாறு மேன்மைபாராட்ட வேண்டும்?*

*நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். (கலாத்தியர் 6:14)*

கிறிஸ்துவின் மரணம், தேவனுடைய மிகுந்த அன்பை மனிதனுக்கு நிரூபிக்கிறது. அது நம்முடைய இரட்சிப்பின் உறுதிமொழி. கிறிஸ்தவரிடமிருந்து சிலுவையை அகற்றுவது வானத்திலிருந்து சூரியனை அழிப்பது போலாகும். சிலுவை நம்மை தேவனிடம் நெருங்கச் செய்கிறது, நம்மை அவரிடம் ஒப்புரவாக்குகிறது. ஒரு தந்தையின் அன்பின் இடைவிடாத இரக்கத்தோடு, மனித இனத்தை நித்திய

மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்காக யெகோவா, தம்முடைய குமாரன் அனுபவித்த துன்பங்களைப் பார்த்து, அந்த அன்பானவரில் நம்மை ஏற்றுக்கொள்கிறார்.

சிலுவை இல்லாமல், மனிதனுக்கு பிதாவுடன் எந்த ஐக்கியமும் இருக்க முடியாது. அதன் மீதே நம்முடைய நம்பிக்கை சார்ந்திருக்கிறது. அதிலிருந்து இரட்கரின் அன்பின் வெளிச்சம் பிரகாசிக்கிறது, சிலுவையின் அடிவாரத்தில் ஒரு பாவியானவன் அவனை இரட்சித்துக்கொள்ள மரித்தவரைப் பார்க்கும்போது, அவன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுவதால், அவன் பூரண மகிழ்ச்சியடையக்கூடும். சிலுவையிடம் விசுவாசத்தில் மண்டியிட்டதினால், ஒரு மனிதன் தான் அடையக்கூடிய மிக உயர்ந்த இடத்தை அடைந்துவிட்டான்.

பரலோகத் தகப்பன் எல்லையற்ற ஒரு அன்பினால் நம்மை நேசிக்கிறார் என்பதை சிலுவையின் மூலம் அறிகிறோம். “நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக” (காலத்தியர் 6:14) என்று பவுல் கூறுவதுப்போன்று நம்மால் கூற முடியுமா? சிலுவையில் மகிமைப்படுத்தப்படுவது நம்முடைய பாக்கியம், நமக்காக தம்மைக் கொடுத்தவருக்கு நம்மை முழுமையாகக் கொடுப்பது நம்முடைய பாக்கியம். பின்னர், கல்வாரியில் இருந்து ஓடும் ஒளி நம் முகத்தில் பிரகாசிக்கும்போது, இந்த ஒளியை இருளில் இருப்பவர்களுக்கு வெளிப்படுத்த நாம் முன்னேறலாம்.

தேவனுடைய அன்பின் நியாயப்பிரமாணத்தை உறுதிப்படுத்தவே கிறிஸ்து வந்தார், அதை நீக்கிவிடுவதற்காக அல்ல என்பதை நான் இப்போது புரிந்துகொள்கிறேன். நம்மை மீட்பதற்காக கிறிஸ்து மரித்தார் என்பது அதனுடைய முக்கியத்துவத்தையும் நித்திய இருப்பையும் உறுதிப்படுத்துகிறது.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தேவனுடைய அன்பு என்பது நீதிக்கும் இரக்கத்திற்கும் இடையிலான ஒரு சரியான சமநிலை என்பதை நான் காண்கிறேன், இவைகள் அவருடைய சிங்காசனத்திற்கும் அரசாங்கத்திற்கும் அடித்தளமாகும்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

ஒருவரும் அழிந்துப்போக தேவன் விரும்பாததற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், நான் இயேசுவின் சிலுவையைப் பார்த்து, என் பாவங்களை மறைக்க அவருடைய விலைமதிப்பற்ற இரத்தத்தை கோருகிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

கிறிஸ்துவைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும், அவருடைய ஆவியானவர் என்னை நிரப்ப அனுமதிப்பதன் மூலமும்,

*அவருடைய தெய்வீக இயல்பு என்ற பாக்கியத்தைப் பெற்று வாழ முடியும் என்று நான் வியப்படைகிறேன். அந்த பாக்கியத்தை நான் இப்போது தேவனிடம் கேட்கிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*



பாடம் 7

தேவத்துவத்தின் இரகசியம்

(1) இதுவரை நடந்திராததும் பெரும் அதிசயமாக இருக்கிறதும், ஜீவ வார்த்தையாகிய கிறிஸ்து செய்ததுமாகிய காரியம் என்ன?

*அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற*

*மகிமையாகவே இருந்தது. (யோவான் 1:14)*

ஒரு ஆழமான சிக்கலைப் படிப்பதற்கு நாம் விரும்பினால், பூமியிலோ அல்லது பரலோகத்திலோ இதுவரை நிகழ்ந்திராத அதிசயமான தேவனுடைய குமாரனின் அவதாரத்திற்கு நம் மனதை திருப்ப வேண்டும். பாவமுள்ள மனிதர்களுக்காக இழிவான மற்றும் அவமானகரமான மரணத்தில் மரிப்பதற்கு தேவன் தம்முடைய குமாரனைக் கொடுத்தார். பரலோக வளாகங்களில் தளபதியாக இருந்தவர், அவருடைய இராஜரீக அங்கி மற்றும் இராஜரீக கிரீடம் ஆகியவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு, அவருடைய தெய்வீகத்தன்மையை மனிதத்தன்மையுடன் தரித்துகொண்டு, மனித இனத்தின் தலைவராக, மாதிரி-மனிதனாக நிற்க இந்த உலகத்திற்கு வந்தார். மனித இனத்தோடு துன்பப்படுவதற்கும், அவர்களுடைய எல்லா உபத்திரவங்களோடும் பாடுபடுவதற்கும் அவர் தம்மைத் தாழ்த்திக் கொண்டார்.

உலகம் முழுவதுமே அவருடையது, ஆனால் அவர் தம்மை முழுமையாக வெறுமையாக்கிக் கொண்டார், அவருடைய ஊழியத்தின் போது, “நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை “என்றார். [எபிரெயர் 2:14-18 மேற்கோளிடப்பட்டிருக்கிறது]

(2) கிறிஸ்து மற்றும் அவருடனான நம் மாறாத உறவு ஆகியவற்றோடு தொடர்புடைய இம்மானுவேல் என்ற வார்த்தையின் பொருள் என்ன?

“அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்”. (மத்தேயு 8:20)

மனிதகுலத்தில் அவதரித்த கிறிஸ்துவைப் பற்றி சிந்திப்பதில், மனித மனம் புரிந்துகொள்ள முடியாத ஒரு இரகசியத்தின் முன் குழப்பமடைகிறது. நாம் அதை எவ்வளவு அதிகமாக பிரதிபலிக்கிறோமோ, அது அவ்வளவு ஆச்சரியமாக தோன்றும். கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கும் பெத்லகேமின் தொழுவத்தின் உதவியற்ற குழந்தைக்குமுள்ள வேறுபாடு எவ்வளவு விரிவானது!
உலகங்களைப் சிருஷ்டித்த, தேவத்துவ சரீரத்தின் பூரணமான, வல்லமைமிக்க தேவன் தொழுவத்தில் உதவியற்ற குழந்தையாக வெளிப்பட்டார். எந்த தேவதூதர்களை விடவும் மிகவும் உயர்ந்தவர், கண்ணியத்திலும் மகிமையிலும் பிதாவுடன் சமமானவர், ஆனால் மனித தன்மையின் ஆடை தரித்துள்ளார்! தெய்வீகமும் மனிதநேயமும் இரகசியமான முறையில் ஒன்றிணைக்கப்பட்டன, மனிதனும் தேவனும் ஒன்றாகிவிட்டார்கள். இந்த ஒன்றிணைப்பில் தான் நாம் வீழ்ச்சியடைந்த மனித இனத்தின் நம்பிக்கையைக் காண்கிறோம். மனித தன்மையில் கிறிஸ்துவைப் பார்க்கும்போது, நாம் தேவனைப் பார்த்து, அவருடைய மகிமையின் பிரகாசத்தை, அவருடைய ஆளத்துவத்தின் வெளிப்படையான சாயலை அவரிடத்தில் காண்கிறோம்.

3) பிதாவினால் அனுப்பப்பட்டு, நம்மை தேவனுடைய பிள்ளைகளாக சுவிகாரம் செய்வதற்கு, கிறிஸ்துவினுடைய அன்பின் ஊழியம் எது?

*நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக. காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். (கலாத்தியர் 4: 4-5)*

ஒருபாவி, கல்வாரியில் மரிக்கும் இரட்சகரைப் பார்த்து, உபத்திரவப்படுகிறவர் தெய்வீகமானவராக இருப்பதை உணருகையில், இந்த மகத்தான பலி ஏன் செய்யப்பட்டது என்று அவன் கேட்கிறான், மேலும் மீறப்பட்ட தேவனுடைய பரிசுத்த நியாயப்பிரமாணத்தை சிலுவை சுட்டிக்காட்டுகிறது. கிறிஸ்துவின் மரணமானது நியாயப்பிரமாணத்தின் மாறாதத் தன்மை மற்றும் நீதியைப் பற்றி விவரிக்க முடியாத வாதமாக இருக்கிறது.

கிறிஸ்துவை குறித்து ஏசாயா தீர்க்கதரிசனமாக உரைக்கும்போது, "கர்த்தர் தமது நீதியினிமித்தம் அவர்மேல் பிரியம் வைத்திருந்தார்; அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார்". (ஏசா. 42:21) என்று கூறுகிறான்.
தீமை செய்கிறவர்களை மன்னிக்க நியாயப்பிரமாணத்திற்கு அதிகாரம் இல்லை. அதன் பணியானது அவனுடைய குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதாகும், அவன் தன்னை காப்பாற்ற வல்லமை வாய்ந்த ஒருவரின்

தேவையை உணர வேண்டும், அவனுக்கு மாற்றாக மாறுகிற ஒருவர், அவனுக்கு உத்திரவாதியான ஒருவர், அவனுக்கு நீதியான ஒருவர் அவசியம். இயேசு பாவியின் தேவையை பூர்த்தி செய்கிறார்; மீறுகிறவனின் பாவங்களை அவர் தம்மீது எடுத்துக்கொண்டார். "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" ஏசாயா 53: 5. கர்த்தர் பாவியைத் தண்டித்து, அவனை முற்றிலுமாக அழித்திருக்கலாம், ஆனால் ஒரு விலையுயர்ந்த திட்டமானது தேர்ந்தெடுக்கப்பட்டது. அவருடைய மிகுந்த அன்பில், அவர் நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கையை அளிக்கிறார், அவருடைய ஒரேபேறான குமாரனை உலகின் பாவங்களைச் சுமக்கக் கொடுத்தார். அந்த ஒரு விலையேறப்பெற்ற வரத்தில் அவர் பரலோகத்தை முழுவதையும் ஊற்றிவிட்டதால், அவர் ஒரு மனிதனிடமிருந்து இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துப்போட்டு, கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரவாளிகளாக தேவனுடைய சுதந்திரர்களாக மாறுவதற்குத் தேவையான உதவிகளைத் தடுத்து நிறுத்த மாட்டார்.

(4) தம்மையே பலியாக தந்த அன்பில், கிறிஸ்து நமது முழுமையான மறுசீரமைப்பைப் பாதுகாப்பதற்காக, நம்மை விடுவிப்பதற்காக பூமிக்கு எங்கிருந்து வந்தார்?

*இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு*

*உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.*

கிறிஸ்து, நம்முடைய குற்றத்தின் காரணமாக, நம்மை விட்டு வெகுதூரம் சென்றிருக்கக்கூடும். ஆனால், நம்மிடமிருந்து வெகுதூரம் செல்வதற்குப் பதிலாக, தேவத்துவத்தின் பூரணத்தால் நிறைந்து, அவருடைய கிருபையினாலே நாம் பரிபூரணத்தை அடையும்படிக்கு, அவர் வந்து நம்மிடையே வாசம் செய்தார். அவமானம் மற்றும் துன்பத்தின் மரணத்தால், அவர் மனிதனுடைய மீட்பின் விலைக்கிரயத்தை செலுத்தினார். தம்மையே தியாக செய்கிற இது என்ன ஒரு அன்பு! அவர் உன்னதமான மேன்மையிலிருந்து இறங்கி வந்தார், அவருடைய தெய்வீகம் மனிதத்தன்மையை தரித்து, படிப்படியாக அவமானத்தின் ஆழத்திற்குள் இறங்கியது. இந்த அன்பின் ஆழத்தை எந்த கோடும் அளவிட முடியாது. தேவன் எவ்வளவாக நேசிக்க முடியும் என்பதை கிறிஸ்து நமக்குக் காட்டியுள்ளார், நம்முடைய முழுமையான மறுசீரமைப்பைப் பெறுவதற்காக நம்முடைய மீட்பர் துன்பப்பட்டார். அவர் தமது பிள்ளைகள் தம்முடைய குணத்தை வெளிப்படுத்தவும், மற்ற மனங்கள் தம்முடைய மனதுடன் இணக்கமாக சிட்டிச்சேர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவும் தம்முடைய செல்வாக்கை செயல்படுத்தவும் விரும்புகிறார்.

(5) கிறிஸ்துவின் அவதாரத்தில் மனிதனாக விவரிக்க முடியாத எந்த

அற்புதமான சத்தியத்தை பவுல் சுட்டிக்காட்டுகிறார்?

*அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. (கொலோசெயர் 1:17)*

தேவன், அவரால் எல்லாவற்றையும் படைத்தார், அவரால் மீட்பை தந்தார் என அப்போஸ்தலன் கிறிஸ்துவை தன் சகோதரர்களுக்கு முன்பாக உயர்த்தினான்.

தேவன் அண்டசராசரம் முழுவதிலும் உள்ள உலகங்களை விண்வெளியில் தக்கவைத்து, அவற்றின் ஒழுங்கான ஏற்பாடுகளிலும், அயராத செயலிலும் வைத்திருக்கும் கரமே, அவர்களுக்காக சிலுவையில் அறையப்பட்ட கரம் என்று அறிவித்தார். "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது", "பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.", "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயுமிருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்று பவுல் எழுதினான்.

(6) கிறிஸ்துவின் மனித பிறப்பில் வெளிப்படுத்தப்பட்ட அன்பின் நம்பமுடியாத செயலை முரண்பாடில்லாமல் விவரிக்க எந்த சொற்களை அப்போஸ்தலனாகிய பவுல் பயன்படுத்துகிறான்?

*அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே எடுத்துக் கொள்ளப்பட்டார். (1 தீமோத்தேயு 3:16)*

கிறிஸ்துவின் மனித அவதாரம் அனைத்து இரகசியங்களின் இரகசியமாகும். கிறிஸ்து பிதாவுடன் ஒருவராக இருந்தார், ஆனாலும் தேவனுடன் சமமான ஒருவரின் மேன்மையிலிருந்து விலக அவர் ஆயத்தமாக இருந்தார். {NP} வீழ்ச்சியடைந்த மனித இனத்தின் மீதான அன்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவர் நம்முடைய எலும்பின் எலும்பாகவும், நம்முடைய மாம்சத்தின் மாம்சமாகவும் மாறினார்.

கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கும் பெத்லகேம் தொழுவத்தின் உதவியற்ற குழந்தைக்கும் உள்ள வேறுபாடு எவ்வளவு அகலமானது! வல்லமைமிக்க தேவனுக்கும் உதவியற்ற குழந்தைக்கும் இடையிலான தூரத்தை நாம் எவ்வாறு அளவிட முடியும்? ஆனாலும் உலகங்களைப் படைத்தவர், தேவத்துவ சரீரத்தில் பூரணமானவர், தொழுவத்தில்

உதவியற்ற குழந்தையாக வெளிப்பட்டார். எந்தவொரு தேவதூதர்களையும் விட மிக உயர்ந்தவர், கண்ணியத்திலும் மகிமையிலும் பிதாவுடன் சமமானவராக இருந்தாலும் மனிதகுலத்தின் போர்வையை தரித்துக்கொண்டார்! தெய்வீகமும் மனிதம் இரகசியமான முறையில் ஒன்றிணைக்கப்பட்டன, மனிதனும் தேவனும் ஒன்றாகிவிட்டார்கள்.

ஏதேனில் ஆதாம் தனது அறியாமையில் நின்றிருந்தாலும், தேவக்குமாரன் மனிதனின் இயல்பை எடுத்துக்கொள்வது கிட்டத்தட்ட எல்லையற்ற அவமானமாக இருந்திருக்கும். ஆனால் நான்காயிரம் ஆண்டுகளாக பாவத்தால் மனித இனம் பலவீனமடைந்தபோது இயேசு மனிதத்தன்மையை ஏற்றுக்கொண்டார். ஆதாமின் ஒவ்வொரு குமாரர்களைப்போலவே, மரபு தொடர்பின் பிரமாணத்தினுடைய கிரியைகளின் விளைவுகளையும் அவர் ஏற்றுக்கொண்டார். இந்த விளைவுகள் அவருடைய பூமிக்குரிய முற்பிதாக்களின் வரலாற்றில் காட்டப்பட்டுள்ளன. நம்முடைய துக்கங்களையும் சோதனையையும் பகிர்ந்து கொள்வதற்கும், பாவமில்லாத வாழ்க்கையின் முன்மாதிரியைக் கொடுப்பதற்கும் அவர் அத்தகைய மரபுடன் வந்தார்.

கிறிஸ்து பாவம் செய்ய முடியாது என்று கூறுபவர்கள், அவர் உண்மையில் மனித இயல்புகளை எடுத்துக் கொண்டார் என்பதை விசுவாசிக்க முடியாது. ஆனால் கிறிஸ்து, வனாந்தரத்தில் சாத்தானால் மட்டுமல்ல, அவருடைய வாழ்நாள் முழுவதும், குழந்தை பருவத்திலிருந்து வாலிப பருவம் வரை உண்மையில்

சோதிக்கப்படவில்லையா? {NP}
நம்முடைய இரட்சகர் மனிதத்தன்மையை, அதன் அனைத்து பொறுப்புகளோடும் தரித்துக் கொண்டார். சோதிக்கப்படும் சாத்தியத்துடன், மனிதனின் இயல்பை அவர் எடுத்துக் கொண்டார். அவரால் சுமக்க இயலாத எதுவும் நாம் சுமக்கப் போவதில்லை. {FLB 91}

(7) “தெய்வீகத்தினுடைய இரகசியத்தின்” மூலம் வரையறுக்கப்பட்டுள்ளபடி, கிறிஸ்துவின் பேரன்பின் காரணமாக, அவருடைய சபையாய் பரிசுத்த தேவனுக்கு முன்பாக நாம் எப்படி நிற்க முடியும்?

*கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். (எபேசியர் 5:27)*

விலைமதிப்பற்ற, அன்பான, நீண்டிய பொறுமையுள்ள, நீடியகாலமாய் தாங்கும் ஓ இயேசுவே, என் ஆத்துமா உம்மை எப்படியாய் வணங்குகிறது! ஒரு ஏழை, தகுதியற்ற, பாவ-கறைபட்ட ஆத்துமா பரிசுத்த தேவனுக்கு முன்பாக நிற்க முடியும், இது நமக்கு பதிலாக மற்றும் உத்திரவாதமாக நீதியில் பூரணமானது! வானங்களே, ஆச்சரியப்படுங்கள், திகைப்படையுங்கள், பூமியே, விழ்ச்சியடைந்த மனிதனே அவருடைய எல்லையற்ற அன்பின் மற்றும் மகிழ்ச்சியின் நோக்கமாக இருக்கிறான். அவர்களின் பரலோகப் பாடல்களால் அவர்களைப் பற்றி சந்தோஷப்படுகிறார், மனிதன் பாவத்தால் தீட்டுப்பட்டு, கிறிஸ்துவின் நீதியினாலே

சுத்திகரிக்கப்பட்டு, பாவத்தின் கறைதிரையற்றவனாக பிதாவின் முன் நிறுத்தப்படுகிறான், “கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல்” (எபேசியர் 5:27). “தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்” (ரோமர் 8:33).

**(8) நாம் அறிந்து, அவரில் பூரணராகும்படிக்கு, தேவன் விரும்புகிற இந்த “இரகசியத்தின் மகிமையின் ஐசுவரியங்கள்” யாவை?**

*புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். (கொலோசெயர் 1:27)*

தேவனுடைய பிள்ளையின் பாக்கியங்கள், ஆசீர்வாதங்கள் பின்வரும் மொழியில் அப்போஸ்தலரால் குறிப்பிடப்படுகின்றன: “புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்” (கொலோசெயர் 1:27). நாம் கிறிஸ்துவில் பூரணப்பட்டவர்களாக, அவரை நம் மகிமையின் நம்பிக்கையாக உணரும்போது சொல்லமுடியாத மற்றும் மகிமை நிறைந்த மகிழ்ச்சியில் ஆனந்திப்போம்.

(9) நாம் புரிந்துக்கொள்ள முயற்சித்து, அன்போடு நித்தியத்தை கழிக்கையில், இந்த இருண்ட கோளுக்கு வந்த தேவ குமாரனாகிய கிறிஸ்து நமக்காக செய்தது மற்றும் சகித்துக்கொண்டதென்ன?

*நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசாயா 53: 5)*

வீழ்ச்சியடைந்தவர்களை உயர்த்துவதற்காக தேவனுடைய குமாரன் தாழ குனிந்தார். இதற்காக, அவர் பாவமில்லாத உன்னத உலகங்களை, அவரை நேசித்த தொண்ணூற்றொன்பது பேரையும் விட்டுவிட்டு, இந்த பூமிக்கு வந்து “நம்முடைய மீறுதல்களுக்காக காயமடைந்து”, “நம்முடைய அக்கிரமங்களுக்காக நொறுக்கப்பட்டார்.” ஏசாயா 53: 5. அவர் தம்முடைய சகோதரர்களைப் போன்று எல்லாவற்றிலும் இருந்தார். அவர் நம்மைப் போலவே மாம்சமாக மாறினார். பசி, தாகம் மற்றும் சோர்வு என்பதன் பொருள் என்ன என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் உணவால் தாங்கப்பட்டு தூக்கத்தால் புத்துணர்ச்சி பெற்றார். அவர் உலகில் வாழந்தப்போது, இந்த பூமியின் மீது அந்நியர் மற்றும் பரதேசியாக இருந்தார், ஆனால் அவர் உலகத்தை சேர்ந்தவரல்ல; இன்றைய ஆண்கள் மற்றும் பெண்களைப்போல அவர் சோதிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டாலும், பாவத்திலிருந்து விடுபட்ட வாழ்க்கையை வாழ்ந்தார்.

**கனிவானவர், இரக்கமுள்ளவர், அனுதாபமுள்ளவர், மற்றவர்களை எப்போதும் கருத்தில் கொண்டவர், அவர் தேவனுடைய தன்மையைக் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்." அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்." யோவான் 1:14.**

*சிருஷ்டிகரான கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி, பெத்லகேமின் தொழுவத்தில் ஒரு உதவியற்ற குழந்தையாக மாறக்கூடும். கிறிஸ்துவின் அவதாரம் நிச்சயமாக எல்லா இரகசியங்களின் இரகசியமாகும்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*அனைத்து உலகங்களையும், தம்முடைய இராஜரீக அங்கி மற்றும் இராஜ கிரீடத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, கிறிஸ்து, நம்மிடையே குடியிருக்க மாம்சமாகி, என்னைக் காப்பாற்றுவதற்காக அவருடைய உயிரைக் கொடுக்கும் அளவுக்கு என்னை நேசித்தார் என்பதில் நான் ஆச்சரியப்படுகிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*கிறிஸ்து, தேவனுடைய அன்பை அடிப்படையாகக் கொண்ட நியாயப்பிரமாணத்தை அகற்றுவதற்காக அல்ல, மாறாக அவற்றை*

நிலைநிறுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் வந்தார் என்பதை இப்போது நான் உணர்கிறேன். இது இல்லையென்றால் அவர் என் பாவங்களுக்காக மரித்திருக்க வேண்டியிருக்காது.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

நான், என் பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன், அவருடைய அற்புதமான அன்பின் காரணமாக, நான் பிதாவின் முன் தவறு அல்லது கறை இல்லாமல் நிற்க முடியும் என்ற வாக்குத்தத்தத்தைக் கோருகிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

நித்தியத்தின் ஆண்டுகள் உருண்டோடுகையில், நான் இயேசுவின் காலடியில் உட்கார்ந்து ஆச்சரியமான விஷயத்தைப் புரிந்துகொள்ளவதையும், கற்றுக்கொள்வதையும், அவர் செய்த, எப்போதும் செய்கின்ற அற்புதமான காரியங்களை கிரகித்துக்கொள்வதையும் எதிர்நோக்குகிறேன் அவருடைய பரிசுத்த நாமம் என்றும் போற்றப்படுவதாக.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை



## பாடம் 8

## கட்டி இழுக்கும் தேவ அன்பு

(1) கர்த்தர் நம்முடைய பாச உணர்வுகளுக்கு முறையிட்டு, எந்த அறிவார்ந்த விதத்தில், அவரிடம் அன்பினால் இழுத்துக்கொள்ளுகிறார்?

*மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன், அவர்கள் கழுத்துகளின்மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப்போல் இருந்து, அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரங்கொடுத்தேன். (ஓசியா 11: 4)*

மனிதர்கள் காட்டு மிருகங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பயன்படுத்துவதை விட இந்த கயிறுகள் மிகவும் வேறுபட்டவை என்பதைக் இந்த குறிப்பிடத்தக்க வெளிப்பாடு காட்டுகிறது. எளிமையான குணமுடைய விலங்குகள், யாரோ ஒருவருடைய அளவான அடக்குமுறையோடு பயனுள்ள உழைப்பில் ஈடுபடுத்தப்படுகிறது, ஆனால் தேவன் மனிதர்களை அப்படியாக இழுத்துக்கொள்வதில்லை.

அவர் கடினமான கயிறுகளையோ இரும்புக் தடிகளையோ பயன்படுத்துவதில்லை, ஆனால் பகுத்தறிவு வழிமுறைகளால் நம்மை இழுத்துக்கொள்கிறார், நம்முடைய புத்திசாலித்தனத்தை நேசிக்கிறார், நம்முடைய பாசங்களை இழுத்துக்கொள்கிறார் (ஏசாயா 1:18 ஐக் காண்க). தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்டதைப் போலவே, நம்முடைய இயல்பின் கண்ணியத்திற்கு ஏற்ற விதத்தில் தேவன் நம்மை இழுத்துக்கொள்கிறார் (ஆதி. 1:26, 27). ஆத்துமாக்களுக்காக உழைப்பதில் நாம் எப்போதுமே இந்த அன்பின் முறையை பின்பற்ற வேண்டும் (1 கொரி. 9: 19-23; 1 தெச. 2: 7, 8; 3:12; எபி. 5: 2). கிறிஸ்து ஒரு மனிதனாக மாறியபோது மனித கயிறுகளைக் கொண்டு நம்மை இழுத்துக்கொண்டார், நம்முடைய நன்மைக்காக தம்மையே பலியாக தந்தார் (யோவான் 12:32; அப்போஸ்தலர் 10:38 ஐக் காணவும்). தேவனுடைய குமாரன் மனிதனாக மாறியதற்கு, மனிதர்களை இரக்கத்தின் கயிறுகளால் இழுத்துக்கொள்வது, அவர்களுடன் ஒரு பொதுவான இயல்பைப் பங்கிட்டுக் கொள்வது ஆகியவை ஒரு காரணமாகும்.

தேவனுடைய அன்பை உலகுக்கு வெளிப்படுத்த கிறிஸ்து வந்தார், எல்லா மனிதர்களின் இருதயங்களையும் தம்முடன் இழுத்துக்கொள்ள வந்தார்.... கிறிஸ்துவின் அன்பின் திட்டத்திற்கு பதிலளிப்பதே இரட்சிப்பின் முதல் படியாக ஆகும். மனிதர்கள் மன்னிப்பின் சந்தோஷத்தையும், தேவனுடைய சமாதானத்தையும் புரிந்துக்கொள்ளும்படியாக, கிறிஸ்து தம்முடைய அன்பின் வெளிப்பாட்டின்

மூலம் அவர்களை இழுத்துக்கொள்கிறார். அவருடைய இழுத்தலுக்கு அவர்கள் மறுஉத்தரவளித்தால், அவர்களுடைய இருதயங்களை அவருடைய கிருபைக்கு செலுத்தினால், அவர் படிப்படியாக, தம்மைப் பற்றிய முழு அறிவுக்கு இட்டுச் செல்வார், இதுவே நித்திய வாழ்க்கை.

(2) கிறிஸ்து எதற்காக விலைக்கிரயம் செலுத்தி, மன்னிப்பை ஏற்படுத்தினார், மற்றும் தேவன் அதை நமக்கு மிகவும் கிருபையாய் எதை அளிக்கிறார்?

*பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23)*

மீட்பின் விலைக்கிரயம் அனைவருக்காகவும் செலுத்தப்பட்டுள்ளது, எனவே அனைவரும் தேவனிடம் சேருவது சாத்தியமானதாகும், மேலும் கீழ்ப்படிதலின் மூலம் நித்திய ஜீவனை அடைய முடியும். மனிதர்கள் அழியாத சுதந்திரத்திலிருந்து விலகி, பெருமையின் திருப்திக்காகவும், சுயநலம் மற்றும் தோற்றதிற்காகவும், சாத்தானின் ஆட்சிக்கு அடிபணிந்து வாழ்வது எவ்வளவு வருத்தமாக இருக்கிறது, இந்த வாழ்க்கையிலும் எதிர் வரும் வாழ்க்கையிலும் அவர்கள் பெறக்கூடிய ஆசீர்வாதத்தை இழக்கிறார்கள். அவர்கள் பரலோக அரண்மனைகளுக்குள் பிரவேசித்து, கிறிஸ்து மற்றும் பரலோக தேவதூதர்களுடனும், தேவனுடைய பிரபுக்களுடனும் சுதந்திரமாகவும் மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் இணைந்திருக்க முடியும்; ஆனால் இவைகள் நம்பமுடியாததாகத்

தோன்றுவதால், அவர்கள் பரலோக ஈர்ப்புகளிலிருந்து மாறுபடுகின்றனர். சர்வலோகத்தையும் சிருஷ்டித்தவர், தம்முடைய குமாரனை நேசிப்பதைப் போலவே, அவருடைய ஒரேபேறான குமாரனை தங்கள் தனிப்பட்ட இரட்சகராக விசுவாசிக்கிறவர்களை நேசிக்க முன்மொழிகிறார்.
இந்த உலக வாழ்விலும் அவருடைய அற்புதமான தயவு இந்த அற்புதமான அளவிற்கு நமக்கு வழங்கப்படுகிறது. அவர் மனிதர்களுக்கு வானத்தின் ஒளி மற்றும் மகிமை என்ற வெகுமதியை வழங்கியுள்ளார், அவருடன் கூட, வானத்தின் பொக்கிஷங்களையும் வழங்கியுள்ளார்.
எதிர்வரப்போகும் நித்திய ஜீவனுக்காக நமக்கு வாக்குத்தத்தம் அளித்ததைப் போலவே, பூமியின் மீதான இந்த வாழ்க்கையிலும் அவர் இராஜரீக வெகுமதிகளை நமக்கு அளிக்கிறார், மேலும் அவருடைய கிருபைக்கு கீழ்ப்பட்டவர்களாக, நம்முடைய தன்மைகளை மேம்படுத்துவதற்கும், விரிவுபடுத்துவதற்கும், மற்றும் உயர்த்துவதற்குமான செயல்கள் எல்லாவற்றிலும் அவர் அகமகிழ்கிறார். அவருடைய வடிவமைப்பு நம்மை மேலே உள்ள பரலோக நியாயசபைக்கு ஏற்றவாறு பொருத்துவதாகும்.

பாவம் வெறுமனே மன்னிக்கப்படக்கூடாது, ஆனால் மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீதி கோருகிறது. தேவன், அவருடைய ஒரேபேறான குமாரனின் வரத்தில், இந்த இரண்டு தேவைகளையும் பூர்த்தி செய்தார். மனிதனுக்குப் பதிலாக மரிப்பதன் மூலம், கிறிஸ்து

தண்டனையை தீர்த்து, மன்னிப்பு வழங்கினார்.

(3) கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகிற அனைவருக்கும் எதை தரும்படிக்கு அவர் இந்த உலகத்திற்கு வந்தார்?

*திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)*

இது நாம் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டிய வாழ்க்கை, இதில் நாம் இன்னும் அதிகமாக பெற்றிருக்க வேண்டும். சுயத்திற்கு மரித்து கிறிஸ்துவுக்காக வாழும் ஒவ்வொரு ஆத்துமாவிலும் தேவன் இந்த ஜீவனை ஊதுவார். ஆனால் இதற்கு முழு சுய வெறுப்பு தேவை. இப்படி நடக்காவிட்டால், நம் மகிழ்ச்சியை அழிக்கும் தீமையை நம்முடன் கொண்டுச் செல்கிறோம். ஆனால் சுயம் சிலுவையில் அறையப்படும்போது, கிறிஸ்து நம்மில் வாழ்கிறார், ஆவியின் வல்லமை நம் முயற்சிகளில் பங்குக்கொள்கிறது.

தேவன் நம்மை எப்படியிருக்க விரும்புகிறாரோ நாம் அப்படியிருக்க விரும்ப வேண்டும்- எல்லாம் கர்த்தருடைய வெளிச்சத்தில் இருக்க வேண்டும். நாம் ஒரு உயர்ந்த தரத்தை அடைய வேண்டும், ஆனால் பலிபீடத்தின் மீது சுயத்தை வைக்கும் வரை, பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கட்டுப்படுத்த அனுமதிக்கும் வரை, தெய்வீக ஒற்றுமைக்கு ஏற்ப நம்மை வடிவமைக்கும் வரை இதை ஒருபோதும் செய்ய முடியாது.

கிறிஸ்து மரித்ததைப் போல அவனும் [ஒரு விசுவாசியும்] மரிக்ககூடும், ஆனால் இரட்சகரின் ஜீவன் அவனிடத்தில் இருக்கிறது. அவனுடைய ஜீவன் கிறிஸ்துவுடன் தேவனில் மறைக்கப்பட்டுள்ளது. "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும்", "அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்று இயேசு கூறினார். இந்த உலக வாழ்க்கையில் விசுவாசிகள் அவருடன் ஒருவராக மாற்றப்பட்டு, நித்தியம் முழுவதும் அவருடன் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற பெரிய செயல்முறையை அவர் மேற்கொள்கிறார்.

(4) ஒரு அன்பான மேய்ப்பன் போல, ஒவ்வொரு ஆத்துமாவிற்காக அவர்கள் ஒவ்வொருக்காகவும் மரித்ததுப்போல, கர்த்தர் என்ன செய்கிறார்?

*இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார். (லூக்கா 19:10)*

ஒரு ஆத்துமாவிற்கு மட்டுமே மீட்பர் மரித்ததுப்போல, ஒவ்வொரு ஆத்துமாவையும் இயேசு முழுமையாக அறிந்திருக்கிறார். ஒவ்வொருவரின் துன்பமும் அவருடைய இருதயத்தைத் தொடுகிறது
உதவிக்கான அழுகை அவரது செவியை அடைகிறது. அவர் எல்லா மனிதர்களையும் தம்மிடம் இழுத்துக்கொள்ள வந்தார். "என்னைப் பின்பற்றுங்கள்" என்று அவர் அவர்களுக்குக் கட்டளையிடுகிறார், மேலும் அவர்கள் தம்மிடம் வரும்படி அவர்களை இழுத்துக்கொள்ள

தம்முடைய ஆவியானவர் மூலம் அவர்களுடைய இருதயங்களில் அசைவாடுகிறார். அவர்கள் யார் என்று இயேசு அறிந்திருக்கிறார். அவருடைய அழைப்பிற்கு யார் மகிழ்ச்சியுடன் செவிக்கொடுக்கிறார்கள் என்பதையும், அவருடைய மேய்ப்பின் கவனிப்பின் கீழ் யார் வரத் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதையும் அவர் அறிவார். “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது”. என்று அவர் கூறுகிறார். பூமியின் மேல் வேறு எவரும் இல்லை என்பது போல அவர் ஒவ்வொருவரையும் கவனித்துக்கொள்கிறார்.

“அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது” கிழக்கத்திய மேய்ப்பர்கள் தங்களது ஆடுகளை விரட்டி ஓட்டிச் செல்லமாட்டார்கள். தங்கள் பெலத்தையோ அல்லது அச்சுறுத்தலையோ சார்ந்திராமல், ஆடுகளுக்கு முன் சென்று, அவைகளை கூப்பிடுவார்கள். அதைபோலவே நம்முடைய இரட்சகராகிய மேய்ப்பர் தம்முடைய ஆடுகளை நடத்துகிறார். “மோசே ஆரோன் என்பவர்களின் கையால், உமது ஜனங்களை ஒரு ஆட்டு மந்தையைப்போல வழிநடத்தினீர்” என்று தீர்க்கரிசியின் மூலம் வேத வசனத்தில் கூறப்பட்டுள்ளது, “அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்”, “மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால்

நான் அவர்களை இழுத்தேன் என்று இயேசு அறிவிக்கிறார். தம்மை பின்பற்றும்படி அவர் யாரையும் வற்புறுத்துவதில்லை “மனித கயிறுகளினால் மனித அன்பின் கயிறுகளினால் நான் இழுத்துக்கொள்கிறேன்” என்று அவர் கூறுகிறார்” (சங். 77:20; எரேமியா 31: 3; ஓசியா 11: 4.)

(5) கிறிஸ்துவின் வாழ்வில் நாம் காணும் இரக்கம், கனிவு, மனதுருக்கம், மற்றும் அன்பு ஆகியவற்றை நாம் யாருடைய பண்பு மற்றும் சிறப்புதன்மை ஆகியவற்றிலும் காண்கிறோம்?

*அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? (யோவான் 14: 9).*

அண்டசராசரத்தினுடைய தேவனின் பரிசுத்தத்தையும் மகிமையையும் பார்க்கும்போது, நாம் பயப்படுகிறோம், ஏனென்றால் குற்ற உணர்வை அழிக்க அவருடைய நீதி அவரை அனுமதிக்காது என்பதை நாம் அறிவோம். ஆனால் நாம் திகிலடைய வேண்டியதில்லை; தேவனுடைய தன்மையை வெளிப்படுத்தவும், சுவிகாரம் செய்யப்பட்ட பிள்ளைகளிடம் அவருடைய தகப்பனின் அன்பை நமக்கு தெளிவுபடுத்தவும் கிறிஸ்து உலகத்திற்கு வந்தார். இயற்கையின் பிரமாதமான செயல்களால் மட்டுமே நாம் தேவனுடைய தன்மையை மதிப்பிடாமல், இயேசுவின் எளிய, மற்றும் அன்பான

வாழ்க்கையால் நம்முடைய பூமிக்குரிய பெற்றோரை விட யெகோவாவை மிகவும் இரக்கமுள்ளவர், கனிவானவர் என்று மதிப்பிட வேண்டும்.

நமக்கு நம்பிக்கையை அளித்து, நம்முடைய விருப்பங்களை முன்வைக்கக்கூடிய ஒருவராக இயேசு பிதாவை முன்வைத்தார். நாம் தேவனைக் குறித்து திகிலடைந்து, அவருடைய மகிமையையும் மாட்சிமையையும் குறித்தும் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, பிதாவானவர் தம்முடைய பிரதிநிதியாக கிறிஸ்துவை சுட்டிக்காட்டுகிறார். நாம் காணும் இயேசுவில் வெளிப்படுத்தப்பட்டு, நாம் பார்க்கிற கனிவு, இரக்கம் மற்றும் அன்பு ஆகியவை பிதாவினுடைய பண்புகளின் பிரதிபலிப்பாகும். கல்வாரியின் சிலுவை மனிதனுக்கு தேவனுடைய அன்பை வெளிப்படுத்துகிறது. உலகத்தின் சர்வ வல்லமையுள்ள அன்பின் தேவனாக கிறிஸ்து தம்மை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். தீர்க்கதரிசியின் மூலமாக அவர் இப்படியாக கூறியிருக்கிறார், " அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன். நான் உன்னை நித்திய அன்பினால் நேசித்தேன், ஆகையால் அன்பான தயவுடன் நான் உன்னை ஈர்த்தேன்" (எரே. 31: 3).

(6) கிறிஸ்துவின் கிருபையின் ஐசுவரித்தின்படியும் அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தின்படியும் நாம் பெற்றுக்கொள்ள தீர்மானித்தால், நாம் எதனைப் பெற்றுக்கொள்வோம்?

*அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய*

*இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. (எபேசியர் 1: 7)*

கிறிஸ்துவினுடைய வரத்தின் மூலம் தேவன் நம்மை தம்முடன் இணைப்பார் என்பதை மனிதனுக்கு நிரூபிக்க ஜீவனும் மகிமையும் கொண்ட தேவன் மனிதனுடன் தமது தெய்வீகத்தை தரித்துக்கொண்டார். தேவனுடன் தொடர்பு இல்லாமல், யாரும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. நம்முடைய பரலோகத் தகப்பன் மனந்திரும்பிய பாவியைத் தழுவி, தேவனுடைய மாசற்ற ஆட்டுக்குட்டியானவரின் தகுதிகளின் மூலம் அவன் உருவாகும் வரை அவனுடைய வாழ்வில் திருப்தி அடைய முடியாது என்பதை வீழ்ச்சியடைந்த மனிதன் கற்றுக்கொள்ள வேண்டும். அனைத்து பரலோக அறிவுஜீவிகளின் வேலையும் இத்துடன் முடிவுக்கு வந்தது. மீறுதலால் தங்கள் பரலோகத் தகப்பனிடமிருந்து தங்களை பிரித்துக் கொண்டவர்களை மீட்டெடுப்பதற்காக அவர்கள் தங்கள் தளபதியினுடைய கட்டளையின் கீழ் பணியாற்ற வேண்டியது அவசியமாகும். கிறிஸ்துவின் அற்புதமான கிருபையினாலும் அன்பினாலும் உலகுக்கு வெளிப்படுத்தப்படும்படி ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மனிதனை மீட்க தேவனுடைய குமாரன் செலுத்திய எல்லையற்ற விலையில், தேவனுடைய அன்பு வெளிப்பட்டது. மீட்பின் இந்த மகிமையான திட்டம் முழு உலகையும் இரட்சிப்பதற்கான அதன் ஏற்பாடுகளில் போதுமானதாக இருக்கிறது. பாவ மன்னிப்பு மற்றும் கிறிஸ்துவின் நீதியின் மூலம் பாவமுள்ள மற்றும்

வீழ்ச்சியடைந்த மனிதர்கள் இயேசுவில் பூரணமாக்கப்பட முடியும்.

(7) நம்முடைய மீறுதல்களுக்காக அவர் காயங்களையும், நம்முடைய அக்கிரமங்களுக்காக அவருடைய நொருக்குலையும், நம்முடைய சமாதானத்திற்காக அவருடைய ஆக்கினைகளையும் ஏற்றுக்கொண்டால், அவருடைய தழும்புளால் நம்முடைய ஆத்துமாவிற்கு என்ன நடக்கும்?

*நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசாயா 53:5-6)*

உங்களால் முடிந்தால், கிறிஸ்துவின் துன்பங்களின் தன்மையையும் அளவையும் கற்பனை செய்து பாருங்கள். மனிதத்தன்மையின் இந்த பாடுகளானது, கிறிஸ்து எவருக்கெல்லாம் மரித்தாரோ அவர்கள் அனைவர் மீதும் தேவனுடைய கோபம் வெளிப்படுவதை தடைச் செய்வதற்காகும். ஆம், இந்த பெரும் பலியானது சபைக்கு, நித்திய நித்தியமாய் பயனுனள்ளதாக இருக்கும். அவளது மீறுதல்களின் அளவை புள்ளிவிவரங்களில் கணக்கிட முடியுமா? கணக்கிட முடியாது அது சாத்தியமற்றது. அவருடைய சபைக்கு உத்திரவாதம் தரும் இடத்தில் நிற்கும்போது, கிறிஸ்து சுமந்துக் கொண்டதைப் பற்றிய ஒரு கருத்தோடு யாரால் அதை அணுக முடியும்…? [அவர்] பாவியின் சார்பாக அடிகளை தாங்கக்கூடியவராக இருந்தார், மேலும் அவரது குற்றமற்ற தன்மையின்

காரணமாக பாவிகள் யாரும் பட்சிக்கப்பட மாட்டார்கள். தேவனுடைய ஒரேபேறான குமாரனின் பலியால் தெய்வீக நீதி மற்றும் பரிசுத்தத்தின் மதிப்பிற்குரிய மகிமை நிரூபிக்கப்பட்டுள்ளது

தமது சொந்த ஜீவனை உத்தரவாதமாய் கொடுத்ததின் மூலம், பூமியிலுள்ள ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் கிறிஸ்து தம்மைப் பொறுப்பாக்கிக் கொண்டார். அவர் தேவனுடைய சமுகத்தில் நின்று, “பிதாவே, அந்த ஆத்துமாவின் குற்றத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்”என்று கூறுகிறார். அதாவது மரணமானது அவனை சார்ந்தது, அவனால் தாங்கிக்கொள்ள முடிந்தால் அதை அவன் ஏற்றுக்கொள்ளலாம்.
அவன் மனந்திரும்பினால் மன்னிக்கப்படுவான். “என் இரத்தம் அவனுடைய எல்லா பாவங்களிலிருந்தும் பரிசுத்தப்படுத்தும். உலகின் பாவங்களுக்காக என் உயிரைக் கொடுத்தேன்”.

(8) நம்முடைய எல்லா அநீதியிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, அவருடைய வஸ்திரங்களால் மூடப்படுவதற்கு நாம் செய்ய வேண்டிய நம்முடைய பங்கு என்ன?

*நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1: 9)*

நீங்கள் பாவமுள்ளவர்கள் பூரணமற்றவர்கள் என்று உங்களுக்குத்

தோன்றலாம்; ஆனால் இந்த எண்ணத்தில் தான் உங்களுக்கு ஒரு இரட்சகர் தேவை. இந்த நிமிடங்கள் உங்களுக்கு பொன்னானவை.

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.
(1 யோவான் 1: 9)

நீதியின் மேல் பசியும் தாகமும் நிறைந்தவர்கள் நிரப்பப்படுவார்கள்; என்று இயேசு அதை வாக்குத்தத்தம் அளித்துள்ளார். விலைமதிப்பற்ற மீட்பர்! நம்மை ஏற்றுக்கொள்ள அவருடைய கரங்கள் திறந்திருக்கின்றன, அவருடைய அன்பின் மகத்தான இருதயம் நம்மை ஆசீர்வதிக்கக் காத்திருக்கிறது.

மீட்பர் மனுபுத்திரர்களிடம் எவ்வளவு விவரிக்க முடியாத அன்பை வெளிப்படுத்தியுள்ளார்! அவர் பாவத்தின் முத்திரையை அகற்றுவது மட்டுமல்லாமல், ஆத்துமாவை சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறார், கறை திரையில்லாத, பரலோக தறியில் நெய்யப்பட்ட, தம்முடைய சொந்த நீதியின் வஸ்திரத்தால் உடுத்துகிறார். அவர் பாவியிடமிருந்து சாபத்தை நீக்குவது மட்டுமல்லாமல், அவனை தம்முடன் ஐக்கியத்தில் கொண்டுவருகிறார், அவருடைய நீதியின் பிரகாசமான ஒளியை அவன் மீது பிரதிபலிக்கிறார். அவன் பரலோக அண்டசராசரத்தால் வரவேற்கப்படுகிறான், தேவனுடைய அன்பான குமாரனில் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். மனந்திரும்புதலினாலும்

விசுவாசத்தினாலும் வீழ்ச்சியடைந்த மனிதனுக்கு என்ன ஒரு மகிமை!

(9) கிறிஸ்து, தனித்துவமான அன்பு மற்றும் அக்கறையினால் தம்முடைய ஒவ்வொரு “ஆடுகளையும்” எவ்வாறு அழைக்கிறார்?

*வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான். (யோவான் 10: 3)*

அவர் மட்டுமே அவர்களுக்காக மரித்த ஒரே இரட்சகர்போல ஒவ்வொரு ஆத்துமாவையும் இயேசு முழுமையாக அறிந்திருக்கிறார், ஒவ்வொருவரின் துன்பமும் அவருடைய இருதயத்தைத் தொடுகிறது
உதவிக்கான அழுகை அவரது செவியை அடைகிறது. அவர் எல்லா மனிதர்களையும் தம்மிடம் இழுக்க வந்தார். "என்னைப் பின்பற்றுங்கள்" என்று அவர் அவர்களுக்குக் கட்டளையிடுகிறார், மேலும் அவர்கள் தம்மிடம் வரும்படி அவர்களை இழுக்க தம்முடைய ஆவியானவர் மூலம் அவர்களுடைய இருதயங்களில் அசைவாடுகிறார். அவர்கள் யார் என்று இயேசு அறிந்திருக்கிறார். அவருடைய அழைப்பிற்கு யார் மகிழ்ச்சியுடன் செவிக்கொடுக்கிறார்கள் என்பதையும், அவருடைய மேய்ப்பின் கவனிப்பின் கீழ் யார் வர ஆயத்தமாக இருப்பார்கள் என்பதையும் அவர் அறிவார். “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப்

பின்செல்லுகிறது". என்று அவர் கூறுகிறார். பூமியின் மேல் வேற எவரும் இல்லை என்பது போல அவர் ஒவ்வொருவரையும் கவனித்துக்கொள்கிறார்.

கிழக்கத்திய மேய்ப்பர்கள் தங்களது ஆடுகளை விரட்டி ஓட்டிச் செல்லமாட்டார்கள். அவர்கள் பெலத்தையோ அல்லது அச்சுறுத்தலையோ சார்ந்திராமல், ஆடுகளுக்கு முன் சென்று, அவைகளை கூப்பிடுகிறார்கள். அதைபோலவே நம்முடைய இரட்சகராகிய மேய்ப்பர் தம்முடைய ஆடுகளை நடத்துகிறார். "மோசே ஆரோன் என்பவர்களின் கையால், உமது ஜனங்களை ஒரு ஆட்டு மந்தையைப்போல வழிநடத்தினீர்" என்று தீர்க்கரிசியின் மூலம் வேத வசனத்தில் கூறப்பட்டுள்ளது, "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்", "மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன்என்று இயேசு அறிவிக்கிறார். தம்மை பின்பற்றும்படி அவர் யாரையும் வற்புறுத்துவதில்லை "மனித கயிறுகளினால் மனித அன்பின் கயிறுகளினால் நான் இழுத்துக்கொள்கிறேன்" என்று அவர் கூறுகிறார்" (சங். 77:20; எரேமியா 31: 3; ஓசியா 11: 4.)

தண்டனையின் பயமோ, நித்தியத்தின் நம்பிக்கையின் பலனோ கிறிஸ்துவின் சீஷர்கள் அவரைப் பின்பற்ற வழிவகுக்கவில்லை. பெத்லகேமின் தொழுவத்திலிருந்து கல்வாரியின் சிலுவை வரை பூமியில் அவரது பயணம் முழுவதும் வெளிப்படுத்தப்பட்ட இரட்சகரின் ஒப்பற்ற அன்பை அவர்கள்

காண்கிறார்கள், அவருடைய பார்வை அவர்களை ஈர்க்கிறது, அது ஆத்துமாவை அடக்கி மென்மையாக்குகிறது. அவருடைய அன்பு காண்பவர்களின் இருதயத்தை விழிப்படைய செய்கிறது. அவர்கள் அவருடைய சத்தத்தைக் கேட்டு, அவரைப் பின்பற்றுகிறார்கள்.

*தேவன் என்னை ஒரு அன்பான, பொறுமையான, கனிவான மற்றும் பகுத்தறிவுள்ள வழியில் தம்மிடம் ஈர்க்கிறார் என்பதற்கும், சாத்தான் பயன்படுத்தும் முறையின்படி வல்லமையைப் பயன்படுத்தாததற்கும் நான் நன்றி கூறுகிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*தேவனுடைய வெகுமதியாகிய கிறிஸ்துவின் மூலம், மீட்கப்பின் விலைக்கிரயம் என்னை மீட்பதற்காக செலுத்தப்பட்டுள்ளது. இந்த அற்புதமான அழியாத சுதந்திரத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன், அதை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் அவர் மிகவும் கிருபையாக வழங்குகிறார்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*தேவனுடைய கிருபையால், சுயநலத்தின் பெருமையிலிருந்து விலகி, இந்த வாழ்க்கையிலும், வரவிருக்கும் வாழ்க்கையிலும் அவர் அளிக்கும் ஆசீர்வாதங்களையும் இராஜரீக வெகுமதிகளையும் ஏற்றுக்கொள்வதை நான் தெரிவுச்செய்கிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*கிறிஸ்துவின் அன்பான அழைப்பிற்கு நான் தனிப்பட்ட முறையில் செவிக்கொடுக்கிறேன், சுய பலியின் பலிபீடத்தில் என் வாழ்க்கையை வைப்பதை தெரிவுச் செய்கிறேன். அவருடைய சித்தத்தின்படி வாழ வேண்டி என் வாழ்க்கையை தாராளமாக அனுமதிக்கிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*



பாடம் 9

சிலுவையை நோக்குதல்

(1) நம்மீது கொண்ட பெரிதான அன்பினால், இயேசு சகித்துக்கொண்டதைப் பற்றி வசனம் எவ்வாறு விவரிக்கிறது?

*அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்*

*குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். (ஏசாயா 53: 7)*

கிறிஸ்துவைப் பார்க்கும்போது, அவருடைய அன்பு இணையற்றதாக இருப்பதையும், அவர் குற்றவாளியான ஒரு பாவியின் இடத்தில் நிற்பதையும், அவருடைய களங்கமற்ற நீதியை அவனுக்குக் கொடுத்ததையும் நாம் காண முடியும். ஒரு பாவியானவன் தன் இரட்சகர் தன்னுடைய இடத்தில் பாவத்தின் சாபத்தின் கீழ் சிலுவையில் மரிப்பதைக் காணும்போது, மன்னிக்கும் அன்பைக் கண்டு, அன்பு அவனுடைய இருதயத்தில் துயிலெழுகிறது. பாவி கிறிஸ்துவை நேசிக்கிறான், ஏனென்றால் கிறிஸ்து அவனை முதலில் நேசித்தார், அன்பு என்பது நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாகும். "நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கும், எல்லா அநீதியிலிருந்து நம்மைத் பரிசுத்தப்படுத்துவதற்கும்" தேவன் உண்மையுள்ளவர் என்று மனந்திரும்பிய ஆத்துமா உணர்கிறது. கீழ்ப்படிதலின் ஒரு படியிலிருந்து இன்னொரு படிக்கு முன்னேறவும், பெலத்தின் மேல் பெலன் பெறவும், இயேசு கிறிஸ்துவின் கிருபையிலிருந்து, இன்னும் அதிக கிருபைக்கும் முன்னேறும்படியாக, தேவனுடைய ஆவியானவர் விசுவாசியின் ஆத்துமாவில் செயல்படுகிறார். {1SM 374}

என் பிதா உன்னை எல்லையற்ற அன்பால் நேசிக்கிறார், அவர் என்னை அதிகமாக நேசிக்கிறார், ஏனென்றால் உன்னை மீட்பதற்காக நான் என் ஜீவனைக் கொடுத்தேன். அவர் உன்னை

நேசிக்கிறார், மேலும் அவர் என்னை நேசிக்கிறார், நான் உன்னை நேசிக்கிறேன், என் ஜீவனை உனக்காக தருகிறேன். . . . சீஷர்கள் தங்கள் இரட்சகரை அவமானம், நிந்தை, சந்தேகம் மற்றும் துரோகம் ஆகியவற்றை சகிக்கிறவராகவும், தோட்டத்தில் அவருடைய வேதனையையும், கல்வாரி சிலுவையில் அவர் மரித்ததையும் கண்டதால், இந்த அன்பை நிலைநிறுத்தினார்கள். இந்த அன்பின் ஆழத்தை, எந்த சத்தத்தாலும், ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. சீஷர்கள் அதைப் புரிந்துகொண்டப்போது, அவர்களின் கருத்து தேவனுடைய தெய்வீக இரக்கத்தைப் பிடித்துக்கொண்டப்போது, குமாரனின் துன்பங்கள் ஒரு விதத்தில் பிதாவின் துன்பங்கள் என்ற அர்த்தத்தில் இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். {TMK 69}

(2) வாழ்க்கையில் குழப்பங்களின் மேல் நிலைக்கொண்டிருப்பதற்கு மாறாக, இயேசுவை நம் இரட்சகராக, பண்பின் முன்மாதிரியாக பார்த்தால், நம்மில் எதை தொடங்கி, எதை முடிப்பார்?

*அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். (எபிரெயர் 12: 2)*

தேவனுடைய பிள்ளைகளாக, கிறிஸ்துவின் மீது விசுவாசத்தின் கண்ணை நிலைநிறுத்திப் பார்ப்பது நம்முடைய பாக்கியம். நாம் தொடர்ந்து அவரைப் பார்க்கும்போது, அவருடைய பிரசன்னத்தின் சூரிய ஒளி மனதின்

அறைகளை நிரப்புகிறது. ஆத்துமாவின் ஆலயத்தில் கிறிஸ்துவின் ஒளி சமாதானத்தைக் கொண்டுவருகிறது. ஆத்துமா தேவன் மீது நிலைக்கொண்டிருக்கிறது. எல்லா குழப்பங்களும் கவலைகளும் இயேசுவின் மேல் வைக்கப்படுகிறது. நாம் தொடர்ந்து அவரைப் பார்க்கும்போது, அவருடைய சாயல் இருதயத்தில் பொறிக்கப்பட்டு அன்றாட வாழ்க்கையில் வெளிப்படுகிறது.

நாம் எந்த மனிதர்களையும் பின்பற்ற வேண்டியதில்லை. நம்முடைய அளவுகோலாக வைத்துக்கொள்ளும் அளவுக்கு புத்திசாலி மனிதர் எவரும் இல்லை. நீதி மற்றும் பரிசுத்தத்தின் பரிபூரணத்தில் முழுமையான மனிதராகிய கிறிஸ்து இயேசுவை நாம் பார்க்க வேண்டும். விசுவாசத்தை தொடங்குகிறவரும் முடிக்கிறவரும் அவரே. அவரே முன்மாதிரியான மனிதர். அவருடைய அனுபவமே நாம் பெற வேண்டிய அனுபவத்தின் அளவாகும். அவரது பண்புகள் நம் முன்மாதிரி. அப்படியானால், இந்த வாழ்க்கையின் குழப்பங்கள் மற்றும் கஷ்டங்களை நம் மனதில் இருந்து அகற்றி, அவற்றை அவர்மீது வைத்துவிடுவோம், அப்படி செய்வதன் மூலம் நாம் அவருடைய சாயலுக்கு மாற்றப்படுவோம். கிறிஸ்துவை நல்ல நோக்கத்துடன் நாம் காணலாம். நாம் அவரைப் பாதுகாப்பாகப் பார்க்கலாம்; அவர் எல்லா ஞானமுள்ளவர். நாம் அவரைப் பார்த்து, அவரைப் பற்றி சிந்திக்கும்போது, அவருடைய மகிமையின் நம்பிக்கைக்குள் அவர் உருவாகுவார்.

(3) ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் மற்றும் அவருடைய கிருபையின் மூலம்

பெறுவதும் மற்றும் அது நம்முடைய மனம் வாசம் செய்யும் பெரும் கருப்பொருளாகவும் இருப்பது எது?

*இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக; கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.*
*(சங்கீதம் 130: 7)*

இரட்சிப்பின் திட்டமானது, தேவனுடைய நீதியையும் அன்பையும் வெளிப்படுத்துவதால், வீழ்ச்சியடைந்த உலகங்களுக்கும், மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் மீட்கப்படுகிறவர்களுக்கும் ஒரு நித்திய பாதுகாப்பை வழங்குகிறது. நம்முடைய ஒரே நம்பிக்கையானது, தேவன் மூலமாக அனைத்தையும் இரட்சிக்கக்கூடியவருடைய இரத்தத்தில் பரிபூரண நம்பிக்கை வைத்திருப்பதாகும். ஓ, அந்த பரிகாரபலியின் மதிப்பை நாம் புரிந்து கொள்ளவில்லை! நாம் அவ்வாறு புரிந்துக்கொண்டிருந்தால், அதைப் பற்றி இன்னும்அதிகம் பேசியிருக்கலாம். புரிந்துகொள்ள முடியாத அன்பின் வெளிப்பாடே அவருடைய அன்பான குமாரனில் தேவன் தந்த வரமாகும். தம்முடைய நியாயப்பிரமாணத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கவும், அந்தப்படியே மீறுகிறவர்களை இரட்சிக்கவும் தேவன் மிகவும் அதிகமாக செய்ய வேண்டியதாக இருந்தது. மீட்பின் கருப்பொருளை மனிதன் ஏன் சற்று படிக்கக்கூடாது? இது மனித மனதில் ஈடுபடக்கூடிய மாபெரும் கருப்பொருளாகும். சிலுவையில் காட்டப்பட்ட கிறிஸ்துவின் அன்பை மனிதர்கள் சிந்தித்தால், அவருடைய சிந்தப்பட்ட இரத்தத்தின் நல்வினைக்கு ஏற்றவாறு அவர்களின் விசுவாசம்

பலப்படுத்தப்படும், மேலும் அவர்கள் சுத்திகரிக்கப்பட்டு பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவார்கள்.

(4) சுய நலமற்ற தன்னார்வத்துடனும், நம்முடைய தெய்வீக பதிலீடாகவும், கிறிஸ்து தம்முடைய ஜீவனை கொடுத்தப்போது, சிலுவையில் வெளிப்படுத்தப்பட்ட அன்பின் நான்கு அடிப்படை குணாதிசயங்கள் எவை?

*நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும். (சங்கீதம் 89:14)*

நாம் அழிந்துபோகாமல், நித்திய ஜீவனைப் பெறுவதற்காக, நம்முடைய தெய்வீக பதிலாளாக தம்முடைய ஆத்துமாவின் மேல் நீதியின் பட்டயத்தை சுமந்துக்கொண்டார். “நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக்கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார், ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன்” என்று இயேசு கூறினார். (யோவான் 10:17, 18). பூமியின் மேலுள்ள எந்த மனிதனோ அல்லது பரலோக தூதனோ பாவத்திற்கான தண்டனையை செலுத்தியிருக்க முடியாது. கலகம் செய்த மனிதனை இரட்சிக்கக்கூடியவர்  இயேசு மட்டுமே. அவரிடத்தில், தெய்வீகத்தன்மையும் மனிதத்தன்மையும் ஒன்றிணைக்கப்பட்டன, இதுதான்

கல்வாரியின் சிலுவையில் பலியாவதற்கான செயல்திறனைக் கொடுத்தது. சிலுவையில் இரக்கமும் சத்தியமும் ஒன்றாகச் சந்தித்தன, நீதியும் சமாதானமும் ஒன்றுக்கொண்று முத்தமிட்டன.

மனிதகுலத்தை மீட்பதற்காக இயேசு தாமாக முன் வந்து தம்மைக் கொடுத்தது போன்ற தன்னலமற்ற அன்பின் வெளிப்பாடுகள் தந்தையின் அன்பிற்கு கூடுதல் காரணங்களாக அமைந்தன. இரட்சிப்பின் திட்டமானது உலகத் தோற்றத்திற்கு முன்பே போடப்பட்டது (வெளி. 13: 8). இயேசுவின் உயிர்த்தெழுதல் சிலுவையில் அறையப்பட்டதைப் போலவே அதுவும் நித்திய திட்டத்தின் ஒரு பகுதியாகும். இயேசு மரணத்தின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு குறுகிய காலத்திற்கு கடந்து செல்வார் (சங். 16:10; cf. அப்போஸ்தலர் 2:31, 32) பின்னர் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாக இருக்கும்படிக்கும், மனிதனுடைய பரிந்துப்பேசுகிறவாராக மகிமைப்படுத்தப்படுவார் (யோவான் 11:25), (எபி. 7:25). அவமானத்தின் விளைவாக, பிதா அவரை மிகவும் மேன்மையாக உயர்த்துவார், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுப்பார் (பிலி. 2: 9).

(5) இரட்சிப்பின் திட்டத்தையும் சிலுவையையும் யோவனைபோல நாம் புரிந்துக்கொள்ள முயற்சித்தால், உலகத்திற்கு எதை அறிவிப்பதில் சந்தோஷப்படுவோம்?

*மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. (யோவான் 1:29)*

கிறிஸ்துவினுடைய சிலுவையின் மீது கவனம் செலுத்தப்படும்போது, முழு ஜீவனும் உயர்த்தப்படுகிறது. இரட்சகரின் அன்பின் அறிவு ஆத்துமாவைத் தாழ்த்தி, நேரம் மற்றும் உணர்வின் விஷயங்களுக்கு மேலே மனதை உயர்த்துகிறது. சிலுவையிலிருந்து பிரகாசிக்கும் ஒளியில் அனைத்து தற்காலிக விஷயங்களையும் மதிப்பிடுவதைக் கற்றுக்கொள்வோம். மனிதனை நித்திய ஐசுவரியத்தின் சுதந்திரவாளியாக மாற்றுவதற்காக நம்முடைய இரட்சகர் இறங்கிய அவமானத்தின் ஆழத்தை புரிந்துகொள்ள முயற்சிப்போம். மீட்பின் திட்டத்தை நாம் படிக்கும்போது, இரட்சகருடைய அன்பின் துடிப்பை இருதயம் உணரும், மேலும் அவரது குணத்தின் வசீகரத்தால் பேருவுகை பொங்கும்.

கிறிஸ்துவின் அன்புதான் நம் பரலோகத்தை உண்டாக்குகிறது. ஆனால் இந்த அன்பை நாம் சொல்ல முற்படும்போது, மொழி நம்மைத் தோல்வியடைய செய்கிறது. பூமியின் மீதான அவருடைய வாழ்க்கையைப் பற்றியும், நமக்காக அவர் செய்த தியாகத்தைப் பற்றியும் நாம் நினைக்கிறோம்; பரலோகத்தில் அவர் நமக்கு செய்யும் பணியை பரிந்துப்பேசுதலாகவும், நாம் கருதுகிறோம், அவரை நேசிப்பவர்களுக்காக அவர் ஆயத்தமாக்கும் மாளிகைகளை நாம் நினைக்கும்போது "கிறிஸ்துவின் அன்பின் உயரங்களும் ஆழங்களும் எவ்வளவு பெரிதானவை என்று ஆச்சரிப்படாமல் இருக்க முடியாது! நாம் சிலுவையின் அடியில் மறைந்துக்கொள்ளும்போது,

தேவனுடைய அன்பைப் பற்றிய ஒரு உணர்விழந்த ஒரு கருத்தாக்கத்தைப் பெறுகிறோம், மேலும், “இங்கே அன்பு இருக்கிறது, நாம் தேவனை நேசிக்கவில்லை, மாறாக அவர் நம்மை நேசித்தார், அவருடைய குமாரனை நம்முடைய பாவங்களுக்கான பரிகாரம் செய்ய அனுப்பினார்.”
ஆனால், கிறிஸ்துவைப் பற்றிய நமது சிந்தனையில், அளவிட முடியாத அந்த அன்பின் விளிம்பில் மட்டுமே நாம் நீடிக்கிறோம். அவரது அன்பு ஆழம் தெரியாத அல்லது கரை இல்லாத ஒரு பரந்த கடல் போன்றது.

எல்லா உண்மையான சீஷர்களிடமும் இந்த அன்பு, பரிசுத்த அக்கினியைப் போல, இருதயத்தின் பலிபீடத்தின் மீது எரிகிறது. இந்த பூமியில் தான் தேவனுடைய அன்பு இயேசுவின் மூலமாக வெளிப்பட்டது. குற்றமற்ற வாழ்க்கையின் மூலம் இந்த உலகத்தில் தான் அவருடைய பிள்ளைகள் இந்தஅன்பை பிரகாசிக்கச்செய்ய வேண்டும். இவ்வாறு பாவிகள் தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரைக் காண சிலுவையின் வழியாக வழிநடத்தப்படுவார்கள்.

(6) நாம் கிறிஸ்துவை நோக்கி, அவருடைய மகிமையையும், அன்பான குணங்களையும், மற்றும் அவருடைய அன்பின் பரிணாமங்களையும் பிடித்துக்கொண்டால், என்ன நடக்கும்?

*நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே*

*மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.*
*(2 கொரிந்தியர் 3:18)*

கிறிஸ்துவைப் பாருங்கள், அவருடைய குணத்தின் கவர்ச்சியான அழகைப் பாருங்கள், அவற்றை பிடித்துக் கொள்வதின் மூலம், நீங்கள் அவருடைய சாயலுக்கு மாற்றப்படுவீர்கள். விசுவாசத்தின் மூலம் நாம் சாத்தானின் நரக இருளைக் கடந்து, தேவனுடைய மகிமையை அவருடைய நியாயப்பிரமாணத்திலும், கிறிஸ்துவின் நீதியிலும் காண்டால் கிறிஸ்துவுக்கும் ஆத்துமாவுக்கும் இடையில் தலையிடும் மூடுபனியானது பின்னிட்டு விலகிவிடும்.

இயேசுவை நம் பார்வையில் இருந்து மறைக்க, அவருடைய ஒளியை திரையிட சாத்தான் முயல்கிறான்; அவருடைய மகிமையின் காட்சியில் ஒன்றையாகிலும் நாம் பெறும்போது, அவரிடம் ஈர்க்கப்படுகிறோம். இயேசுவின் இணையற்ற அழகை, பாவமானது நம் பார்வையில் இருந்து மறைக்கிறது; தப்பெண்ணம், சுயநலம், சுயநீதி, மற்றும் ஆர்வம் ஆகியவை நம் கண்களைக் குருடாக்குகின்றன, இதனால் நாம் இரட்சகரைக் காண இயலுவதில்லை. ஓ, விசுவாசத்தினால் நாம் தேவனிடம் நெருங்கி வந்தால், அவர் தம்முடைய பண்பாகிய மகிமையை நமக்கு வெளிப்படுத்துவார். மேலும் தேவனுடைய துதி மனித இருதயங்களிலிருந்து பாய்ந்து மனித குரல்களால் ஒலிக்கப்படும். தேவனுக்கு எதிராக பாவம் செய்வதன் மூலமும், சந்தேகம் மற்றும் அவிவாச வார்த்தைகளை பேசுவதன் மூலமும் சாத்தானுக்கு மகிமை அளிப்பதை நாம் என்றென்றைக்கும் நிறுத்திவிடுவோம்.

நாம் இனி தடுமாறவோ, முணுமுணுக்கவோ, துக்கப்படுவோ, மற்றும் தேவனுடைய பலிபீடத்தை நம் கண்ணீருடன் மறைக்கவோ கூடாது.

(7) பவுலைப்போல, நம்முடைய உதடு எதை உற்சாகமாக பேச வேண்டும், மற்றும் நம் மனம் எதின் மேல் சிந்தைக்கொண்டிருக்க வேண்டும்?

*இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். (1 கொரிந்தியர் 2: 2)*

இழந்துப்போன பாவிகளுக்காக இயேசு செய்த தியாகம் தியானத்திற்கான என்ன ஒரு கருப்பொருளாக இருக்கிறது! "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்". {ஏசாயா 53: 5}. இவ்வாறு நாம் எளிதில்அடையும் வகையில் நமக்குக் கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங்களை எவ்வாறு மதிப்பிடக் கூடும்? இயேசு இன்னும் அதிகமாக பாடுபட்டிருக்க வேண்டுமா? அவர் நமக்கு மேன்மையான ஆசீர்வாதங்களை வாங்கிக் கொடுத்திருக்க முடியுமா? நம் பொருட்டு அவர் பரலோகத்தின் மகிழ்ச்சியையும் மகிமையையும் விட்டுவிட்டு தரித்திரத்தையையும் அவமானத்தையும் கொடூரமான துன்பத்தையும் கொடூரமான மரணத்தையும் அனுபவித்தார் என்பதை நினைவில் கொள்ளும்போது அது

கடினமான இருதயத்தை உருக்கக் கூடாதா? அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் நமக்கு நம்பிக்கையின் கதவைத் திறந்தன, அப்படியிராவிட்டால் இருளின் கொடூரங்களையும் விரக்தியின் துயரங்களையும் தவிர வேறு எதுவும் நமக்குத் தெரிந்திருக்காது. நம்முடைய தற்போதைய ஆதரிக்கப்பட்ட, மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில், நாம் எவ்வளவு ஆழத்திலிருந்து மீட்கப்பட்டோம் என்பதை உணர முடியாது. இயேசு தம்முடைய மனித அனுதாபத்தோடும் அன்போடும் நம்மைச் சூழ்ந்துகொண்டு நம்மை உயர்த்தியிராதிருந்தால், நம்முடைய துன்பங்கள் எவ்வளவு ஆழமாக இருந்திருக்கும், நம்முடைய துயரங்கள் எவ்வளவு பெரியவை என்பதை நாம் அளவிட முடியாது.

(8) பவுலைப்போன்று, கிறிஸ்துவின் இரட்சிப்பை ஏற்றுக்கொள்கிறவர்கள் எந்த கருப்பொருளைக் குறித்து மேன்மைப் பாராட்ட வேண்டும்?

*நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். (கலாத்தியர் 6:14)*

கிறிஸ்தவர்கள் என்று கூறும் பலர் உலக செல்வ வளங்களில் உற்சாகமடைகிறார்கள், மேலும் அவர்களின் ஆர்வம் புதிய மற்றும் உற்சாகமான கேளிக்கைகளுக்காக

விழித்தெழுகிறது, அதே நேரத்தில் தேவனுடைய காரணத்திற்காக அவர்களுடைய இருதயமானது குளிர்ந்து, உறைந்துபோனது போல் தோன்றுகிறது. சடங்காச்சாரத்தில் சிக்கி இருக்கும் உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் கருவார்த்தைகள் இங்கே தரப்பட்டுள்ளது, உங்களை நித்தியமாக பாதிக்கும் அம்சங்கள் இதில் அடங்கியிருக்கிறது. இந்த கருவார்த்தைகளைப் பற்றி அமைதியாக இருந்தாலோ, விருப்பம் இல்லாவிட்டாலோ அது பாவமாக கருதப்படும். கல்வாரியின் காட்சிகள் ஆழ்ந்த உணர்ச்சிக்கு அழைக்கின்றன. இந்த காரியத்தில், நீங்கள் உங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்தினால் நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள். உலகின் பாவங்களின் பாரத்தை சுமக்கிற கிறிஸ்து, மிகச் சிறந்தவர், பாவம் அறியாதவர், இதைபோன்ற ஒரு வேதனையான மரணத்தை அனுபவிப்பதை, நம் எண்ணங்களும் கற்பனைகளும் ஒருபோதும் முழுமையாக புரிந்துகொள்ள முடியாது. அப்படிப்பட்ட அற்புதமான அன்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழம் ஆகியவற்றை நாம் புரிந்து கொள்ள முடியாது. நம் இரட்கரின் இணையற்ற அன்பினுடைய ஆழத்தின் சிந்தனையானது நம்முடைய மனதை நிரப்ப வேண்டும், ஆத்துமாவைத் தொட்டு உருக்க வேண்டும், பாசங்களை செம்மைப்படுத்தி மற்றும் உயர்த்த வேண்டும், மேலும் முழு தன்மையையும் முழுமையாக மாற்ற வேண்டும். அப்போஸ்தலரின் வார்த்தைகளானது: “இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன் என்பதாக இருந்தது. நாம் கல்வாரியை

நோக்கிப் பார்க்கும்போது, “"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையல்லாமல், நான் மகிமைப்படுவதை தேவன் தடைசெய்தார், அவரால் உலகம் எனக்கு சிலுவையில் அறையப்படுகிறது, நான் உலகத்திற்கு அறையப்படுகிறேன் “என்று கல்வாரியை பார்த்து உரத்துக் கூற முடியும்.

(9) பரிசுத்தவான்களோடு நாம் எதை புரிந்துக்கொள்ளும்படிக்கு நாம் நித்தியத்தை கழிப்போம்?

*சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம்பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். (எபேசியர் 3: 18-19)*

கிறிஸ்துவின் அன்புதான் நம் பரலோகத்தை உண்டாக்குகிறது. ஆனால் இந்த அன்பை நாம் எடுத்துரைக்க முற்படும்போது, மொழி நம்மைத் தோல்வியடைகிறது. பூமியின் மீதான அவருடைய வாழ்க்கையைப் பற்றியும், நமக்காக அவர் செய்த தியாகத்தைப் பற்றியும் நாம் நினைக்கிறோம்; பரலோகத்தில் அவர் நமக்கு செய்யும் பணியானது பரிந்துப்பேசுதலாகவும், நாம் கருதுகிறோம், அவரை நேசிப்பவர்களுக்காக அவர் ஆயத்தமாக்கும் மாளிகைகளை நாம் நினைக்கும்போது "கிறிஸ்துவின்

அன்பின் உயரங்களும் ஆழங்களும் எவ்வளவு பெரிதானவை என்று ஆச்சரிப்படாமல் இருக்க முடியாது! நாம் சிலுவையின் அடியில் மறைந்துக்கொள்ளும்போது, தேவனுடைய அன்பைப் பற்றிய ஒரு உணர்விழந்த ஒரு கருத்தாக்கத்தைப் பெறுகிறோம், மேலும், "இங்கே அன்பு இருக்கிறது, நாம் தேவனை நேசிக்கவில்லை, மாறாக அவர் நம்மை நேசித்தார், அவருடைய குமாரனை நம்முடைய பாவங்களுக்கான பரிகாரம் செய்ய அனுப்பினார்."
ஆனால், கிறிஸ்துவைப் பற்றிய நமது சிந்தனையில், அளவிட முடியாத ஒரு அன்பின் விளிம்பில் மட்டுமே நாம் நீடிக்கிறோம். அவரது அன்பு ஆழம் தெரியாத அல்லது கரை இல்லாத ஒரு பரந்த கடல் போன்றது.

சீஷர்களிடமும் இந்த அன்பு, பரிசுத்த அக்கினியைப் போல, இருதயத்தின் பலிபீடத்தின் மீது எரிகிறது. இந்த பூமியில்தான் தேவனுடைய அன்பு இயேசுவின் மூலமாக வெளிப்பட்டது. குற்றமற்ற வாழ்க்கையின் மூலம் இந்த உலகத்தில் தான் அவருடைய பிள்ளைகள் இந்தஅன்பை பிரகாசிக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு பாவிகள் தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரைக் காண சிலுவையின் வழியாக வழிநடத்தப்படுவார்கள். {RH, 5/6/1902}

(10) உலகத்தின் ஒவ்வொரு சிருஷ்டிப்பும் சிலுவையின் முக்கியத்துவத்தை முழுவதும் கிரகிக்க முயலும்போது நித்தியக் காலம் முழுவதும் கேட்கும் துதியின் சத்தம் என்னவாக இருக்கும்?

*"தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும்*

*பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்." (வெளிப்படுத்துதல் 4:11)*

இந்த வாழ்க்கையில் மீட்பின் அற்புதமான கருத்தை நாம் புரிந்துக் கொள்ள ஆரம்பிக்க முடியும். நம்முடைய வரையறுக்கப்பட்ட புரிதலுடன், சிலுவையில் சந்திக்கும் அவமானம், மகிமை, ஜீவன் மற்றும் மரணம், நீதி மற்றும் இரக்கம் ஆகியவற்றை நாம் மிகவும் ஆர்வத்துடன் கருத்தில் கொள்ளலாம்; என்றாலும், நமது மிக நீண்ட விரிந்த மன ஆற்றல்களுடன், அதன் முழு முக்கியத்துவத்தையும் நாம் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறோம். மீட்பதற்கான அன்பின் நீளம் மற்றும் அகலம், ஆழம் மற்றும் உயரம் ஆகியவை மங்கலாக புரிந்து கொள்ளப்படுகின்றன. மீட்கப்பட்டவர்களைப் பார்க்கும்போதும் அவர்கள் பார்க்கும் விதமாக பார்த்து, அவர்கள் அறிந்த விதமாக அறிந்திருப்பதைக் காணும்போதும் மீட்பின் திட்டம் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது, ஆனால் ஆச்சரியமாக பார்க்கிற மற்றும் மகிழ்ச்சியான மனங்களுக்கு நித்திய யுகங்களில், சத்தியங்கள் தொடர்ந்து வெளிப்படுத்தப்படும். உலகத்தின் துயரங்கள், வேதனைகள் மற்றும் சோதனைகள் முடிவடைந்தாலும், அதற்கான காரணம் நீக்கப்பட்டாலும், தேவனுடைய மக்கள் தங்கள் இரட்சிப்பின் விலை என்ன என்பதைப் பற்றிய ஒரு தெளிவான, புத்திசாலித்தனமான அறிவை கொண்டிருப்பார்கள். {AG 98}.

(11) இருபத்து நான்கு மூப்பர்களும், மீட்கப்பட்டவர்களும் தங்கள் துதிபாட்டை பாடும்பாது, தங்களுக்கு முன்பாக எதை வைத்தார்கள்?

*இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து: (வெளிப்படுத்துதல் 4:10)*

கிறிஸ்துவின் சிலுவையானது எல்லா நித்திய காலத்திலும் மீட்கப்பட்டவர்களின் அறிவியலும் பாடலும் இருக்கும். மகிமையடைந்த கிறிஸ்துவிற்குள், அவர்கள் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவை காண்பார்கள். தேவனுடைய பிரியமானவர், பரலோகத்தின் மாட்சிமை, கேருபீன்கள், பிரகாசிக்கும் சேராபீன்கள் ஆகியவைகள் மகிழ்வுடன் ஆராதிக்கப்பட்டவர் - விழ்ச்சியடைந்த மனிதனை உயர்த்துவதற்காக தம்மைத் தாழ்த்திக் கொண்டவர் - விண்வெளியின் பரந்த பகுதிகள் மூலம் எண்ணற்ற உலகங்களை உருவாக்கியவர் மற்றும் ஆதரித்தவர்; இழந்துப்போன உலகின் துயரங்கள் அவரது இருதயத்தை உடைத்து கல்வாரி சிலுவையில் அவரது ஜீவனை நசுக்கும் வரை பாவத்தின் குற்றத்தையும் அவமானத்தையும், பிதா தம் முகத்தை மறைத்தலையும் ஏற்றுக்கொண்டவர், என்பதை ஒருபோதும் மறக்க முடியாது. சர்வலோகத்தையும் சிருஷ்டித்தவர், அனைத்து விளைவுகளின் மத்தியஸ்தர்,

மனிதர் மேலுள்ள அன்பினால், அவருடைய மகிமையை ஒதுக்கி வைத்துவிட்டு தம்மை அவமானப்படுத்திக்கொண்டது, அண்டசராசரத்தின் வியப்பையும் ஆராதனையையும் எப்போதும் உற்சாகப்படுத்தும். இரட்சிக்கப்பட்ட ஜாதிகள் தங்கள் மீட்பரைப் பார்த்து, பிதாவின் நித்திய மகிமையை அவருடைய முகத்தில் பிரகாசிப்பதைப் காணும்போது; அவருடைய நித்திய சிங்காசனத்தை காண்கிறார்கள், அவருடைய ராஜ்யத்திற்கு முடிவே இல்லை என்று அறிந்திருக்கிறார்கள், அவர்கள்: "பாத்திரர், பாத்திரர், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர், அவருடைய மிக விலையேறப்பெற்ற இரத்தத்தால் எங்களை தேவனிடம் மீட்டுக்கொண்டார்!" என்ற ஆரவாரமான பாடலில் வெளிப்படுகிறார்கள் {AG 98}

*கிறிஸ்து தம் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் நடத்தப்பட்ட விதங்களை எனக்காக தாங்கிக் கொண்டதைப் பற்றிய அறிவில் நான் வளரும்போது, குற்றவாளியான பாவியாகிய என் இடத்தைப் அவர் எடுத்துக்கொண்டதால் அவருடைய அன்பு இணையற்றதாக இருப்பதை நான் காண்கிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*கிறிஸ்துவிலுள்ள என்னுடைய விசுவாசத்தை தொடங்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கும்படிக்கு அவர் மீது என் விசுவாசக் கண்களை எப்போதும் அவர் மேல் வைத்து அவரை நம்புவேன்*

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

மீட்பின் திட்டமானது தேவனுடைய நீதி மற்றும் அன்பு இரண்டையும் எவ்வாறு தெளிவாக வெளிப்படுத்துகிறது என்பதை பார்த்து நான் வியப்படைகிறேன். என்னைப் போன்ற நம்பிக்கையற்ற பாவியை இவ்வளவு உயர்ந்த விலைக்கிரயத்தில் மீட்க அவர் தம்முடைய குமாரனை அனுப்பினார் என்பது உண்மையில் புரிந்துகொள்ள முடியாத அன்பின் வெளிப்பாடு. கல்வாரியில், நீதி, நியாயம் மற்றும் இரக்கத்தின் சரியான சமநிலையை நான் காண்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

பவுலைப் போலவே, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் அற்புதமான கருப்பொருளில் வாசமாக இருக்கவும், உலகத்தின் மீது அவர் கொண்டுள்ள மிகப்பெரிய அன்பை அவர்களுக்குச் சொல்லவும் நான் தெரிவுச் செய்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தேவனுடைய அன்பைப் புரிந்துகொள்ளும் முயற்சியில் நித்தியத்தை இயேசுவின் காலடியில் செலவழிக்க நான் எப்போதும் எதிர்பார்க்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

*இயேசுவின் அன்பைக் கண்டு பிரமித்து என் கிரீடத்தை இயேசுவின் காலடியில் வைப்பதற்கு நான் ஏங்குகிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*



## பாடம் 10

## கிறிஸ்துவினுடைய அன்பின் வரம்

**(1) எம்மாவுக்கு சென்றுக்கொண்டிருந்த சீஷர்களைப்போல வேத வசனங்களில் சத்தியத்தைத் தேடி, கிறிஸ்துவினுடைய இரட்சிக்கும் அன்பை கற்றுக்கொள்ளும்போது, அதன் விளைவு என்னவாக இருக்கும்?**

*அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: வழியிலே அவர் நம்முடனே பேசி,*

*"வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக்காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா என்று சொல்லிக்கொண்டு"*
*(லூக்கா 24:32)*

கிறிஸ்துவிலுள்ள சத்தியமும், அவர் மூலமாய் வருகிறவைகளும் அளவிட முடியாதவைகள். வேதத்தின் மாணாக்கர், அதன் ஆழத்தை பார்க்கும்போது, ஒரு ஆழமடைந்து விரிவடையும் நீரூற்றுக்குள் பார்ப்பதுப்போல பார்க்கிறார்கள். நம்முடைய பாவங்களுக்கான பரிகாரமாக அவருடைய குமாரனைக் கொடுத்ததிலுள்ள தேவனுடைய அன்பின் இரகசியத்தை இந்த வாழ்க்கையில் நாம் புரிந்து கொள்ள முடியாது. இந்த பூமியில், நம் மீட்பரின் பணியானது எப்போதுமே நம்முடைய கற்பனையை மேலாக விரிவடையச் செய்யும் ஒரு பொருளாக இருக்கிறது. இந்த இரகசியத்தை புரிந்துகொள்ளும் முயற்சியில் ஒரு மனிதன் ஈடுப்பட்டால் அவனுடைய ஒவ்வொரு மன ஆற்றலுக்கும் வரி விதிக்கப்பட கூடும், அப்படியே செய்தாலும் அவன் மனம் மயக்கமடைந்து சோர்வுற்றதாக மாறும். மிகவும் விடாமுயற்சியுடன் தேடுபவர்கள்மட்டுமே அந்த நித்தியமான, கரையற்ற கடலைக் காண்பார்கள்.

ஒருவர் இயேசுவில் உள்ள சத்தியத்தை அப்படியே அனுபவிக்க முடியும், ஆனால் அதை ஒருபோதும் விளக்க முடியாது. அதன் உயரமும் அகலமும் மற்றும் ஆழமும் நம் அறிவிற்கு அப்பாற்பட்டு செல்கின்றன. நாம் மிக அதிகமாக கற்பனை செய்யதாலும், அந்த விவரிக்க முடியாத அன்பின் வெளிப்புறங்களை

மங்கலாக மட்டுமே பார்க்க முடியும், அது பரலோகத்தைப் போன்று உயர்ந்தது, ஆனால் தேவனுடைய சாயலை எல்லா மனிதர்கள் மேலும் முத்திரையிடும்படிக்கு பூமிக்கு தாழ இறங்கினது.

ஆயினும் தெய்வீக இரக்கத்தைத் தாங்கக்கூடிய அளவிற்கு அனைத்தையும் நாம் காண முடியும். இது தாழ்மையான, நறுங்குண்ட மற்றும் நொருங்குண்ட ஆத்துமாவுக்கு வெளிப்படுகிறது. நமக்காக அவர் செய்த தியாகத்தை நாம் மேன்மைபாராட்டும்போது, தேவனுடைய இரக்கத்தை ஒரு அளவில் புரிந்துகொள்வோம். மனத்தாழ்மையுடன் நாம் தேவனுடைய வார்த்தையைத் தேடும்போது, இந்த மீட்பின் மகத்தான கருப்பொருள் நம்மை ஆராய்ச்சிக்குத் வழியை திறக்கும். நாம் அதை உற்றுப்பார்க்கும்போது அது அதிமாக பிரகாசிக்கும், அதைப் புரிந்துகொள்ள நாம் ஆசைப்படுகையில், அதன் உயரமும் ஆழமும் எப்போதும் உயர்ந்துக்கொண்டேயிருக்கும்.

(2) எல்லா நம்பிக்கையும் இழந்தபோது, கிறிஸ்துவினுடைய மற்றும் பிதாவினுடைய அன்பினால் நமக்காக வெளிப்படுத்தப்பட்ட அரும் காரியங்கள் எவை?

*"நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக்கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். (யோவான் 10:17)*

மீறுதல் மற்றும் பாவத்தின் விளைவாக ஆதாம் மற்றும் ஏவாளிடமிருந்து எல்லா

நம்பிக்கைகளும் விலக்கப்பட்டபோது, பாவியின் மரணத்தை நீதி கோரியபோது, உலகத்தின் பாவத்திற்கு ஒரே பலியாக கிறிஸ்து தம்மை ஒப்புக்கொடுத்தார். உலகம் தண்டனைக்குள்ளானது. கிறிஸ்து மனிதனுக்கு பதிலாகவும் உத்திரவாதியாகவுமானார்.

தேவனுடைய குமாரனைத் தவிர வேறு எவராலும் நம் மீட்பை நிறைவேற்ற முடியாது; பிதாவின் மார்பில் சாய்ந்துக் கொண்டிருந்தவரால் மட்டுமே அவரைக் குறித்து அறிவிக்க முடியும். தேவனுடைய அன்பின் உயரத்தையும் ஆழத்தையும் அறிந்தவர் மட்டுமே அதை வெளிப்படுத்த முடியும். வீழ்ச்சியடைந்த மனிதனின் சார்பாக கிறிஸ்து செய்த நித்திய பலியை தவிர அதற்கு குறைவானது எதுவும், இழந்த மனிதகுலத்திற்கு பிதாவின் அன்பை வெளிப்படுத்த முடியாது. “தேவன் உலகத்தை இவ்வளவாய் அன்புக் கூர்ந்து, தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தார்”. மனிதர்களிடையே வாழ்வது மட்டுமல்லாமல், அவர்களுடைய பாவங்களைத் சுமக்கவும், அவர்களுடைய பலியாக மரிக்கவும் அவரை அவர்களுக்குக் கொடுத்தார். கிறிஸ்து மனிதகுலத்தின் நலன்களாலும் தேவைகளாலும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டியதாக இருந்தது. தேவனோடு ஒருவராக இருந்தவர், ஒருபோதும் பிரிக்க முடியாத உறவுகளால் தம்மை மனுபுத்திரர்களுடன் இணைத்துக் கொண்டார். “இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் (இயேசு) வெட்கப்படாமல்” (எபிரெயர் 2:11); அவர் நம்முடைய பலி, நமக்காக பரிந்துப்பேசுகிறவர், நம்முடைய சகோதரர், பிதாவின் சிங்காசனத்திற்கு முன்பாக நம் மனித சாயலைச் சுமந்து,

நித்திய யுகங்களில் மீட்டுக்கொண்ட அவருடைய இனம் நாம் - அவர் மனுஷ குமாரன். தேவனுடைய அன்பை பிரதிபலிப்பதற்கும் பரிசுத்தத்தின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்கும் மனிதன் பாவத்தின் அழிவு மற்றும் சீரழிவிலிருந்து உயர்த்தப்படுவதற்குமே இவையாவும் நடந்தது.

(3) நாம் தாவீது இராஜாவைப் போல, பிரதான சிருஷ்டிகருடைய வரங்களின் பண்புகளையும், நம் ஒவ்வொருவர் மீதான அவருடைய தனிப்பட்ட அக்கறையை புரிந்துக்கொள்ள முயற்சிக்கையில், நம்முடைய மறுமொழி என்னவாக இருக்க வேண்டும்?

*இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. (சங்கீதம் 139: 6)*

எதிர் வரவிருக்கும் உலகில் மீட்கப்பட்டவர்களை கிறிஸ்து ஜீவ நதியின் அருகே வழிநடத்துவார், மேலும் அவர்களுக்கு சத்தியத்தின் அற்புதமான படிப்பினைகளை கற்பிப்பார். இயற்கையின் இரகசிங்களை அவர் அவர்களுக்கு வெளிப்படுத்துவார். ஒரு குருவானவர் உலகத்தை நிலைநிறுத்துவதை அவர்கள் காண்பார்கள். வயல்வெளியின் பூக்களை வண்ணமயமாக்குவதில் சிறந்த கலைஞரால் காட்டப்படும் திறமையை அவர்கள் காண்பார்கள், ஒவ்வொரு ஒளிக்கதிரையும் விநியோகிக்கும் இரக்கமுள்ள பிதாவின் நோக்கங்களைப் பற்றி அறிந்து கொள்வார்கள், மேலும் பரிசுத்த தேவதூதர்களுடன் தேவனுடைய மகாபெரிதான அன்பை இந்த நன்றியற்ற உலகத்திற்கு, மீட்கப்பட்டவர்கள் தங்கள் துதிப்பாடல்களால்

அடையாளப்படுத்துவார்கள். அதன் பின்னர் தான் “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.” என்ற வசனம் சரியாகப் புரிந்துக்கொள்ளப்படும்.

(4) உலகிலுள்ள ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளின் இருதயத்தையும், கிறிஸ்து தரும் அற்புதமான இரட்சப்பின் வரத்தைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு ஆயத்தப்படுத்த என்ன செய்கிறார்?

*நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். (யோவான் 12:32)*

கிறிஸ்து, தேவனுடைய அன்பை உலகுக்கு வெளிப்படுத்தவும், எல்லா மனிதர்களின் இருதயங்களையும் தம் பக்கம் இழுத்துக்கொள்ளவும் வந்தார். “நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்” என்றார். (யோவான் 12:32)
கிறிஸ்துவின் அன்பின் இழுத்தலுக்கு மறுமொழியளிப்பதே இரட்சிப்பிற்கான முதற்படி.

(5) நாம் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், கிறிஸ்துவின் மூலமாக தேவன் நமக்கு, அவருடைய சமாதானத்தையும் மன்னிப்பையும், நம் வாழ்வில் வழிநடத்த

அவரை அனுமதிக்கிற எந்த வரத்தைத் தருகிறார்?

*இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார், (அப்போஸ்தலர் 5:31)*

தேவன், மனிதர்களுக்கு செய்தியின் மேல் செய்தியை அனுப்புகிறார், அவர்கள் மன்னிக்கப்படவும், அவர்களின் பெயர்களுக்கு முன்பாக மன்னிப்பை எழுதவும், அவர்கள் மனந்திரும்பும்படி வேண்டிக்கொள்கிறார். மனந்திரும்புதல் நடைப்பெறாதா? அவருடைய வேண்டுகோள்கள் கவனிக்கப்படாதா? அவருடைய இரக்கம் புறக்கணிக்கப்படுமா? அவருடைய அன்பு முற்றிலும் நிராகரிக்கப்படுமா? ஓ, அப்படிச் செய்தால் மனிதன் தன்னை நித்திய ஜீவனைப் பெறக்கூடிய வழியிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்கிறான்; தேவன் தவறுக்கு வருந்துகிறவர்களுக்கு மட்டுமே மன்னிப்பளிக்கிறார்!

அவருடைய அன்பின் வெளிப்பாட்டின் மூலம், அவருடைய ஆவியின் விண்ணப்பம் மூலம், அவர் மனந்திரும்புதலுக்கு மனிதர்களைத் தூண்டுகிறார்; மனந்திரும்புதல் என்பது தேவனுடைய வரம், தன் பாவத்திற்காக வருந்துகிறவர்களை அவர் முதலில் மன்னிக்கிறார். தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மீறுதலுக்காக, அவர்கள் தேவனிடம் மனந்திரும்பியதன் மூலமும், பாவியின் மீட்பரும் மற்றும் வழக்காடுகிறவருமாகிய கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமும் மனிதனுக்கு இனிமையான மகிழ்ச்சி கிடைக்கிறது.

மன்னிப்பின் மகிழ்ச்சியை, தேவனுடைய சமாதானத்தை மனிதர்கள் புரிந்துகொள்வதே கிறிஸ்து தம்முடைய அன்பின் வெளிப்பாட்டின் மூலம் அவர்களை ஈர்க்கிறது. அவருடைய கிட்டிச் சேர்த்தலுக்கு அவர்கள் பதிலளித்தால், அவர்களுடைய இருதயங்களை அவருடைய கிருபைக்கு செலுத்தினால், அவர் படிப்படியாக, தம்மைப் பற்றிய முழு அறிவுக்கு இட்டுச் செல்வார், இதுவே நித்திய ஜீவன்.

(6) உண்மையான மனந்திரும்புதலை அனுபவிப்பதற்கு முன், கிறிஸ்துவினிடத்திலிருந்து வரும் கிருபையின் எந்த அழைப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்?

*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் (மத்தேயு 11:28)*

உண்மையிலேயே மனந்திரும்புவதற்கு விரும்புகிறவன் யார்? அவன் என்ன செய்ய வேண்டும்? - அவன் தாமதமின்றி இயேசுவிடம் வர வேண்டும். கிறிஸ்துவின் வார்த்தை உண்மை என்று அவன் விசுவாசிக்க வேண்டும், மேலும், வாக்குத்தத்தங்களை விசுவாசித்து, அதை பெற்றுக்கொள்ளும்படி கேட்க வேண்டும்.

நேர்மையான ஆசையானது மனிதர்களை ஜெபிக்க தூண்டும்போது, அவர்கள் வீணாக ஜெபிக்க மாட்டார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றி, பரிசுத்த ஆவியானவர் தேவனிடம் மனந்திரும்புவதற்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கும் வழிநடத்துவார். அவன் ஜெபிப்பான்,

விழித்திருப்பான், தன்னுடைய பாவங்களைத் தள்ளிவிடுவான், தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதற்கான தனது முயற்சியின் வீரியத்தால் அவனுடைய நேர்மையை வெளிப்படுத்துவான். ஜெபத்தினால், அவன் விசுவாசத்தோடு ஒன்றிணைவான், விசுவாசிப்பது மட்டுமல்லாமல், நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவான். கிறிஸ்துவினுடைய கேள்விக்கு அருகிலேயே இருப்பதாக அவன் தன்னை அறிவிப்பான். தேவனிடமிருந்து இருதயத்தை வழிவிலகச்செய்யும் அனைத்து பழக்கங்களையும் ஐக்கியங்களையும் அவன் கைவிடுவான்.

(7) கிறிஸ்துவின் பல வரங்களில் ஒன்றாக இருந்தாலும், வீழ்ச்சியடைந்த, மற்றும் பாவத்தின் சாபத்தில் உபத்திரவப்படுகிற மனிதனுக்கு அவருடைய அன்பில் வெளிப்படுத்தப்பட்ட பெரிதான வரம் எது?

*கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள். (எபேசியர் 5: 2)*

மனிதனின் வீழ்ச்சி பரலோகம் முழுவதையும் துக்கத்தால் நிரப்பியது. தேவன் உருவாக்கிய உலகம் பாவத்தின் சாபத்தால் மழுங்கடிக்கப்பட்டது மற்றும் துயரத்திற்கும் மரணத்தினாலும் துன்பத்தினாலும் அழிந்த ஜீவிகளால் குடியமர்த்தப்பட்டது. நியாயப்பிரமாணத்தை மீறியவர்களால் தப்பிக்க இயலவில்லை. தேவதூதர்கள்

தங்கள் துதிப் பாடல்களை நிறுத்தினர். பரலோக நியாயாசனங்கள் முழுவதும், பாவம் செய்த அழிவுக்காக துக்கமாக இருந்தது.

பரலோக்கத்தின் மகிமையுள்ள தளபதியான தேவனுடைய குமாரன் வீழ்ச்சியடைந்த இனத்தைக் குறித்து பரிதாபப்பட்டார். இழந்துப்போன உலகத்தின் துயரங்கள் அவருக்கு முன்பாக எழுந்ததால் அவரது இருதயம் நித்தியமான இரக்கத்துடன் அசைந்தது. ஆகையால், தெய்வீக அன்பு மனிதனை மீட்பதற்காக ஒரு திட்டத்தை உருவாக்கியது. தேவனுடைய முறிந்த நியாயப்பிரமாணம் பாவியின் ஜீவனைக் கோரியது.  அனைத்து உலகத்திலும் மனிதனின் சார்பாக, அவனுடைய கூற்றுக்களை பூர்த்தி செய்யக்கூடிய ஒருவர் இருந்தார். தெய்வீக பிரமாணமானது தேவனைப் போலவே பரிசுத்தமானது என்பதால், தேவனுக்கு சமமான ஒருவர் மட்டுமே அதன் மீறுதலுக்கு பரிகாரம் செய்ய முடியும். வீழ்ச்சியடைந்த மனிதனை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்டு, அவனை மீண்டும் பரலோகத்திற்கு இசைவாகக் கொண்டுவர கிறிஸ்துவைத் தவிர வேறு எவராலும் சாத்தியமில்லை. பாவத்தின் குற்றத்தையும் அவமானத்தையும் கிறிஸ்து தாமே எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருந்தது - பாவம், பிதாவையும் அவருடைய குமாரனையும் பிரித்து விடும் அளவிற்கு ஒரு பரிசுத்தமான தேவனை மிகவும் புண்படுத்துகிறது. சீரழிந்துப்போன இனத்தை மீட்பதற்காக கிறிஸ்து துன்பத்தின் ஆழத்தை அடைந்தார்.

(8) கிறிஸ்துவிடம் வரும் தகுதியற்ற மற்றும் மனந்திருந்திய பாவிக்கு, இயேசு என்ன வாக்குத்ததம் செய்திருக்கிறார்?

*பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.*
*(யோவான் 6:37)*

ஆனால் பலர் தங்களுக்கு விசுவாச குறைவுபாடுள்ளது என்று நினைக்கிறார்கள், எனவே அவர்கள் கிறிஸ்துவிடமிருந்து விலகி இருக்கிறார்கள். இந்த ஆத்துமாக்கள், தங்கள் உதவியற்ற தகுதியற்ற நிலையில், தங்கள் இரக்கமுள்ள இரட்சகரின் தயவின் மேல் தங்களைத் வைத்துக்கொள்ள வேண்டும். சுயத்தைப் பார்க்காமல், கிறிஸ்துவைப் பாருங்கள். நோயுற்றவர்களைக் குணப்படுத்தி, மனிதர்களிடையே நடந்தபோது பேய்களை விரட்டியவர் இன்னும் அதே வல்லமை நிறைந்த மீட்பராகவே இருக்கிறார். "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. (யோவான் 6:37) என்ற அவருடைய வாக்குத்தத்தத்தை ஜீவ விருட்சத்திலிருக்கும் இலைகளாகப் புரிந்து கொள்ளுங்கள். அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருப்பதால், அவரிடம் வரும்போது, அவர் உங்களை ஏற்றுக்கொள்கிறார் என்று விசுவாசியுங்கள். இப்படி செய்யும்போது நீங்கள் ஒருபோதும் அழிந்துப்போக முடியாது.

மனந்திரும்பிய பாவி கிறிஸ்துவிடம் வரும்போது, அவனுடைய குற்றத்தையும் தகுதியற்ற தன்மையையும் உணர்ந்து, அவன் தண்டனைக்கு தகுதியானவன்

என்பதை உணர்ந்து, கிறிஸ்துவின் இரக்கத்தையும் அன்பையும் விசுவாசிக்கும்போது, அவன் தேவனை விட்டு விலகிப்போக மாட்டான். தேவனுடைய மன்னிக்கும் அன்பு பொருத்தமானதாக இருக்கிறது, மேலும் அவனுடைய இரட்சகரின் எல்லையற்ற இரக்கத்திற்கும் அன்பிற்கும் அவனுடைய இருதயத்தில் மகிழ்ச்சியான நன்றியுணர்வு உருவாகிறது. உலகத் தோற்றத்திற்கு முன்னர் பரலோக நியாயாசனங்களில் அவனுக்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டது, மனிதனின் மீறுதலின் தண்டனையை கிறிஸ்து தாமே எடுத்துக் கொள்ள வேண்டும், மேலும் அவனை ஆச்சரியத்தில் மூழ்கடித்து, நீதியை அவன் கணக்கில் செலுத்த வேண்டும்.

(9) கிறிஸ்து தம்முடைய கனிவான மனதுருக்கத்தினால். நம் ஒவ்வொருவருக்கும் தம்முடைய விவரிக்க முடியாத, இணையற்ற அன்பை வெளிப்படுத்துகிறாரா?

*அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். (1 யோவான் 3:16)*

கல்வாரி சிலுவையின் மேல் மனம் ஈர்க்கப்படும்போது, பூரணமற்ற பார்வையால் கிறிஸ்து வெட்கக்கேடான சிலுவையில் காணப்படுகிறார். அவர் ஏன் மரித்தார்? பாவத்தின் விளைவாக அவர் மரித்தார். பாவம் என்றால் என்ன? நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம். எனவே பாவத்தின் தன்மையைக் காண கண்கள் திறக்கப்பட்டது.

நியாயப்பிரமாணம் முறிக்கப்பட்டுவிட்டது, ஆனால் மீறுகிறவர்களுக்கு அது மன்னிப்பை வழங்க முடியாது. அது நமது உபாத்தியாக இருக்கிறது, தண்டனையளிக்கும்படிக்கு கண்டிக்கிறது. இந்த தண்டனைக்கான தீர்வு எங்கேயிருக்கிறது? சிலுவையில் தூக்கப்பட்ட கிறிஸ்துவிடம் நியாயப்பிரமாணம் நம்மை வழிநடத்துகிறது, அவர் வீழ்ச்சியடைந்த, பாவமுள்ள மனிதனுக்கு அவருடைய நீதியைக் கொடுக்க முடியும், இதனால் மனிதர்களை அவருடைய பிதாவிடம் தம்முடைய நீதியான குணத்தில் முன்நிறுத்த முடியும்.

கிறிஸ்துவின் தன்மையை இரவும் பகலும் படிக்கயுங்கள். அவருடைய கனிவான இரக்கம், உங்கள் ஆத்துமா மீதான அவரது விவரிக்க முடியாத, இணையற்ற அன்புதான் இந்த அவமானம், அவதூறுகள், துஷ்பிரயோகம், பூமியின் தவறான புரிதல்கள் அனைத்தையும் சகித்துக்கொள்ள அவரை வழிநடத்தியது. அவரை கிட்டிச்சேருங்கள், அவருடைய கரங்களையும் கால்களையும் பாருங்கள், நம்முடைய மீறுதல்களுக்காக காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களுக்காக நொருக்கப்பட்டார். “நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்”.

நேரத்தை வீணடிக்க வேண்டாம், இன்னொரு நாள் என்று நித்தியத்தைக் கடத்த வேண்டாம், ஆனால் நீங்கள் எப்படியிருக்கிறீர்களோ அப்படியே, உங்கள் பலவீனம், உங்கள் தகுதியற்ற

தன்மை, உங்கள் அலட்சியம் எதுவாக இருந்தாலும், வருவதற்கு தாமதம் செய்ய வேண்டாம்... தம்மிடம் வரும்படியான இயேசுவின் அழைப்பு, வாடாத மகிமையின் கிரீடத்தை வழங்குதல், ஜீவன், தேவனுடைய ஜீவனை அளவிடும் நித்திய ஜீவன், உங்கள் முழுமையான பாசத்துடன் அவரைத் தொழுதுக்கொள்வதற்கு உங்களை வழிநடத்த தூண்டுதல் தருவதற்கு போதுமானதாக இல்லை.

(10) தாங்கிக்கொள்ள கடினமான, கொடுமையான பாவத்தின் சாபத்தை, கிறிஸ்து யாருக்காக சுமந்தார்?

*நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். (1 யோவான் 2: 2)*

மனிதன் பாவத்தைத் சுமக்கிறவனாக உண்டாக்கப்படவில்லை, மீட்பர் தாங்கிய பாவத்தின் சாபத்தின் கொடூரத்தை அவன் ஒருபோதும் அறிய முடியாது. தேவனுடைய கோபாக்கினையின் மிகுந்த வல்லமையுடன் அவர் மேல் விழுந்த அவரின் துக்கத்துடன் எந்த துக்கத்தையும் வைத்து ஒப்பிட முடியாது. மனித இயல்பு ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே சோதனை மற்றும் பாடுகளை தாங்கக்கூடியது. வரையறுக்கப்பட்டவை வரையறுக்கப்பட்ட அளவில் மட்டுமே தாங்கிக்கொள்ள முடியும், மேலும் மனித இயல்பு அடங்கிப்போகக்கூடியது; ஆனால் கிறிஸ்துவின் இயல்பு துன்பத்தை தாங்குவதற்கு அதிக திறனைக் கொண்டிருந்தது; ஏனென்றால், மனிதன் தெய்வீக இயல்பில் இருந்தான், அவன்

பாடுகளை சகித்துக்கொள்ளும் திறனுடன் உண்டாக்கப்பட்டான், அது பாவத்தையும், இழந்துப்போன உலகத்தையும் விளைவித்தது.

கிறிஸ்து சகித்த வேதனை, விரிவடைந்து, ஆழமடைந்து, பாவத்தின் தன்மையைப் பற்றியும், பாவத்தில் தொடர்ந்தவர்கள் மீது தேவன் கொண்டு வரும் பழிவாங்கலின் தன்மையைப் பற்றியும் இன்னும் விரிவான கருத்தாக்கத்தைக் கொடுக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம், ஆனால் மனந்திரும்பிய, விசுவாசமுள்ள பாவிக்கு இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய வரமாகிய நித்திய ஜீவன் கிடைக்கிறது.

நம்முடைய ஆண்டவர் கூறுகிறார், பாவத்தின் தண்டனையின் கீழ், நான் உங்களுக்காக மரித்தேன் என்பதை நினைவில் வையுங்கள். என் நிமித்தமும் மற்றும் சுவிசேஷத்தினிமித்தமும் ஒடுக்கப்படும்போதும் மற்றும் துன்புறுத்தப்படும்போதும், என் அன்பை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், உங்களுக்காக நான் என் ஜீவனைக் கொடுத்தேன். உங்கள் கடமைகள் கடுமையானதாகவும், உங்கள் பாரங்கள் தாங்க முடியாத அளவுக்கும் தோன்றும்போது, உங்களுக்காக நான் அவமானத்தை புறந்தள்ளி சிலுவையைச் சுமந்தேன், என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். பரீட்சிக்கும் சோதனையினால் உங்கள் இருதயம் சோர்வடையும்போது, உங்களுக்காக பரிந்துப்பேச உங்கள் மீட்பர் ஜீவிக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

(11) நாம் எந்த நிலையிலிருக்கும்போது, கர்த்தர் தாமாகவே தம்முடைய கிருபாவரத்தை விளங்கப்பண்ணினார்?

*நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5: 8)*

நாம் முதலில் அவரை நேசிக்கவில்லை, கிறிஸ்து நம்மை முதலில் நேசித்தார்; ஆனால் “நாம் பாவிகளாக இருந்தபோது” அவர் நமக்காக மரித்தார். நாம் அவரை கைவிட்டு சென்றதின் அடிப்படையில் நம்மை நடத்துவதில்லை. நம்முடைய பாவங்கள் கண்டிப்பதற்கு தகுதியாக இருந்தாலும், அவர் நம்மை கண்டிப்பதில்லை. வருஷந்தோறும் அவர் நம்முடைய பலவீனம் மற்றும் அறியாமை ஆகியவற்றோடும், நம்முடைய நன்றியற்ற உணர்வு மற்றும் வழிமாறிப்போகுதல் ஆகியவற்றையும் தாங்கிக்கொள்கிறார். நம்முடைய அலைந்து திரிதல்கள், இருதயத்தின் கடினத்தன்மை, மற்றும் அவருடைய பரிசுத்த வார்த்தையை நாம் புறக்கணித்தாலும், அவருடைய கரம் இன்னும் நீட்டப்பட்டுள்ளது.

கிருபை என்பது தகுதியற்ற மனிதர்களை நோக்கி செலுத்தப்பட்ட தேவனுடைய ஒரு பண்பு. நாம் அதைத் தேடவில்லை, ஆனால் அது நம்மைத் தேடி அனுப்பப்பட்டது. தேவன் தம்முடைய கிருபையை நமக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறார், நாம் தகுதியானவர்கள் என்பதால் அல்ல, மாறாக நாம் முற்றிலும் தகுதியற்றவர்கள் என்பதால் தம்முடைய கிருபையை அளிக்கிறார். அவருடைய இரக்கத்தை கோருவதே நம்முடைய ஒரே பெரும் தேவை.

(12) சிலுவையின் அற்புதமான வரம் சுவிசேஷத்தில் பிரசங்கிக்கப்படும்போது, யாருடைய கவனத்தை அது ஈர்க்கிறது?

*... பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள். (1 பேதுரு 1:12)*

இரக்கமுள்ள தெய்வீக-மனித மீட்பரானவருடைய மனிதனை பாவத்தின் தந்திரத்திலிருந்து மீட்டுக்கொள்ளும் மீட்பின் திட்டமானது, மனிதர்கள் அல்லது தேவதூதர்களின் புரிதலுக்கு அப்பாற்பட்டது. இது உண்மையில் ஒரு இரகசியம், மிக உயர்ந்தது, மிகவும் பிரம்மாண்டமானது, அதைப் புரிந்துகொள்வோம் என்று நாம் ஒருபோதும் முழுமையாக நம்பிக்கை கொள்ள முடியாது.
வீழ்ச்சியடைந்த

மனிதனுக்காக கிறிஸ்து செய்த தியாகமானது ஈடு இணையற்றது. இது நாம் தியானிக்கக்கூடிய மிக உயர்ந்த, பரிசுத்தமான கருப்பொருள். தேவனுடைய கிருபையால் புத்தித் தெளிவுப் பெற்ற ஒவ்வொரு இருதயமும் மீட்பவரின் நித்தியமான தியாகத்திற்காக விவரிக்க முடியாத நன்றியுணர்வோடும், ஆராதனையோடும் பணிந்துக்கொள்ள வேண்டும்.

*தேவனுடைய அன்பின் உயரத்தையும் ஆழத்தையும் அறிந்தவராகிய கிறிஸ்து, அவருடைய அன்பை நமக்கு*

வெளிப்படுத்த நம்மில் ஒருவரானார் என்பதற்கு நான் நன்றி கூறுகிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என் மீதுள்ள அன்பினாலும் பரிதாபத்தினாலும் என்னை தொட்டு, முறிந்த நியாயப்பிரமாணத்தின் விலைக் கிரயத்தைச் செலுத்தி, என் குற்றத்தையும் அவமானத்தையும் அவர் மீது எடுத்துக்கொண்டு, என் துயரத்தின் ஆழத்திலிருந்து என்னை மீட்டுக்கொண்டதற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

கிறிஸ்துவின் அன்பின் நீரூற்றை நான் பார்த்து, அதன் ஆழத்தை நான் உற்று நோக்கும்போது அது ஆழமானதாகவும் மற்றும் விரிவடைந்ததாகவும் இருக்கிறது. அவருடைய அன்பின் எல்லையற்ற, கரையற்ற கடலைப் புரிந்துகொள்வது சாத்தியமில்லை என்பதை நான் உணர ஆரம்பித்துள்ளேன். தாவீது ராஜாவைப் போலவே, "இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது" என்று நான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

சிலுவையில் எனக்கு நிரூபிக்கப்பட்டபடி கிறிஸ்துவின் அன்பை ஏற்றுக்கொள்வதை

*சாத்தியமாக்கும் மனந்திரும்புதலின் அற்புதமான வரத்திற்கு நான் மிகவும் நன்றி கூறுகிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமும், அவர் அளிக்கும் வரத்தின் மூலமும் அவருடைய வரத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன், அவருடைய சித்தத்தின்படி வழிநடத்தப்பட என் வாழ்வை அர்ப்பணிக்கிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*



## பாடம் 11

## கிறிஸ்துவினுடைய சமாதானத்தின் வாக்குத்தத்தம்

(1) கிறிஸ்துவினுடைய பெரிதான அன்பின் காரணமாக, தம்மை பின்பற்றுகிறவர்களுக்கு நித்திய காலமாக கொடுக்கப் போகிற

அற்புதமான நம்பிக்கையின்
வாக்குத்தத்தம் எது?

*நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். (யோவான் 14: 3)*

கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின் வாக்குத்தத்தமானது அவருடைய சீஷர்களின் மனதில் எப்போதும் பசுமையாக இருக்க வேண்டும். பரலோகத்திற்கு ஏறிப்போனவராக அவர்கள் கண்ட அதே இயேசு, மீண்டும் வருவார், வந்து இந்த உலகத்தில் அவருக்கு சேவை செய்ய தங்களை ஒப்புக்கொடுத்தவர்களை தம்மிடம் சேர்த்துக் கொள்வார். அவர்களிடம், “இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” என்று சொன்ன அதே குரல், பரலோக ராஜ்யத்தில் அவருடைய சமுகத்திற்கு அவர்களை வரவேற்கும்படி கட்டளையிடும்.

அவரை நேசித்தவர்களை, அவருக்காக காத்திருந்தவர்களை, அவர் மகிமையுடனும் கனத்துடனும் அழியாமையுடனும் முடிசூட்டுவார். மரித்த நீதிமான்கள் தங்கள் கல்லறைகளிலிருந்து வெளியே வருவார்கள், உயிருடன் இருப்பவர்கள் கர்த்தரை வானத்தில் சந்திக்க அவர்களுடன் இணைந்துக்கொள்வார்கள். அவர்களிடம், உங்கள் போராட்டம் நிறைவேறியது. “வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல்

உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்.” (மத்தேயு 25; 34) என்ற இயேசுவின் சத்தத்தை அவர்கள் கேட்பார்கள், இந்த வார்த்தைகள் அவர்களுடைய மாம்ச காதுகளில் விழுந்த எந்த இசையையும் விட இனிமையானது.

(2) நம்முடைய தேற்றரவாளனாக இருக்கும்படியும் தாம் மீண்டும் வரும்வரை நம்மோடு தொடர்ந்து வாசம் செய்யவும் அனுப்புவதாக யாரை கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணினார்?

*நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். (யோவான் 14:16)*

கிறிஸ்து தம்முடைய நாமத்தினால் அனுப்புவதாக வாக்களித்த தேற்றரவாளன் நம்முடன் இருக்கிறார். தேவனுடைய நகரத்திற்கு கொண்டுச்செல்லும் வழியில், அவரை நம்புகிறவர்கள் மேற்கொள்ள முடியாத சிரமங்கள் எதுவும் இருக்காது. அவர்கள் தப்பித்துக்கொள்ளாத ஆபத்துகள் எதுவும் இல்லை. அவர் தீர்வு ஏற்படுத்தாத ஒரு துக்கமும் இல்லை, ஒரு குறையும் இல்லை, மனித பலவீனமும் இல்லை,

சோர்வாலும் மற்றும் விரக்தியாலும் யாரும் தங்களை அழித்துக்கொள்ள தேவையில்லை. “உன்னுடைய நிலைமை நம்பிக்கையற்றது, நீ மீட்கப்பட முடியாதவன்.” என்ற கொடூரமான ஆலோசனையுடன் சாத்தான் உங்களிடம்

வரக்கூடும். ” ஆனால் கிறிஸ்துவில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. நம்முடைய சொந்த பலத்தினால் மேற்கொள்ளும்படிக்கு தேவன் கூறவில்லை. தம் அருகில் வரும்படி அவர் நம்மை அழைக்கிறார். ஆத்துமாவையும் உடலையும் கஷ்டத்திற்குள்ளாக்கும் எந்த சிரமங்களுக்குள்ளாக நேர்ந்தாலும், அவர் நம்மை விடுவிக்க காத்திருக்கிறார்.

(3) தேற்றரவாளன் (பரிசுத்த ஆவியானவர்) யாருக்கு முழுமையான அளவில் கொடுக்கப்படுவார்?

*இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள். (அப்போஸ்தலர் 5:32)*

கிறிஸ்து, பரிசுத்த ஆவியின் வரத்தை தம்முடைய சபைக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார், மேலும் அந்த வாக்குத்தத்தம் தொடக்கக்கால சீஷர்களுக்கு எப்படி பொருத்தமாக இருந்ததோ அப்படியே நமக்கும் பொருத்தமானதாக இருக்கிறது. ஆனால் மற்ற எல்லா வாக்குத்தத்தங்களை போலவே, இது நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை உரிமைக்கோருவதாக நம்பும் மற்றும் கூறும் பலர் உள்ளனர்; அவர்கள் கிறிஸ்துவைப் பற்றியும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும் பேசுகிறார்கள், ஆனால் எந்த நன்மையும் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. ஏனெனில் தெய்வீக முகவர்களால் வழிநடத்தப்படுவதற்கும் கட்டுப்படுத்தப்படுவதற்கும் அவர்கள் தங்கள் ஆத்துமாவை

அர்ப்பணிக்கவில்லை. நாம் பரிசுத்த ஆவியானவரைப் பயன்படுத்த முடியாது. மாறாக ஆவியானாவர் தான் நம்மைப் பயன்படுத்த வேண்டும். ஆவியானவர் மூலமாக, “தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்”. பிலிப்பியர் 2:13. ஆனால் பலர் இதற்கு அடிபணிய விரும்பாமல். தாங்களே நிர்வகித்துக்கொள்கிறார்கள். இதனால்தான் அவர்கள் பரலோக வரங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. தேவனுக்காக தாழ்மையுடன் காத்திருப்பவர்களுக்கு மட்டுமே, அவருடைய வழிகாட்டுதலுக்கும் கிருபைக்கும் செவிக்கொடுப்பவர்களுக்கு ஆவியானவர் கொடுக்கப்படுகிறார். தேவன் அவர்களுடைய கோரிக்கை மற்றும் வரவேற்புக்காக காத்திருக்கிறார். விசுவாசத்தால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இந்த ஆசீர்வாதமானது, மற்ற எல்லா ஆசீர்வாதங்களையும் அதன் சங்கிலி தொடரில் கொண்டு வருகிறது. இது கிறிஸ்துவினுடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி வழங்கப்படுகிறது, மேலும் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் அது பெற்றுக்கொள்ளும் திறனுக்கு ஏற்ப வழங்க அவர் ஆயத்தமாக இருக்கிறார்.

சுயத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, பரிசுத்த ஆவியானவர் தங்களது இருதயத்தின் மீது வேலை செய்வதற்கு இடமளித்து, தேவனுக்கு முற்றிலும் பரிசுத்தப்படுத்தப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து வருபவரை பயன்படுத்துவதற்கு வரம்பு ஏதும் கிடையாது.

(4) நம்முடைய வாழ்க்கையில் ஒரு சிறந்த விருந்தினராக நாம் அவரை வரவேற்றால், கிறிஸ்து நமக்கு எந்த விசேஷ வரத்தை வழங்குவதாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்?

*சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.*
*(யோவான் 14:27)*

கிறிஸ்துவை, ஆத்துமாவில் ஒரு நிலையான விருந்தினராக நீங்கள் வைத்துக்கொள்ளும்போது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். பூமியின் மீதான இரட்சகரின் வாழ்க்கையானது, மோதல்களுக்கு மத்தியில் வாழ்ந்தாலும், சமாதானமான வாழ்க்கையாக இருந்தது. கோபமடைந்த சத்துருக்கள் அவரை விடாமல் பின்தொடர்ந்தபோது, “என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை” என்று கூறினார். யோவான் 8:29. மனிதனுடைய அல்லது சாத்தானுடைய கோபத்தின் எந்த புயலும் தேவனுடனான அந்த முழுமையான ஒற்றுமையின் சமாதானத்தைத் தொந்தரவு செய்ய முடியாது. “சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய

சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்". "என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்". யோவான் 14:27; மத்தேயு 11:29. தேவனுடைய மகிமைக்காகவும், மனிதர்களின் மேம்பாட்டிற்காகவும் ஊழியத்தின் நுகத்தை என்னுடன் தாங்கிக் கொள்ளுங்கள், நீங்கள் நுகத்தை எளிதாகவும் சுமை இலகுவானதாகவும் காண்பீர்கள்.

(5) இந்த வசனத்தில் கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்தொடர்ந்து, நம்முடைய சமாதானத்தை அழிக்கிற சுயமாக இருப்பதைப் பற்றி நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்ன?

*நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது. (யோவான் 5:30)*

சுய -அன்பு தான் நம் சமாதானத்தை அழிக்கிறது.
சுயம் உயிருடன் இருக்கும்போது, அதைத் துன்புறுத்தப்படுவதிலிருந்தும் அவமதிக்கப்படுவதிலிருந்தும் நாம் தொடர்ந்து பாதுகாக்க ஆயத்தமாக இருக்கிறோம்; ஆனால் நாம் மரித்துவிட்டால், நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுடன் தேவனோடு மறைந்திருக்கும்போது, நாம் எந்தவிதமான பார்வைகளையும் அல்லது காட்சிகளையும் இருதயத்திற்கு

எடுத்துக்கொள்ள மாட்டோம். நாம் நிந்தித்தலுக்கு காது கேளாதவர்களாகவும், அவதூறு செய்வதற்கும் அவமதிப்பதற்கும் குருடர்களாக இருப்போம். “அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோகும், அறிவானாலும் ஒழிந்துபோம்.” 1 கொரிந்தியர் 13: 4-8

பூமிக்குரிய மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்ட மகிழ்ச்சியானது மாறுபடும் சூழ்நிலைகளால் மாற்றக்கூடியது; ஆனால் கிறிஸ்துவின் சமாதானம் ஒரு நிலையாக குடியிருக்க கூடியது. இது வாழ்க்கையின் எந்த சூழ்நிலையையும், உலகப் பொருட்களின் எண்ணிக்கையையும் அல்லது பூமிக்குரிய நண்பர்களின் எண்ணிக்கையையும் சார்ந்தது அல்ல. கிறிஸ்து ஜீவ தண்ணீரின் நீரூற்று, அவரிடமிருந்து பெறப்பட்ட மகிழ்ச்சி ஒருபோதும் தோல்வியடையாது.

(6) பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வதாக தேவன் யாருக்கு வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார்?

*உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். (ஏசாயா 26: 3)*

இயேசு கிறிஸ்துவின் மதத்தை (உறவை) அனுபவிக்கும் ஆண்களும் பெண்களும் கவலைப்படுகிறவர்களாகவும், சமாதானமற்றவர்களாகவும், அதிருப்தியாளர்களாகவும், மாறக்கூடியவர்களாகவும் இருக்க மாட்டார்கள்; இருதயத்தில் கிறிஸ்துவின் சமாதானமானது அவர்களுடைய பண்புகளுக்கு உறுதியைக் கொடுக்கும். உங்கள் ஆத்துமாவின் சமாதானத்தையும் உங்கள் மன அமைதியையும் மற்றும் நீங்கள் இப்போது ஏற்றுக்கொண்ட உறுதிமொழியையும் எதுவும் கொள்ளையடித்து விட கூடாது. ஒவ்வொரு வாக்குத்தத்தமும் பொருத்தமானது; கர்த்தருடைய பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்குவதற்கான நிபந்தனையின் அடிப்படையில் அவை அனைத்தும் உங்களுடையவை. ஞானமாக தோன்றுகிறதான உங்கள் வழிகளை முழுவதுமாக அர்ப்பணித்தல் மற்றும் கிறிஸ்துவின் வழிகளை எடுத்துக்கொள்வது போன்றவைகள் அவருடைய அன்பிலுள்ள சரியான இளைப்பாறுதலின் ரகசியமாகும்.

கிறிஸ்துவின் சேவைக்கு பரிசுத்தப்படுத்தப்பட்ட ஆத்துமாவுக்கு உலகம் கொடுக்கவோ பறிக்கவோ முடியாத ஒரு சமாதானம் இருக்கிறது.

(7) நாம் பரலோக விஷயங்களில் குடியிருந்தால், விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவை நம் இருதயத்தில்

குடியிருக்க அனுமதித்தால், அதன் விளைவு என்னவாக இருக்கும்?

*விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, (எபேசியர் 3:17)*

தெய்வீகத்தின் முழுமையும் அவரிடத்தில் வாசமாக இருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். கிறிஸ்து, விசுவாசத்தினாலே நம் இருதயங்களில் நிலைத்திருந்தால், பரிசுத்தமான, சமாதானமான, மற்றும் கறைப்படாத. அவருடைய வாழ்க்கையின் முறையைப் பார்ப்பதன் மூலம், இயேசுவைப் போல இருக்க முயற்சிப்போம். நம்முடைய குணத்தில் கிறிஸ்துவை வெளிப்படுத்துவோம். நாம் ஒளியைப் பெற்று உறிஞ்சுவதோடு மட்டுமல்லாமல் அதை எங்கும் பரப்பவும் செய்வோம். இயேசு நமக்கு என்னவாக இருக்கிறார் என்பதை பற்றிய தெளிவான மற்றும் தனித்துவமான கருத்துக்கள் நமக்குள் இருக்கும். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் இருந்த சமச்சீர்மை, அன்பு மற்றும் இரக்கம் ஆகியவை நம் வாழ்வில் பிரகாசிக்கும்.

… விசுவாசத்தினால் இயேசு கிறிஸ்து இருதயத்தில் நிலைத்திருக்கும்போது, அவர் நமக்குக் கொடுத்த படிப்பினைகள் நடைமுறைப்படுத்தப்படும்.
சுயம் குறைந்து, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய உயர்ந்த கருத்துக்கள் நமக்குள் இருக்கும். நம்முடைய பாசங்கள் இயேசுவை மையமாகக் கொண்டிருக்கும், நம்முடைய எண்ணங்கள் பரலோக காரியங்கள் மீது வலுவாக ஈர்க்கப்படும். கிறிஸ்து பெருகுவார், நாம் சிறுகுவோம்.

பரலோக விஷயங்களில் வாழ மனம் பயிற்சியளிக்கப்பட வேண்டும். இயேசு கிறிஸ்துவின் அருமையை உணர்ந்ததன் விளைவாக பணிவு வரவேண்டும். கிறிஸ்துவின் சிறப்பியல்புகளின் அடிப்படையில், காயப்படுத்துகிற பாவத்தின் பண்பைக் காண்போம், விசுவாசத்தினால் இயேசு கிறிஸ்துவின் நீதியைப் புரிந்துகொள்வோம். . இயேசுவில் வாசம் செய்யும் நல்லொழுக்கங்களை நாம் வளர்ப்போம், அவருடைய குணத்தின் பிரதிநிதித்துவத்தை மற்றவர்களுக்கு நாம் பிரதிபலிப்போம். நாம் கல்வாரியின் சிலுவையைப் பார்க்கும்போது, நம்மை உயர்த்திக் கொள்ள மாட்டோம், மாறாக நம் தகுதியற்ற தன்மையையும், நமது இரட்சிப்புக்கும், பரலோகத்திற்கும், கொடுக்கப்பட்ட விலைக்கிரயம் எவ்வளவு என்பதையும் தொடர்ந்து கவனிப்போம்; கிறிஸ்துவின், இணையற்ற அன்பை நாம் புரிந்துகொள்வோம்.

(8) பரிசுத்த ஆவியின் மூலம், குற்றவாளி என்று உணர்த்தப்படும்போது, புரிந்துகொள்ள முடியாத வரம்புகளை புரிந்துகொள்ளவும், கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ளவும் நாடும்போது, நாம் எதனால் நிரப்பப்படுவோம்?

*சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம்பண்ண*

*வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். (எபேசியர் 3: 18-19)*

மனித இருதயங்களின் வழியாக ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு வந்துள்ள அனைத்து தந்தைவழி அன்பும், மனிதர்களின் ஆத்துமாக்களில் திறக்கப்பட்டிருக்கும் கனிவின் நீரூற்றுகள் அனைத்தும் நித்தியமான, திகட்டாத தேவனுடைய அன்புடன் ஒப்பிடும்போது எல்லையற்ற கடலில் அது ஒரு சிறிய துளியாகவே இருக்கின்றன. நாவு அதை உச்சரிக்க முடியாது; பேனா அதை சித்தரிக்க முடியாது. உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் நீங்கள் அதை தியானிக்கலாம்; வேதவசனங்களைப் புரிந்துகொள்ள நீங்கள் அதை விடாமுயற்சியுடன் தேடலாம்; பரலோகத் தகப்பனின் அன்பையும் இரக்கத்தையும் புரிந்துகொள்ளும் முயற்சியில், தேவன் உங்களுக்குக் கொடுத்த ஒவ்வொரு ஆற்றலையும் திறனையும் நீங்கள் வரவழைக்கலாம்; ஆனால் அதற்கு பின்னும் ஒரு எல்லையற்ற நித்தியம் உள்ளது. யுகங்களுக்கான அன்பை நீங்கள் படிக்கலாம்; ஆயினும், தம்முடைய குமாரனை உலகத்திற்காக மரிக்கும்படி கொடுத்ததிலுள்ள தேவனுடைய அன்பின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரம் ஆகியவற்றை நீங்கள் ஒருபோதும் முழுமையாக புரிந்து கொள்ள முடியாது. நித்தியம் தன்னை முழுமையாக வெளிப்படுத்த முடியாது. ஆயினும், நாம் வேதத்தைப் படித்து, கிறிஸ்துவின் வாழ்க்கையையும் மீட்பின் திட்டத்தையும் தியானிக்கும்போது, இந்த சிறந்த

கருப்பொருள்கள் மென்மேலும் நம் புரிதலுக்கான கதவை திறக்கும்.

(9) ஜீவ அப்பம், மற்றும் ஜீவ தண்ணீராகிய கிறிஸ்துவை நாம் தேடினால், அவர் எந்த வாக்குத்தத்ததை நமக்கு தருகிறார்?

*இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான். (யோவான் 6:35).*

ஆத்துமாவின் பசியையும் தாகத்தையும் திருப்திப்படுத்தும் எதையும் எந்த மனித முகவரும் வழங்க முடியாது. ஆனால் இயேசு, "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்". "ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்".என்று இயேசு கூறுகிறார்.
வெளிப்படுத்தல் 3:20; யோவான் 6:35.

நம் உடல் வலிமையைத் தக்கவைக்க நமக்கு உணவு தேவைப்படுவது போல, ஆவிக்குரிய வாழ்வை நிலைநிறுத்துவதற்கும், தேவனுடைய பணிகளை செய்ய வலிமை பெறுவதற்கும், பரலோகத்திலிருந்து வந்த அப்பமாகிய கிறிஸ்து அவசியம். உயிர் மற்றும் வீரியத்தைத் தக்கவைக்கும் ஊட்டச்சத்தை உடல் தொடர்ந்து பெற்று

வருவதுப்போல, ஆத்துமா தொடர்ந்து கிறிஸ்துவோடு ஐக்கியமாக இருக்க வேண்டும், அவருக்குக் கீழ்ப்படிந்து அவரை முழுமையாக சார்ந்து இருக்க வேண்டும்.

சோர்வுற்ற பயணி பாலைவனத்தில் வசந்தத்தைத் தேடுகையில், அதைக் கண்டுபிடித்து, அவனது பட்சிக்கும் தாகத்தைத் தணிக்கிறான், அதை போன்றது தான் கிறிஸ்தவ தாகமும், பரிசுத்தமான ஜீவ தண்ணீரை பெற வேண்டும் அந்த தண்ணீர் தரும் கிறிஸ்துவே ஜீவ நீரூற்று.

(10) வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்கள் தம்மிடம் வரும் பட்சத்தில் அவர்களுக்கு என்ன தருவதாக கிறிஸ்து வாக்குப் பண்ணியிருக்கிறார்?

*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்தேயு 11:28)*

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிற ஆதாமின் ஒவ்வொரு மகன்களையும் மகள்களையும் தம்மிடம் வந்து அவற்றை வைத்துவிடும்படி இயேசு அழைக்கிறார். ஆனால் இந்த அழைப்பைக் கேட்கும் பலர், இளைப்பாறுவதற்காக பெருமூச்சு விடுகையில், முரட்டுத்தனமான பாதையில் தொடர்ந்துச் சென்று, தங்கள் பாரங்களை இருதயத்திற்கு நெருக்கமாக அணைத்துக்கொள்கிறார்கள். இயேசு அவர்களை நேசிக்கிறார், அவர்களையும், அவர்களுடைய பாரங்களையும் தம்முடைய பலமான கரங்களில் சுமந்துக்கொள்ள

ஏங்குகிறார். சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் கொள்ளையடிக்கும் அச்சங்களையும், நிச்சயமற்ற தன்மைகளையும் அவர் அகற்றுவார், ஆனால் அவர்கள் முதலில் அவரிடம் வந்து, அவர்களுடைய இருதயத்தின் ரகசிய துயரங்களை அவரிடம் சொல்ல வேண்டும். அவர்கள் அவர் மீது வைத்திருக்கும் அன்பிற்கு ஆதாரமாக அவர் மீது நம்பிக்கைக் கொள்ளும்படி எதிர்பார்த்து, அழைப்பு விடுக்கிறார். நமக்கு அருளப்படும் எல்லா எல்லா ஐசுவரிங்களை விட, தாழ்மையின் வரம் மற்றும் நம்பிக்கையான இருதயம் ஆகியவை அவருக்கு மிகவும் விலைமதிப்பற்றது. ஒரு குழந்தை தனது பெற்றோரிடம் வருவதுப்போல எளிமையுடனும் நம்பிக்கையுடனும் அவர் அவரிடம் வந்தால், அவருடைய கரங்களின் தெய்வீக தொடுதல் அவர்களின் பாரங்களிலிருந்து அவர்களை விடுவிக்கும்.

நம்முடைய இரக்கமுள்ள இரட்சகராகிய இயேசு வழியும் சத்தியமும், ஜீவனுமானவர். அவருடைய இரக்கமுள்ள தயவை நாம் ஏற்றுக்கொள்ளாமல், அவருடைய வாக்குத்தத்தங்களின் மேல் விசுவாசம் வைக்காமல், வாழ்க்கை முறையை ஏன் மிகவும் கடினமாக்கிக்கொள்ள வேண்டும்? … கிறிஸ்துவின் வழிகள் இனிமையானவை, அவருடைய பாதைகள் அனைத்தும் சமாதானம். நாம் பூமியில் பொக்கிஷங்களைப் சேர்த்துவைப்பதற்காக நம் கால்களுக்கு கடினமான பாதைகளை உருவாக்கி, அதிக பாரங்களை சுமந்துக்கொண்டிருந்தால், இப்போதே

நாம் மனம் மாறி, இயேசு உருவாக்கின பாதையைப் பின்பற்ற கடவோம்.

(11) கிறிஸ்துவின் பாதுகாப்பிற்குள் தங்கள் ஆத்துமாக்களை ஒப்படைப்பவர்களுக்கு அவர் எதை வாக்குப் பண்ணியிருக்கிறார்?

*உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.*
*(ஏசாயா 26: 3-4)*

இந்த பூமியிலும் பரலோகம் ஆரம்பிக்கப்பட உள்ளது. {NP} கிறிஸ்துவினுடைய வார்த்தையின்படியே அவரை ஏற்றுக்கொண்டு, தங்கள் ஆத்துமாக்களை அவருடைய பராமரிப்பில் ஒப்படைப்பவர்கள், தங்களுடைய வாழ்க்கையை அவருடைய கட்டளைக்கு ஒப்படைப்பவர்கள், சமாதானத்தையும் நிறையமைதியையும் காண்டடைவார்கள். இயேசு தம்முடைய பிரசன்னத்தால் அவர்களை மகிழ்விக்கும்போது உலகில் எதுவுமே அவர்களை சோகப்படுத்த முடியாது. சரியான ஒத்திசைவிலே தான் சரியான இளைப்பாறுதல் உள்ளது. “உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்”. என்று கர்த்தர் கூறுகிறார். ஏசாயா 26: 3. நம் வாழ்க்கை சிக்கலாகத் தோன்றலாம்; ஆனால் ஞானமுள்ள தலைமை பணயாளருக்கு

நாம் நம்மை அர்ப்பணிக்கும்போது, அவர் நமது தேவனுடைய பரதீசுவில் நாம் பெறப்போகிறதான கிறிஸ்துவின் மகிமைக்குரிய ஜீவன் மற்றும் பண்பை வெளிப்படுத்துவார். புதுப்பிக்கப்பட்ட மனித இனம் அவருடன் வெள்ளை நிறத்தில் நடக்கும், ஏனென்றால் அவர்கள் பாத்திரவான்கள்.

இயேசுவின் மூலம், நாம் இளைப்பாறுகிறோம், பரலோகம் இங்கே தொடங்குகிறது. “வந்து, என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்” என்ற அவருடைய அழைப்பிற்கு நாம் பதிலளிக்கிறோம், இப்படி வரும்போது நித்திய ஜீவனைத் தொடங்குகிறோம். பரலோகமானது கிறிஸ்துவின் மூலமாக தேவனிடம் ஒரு இடைவிடாத அணுகுமுறையாக இருக்கிறது. நாம் எவ்வளவாக ஆனந்த பரலோகத்தில் இருக்கிறோமோ அவ்வளவு அதிகமான மகிமை நமக்குத் திறக்கப்படும்; மேலும் தேவனைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறோமோ, அவ்வளவு தீவிரமாக நம் மகிழ்ச்சியும் இருக்கும்.

*இராஜ்ஜியத்திலிருப்பதற்கு தெரிவுச் செய்யப்பட்டவர்கள் அங்கேயிருக்கும்படிக்கு, கிறிஸ்து ஒரு நாள் விரைவில் நம்மை வீட்டிற்கு வரவேற்பார் என்ற வாக்குத்தத்தத்திற்கு நான் நன்றி கூறுகிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*என்னுடன் தங்கியிருந்து என்னை தேவனுடைய நகரத்திற்கு அழைத்துச் செல்ல கிறிஸ்து தேற்றரவாளனை அனுப்பியதற்கு நான் மிகவும்*

நன்றியுள்ளவனாக இருக்கிறேன். கிறிஸ்துவின் கிருபையால், நான் ஒருநாள் உள்ளே நுழையும்படி விசுவாசமாக இருப்பதற்காக ஜெபிக்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொள்வதும், மற்ற எல்லா ஆசீர்வாதங்களையும் அதன் சங்கிலி தொடரில் கொண்டு வருவதும், என் வாழ்க்கையை தேவனுக்கு முழுமையாக பரிசுத்தப்படுத்துவதும் எனது முடிவாகும்

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

கிறிஸ்து எனக்கு வாக்குப்பண்ணியிருக்கும் சமாதானத்தை நான் விரும்புகிறேன், எல்லா சமாதானத்தையும் அழிக்கிற சுயத்தை ஒப்படைக்கவும் மற்றும் கிறிஸ்துவின் சேவைக்காக என்னை அர்ப்பணிக்கவும் தெரிவுச்செய்கிறேன், இது உலகம் கொடுக்க முடியாத அல்லது எடுத்துச் செல்ல முடியாத சமாதானத்தைத் தருகிறது.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை



## பாடம் 12

## கிறிஸ்துவில் நம்முடைய மதிப்பு

**(1) கிறிஸ்து நம்மை மிக உயர்ந்த விலைக்கிரயத்தினால் மீட்டுக்கொண்டு வந்தப்படியால், அவருக்கு மகிமையை கொண்டுவரும்படி நாம் என்ன செய்ய வேண்டும்?**

***கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (1 கொரிந்தியர் 6:20)***

**மனிதர்கள் இன்றைக்கு இங்கு தான் நிற்கிறார்கள். கிறிஸ்து தம்முடைய ஜீவனால் நம்மை விலைக்கு வாங்கினார், நாம் அவருக்கு சொந்தமானவர்கள். நம்முடைய எல்லா சரீர, மன மற்றும் ஆவிக்கரிய ஆற்றல்களும் அவருக்கே உரியவை; அவருக்கு சொந்தமானவற்றை**

அவரிடமிருந்து தடுத்து நிறுத்துவது அவரை கொள்ளையடிப்பதாகும்.

கிறிஸ்து நம் மீது வைத்திருக்கும் மதிப்பீட்டின்படி - நாம் புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு - நம்முடைய ஆத்துமாக்களை கர்த்தர் மதிப்பிடுவார் ... மனிதனை நித்திய அழிவிலிருந்து மீட்பதற்காக இயேசு மரித்தார். எனவே நாம் கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்களாய் நடந்துக்கொள்ள வேண்டும்." "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் நீங்கள் உங்களுக்கு சொந்தமல்ல." (1 கொரி. 6:19, 20). நம்முடைய எல்லா சரீர, மன மற்றும் ஆவிக்கரிய ஆற்றல்களும் கர்த்தருக்குரியவை; நம்முடைய நேரம் அவருக்குரியது. அவருடைய சேவையைச் செய்வதற்கான மிகச் சிறந்த நிலையில் நாம் நம்மை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும், கிறிஸ்துவுடன் தொடர்ந்து தொடர்புகொண்டு, நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாக இருக்கும்படியாக நமக்காக செய்த விலையுயர்ந்த பலியை தினமும் கருத்தில் கொள்ள வேண்டும்.

(2) பின்பற்றுகிறவர்களுக்கு தொடர்புடைய தேவனுடைய அன்பை விவரிக்க இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இரு உருவகங்கள் யாது?

*வாலிபன் கன்னிகையை விவாகம்பண்ணுவதுபோல, உன் மக்கள் உன்னை விவாகம்பண்ணுவார்கள்; மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பதுபோல, உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்.*

*(ஏசாயா 62: 5)*

**வேதத்தில், கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையிலான உறவின் பரிசுத்தமான மற்றும் நீடித்த தன்மை திருமண ஐக்கியத்தால் குறிக்கப்படுகிறது. கர்த்தர் தம்முடைய ஜனங்களை ஒரு பரிசுத்தமான உடன்படிக்கையால் இணைத்துக்கொண்டார், தம்மை அவர்களுடைய தேவன் என்று வாக்களித்தார், மேலும் அவர்கள் அவருடையவர்களாக மட்டும் இருப்பார்கள் என்று உறுதியளித்தனர். "நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்". ஓசியா 2:19, என்று அவர் அறிவிக்கிறார். மறுபடியுமாக "நான் உங்கள் நாயகர்" எரேமியா 3:14, என்று கூறுகிறார். பவுல் புதிய ஏற்பாட்டில் அதே உருவகத்தைப் பயன்படுத்துகிறார்: "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.." 2 கொரிந்தியர் 11: 2.**

**(3) இயேசுவை நம்முடைய வாழ்வின் கர்த்தராக நாம் அனுமதித்தால்,"நம்மை அன்பு கூர்ந்தவருக்குள்" என்னவாக மாறுவோம் என்று வேத வசனங்கள் கூறுகின்றன?**

***இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.***

*(ரோமர் 8:37)*

நம்முடைய மீட்பின் கிரயம் நம் இரட்சகரால் செலுத்தப்பட்டுள்ளது. யாரும் சாத்தானால் அடிமைப்படுத்தப்பட வேண்டியதில்லை. நம்முடைய சர்வ வல்லமையுள்ள உதவியாளராக கிறிஸ்து நம் முன் நிற்கிறார். “அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்”. (எபிரேயர். 2:17, 18).

தேவனுடைய குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டவர்கள் அவருடைய ஆவியால் மாற்றப்படுகிறார்கள். சுயத்தின் மீதான ஈடுபாடு மற்றும் சுயத்தின் மீதான உயர்ந்த அன்பு ஆகியவை சுய வெறுப்பாகவும், தேவன் மீது மிகுந்த அன்பாகவும் மாற்றப்படுகின்றன. எந்த ஒரு மனிதனும் பரிசுத்தத்தை ஒரு பிறப்புரிமையாகப் பெறுவதில்லை, அல்லது அவன் வகுக்கும் எந்த முறைகளாலும் தேவனுக்கு விசுவாசமாக மாற முடியாது. “என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது” என்று கிறிஸ்து கூறுகிறார் (யோவான் 15: 5). மனித நீதியானது "அழுக்கான கந்தல்" போன்றது. ஆனால் தேவனால் எல்லாம் கூடும். மீட்பரின் பலத்தால், பலவீனமான, தவறு செய்யும் மனிதன்

அவனைத் தொந்தரவு செய்யும் எல்லா தீமையை மேற்கொள்ளக்கூடும்.

(4) ஆவிக்குரிய இஸ்ரவேலரில் யார் உண்மையான ஆபிரகாமின் சந்ததியாராக கருதப்படுகிறார்கள்?

*நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.*
*(கலாத்தியர் 3:29)*

ஆபிரகாம் "தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது." ஆகையால், விசுவாசமுள்ளவர்கள் மட்டுமே ஆபிரகாமின் புத்திரர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். தேவன் புறஜாதியாரை விசுவாசத்தினாலே நியாயந்தீர்ப்பார் என்று முன்னறிவித்த வேதம், ஆபிரகாமுக்கு முன்பே சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, “உனக்குள், சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்” என்று சொன்னது. எனவே விசுவாசமுள்ளவர்கள் விசுவாசியான ஆபிரகாமோடு ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். காலாத்தியர் 3: 6-9.

யூதர்கள் ஆபிரகாமிலிருந்து வந்தவர்கள் என்று கூறினர், ஆனால் ஆபிரகாமின் செயல்களைச் செய்யத் தவறியதன் மூலம், அவர்கள் அவருடைய உண்மையான பிள்ளைகள் அல்ல என்பதை நிரூபித்தனர். அவருடன் ஆவிக்குரிய ரீதியில் இணக்கமாக இருப்பவர்கள் மட்டுமே உண்மையான வம்சாவளியாகக் கருதப்படுகிறார்கள்.

(5) கர்த்தர் உருவாக்கிய ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாக தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு இரட்சிப்பின் எந்த மூன்று சிறந்த பகுதிகளை கூறுகிறார்?

*இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். (ஏசாயா 43: 1)*

கிறிஸ்துவின் பிள்ளைகளுடனான உறவைப் பற்றி, இஸ்ரேலுக்கு கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தில் ஒரு அழகான விளக்கம் உள்ளது. வறுமையின் காரணமாக ஒரு எபிரேயன் தனது தகப்பன் வழி சுதந்திரத்தை விட்டு விலகி, தன்னை அடிமைத்தனமாக விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது, அவனையும் அவனது சுதந்திரத்தையும் மீட்கும் கடமை நெருங்கிய உறவினருக்கு வழங்கப்பட்டது. லேவியர் 25:25, 47-49; ரூத் 2:20. ஆகிய வசனங்களை பார்க்கவும். ஆகவே, பாவத்தின் மூலம் இழந்த நம்மையும் நம்முடைய சுதந்திரத்தை மீட்டெடுக்கும் வேலை, நமக்கு "நெருங்கியவரான" அவர் மீது விழுந்தது. நம்மை மீட்பதற்காகவே அவர் நம் உறவினர் ஆனார். தந்தை, தாய், சகோதரன், நண்பர் அல்லது காதலனை விட நெருக்கமானவர் நம் இரட்சகராகிய கர்த்தர். பயப்படாதே, " பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்." “நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக

மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்.” என்று அவர் கூறுகிறார் ஏசாயா 43: 1, 4.

கிறிஸ்து தம்முடைய சிங்காசனத்தைச் சுற்றியுள்ள பரலோக ஜீவிகளை நேசிக்கிறார், ஆனால் அவர் நம்மை நேசித்த மிகப்பெரிய அன்பிற்கு என்ன காரணம்? அதை நாம் புரிந்து கொள்ள முடியாது, என்றாலும் அது நம் சொந்த அனுபவத்தில் உண்மையாக இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். மேலும், அவருடன் உறவினராக உறவை நாம் வைத்திருந்தால், நம் கர்த்தருடைய சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் இருப்பவர்களை நாம் எவ்வளவு கனிவாக கருத வேண்டும். நம் தெய்வீக உறவின் கூற்றுகளை நாம் விரைவாக அடையாளம் காண வேண்டாமா? தேவனுடைய குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்ட நாம், நம் தந்தையையும் நம் உறவினர்களையும் மதிக்க வேண்டாமா?

(6) நாம் உண்மையான மனந்திரும்புதலுடன் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால், கிறிஸ்து நமக்கு செய்வார் என்ற எந்த முழு நம்பிக்கையை பெறலாம்?

*நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1யோவான் 1: 9)*

தங்கள் தகுதியற்ற தன்மையை ஒரு நல்லொழுக்கமாக கருதி, பலர் அதை சிந்திக்க அனுமதிக்கிறார்கள். விசுவாசத்தின் முழு உறுதியுடன்

அவர்கள் இயேசுவிடம் வருவதற்கு இது ஒரு தடையாக இருக்கிறது. அவர்கள் தங்களது தகுதியற்ற தன்மையை உணர வேண்டும், இதன் காரணமாக - அவர்கள் செய்த பாவத்தின் காரணமாக அவர்கள் மனந்திரும்பி தங்களைத் தாழ்த்திக் கொண்டால் - அவர்களின் தகுதியும், நீதியுமாகிய இரட்சகரிடம் இணைந்திருக்க வேண்டிய அவசியத்தை உணருவார்கள், அவர்களின் தகுதியற்ற தன்மையானது ஒரு சுய-உண்மை. இயேசு கிறிஸ்துவின் தகுதி என்பது ஒரு உறுதியான விஷயம். சந்தேகத்திற்குரிய ஒவ்வொரு ஆத்துமாவும் நம்பிக்கையையும் தைரியத்தையும் எடுத்துக் கொள்ளட்டும், ஏனென்றால் அவனுக்கு இரட்சகராக இருக்க தகுதியானவர் ஒருவர் இருக்கிறார். இரட்சிப்பின் ஒரே நம்பிக்கையானது அவனிடம் இல்லாத ஒரு தகுதியாகிய விசுவாசத்தை வைத்திருப்பதாகும், அது நம் நீதியான இயேசு கிறிஸ்துவினால் வழங்கப்படுகிறது

(7) நாம் பாவிகளாக நம்முடைய மகிமையின் நம்பிக்கையையும்,சுயத்திற்கு மரித்தலையும் உணர்ந்தால், அப்போஸ்தலனாகிய பவுலைப்போல நாம் எதை அறிவிக்க கூடும்?

*கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். (கலாத்தியர் 2:20)*

விலையேறப்பெற்ற இரட்சகராகிய கிறிஸ்து, கிறிஸ்தவர்களுக்கு எல்லாமுமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பரிசுத்த எண்ணமும், ஒவ்வொரு பரிசுத்த ஆசையும், ஒவ்வொரு தெய்வீக நோக்கமும், ஒளி, சத்தியம் மற்றும் ஜீவனுமானவரான அவரிடமிருந்து வருகிறது. கிறிஸ்து தம்முடைய பிரதிநிதிகளாகிய நம்மில் சத்திய ஆவியால் வாழ வேண்டும். ”கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்”. (கலாத்தியர் 2:20) என்று பவுல் கூறுகிறான். அவருடைய அன்பின் வலுவான தூண்டுதலின் கீழ் அவர் இந்த உலகத்தில் நமக்கு பதிலாக நம்முடைய இடத்தைப் பிடித்தார் மற்றும் மனிதகுலத்தின் பிரதிநிதியாக அவரை நடத்த அனைத்து விஷயங்களுக்கும் அதிபதியானவரை கேட்டுக்கொண்டார். அவர் நம்முடைய நலன்களால் தம்மை அடையாளம் காட்டிக் கொண்டார், மரணம் தம்மை அடிப்பதை அவரது மார்பில் தாங்கிக்கொண்டார், மனிதனின் குற்றத்தையும் அதன் தண்டனையையும் தம்மேல் எடுத்துக் கொண்டார், மேலும் மனிதனின் சார்பாக தேவனுக்கு ஒரு முழுமையான பலியானார். இந்த பிராயச்சித்தத்தின் மூலம், அவர் மனிதனுக்கு சரியான நீதியையும் முழு இரட்சிப்பையும் அளிக்க வல்லவராக இருக்கிறார். அவரை ஒரு தனிப்பட்ட

இரட்சகராக விசுவாசிக்கும் எவரும் அழிந்துபோகாமல் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

(8) தேவனுடைய அன்பு நம்மில் பூரணமாக்கப் பட்டிருப்பபதை எது வெளிப்படுத்துகிறது?

*அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம். (1 யோவான் 2: 5)*

கிறிஸ்துவில் நிலைத்திருப்பவன் தேவனுடைய அன்பில் பூரணப்படுத்தப்படுகிறான், அவனுடைய நோக்கங்கள், எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் அவருடைய நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளில் வெளிப்படுத்தப்படுகின்ற தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்கின்றன. கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் மனிதனுடைய இருதயத்தில் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் எந்த விதிமுறைகளுடனும் எந்த போராட்டமும் கிடையாது. கிறிஸ்துவின் ஆவி இருதயத்தில் இருக்கும்போது, கிறிஸ்துவின் தன்மை வெளிப்படும், மேலும் ஆத்திரமூட்டலின்போது கனிவும், சோதனையின்போது பொறுமையும் வெளிப்படும். “பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்.” தேவனுடைய சிறந்த தார்மீகத் தரமான பத்து கட்டளைகளால் மட்டுமே நீதியை

வரையறுக்க முடியும். பண்பை அளக்க வேறு சட்டம் எதுவும் கிடையாது.

(9) கிறிஸ்துவினுடைய சுய தியாகம், சுய வெறுப்பு, மற்றும் மீட்கும் அன்பின் காரணத்தால், நம்முடைய நித்திய மீட்பிற்காக அவர் என்ன செய்தார்?

*வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.*
*(எபிரெயர் 9:12)*

நமது சிறிய உலகம் அண்டசராசரத்தின் பாடம் புத்தகமாக இருக்கிறது. தேவனுடைய அற்புதமான இரக்கத்தின் நோக்கம், அன்பை மீட்பதற்கான இரக்கம், மற்றும் "தேவதூதர்கள் பார்க்க விரும்பும்" கருப்பொருள், ஆகியவைகள் நித்திய யுகங்கள் முழுவதும் அவர்களின் ஆய்வுப்பொருளாக இருக்கும். மீட்கப்பட்டவர்கள் மற்றும் வீழ்ச்சியடையாத ஜீவிகள் ஆகிய இருவரும் கிறிஸ்துவின் சிலுவையில் அவர்களின் அறிவியலையும் அவர்களின் பாடலையும் காண்பார்கள். இயேசுவின் முகத்தில் பிரகாசிக்கும் மகிமை சுய தியாக அன்பின் மகிமை என்பதைக் காணலாம். கல்வாரியிலிருந்து வரும் வெளிச்சத்தில், சுய அன்பை வெறுக்கும் நியாயப்பிரமாணமானது பூமிக்கும் பரலோகத்திற்கும் ஜீவனுக்குரிய சட்டமாக பார்க்க முடியும்; "தன் சுயத்தை தேடாத" அன்பு தேவனுடைய இருதயத்தில் அதன் மூலாதாரத்தைக் கொண்டுள்ளது.

(10) **இரட்சிப்பிற்கான கிறிஸ்துவின் ஆச்சரியமான அன்பை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் எதனால் இரட்சிக்கப்படுவதில்லை, எதனால் இரட்சிக்கப்படுகிறோம்?**

*நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்மமுழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.*
*(தீத்து 3:5)*

**தேவபக்தியற்றவர்களை நீதிமானாக்குகிற அவரை நாம் விசுவாசிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அவருடைய வரமானது நம்முடைய தகுதிக்கு ஏற்ப கொடுக்கப்படுவதல்ல, மாறாக "அவர் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவில் நோக்கங்கொண்ட", அவருடைய சொந்த நோக்கத்தின்படி கொடுக்கப்படுகிறது. எபேசியர் 3:11.**
**"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்." தீத்து 3:5**

**செய்யப்பட்ட உழைப்பின் அளவு அல்லது அதன் மூலம் புலப்படும் முடிவுகளின்படி அல்ல, ஆனால் உற்சாகத்துடன் செய்யப்படும் வேலையானது அதை தேவனால் மதிப்புமிக்கதாக ஆக்குகிறது. பதினொன்றாம் மணிநேரத்தில் திராட்சைத் தோட்டத்திற்கு வந்தவர்கள் வேலை செய்வதற்கான வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்தனர்.**

அவர்களை ஏற்றுக்கொண்டவருக்கு அவர்களின் இருதயங்கள் நன்றியால் நிறைந்திருந்தன; நாள் முடிவில் தோட்டக்காரன் ஒரு முழு நாள் வேலைக்காக அவர்களுக்கு பணம் கொடுத்தபோது, அவர்கள் பெரிதும் ஆச்சரியப்பட்டனர். அவர்களுடைய முதலாளியின் முகத்தில் வெளிப்படுத்தப்பட்ட இரக்கம் அவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. தோட்டக்காரரின் நன்மையையோ அல்லது தங்களுக்கு கிடைத்த தாராளமான பணத்தையோ அவர்கள் ஒருபோதும் மறக்கவில்லை. இவ்வாறு ஒரு பாவி, அவனது தகுதியற்ற தன்மையை அறிந்து, பதினொன்றாம் மணி நேரத்தில் எஜமானரின் திராட்சைத் தோட்டத்திற்குள் நுழைந்தான். அவனுடைய சேவை நேரம் மிகவும் குறுகியதாகத் தெரிகிறது, அவன் வெகுமதிக்கு தகுதியற்றவன் என்று உணர்கிறான்; ஆனால் தேவன் அவனை ஏற்றுக்கொண்டதால் மகிழ்ச்சியடைந்தான். அவன் தாழ்மையுடனும், நம்பிக்கையுடனும் கிறிஸ்துவுடன் ஒரு சக ஊழியனாக இருக்கும் பாக்கியத்திற்கு நன்றியுணர்வுடனும் செயல்பட்டான். இந்த உணர்வின் ஆவியைத் தேவன் கௌரவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்.

நமக்கு கொடுக்கப்படும் கூலியின் அளவு குறித்து எந்த கேள்வியும் இல்லாமல் நாம் அவரிடம் இளைப்பாற வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். ஒருவனுடைய ஆத்துமாவில் கிறிஸ்து நிலைத்திருக்கும்போது, கொடுக்கப்படும் கூலியைப் பற்றிய சிந்தனை உயர்ந்ததாக இருக்காது. நம் சேவையை இயக்கும் நோக்கம் அதுவாக இருக்கக் கூடாது. ஒரு விதமான அர்த்தத்தில்,

கொடுக்கப்படும் கூலியை நாம் மதிக்க வேண்டும் என்பது உண்மைதான். அவருடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை நாம் போற்ற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆனால் அவர் நமக்கு கொடுக்கப்படும் கூலியின் மேல் ஆவலாக இருக்க மாட்டார் அல்லது ஒவ்வொரு கடமைக்கும் நாம் இழப்பீடு பெற வேண்டும் என்று நினைக்க மாட்டார். எல்லா ஆதாயங்களையும் பொருட்படுத்தாமல், சரியானதைச் செய்ய கூலி அல்லது வெகுமதியைப் பெற நாம் அவ்வளவு ஆர்வமாக இருக்கக்கூடாது. தேவனிடமும் சக மனிதர்களிடமும் அன்பு செலுத்துவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

*அவருடைய இரத்தத்தினாலும், விசுவாசத்தினாலே அவருடைய நீதியினாலும், நான் ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகக் கருதப்படுகிறேன், மேலும் ஒரு ஜெயங்கொள்கிறவனாகவும், மேற்கொள்கிறவனாகவும் மாறியதற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*கர்த்தராகிய இயேசு என்னிடம் மிகுந்த அன்பு காட்டியதற்கு நான் நன்றி கூறுகிறேன், போற்றுகிறேன், அது மிகவும் பெரியது, அவர் இறுதி விலைக்கிரயத்தை செலுத்தினார். என் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பது எனது விருப்பம்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*என்னை மிகவும் மதித்ததற்காக என் இருதயம் கிறிஸ்துவின் மீதான அன்பால் நிரம்பியுள்ளது, அவர் தேவனுடைய குடும்பத்தில் என்னை மீட்கும் உறவினர் ஆனார்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*நான் என் மதிப்பில் சந்தேகம் கொள்ளாமல் இருக்கவும், மாறாக கிறிஸ்துவின் தகுதியை விசுவாசிக்கவும், என் நீதியும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து வழங்கிய தகுதியின் மீது விசுவாசம் வைக்கவும் தெரிவுச் செய்கிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*



## பாடம் 13

## தேவனுடைய அன்பில் நிலைத்திருத்தல்

(1) தேவனுடைய கிருபையால் நாம் நிலைத்திருத்தலை தெரிவுச் செய்யும்போது. அதன் விளைவு என்ன?

*தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (1 யோவான் 4:16)*

எப்போதெல்லாம் நாம் அன்பின் சூழ்நிலையில் நம்மைப் பராமரித்து வருகிறோமோ, அப்போதெல்லாம் நாம் தேவனுடைய சமுகத்தில் நம்மை கண்டிப்பாக பராமரித்து கொள்ள வேண்டும் என்பதின் பின் தொடரலாகும். நாம் அன்பில் வாழ்வதால், நாம் தேவனில் வாழ்கிறோம், அவர் அன்பாக இருக்கிறார் (வ. 8). முரண்பாட்டின் தாக்கங்களின் மத்தியில், தேவன் மற்றும் மனிதர்கள் மீதான அன்பின் சாம்ராஜ்யத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கு, கர்த்தருடன் தொடர்ந்து தொடர்புகொள்வதன் மூலம் மட்டுமே நிலைத்திருக்கக்கூடிய ஆவிக்குரிய சகிப்புத்தன்மை தேவை.

அன்பின் தேவனுடனான இந்த பரஸ்பரம் வாசம் செய்யும் மகிழ்ச்சியை ருசித்த அனைவரும் வரத்தைப் பெறுவதற்கான முயற்சியானது மதிப்பு வாய்ந்தது என்பதை அறிவார்கள்.
சாத்தானுக்கும் அது நன்றாக தெரியும், மேலும் அதன் மதிப்பை நேரடியாக மறுக்க முயற்சிக்காத அளவுக்கு அவன் புத்திசாலி. அதற்கு பதிலாக, அவன் பல மதிப்பு குறைவான நல்ல விஷயங்களை ஒளிரும் வண்ணங்களில் வர்ணம் பூசி, ஒரு நொடிப்பொழுதாக இருந்தாலும் நம் எண்ணங்களை அவற்றின் மீது

மையப்படுத்த வழிவகுக்கிறான். ஒருமுறை அவன் தேவனிடமிருந்து நம் கவனத்தை திசை திருப்பிவிட்டால், அவன் அடிக்கடி சுய மற்றும் பிறருக்கு தீங்கு விளைவிக்கும் எண்ணங்களுக்கு நம் மனதை வழிநடத்துவதில் வெற்றி பெறுகிறான். அவைகள் நமக்குத் தெரியவருவதற்கு முன்பே அல்லது அவற்றின் ஆபத்தை நாம் உணருவதற்கு முன்பே, நாம் மனக்கசப்பு எண்ணங்களை வளர்த்துக் கொள்கிறோம், இதன் விளைவாக அன்பும் தேவனும் நம் இருதயத்திலிருந்து வெளியேற்றப்பட்டு விடுகிறார்கள். இது ஒரு பழைய நுட்பமாக இருந்தாலும், இன்றளவும் மிகவும் வெற்றிகரமாக செயல்பாட்டிலுள்ளது!

தேவனுடைய கரத்தில் நாம் அனுபவித்த ஆசீர்வாதங்களின் மீது மனதை வேண்டுமென்றே மற்றும் தொடர்ந்து மையப்படுத்துவதே நமது சிறந்த பாதுகாப்பு (சங்கீதம் 63: 6; 139: 17, 18). தேவன் நமக்காக என்ன செய்திருக்கிறார், அவருடனான ஐக்கியமென்றால் என்ன என்பதை நினைவில் வைத்து நம் மகிழ்ச்சியை மற்றவர்களிடம் சொல்லும்போது நமது உறுதி வலுவடைகிறது. இப்படிப்பட்ட சாட்சிகள் நம் சகோதரர்களை ஊக்குவிக்கின்றன மற்றும் நமக்கும் பரலோகத்திற்கும் இடையிலான தொடர்பை பராமரிப்பதற்கான நமது உறுதியை வலுப்படுத்துகின்றன (மல்கியா 3:16).

(2) நாம் பிறருக்கு காட்டும் அன்பு, தேவனுடான நம்முடைய உறவை எவ்வாறு பிரதிபலிக்கிறது?

*பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில்*

*அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்.*
*(1 யோவான் 4:7)*

ஒருவனுடைய இருதயத்தில் கிறிஸ்து நிலைத்திருக்கும்போது அவனுடைய வாழ்க்கை நடைமுறை தேவபக்தியை வெளிப்படுத்தும். பண்புகள் சுத்திகரிக்கப்பட்டு, உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்டு மற்றும் மகிமைப்படுத்தப்படும். பரிசுத்தக் கோட்பாடு நீதியின் செயல்களுடன் கலக்கும்; பரலோக கட்டளைகள் பரிசுத்த நடைமுறைகளுடன் கலக்கும்.

நம் சக மனிதர்களுக்கான அன்பின் நறுமணமே தேவன் மீதான நமது அன்பை வெளிப்படுத்துகிறது. சேவையில் பொறுமை தான் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலைக் கொடுக்கும். தாழ்மையான, விடாமுயற்சியுள்ள, உண்மையுள்ள உழைப்பின் மூலம் இஸ்ரேலரின் (மற்றவர்களின்) நலன் ஊக்குவிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் வழியை பின்பற்ற ஆயத்தமாக இருப்பவனை தேவன் தாமே ஆதரித்து பலப்படுத்துகிறார்.
ஒரு மனிதன் தன் சகோதரர்கள் மீது கிறிஸ்துவைப் போன்ற அன்பைக் கொண்டிருக்காமல், நித்திய வாழ்க்கையின் நம்பிக்கையை கொண்டிருக்க முடியும் என்று நினைப்பது மிகப் பெரிய மற்றும் மிக மோசமான வஞ்சகமாகும். தேவனையும் அவனது அண்டை வீட்டாரையும் நேசிப்பவன் ஒளியாலும் மற்றும் அன்பாலும் நிரப்பப்படுகிறான். தேவன் அவனிலும் அவனைச் சுற்றிலும் இருக்கிறார். கிறிஸ்தவர்கள், கிறிஸ்து தம் ஜீவனை கொடுத்திருக்கிற தங்களைச்

சுற்றியுள்ளவர்களை விலைமதிப்பற்ற ஆத்துமாக்களாக நேசிக்கிறார்கள். அன்பில்லாத கிறிஸ்தவர் என்று யாரும் கிடையாது; ஏனென்றால் "தேவன் அன்பாக இருக்கிறார்," மற்றும் " அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை"

(3) நிறைவான இரக்கம், அளவிடமுடியாத அன்பு, மற்றும் நித்திய வாழ்க்கை ஆகியவற்றை தொடர்ந்துப் யாரைப் பார்ப்பதற்கு இந்த மாபெரும் அறிவுறுத்தல் நம்மை அறிவுறுத்துகிறது?

*தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப்பெறக் காத்திருங்கள். (யூதா 1:21)*

கிறிஸ்துவின் சிந்தனையில் அளவற்ற ஒரு அன்பின் கரையோரத்தில் நாம் தவிக்கிறோம். இந்த அன்பைச் எடுத்துச்சொல்ல நாம் முயற்சி செய்கிறோம், ஆனால் மொழி நமக்கு தோல்வியடைகிறது.
பூமியில் அவரது வாழ்க்கை, நமக்காக அவர் செய்த தியாகம், பரலோகத்தில் அவர் நமக்காக வழக்காடுகிறவராக செய்யும் வேலை, மற்றும் அவரை நேசிப்பவர்களுக்காக அவர் ஆயத்தமாக்கும் மாளிகைகளை நாம் கருத்தில் கொள்ளும்போது, ஓ

கிறிஸ்துவின் அன்பின் உயரத்தையும் ஆழத்தையும் மட்டுமே நாம் கொண்டாட முடியும்! “நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது”. “நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.” 1 யோவான் 4:10; 3: 1.

ஒவ்வொரு உண்மையான சீஷரிலும் இந்த அன்பு, பரிசுத்த அக்கினியைப் போல, இருதயத்தின் பலிபீடத்தின் மீது எரிகிறது. இந்த பூமியின் மீது தான் தேவனுடைய அன்பு கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்டது. பூமியின் மீது தான் அவருடைய பிள்ளைகள் குற்றமற்ற வாழ்வின் மூலம் இந்த அன்பை பிரதிபலிக்க வேண்டும். இவ்வாறு பாவிகள் தேவாட்டுக்குட்டியைக் காண சிலுவைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

(4) நாம் கர்த்தருடைய அன்பில் பூரணப்படும்படி, அவரில் தொடர்ந்து நிலைத்திருக்க நம்முடைய இரு பகுதி பொறுப்பு யாது?

*ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். (யாக்கோபு 4:7)*

மீட்பின் அனைத்து திட்டங்களும் இந்த விலைமதிப்பற்ற வார்த்தைகளில் வெளிப்படுத்தப்படுகின்றன: “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்”.
உண்மையாகவே, கிறிஸ்து உலகித்தினுடைய பாவங்களின் தண்டனையைச் சுமந்தார், அவருடைய நீதி பாவிகளுக்குக் கணக்கிடப்படுகிறது, மனந்திரும்புதல் மற்றும் விசுவாசத்தின் மூலம், அவர்கள் குணத்தில் அவரைப் போல பரிசுத்தமாகலாம். "அந்த மனிதனின் பாவங்களின் குற்றத்தை நான் சுமக்கிறேன். நான் அவர்களுடைய தண்டனையை ஏற்கட்டும், மனந்திரும்பும் பாவி உம் முன் குற்றமற்றவராக நிற்கட்டும். ” என்று அவர் கூறுகிறார். ஒரு பாவி கிறிஸ்துவை விசுவாசிக்கும் அந்த தருணத்தில், அவன் தேவனுடைய பார்வையில் தண்டனைக்கு உட்படாதவனாக நிற்கிறான்; ஏனென்றால், கிறிஸ்துவின் நீதி அவனுடையதாக இருக்கிறது: கிறிஸ்துவின் சரியான கீழ்ப்படிதல் அவனுக்குக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் அவன் தெய்வீக வல்லமையுடன் ஒத்துழைக்க வேண்டும், மேலும் பாவத்தை அடக்க தனது மனித முயற்சியை முன்னெடுத்து, கிறிஸ்துவில் முழுமையாக நிற்க வேண்டும். {FE 429}

(5) தேவனுடடைய கிருபையால் கொடுக்கப்பட்டு, தேவனுடைய உறவில் நிலைத்திருக்கும்படி உதவிச் செய்வதற்கு யாக்கோபு பட்டியலிடும் மூன்று வழிகள் எது?

*தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்.*
*(யாக்கோபு 4:8)*

(6) தேவனுடைய மகிமையை [அவருடைய அன்பின் குணாதிசயத்தை] பிடித்துக்கொள்வதில் நாம் தொடர்ந்து நிலைத்திருந்தால், கர்த்தருடைய ஆவியானவரால், நாம் எதற்குள் மாற்றப்படுவோம்?

*நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.*
*(2 கொரிந்தியர் 3:18)*

தேவனுடைய அன்பின் வெளிப்பாடு, அவருடைய இரக்கம், அவரது நற்குணம், மற்றும் இருதயத்தை ஒளிரச் செய்து புதுப்பிக்கும் பரிசுத்த ஆவியின் கிரியை, அதை கிறிஸ்துவின் மிக நெருக்கமான தொடர்பில், விசுவாசத்தின் மூலம், அவருடைய குணத்தைக் குறித்த தெளிவான கருத்தைக் கொண்டிருத்தல், போன்றவற்றால் சாத்தானின் தலைசிறந்த வஞ்சகங்களை நம்மால் கண்டறிய முடியும். இயேசுவைப் பார்த்து, அவருடைய நற்பண்புகளை விசுவாசித்து, பரிசுத்த ஆவியின் வெளிச்சம், சமாதானம், மகிழ்ச்சியின் ஆசீர்வாதங்களை பொருத்தமாக்கிக் கொள்கிறோம். மேலும், கிறிஸ்து நமக்காகச் செய்த மகத்தான காரியங்களைக் கருத்தில் கொண்டு, நாம்

தேவனுடைய புத்திரர்கள் என்று அழைக்கப்படுவதற்கு, பிதா நமக்கு எவ்வளவு பெரிதான அன்பை அளித்திருக்கிறார் என்று நாம் பறைசாற்றுவதற்கு ஆயத்தமாகிறோம்.

சகோதர சகோதரிகளே, நாம் இவற்றை உறுதியாகப் பிடித்துக்கொள்வதினால் தான் மாற்றப்படுகிறோம். தேவன் மற்றும் நம் இரட்சகரின் அன்பின் மீது வாழ்வதன் மூலம், தெய்வீக குணத்தின் பரிபூரணத்தை சிந்தித்து, மற்றும் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் நீதியை நம்முடையதாகக் கூறி, நாம் ஒரே சாயலாக மாற்றப்பட வேண்டும். நம் ஆத்துமாக்கள் இளைப்படையும் வரை அதை பற்றியே பேசி, துக்கமடையும்படி அநியாயங்கள் மற்றும் சீர்கேடுகள் மற்றும் வஞ்சகங்கள், சாத்தானுடைய வல்லமையின் சான்றுகள் போன்ற அனைத்து விரும்பத்தகாத சித்திரங்களை நம் நினைவுகளுடைய அரங்குகளில் தொங்கவிடும்படிக்கு, ஒன்றாக சேர்த்துக்கொள்ள வேண்டாம். ஒரு இளைப்படைந்த ஆத்துமா என்பது இருள் சூழ்ந்த ஒரு சரீரம் தேவனுடைய ஒளியைப் பெறத் தவறுவது மட்டுமல்லாமல், அந்த ஒளியை மற்றவர்களும் பெறாதப்படிக்கு மூடிவிடுவதாகும். சாத்தான் தனது வெற்றிகளுடைய சித்திரங்களின் விளைவைக் காண விரும்புகிறான், மனிதர்களை நம்பிக்கையற்றவர்களாகவும் மனச்சோர்வடைந்தவர்களாகவும் ஆக்குகிறான்.

(7) நாம் நம்முடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு முற்றிலும் ஒப்புக்கொடுக்கும் விதமாக, தேவனை

நேசித்து, அவரை நம்பினால் அதன் விளைவு என்னவாக இருக்கும்?

*உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். (1 யோவான் 2:17)*

நம்மிடத்தில் பூரணப்படுகிறது; மேலும், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்” “நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் பெற்ற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்” என்று அவன் எழுதியிருக்கிறான்

(7) கிறிஸ்துவின் அன்பு நம்மிடத்திலிருந்து மற்றவர்களுக்கு பாயும்படியாக, பவுலைப்போன்று நமக்கு எந்த சாட்சியிருக்க வேண்டும்?

*கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறான்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். (கலாத்தியர் 2:20)*

இருதயத்தில் கிறிஸ்துவின் அன்பு அவசியம். சுயத்தை சிலுவையில் அறைய வேண்டும். கிறிஸ்துவுக்குள் நான் மூழ்கும்போது, உண்மையான அன்பு தானாகவே தோன்றுகிறது. இது ஒரு உணர்ச்சி அல்லது மனக்கிளர்ச்சியல்ல, மாறாக

பரிசுத்தப்படுத்தப்பட்ட விருப்பத்தின் முடிவு. இது உணர்வில் மட்டுமல்லாது, சுயத்திற்கு மரித்து தேவனுக்கு உயிரோடு இருக்கிற முழு இருதயத்தை, ஆத்துமாவை மற்றும் குணாதிசயங்களை மாற்றுவதை உள்ளடக்கியது, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமானவர் நம்மை அவரிடம் கொடுத்துவிடும்படி கேட்கிறார். நம்மை தேவனுக்கு அர்ப்பணிப்பது, அவருக்கு பொருத்தமானபடி வேலைக்கு அமர்த்தப்படுவது மட்டுமே அவருக்கு அவசியம். நாம் இந்த அர்ப்பணிப்பின் நிலைக்கு வரும் வரை எங்கும் மகிழ்ச்சியாகவோ, பயனுள்ளதாகவோ அல்லது வெற்றிகரமாகவோ வேலை செய்ய மாட்டோம் (Letter 97, 1898).

உண்மையான சுத்திகரித்தல் விசுவாசிகளை கிறிஸ்துவுக்கும் ஒருவருக்கொருவர் கனிவான இரக்கத்தின் பிணைப்புகளிலும் ஒன்றிணைக்கிறது. இந்த ஒன்றிணைவு, ஒருவருக்கொருவர் மீதான அன்பில் மீண்டும் பாய்கிற கிறிஸ்து போன்ற அன்பு நிறைந்த இருதயங்களில் நீரோட்டமாய் தொடர்ந்து பாய்கிறது.

(8) நாம் சுயத்திற்கு மரிக்க தெரிவுச் செய்யும்போது, நாம் மற்றவர்களை உண்மையாக நேசிக்கும்படி நம்முடைய இருதயங்களில் யார் ஜீவிப்பார்?

*கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறான்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த*

*தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். (கலாத்தியர் 2:20)*

அன்புதான் தெய்வ பக்தியின் அடிப்படை. எந்தத் தொழில் செய்கிற, எந்த மனிதனாக இருந்தாலும் தன் சகோதரனிடம் தன்னலமற்ற அன்பை வைத்திருந்தாலொழிய தேவன் மீது பரிசுத்த அன்புடையவனாக இருக்க முடியாது. ஆனால் மற்றவர்களை நேசிக்க முயற்சிப்பதன் மூலம் நாம் ஒருபோதும் இந்த ஆவியை பெற்றுக்கொள்ள முடியாது. இருதயத்தில் கிறிஸ்துவின் அன்பு தேவை. கிறிஸ்துவில் சுயத்தை இணைக்கும்போது, அன்பு தன்னிச்சையாக வெளிப்படுகிறது. மற்றவர்களுக்கு உதவுதல் மற்றும் ஆசீர்வதிப்பதற்கான தூண்டுதல் உள்ளிருந்து தொடர்ந்து ஊடுருவி வரும் போது-- பரலோகத்தின் சூரிய ஒளி இருதயத்தில் நிரம்பி முகத்தில் வெளிப்படும் போது கிறிஸ்தவ பண்புகள் பூரணமடைகிறது.

(9) நாம் விசுவாசத்தினால் ஆவியில் நடக்கும்போது, அழிந்துப்போகிற ஆத்துமாக்களில் நாம் வெளிப்படுத்தும் முதற் பலன் என்ன?

*கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.*

*(கலாத்தியர் 5: 22-23)*

**தேவன் ஒரு கரத்தை நீட்டி உங்களை அழைக்கிறார், விசுவாசத்தால் அவருடைய வலிமையான கரத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள், மற்றொரு கரம் அன்பினால், அழியும் ஆத்துமாக்களை சென்றடைகிறது. கிறிஸ்துவே வழியும், சத்தியமும் ஜீவனுமாக இருக்கிறார். அவரை பின்தொடருங்கள். மாம்சத்திற்குப் பிறகு நடவாதேயுங்கள், ஆவியின் பின் நடவுங்கள். அவர் நடந்தபடியே நடவுங்கள். உங்களை சுத்திகரிப்பது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. நீங்கள் செய்ய வேண்டிய வேலை என்னவென்றால் அவருடைய மகிமைக்காக, உங்கள் உயிரை பாதுகாக்கிற அவருடைய சித்தத்தைச் செய்வதாகும். நீங்கள் உங்களுக்காக உழைத்தால், அதனால் உங்களுக்கு எந்த லாபமும் கிடைக்காது. மற்றவர்களின் நலனுக்காக, சுய நலமில்லாமல் மற்ற அனைவரையும் தேவனுக்கு அர்ப்பணிக்கும்படி வேலைச் செய்ய அதிக ஆர்வம் காட்டுவது, அவருக்கு உகந்ததாக இருக்கும் மற்றும் அவருடைய கிருபையின் ஐசுவரியத்தால் பலன்கள் திருப்பித் தரப்படும்.**

(10) **அன்பின் ஆவி நம்மில் கொடுக்கப்படும்போது, நாம் மக்களிடம் சென்றடைவதற்கு கிறிஸ்துவின் எந்த வழிமுறை வெற்றிகரமானதாக இருக்கும்?**

*மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனவுருக்கமுள்ளவர்களும்,*

*இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, (1 பேதுரு 3: 8)*

கிறிஸ்துவின் வழிமுறை மட்டுமே மக்களை சென்றடைவதில் உண்மையான வெற்றியை கொடுக்கும். இரட்சகர் மனிதர்களுடன் ஒன்றுக்கலந்து அவர்களின் நலனை விரும்புபவராக இருந்தார். அவர் அவர்களுக்காக தமது இரக்கத்தைக் காட்டினார், அவர்களின் தேவைகளுக்காகச் சேவை செய்தார், மற்றும் அவர்களின் நம்பிக்கையை வென்றார். பின்னர் அவர், "என்னைப் பின்பற்றுங்கள்" என்று கூறினார்.

தனிப்பட்ட விதத்தில் மக்களை நெருங்க வேண்டிய அவசியம் உள்ளது. உபதேசம் செய்ய குறைந்த நேரம் கொடுக்கப்பட்டு, தனிப்பட்ட ஊழியத்தில் அதிக நேரம் செலவிடப்பட்டால், அதிக பலன்கள் காணப்படும். ஏழைகள் நிவாரணம் பெற வேண்டும், நோயுற்றவர்கள் பராமரிக்கப்பட வேண்டும், அறியாமையில் உள்ளவர்கள் கற்பிக்கப்பட வேண்டும் மற்றும் துயரப்படுகிறவர்கள், ஆறுதல் பெற வேண்டும், அனுபவமற்றவர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். அழுகிறவர்களுடன் நாம் அழ வேண்டும், சந்தோஷப்படுவோருடன் சந்தோஷப்பட வேண்டும். தூண்டுதலின் வல்லமை, ஜெபத்தின் வல்லமை, தேவனுடைய அன்பின் வல்லமை ஆகியவற்றுடன் இணைந்திருப்பதால், இந்த வேலை பலனளிக்காமல் போகாது.

(11) கிறிஸ்து செய்ததுப்போல சுத்திகரிக்கப்பட்ட அன்போடு மற்றவர்களை நேசிக்கும்படிக்கு நாம் எந்த விலையேறப்பெற்ற

வாக்குத்தத்தத்தை உரிமைக்கோர முடியும்?

*இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*
*(2 பேதுரு 1: 4)*

ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துங்கள் ... இந்த அன்பு உண்மையிலேயே வளர்க்கப்பட்டால், வரையறுக்கப்பட்டவர்கள் வரையறுக்கப்பட்டவர்களுடன் ஒன்று கலந்து, எல்லாரும் நித்தியமானவருக்குள் மையங்கொள்வார்கள். மனிதத்தன்மை மனிதத்தன்மைடன் ஒன்றிணையும், நித்தியமான அன்பின் இருதயத்துடன் அனைவரும் பிணைக்கப்படுவார்கள். ஒருவர் மீது ஒருவர் காட்டும் இந்த சுத்திகரிக்கப்பட்ட அன்பு பரிசுத்தமானது. இப்படி ஒருவர் மீது ஒருவர் காட்டும் இந்த மாபெரும் பணியில், கிறிஸ்தவ அன்பானது உயர்ந்தாக, நிலையானதாக, மதிப்புமிக்கதாக, தன்னலமற்றதாக, பார்க்கப்படுவதை விட - அதிக கிறிஸ்தவ கனிவை, அதிக கிறிஸ்தவ நற்குணம் மற்றும் கண்ணியத்தை பாதுகாக்கிறது, மேலும் தேவனுடைய அரவணைப்பில் மனித சகோதரத்துவத்தையும் மனிதனின் உரிமைகளில் தேவன் முதலீடு செய்த கண்ணியத்தையும் உறுதிப்படுத்துகிறது. இந்த கௌரவமான கிறிஸ்தவர்கள் தேவனுடைய கனத்திற்காகவும் மற்றும் மகிமைக்காகவும் எப்போதும் வளர்க்கப்பட வேண்டும்.
கிறிஸ்து நேசித்ததைப் போல நேசிப்பது என்பது எல்லா நேரங்களிலும் எல்லா

இடங்களிலும், அன்பான வார்த்தைகள் மற்றும் இனிமையான தோற்றங்களால் சுயநலமின்மையை வெளிப்படுத்துவதாகும். இதை தருபவர்களுக்கு அது எந்த பண செலவையும் ஏற்படுத்தாது. ஆனால் அது ஆத்துமாவைச் சுற்றியுள்ள நறுமணத்தை விட்டுச்செல்கிறது. அதன் விளைவை ஒருபோதும் மதிப்பிட முடியாது. அதை பெறுபவருக்கு மட்டுமல்ல, கொடுப்பவருக்கும் ஒரு ஆசீர்வாதம்; ஏனென்றால் அவர்கள் அவற்றின் மேல் எதிர்வினையாற்றுகிறார்கள்.

கிறிஸ்துவின் அன்பு ஆழமான மற்றும் மெய் ஆர்வம் கொண்டது, அதை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் கட்டுக்கடங்காத நீரோடை போல பாய்கிறது. அவருடைய அன்பில் சுயநலம் இல்லை. பரலோகத்தில் பிறந்த இந்த அன்பு இருதயத்தில் ஒரு நிலையான தத்துவமாக இருந்தால், அது ஒரு பரிசுத்தமான உறவில் நாம் மிகவும் நேசிப்பவர்களுக்கு மட்டுமல்லாமல், நம்மை தொடர்பு கொள்ளும் அனைவருக்கும் அது தன்னை தெரியப்படுத்தி விடும். இது சிறிய கவனத்தை ஈர்க்கவும், சலுகைகளை வழங்கவும், இரக்கமுள்ள செயல்களைச் செய்யவும், கனிவான, உண்மையான மற்றும் ஊக்கமளிக்கும் வார்த்தைகளைப் பேசவும் வழிநடத்தும். இரக்கத்தின்மேல் பசி தாகம் உள்ள இருதயங்களுக்கு இரக்கம் காட்ட இது நம்மை வழிநடத்தும்.

*ஐசுவரியத்தின் வல்லமை சீர்கெடுக்கும் என்பதை நான் உணர்கிறேன்; கட்டாயப்படுத்துதலின் வல்லமை வலியையும் காயத்தையும் ஏற்படுத்தும், ஆனால் அன்பின் வல்லமை நன்மையை*

மட்டுமே விளைவிக்கும். இந்த வல்லமையை என் வாழ்க்கையில் விரும்புகிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

அன்பு ஒரு மனகிளர்ச்சியல்ல, மாறாக இயேசு ஆட்சி செய்யும் இடத்தில் மட்டுமே இருக்கக்கூடிய ஒரு தெய்வீக கொள்கை என்பதை நான் புரிந்துகொள்கிறேன். மனமாற்றமடையாத இருதயம் அதை உருவாக்கவோ உற்பத்திச் செய்யவோ முடியாது. கிறிஸ்து என் வாழ்வில் மிகவும் உயர்ந்தவராக ஆட்சி செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

கிறிஸ்துவின் அன்பு என் இருதயத்தில் ஆட்சி செய்ய சிலுவையில் அறையப்பட வேண்டும் என்பதை நான் உணர்கிறேன். என் வாழ்க்கை கிறிஸ்துவில் மூழ்கி, உண்மையான அன்பு தன்னிச்சையாக எழும்புவதற்காக ஒரு பரிசுத்தமான சித்தத்திற்காக நான் ஜெபிக்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

ஒரு கரத்தினால் விசுவாசத்தால் கடவுளின் வலிமையான கரத்தைப் பிடிக்க அன்றாட நம்பிக்கை மற்றும் ஞானத்திற்காக நான் ஜெபிக்கிறேன்; மற்றும் மறுகரம் அழிந்துப்போகின்ற ஆத்துமாக்களை அன்பால் தொடர்ந்து சென்றடைய வேண்டும்.

*வட்டம்:  ஆம்  தீர்மானிக்கவில்லை*



பாடம் 16

## எப்படி நேசிக்க வேண்டும் என்பதற்கு கிறிஸ்துவின் உதாரணம்

**(1) மற்றவர்களை எப்படி நேசிப்பது மற்றும் கிறிஸ்துவுக்கு அவர்களை கவர்வது போன்ற ஒரு உதாரணத்திற்கு நாம் யாரைப் பார்க்க வேண்டும்?**

*இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். (1 பேதுரு 2:21)*

நமக்கு நித்திய ஐசுவரியங்கள் இருக்க வேண்டும் என்பதற்காக குருவாகிய இயேசு தரித்திரரானார்; நமக்கு ஜீவன், அழியாத வாழ்வு வேண்டும் என்பதற்காக அவர் மரித்தார். அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற நாம் ஆயத்தமாயிருக்கவும், மேலும் அவர் நமக்குச் செய்ததைப் போல மற்றவர்களுக்காக முடிந்தவரை செய்யவும் வேண்டாமா? அவ்வாறு செய்வதன் மூலம், நம்முடைய சொந்த குணங்கள் ஒழுக்கப்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்படும், நம் விசுவாசம் வலுவடையும், நம் வைராக்கியம் மேலும் உறுதியாகவும், தீவிரமாகவும் மாறும், தேவன் மீதும் மற்றும் சத்தியத்தின் மீதும் மற்றும் கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அந்த ஆத்துமாக்கள் மீதும் நமது அன்பு தீவிரமடையும், மேலும் விலைமதிப்பற்ற ஆத்துமாக்கள் நம் உழைப்பின் விளைவாக இரட்சிக்கப்படுவார்கள்.

கிறிஸ்துவிடம் ஆத்துமாக்கள் ஈர்க்கப்படும்படிக்கு தேடுவதை விட வேறு என்ன பெரிய மற்றும் உற்சாகமான வேலையில் நாம் ஈடுபட முடியும். இந்த வேலையானது அதிகம் கற்றறிந்தவர்கள், சொற்பொழிவாளர்கள் அல்லது பணக்காரர்களால் செய்யப்படாமல், தங்கள் வேலையில் எளிமையான, சாதாரணமான, தங்கள் வேலையின் உண்மையுள்ள ஆண்கள் மற்றும் பெண்களால் காலாகாலமாக வெற்றிகரமாக செய்யப்பட்டது. ஒரு ஆத்துமாவை இவ்வாறு சென்றடைந்து. இவ்வாறு, கிறிஸ்துவின் சேனைக்குள் கொண்டு வரப்படலாம். ஆனால் ஒவ்வொரு பணியாளரும் ஞானத்திற்காகவும், பெலத்திற்காகவும் இயேசு கிறிஸ்துவின் மீது

முற்றிலுமாகவும், நிலையாகவும் சார்ந்திருக்க வேண்டும்.

(2) மற்றவர்களோடு தொடர்புக் கொள்ளுதலைப்பற்றி எந்த உதாரணம் மற்றும் விதிமுறைகளை கிறிஸ்து நமக்கு கொடுத்திருக்கிறார்?

*நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். (யோவான் 13:34)*

கிறிஸ்து, தம் முதல் சீஷர்களை தான் நேசித்ததைப் போல ஒருவரை ஒருவர் நேசிக்கும்படி கட்டளையிட்டார். இவ்வாறு அவர்கள் அவர்களுக்குள்ளே உருவாக்கப்பட்ட மகிமையின் நம்பிக்கையாகிய, கிறிஸ்துவிற்காக உலகத்திற்கு சாட்சியாக இருக்க வேண்டும் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று அவர் கூறுகிறார் (யோவான் 13:34). இந்த வார்த்தைகள் கூறப்பட்ட நேரத்தில், சீஷர்களால் அவற்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை; ஆனால் அவர்கள் கிறிஸ்துவின் துன்பங்களை, அவர் சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த பிறகு, பரலோகத்திற்கு ஏறிய பிறகு, மற்றும் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது தங்கிய பிறகு, அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்க வேண்டிய தேவனுடைய அன்பு மற்றும்

அந்த அன்பின் தன்மை ஆகியவற்றைப் பற்றிய தெளிவான கருத்து அவர்களுக்கு இருந்தது. பின்னர் யோவான் தனது சக சீஷர்களிடம் இப்படியாக கூறினார்: “அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.”
தேவன் தமது நோக்கத்தின் முன்னேற்றத்திற்காக மனிதர்களைச் சார்ந்து இல்லை. அவர் தேவதூதர்களை அவருடைய சத்தியத்தின் தூதர்களாக மாற்றியிருக்கலாம். அவர் தமது சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கலாம், ஏனெனில் அவர் சீனாயிலிருந்து நியாயப்பிரமாணத்தை தமது சொந்த குரலில் அறிவித்தார். ஆனால் நம்மிடம் இரக்க உணர்வை வளர்ப்பதற்காக, அவர் இந்த வேலையைச் செய்ய மனிதர்களைப் பயன்படுத்தத் தெரிவுச் செய்தார்.

மற்றவர்களின் நன்மைக்காக சுய தியாகம் செய்யும் ஒவ்வொரு செயலும் அதை கொடுப்பவரின் இருதயத்தில் நன்மை செய்யும் மனப்பான்மையை வலுப்படுத்தும், அவர்களை “ஐசுவரியம் உள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரான” உலகத்தின் மீட்பருடன் நெருக்கமாக இணைக்கும். மேலும் நம் சிருஷ்டிப்பில் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றும்போதுதான் வாழ்க்கை நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும். அவன் தனது சக மனிதர்களை ஆசீர்வதிக்கவும், பூமியில் தேவனுடைய நோக்கத்தின் முன்னேற்றத்திற்காகவும் தேவனுடைய வரங்களைப் பயன்படுத்தாவிட்டால்.

மனிதனுக்கு அவருடைய அனைத்து நல்ல வரங்களும் சாபத்தை மட்டுமே நிரூபிக்கும்.

(3) அவருடனான நம்முடைய உறவை குறித்து எந்த பெரும் ஆதாரத்தை தருவதாக கிறிஸ்து கூறியிருக்கிறார்?

*நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார். (யோவான் 13:35)*

சிறந்த போதகர்களைப் பின்பற்றுபவர்கள் தங்கள் போதகர்களின் பண்புகளைப் பிரதிபலிக்கிறார்கள். இயேசுவின் முக்கிய பண்புகளில் ஒன்று அன்பு. இயேசுவின் வாழ்க்கை அன்பின் நடைமுறைச் செயல்பாடாக இருந்தது. இயேசுவின் சீஷர்களின் அதே வகையான அன்பின் வெளிப்பாடு அவர்களின் உறவு மற்றும் அவர்களின் எஜமானருடனான நெருங்கிய தொடர்பை நிரூபிக்கும். ஒரு கிறிஸ்தவனை அவன் செய்யும் தொழில் அவனை அடையாளப்படுத்தாமல் அன்பே அடையாளப்படுத்துகிறது.

இந்த அன்பு அவர்களுடைய சீஷத்துவத்தின் சான்றாக இருக்கிறது. “நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்” என்று இயேசு கூறினார். மனிதர்கள் கட்டாயத்தால் அல்லது சுயநலத்தால் அல்லாமல், அன்பினால் ஒன்றிணைக்கப்பட்டு, ஒவ்வொரு மனித செல்வாக்கிற்கும் மேலாக இருக்கும்

செல்வாக்கின் செயல்பாட்டைக் காட்டுகிறார்கள்.
இந்த ஒற்றுமை இருக்கும் இடத்தில், தேவனுடைய சாயல் மனிதத்தன்மையில் மீட்டெடுக்கப்பட்டு, வாழ்க்கையின் ஒரு புதிய கொள்கை பொருத்தப்பட்டுள்ளது என்பதற்கு இது ஒரு சான்றாக அமைகிறது.
இயற்கைக்கு அப்பாற்பட்ட கேட்டின் முகவர்களை எதிர்த்து நிற்கும் வல்லமையானது தெய்வீக இயல்பில் இருப்பதையும், தேவனுடைய கிருபை இயற்கையான இருதயத்தில் உள்ளார்ந்த சுயநலத்தை அடக்குகிறது என்பதையும் இது காட்டுகிறது.

சபையின் செல்வாக்கை அன்பின் குறைபாடே மிகவும் பெலவீனப்படுத்துகிறது. உலக மக்கள் நம்முடைய பண்புகளுக்கும், வாழ்க்கைக்கும் விசுவாசமானது என்ன செய்கிறது என்று பார்க்கும்படி நம்மைப் நோக்கிப்பார்க்கிறார்கள். நாம் கிறிஸ்துவின் சாயலாக மாறுகிறோமா, அது நம் இருதயங்களில் ஒரு பரிசுத்தமாக்கும் விளைவைக் உண்டாக்கிறதா என்று பார்க்கிறார்கள். நம் வாழ்வில் உள்ள ஒவ்வொரு குறைபாடுகளையும், நமது செயல்களில் உள்ள ஒவ்வொரு முரண்பாட்டையும் கண்டறிய அவர்கள் ஆயத்தமாக உள்ளனர். நாம் நம்முடைய விசுவாசத்தை நிந்திக்க அவர்களுக்கு எந்த சந்தர்ப்பத்தையும் கொடுக்கக் கூடாது.

(4) நமக்கான தேவனுடைய அன்பை நாம் அனுபவிக்கும்போது, உலகத்திற்கு எதை பிரதிபலிப்போம்?

*இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு 5:16)*

தேவன் நம் மீது அளிக்கும் அன்பையும் கனிவையும் மற்றவர்களுக்கு வழங்குவதன் மூலம், நாம் நம் ஒளியை பிரகாசிக்க வைக்க வேண்டும். தேவனுடைய ஒவ்வொரு வரத்தையும் நன்மையை உற்பத்திச் செய்கிறதாக மாற்றி, அதை நாம் சிறந்த பயன்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டும். தேவனுக்கு நாம் ஏற்கனவே அவரிடம் இல்லாத எதையும் கொடுக்க முடியாது, ஆனால் நம்மைச் சுற்றியுள்ள துன்பப்படுகிறவர்களுக்கு உதவ முடியும். இந்த வாழ்க்கையின் தேவைகளை நாம் அவர்களுக்கு வழங்கக்கூடும், அதே நேரத்தில் அவர்களிடம் தேவனுடைய அற்புதமான அன்பைப் பற்றியும் பேச முடியும்.

தேவனில் இருப்பவன் அன்பில் வாழ்கிறான். நம் பரலோகத் தகப்பனின் அன்பு மற்றும் கனிவான இரக்கத்துடன், அனுபவ அறிவால், பழகிய அனைவரும் அவர்கள் எங்கிருந்தாலும் வெளிச்சத்தையும் மகிழ்ச்சியையும் அளிப்பார்கள். அவர்களின் இருப்பு மற்றும் செல்வாக்கு அவர்களின் கூட்டாளிகளுக்கு இனிமையான பூக்களின் நறுமணமாக இருக்கும், ஏனெனில் அவை தேவனுடனும் பரலோகத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன, மேலும் பரலோகத்தின் பரிசுத்தமும் மற்றும் உயர்ந்த அன்பும் அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட

அனைவருடனும் தொடர்பு கொள்ளப்படுகிறது. இது அவர்களை உலகின் ஒளியாகவும், பூமியின் உப்பாகவும் மாற்றுகிறது. அவர்கள் உண்மையாகவே வாழ்விற்கு சுவையாக வாழ்கிறார்கள். ஆனால் மரணத்தை மரிக்கும் வரை அனுபவிப்பதில்லை. {MYP 363}

(5) கிறிஸ்துவை பின்பற்றுகிற நம் ஒவ்வொருவரையும், பரிசுத்த ஆவியினால் எழுதப்பட்டு, உலகத்திற்கு நன்மையும் இரக்கத்தையும் காட்டும்படிக்கு எப்படி அழைக்கிறார்?

*எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே. ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது. (2 கொரிந்தியர் 3: 2-3)*

தேவனுடைய பிள்ளைகள், கர்த்தருடைய நல்லெண்ணத்தையும் இரக்கத்தையும் காட்டும்படிக்கு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக அழைக்கப்படுகிறார்கள். இயேசு தம்முடைய பிதாவின் உண்மையான பண்பை நமக்கு வெளிப்படுத்தியிருப்பது போல, கிறிஸ்துவை, அவருடைய கனிவான மற்றும் இரக்கமுள்ள அன்பை அறியாத உலகிற்கு நாம் வெளிப்படுத்த வேண்டும். “நீர் என்னை உலகத்தில்

அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்." "என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். யோவான் 17: 18, 23. என்று இயேசு கூறினார். "நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது," "சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே." 2 கொரிந்தியர் 3: 3, 2. என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான்.

இயேசு தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரிலும் உலகிற்கு ஒரு நிருபத்தை அனுப்புகிறார். நீங்கள் கிறிஸ்துவின் சீஷராக இருந்தால், நீங்கள் வசிக்கும் குடும்பம், கிராமம் மற்றும் தெருவுக்கு உங்கள் மூலம் ஒரு நிருபத்தை அனுப்புகிறார். இயேசு, உங்களில் வாசம் செய்து, தமக்கு அறிமுகம் இல்லாதவர்களின் இருதயங்களுடன் பேச விரும்புகிறார். ஒருவேளை அவர்கள் வேதாகமத்தைப் படிக்காமல் இருக்கலாம் அல்லது அதன் பக்கங்களில் அவர்களிடம் பேசும் குரலைக் கேட்கமாலிருக்கலாம்; அவர்கள் தேவனுடைய அன்பை அவருடைய சிருஷ்டிப்பின் மூலம் காணமுடியாது. ஆனால் நீங்கள் இயேசுவின் உண்மையான பிரதிநிதியாக இருந்தால், உங்களின் மூலம் அவர்கள் அவருடைய நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்ளவும், மற்றும் அவரை நேசிக்கவும் சேவை

செய்யவும் மேற்கொள்ளப்பட்டு வழிநடத்தப்படுவார்கள்.

(6) மற்றவர்களுக்கு கிறிஸ்துவைப் போன்ற அன்பின் செயல்களை செயல்முறைப்படுத்தாத விசுவாசத்தின் நிலை என்ன?

*அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும். (யாக்கோபு 2:17)*

தன் சகோதரனிடம் கிறிஸ்துவைப் போன்ற அன்பில்லாமல் நித்திய ஜீவனுக்குரிய விசுவாசத்தை பெற்றிருப்பதாக கூறுவது ஒரு மனிதன் செய்யக்கூடிய மிக உயர்ந்த மற்றும் மிக மோசமான வஞ்சகம். தேவனையும் அவனது அண்டை வீட்டாரையும் நேசிப்பவன் ஒளி மற்றும் அன்பால் நிரப்பப்படுகிறான். தேவன் அவனிலும் அவனைச் சுற்றிலும் இருக்கிறார். கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அந்த ஆத்துமாக்களை விலையுயர்ந்தாக எண்ணி கிறிஸ்தவர்கள் தங்களைச் சுற்றியுள்ளவர்களை நேசிக்கிறார்கள். அன்பில்லாத கிறிஸ்தவர் என்று யாரும் இருக்க முடியாது; ஏனென்றால் "தேவன் அன்பாக இருக்கிறார்," மற்றும் "அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை."

“நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.”

தேவனுக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கனி இதுவே.

(7) தங்கள் ஆத்துமாவில் கிறிஸ்துவின் கற்பனைகளை நிலைத்திருக்கும்படி பெற்று, மாதிரியாக வாழ்ந்துக் காட்டுகிறவர்களின் மேல் எந்த இரு வழிகளில் தேவன் சந்தோஷப்படுகிறார்?

*உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார். (செப்பனியா 3:17).*

கிறிஸ்துவினுடைய கிருபையின் மூலம் இந்த உலகில் முதலில் பரிசுத்தவான்களில் உருவாக்கியவர்களையும், கிறிஸ்துவை தங்கள் வாழ்வில் உதாரணமாகக் கொண்டதாக தேவன் கண்டவர்களையும் தவிர வேறு யாரையும் அவர் பரலோகத்திற்கு சேர்த்துக்கொள்வதில்லை. கிறிஸ்துவின் அன்பு ஆத்துமாவில் நிலைத்திருக்கும் கொள்கையாக இருக்கும்போது, நாம் கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருக்கிறோம் என்பதை உணர்வோம்.

ஜெபம், விழித்திருப்பு மற்றும் அன்பினால், கிறிஸ்துவின் கிரியைகளைச் செய்பவர்கள் பாடுவதில் மட்டுமே தேவன் மகிழ்ச்சியடைய முடியும். கர்த்தர் தன் அன்புக்குரிய குமாரனின் குணத்தை தம் மக்களிடம் எவ்வளவு பூரணமாகக் காண்கிறாரோ, அவ்வளவு அதிகமாக அவருடைய திருப்தியும் மகிழ்ச்சியும் அவர்களிடம்

இருக்கும். தேவனும் பரலோக தேவதூதர்களும் அவர்கள் பாடலோடு இணைந்து மகிழ்வார்கள்.

(8) தன் சகோதரன் மேல் கிறிஸ்துவைப் போன்ற அன்பில்லாமல் நித்திய ஜீவனுக்குரிய விசுவாசத்தை பெற்றிருக்கிறேன் என்ற வஞ்சகத்தை உறுதி செய்கிற இந்த வசனத்தின் கடைசிப்பகுதியில் கேட்கப்படும் கேள்வி யாது?

*ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? (1 யோவான் 3:17)*

உண்மையான சுத்திகரிப்பானது விசுவாசிகளை கிறிஸ்துவுக்கும் ஒருவருக்கொருவர் கனிவான இரக்கத்தின் பிணைப்புகளிலும் ஒன்றிணைக்கிறது. இந்த ஐக்கியம் ஒருவர் மீது ஒருவருக்கு மறுபடியும் பாய்கிற அன்பாகிய கிறிஸ்துவை போன்ற அன்பை இருதய நீரோட்டங்களில் தொடர்ந்து பாய செய்கிறது.

கிறிஸ்துவின் குணத்தின் பூரணத்தைக் குறிக்கும் -அவருடைய அன்பு, அவருடைய பொறுமை, தன்னலமற்ற தன்மை மற்றும் அவருடைய நற்குணம் போன்ற குணங்கள் அனைவரிடமும் இருப்பது அவசியம்.

(9) ஆவிக்குரிய வாழ்வில் இழந்துப்போனவர்களை இரட்சிக்கும்படி தம்மில் அன்புக்கூருகிறவர்களுக்கு

கிறிஸ்து கொடுக்கும் உதாரணம், முன்னுரிமை, மற்றும் கட்டளை யாது?

*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28: 19-20)*

இயேசு, உலகை அதன் வீழ்ச்சியடைந்த நிலையில் எல்லையற்ற இரக்கத்துடன் பார்த்தார். அவர் மனிதகுலத்தைத் தொட்டு உயர்த்துவதற்காக மனிதத்தன்மையை தரித்துக்கொண்டார். இழந்துப்போனதை தேடவும் இரட்சிக்கவும் அவர் வந்தார். அவர் மனிதனுடைய துன்பம் மற்றும் துயரத்தின் ஆழத்தை அடைந்தார், அவர் மனிதனை சீர்கேட்டின் கறைபடிந்தவனாக, தீமை செய்தவானாக, பாவத்தால் சிதைக்கப்பட்டவனாக, மற்றும் சாத்தானுடன் தெய்வ நிந்தனையில் ஒன்றிணைந்தவனாக, கண்டு அவனை அவருடைய சிங்காசனத்தின் இருக்கைக்கு உயர்த்தினார். ஆனால் "அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துமட்டும் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை" என்று அவரைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது, மேலும் அவர் சுய-வெறுப்பு மற்றும் சுய தியாகத்தின் பாதையில் சென்றார், அவருடைய படிகளை நாம் பின்பற்ற வேண்டிய ஒரு உதாரணத்தைக் கொடுத்தார்.

இயேசுவைப் போலவே, நம் சொந்த மகிழ்ச்சியிலிருந்து விலகி, சாத்தானின் பரிதானத்திலிருந்து விலகி, சுயநலத்தை வெறுத்து, நாம் இழந்துப்போனவர்களை தேடி இரட்சித்து, ஆத்துமாக்களை இருளில் இருந்து வெளிச்சத்திற்கு, தேவனுடைய அன்பின் சூரிய ஒளியில் கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு உயிரினத்துக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக நாம் கட்டளையிடப்பட்டுள்ளோம். கிறிஸ்து பாவத்தை மன்னிக்க முடியும், இயற்கையை புதுப்பிக்க முடியும், ஆத்துமாவை அவருடைய நீதியின் வஸ்திரத்தினால் உடுத்தக் கூடும், பாவியை சரியான மனதுக்கு கொண்டு வர முடியும், என்ற நற்செய்தியை இழந்துப்போனவர்களுக்கு கொடுத்து, அவர்களுக்கு கற்பித்து மற்றும் அவர்களை தேவனோடு ஒரு பணியாளராக்குவோம்.

(10) நாம் கிறிஸ்துவிற்குள் நிலைத்திருக்கும்போது, மற்றவர்களுக்காக அன்பினால் பாடுப்படுவதற்கு அவர் பரிசுத்த ஆவியின் மூலமாய் அவர் எந்த வல்லமையை தருவார்?

*அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.*
*(1 யோவான் 2:6)*

கிறிஸ்தவர்களின் நடத்தை அவர்களுடைய கர்த்தரைப் போன்றது. அவர் ஒரு தரத்தை நிறுவியிருக்கிறார், அதைச் சுற்றி நாம் அணிதிரள்வோமா இல்லையா என்பது நம்மை சார்ந்தது. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமானவர்

அவருடைய ஆளுகையையும், அவரது ஐசுவரியங்களையும், மகிமையையும் ஒதுக்கி வைத்துவிட்டு, நம்மை துன்பத்திலிருந்து இரட்சித்து தம்மைப் போல் ஆக்கும்படி நம்மைத் தேடினார். அவர் தம்மைத் தாழ்த்திக் கொண்டார், நாம் அவரைப் பற்றி அறிந்து கொள்ளவும், மேலும் அவரது தயவு மற்றும் சுய வெறுப்பு வாழ்க்கையைப் பின்பற்றி, படிப்படியாக பரலோகத்திற்கு அவரைப் பின்தொடரவும் நம் மனித இயல்பை தரித்துக் கொண்டார். நீங்கள் அசல் பிரதியை சமன் செய்ய முடியாது; ஆனால் நீங்கள் அதற்கு ஒத்திருக்கலாம், உங்கள் திறமைக்கு ஏற்ப அவ்வாறு செய்யக்கூடும். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழுஆத்துமாவோடும், உன் முழுப்பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" கிறிஸ்துவின் சேவையில் ஈடுபடும்படியாக ஒரு ஆத்துமாவில் தாக்கத்தை ஏற்படுத்தும்போது, இந்த உலகத்தின் பொக்கிஷங்களையும் மரியாதைகளையும் கொடுக்க நீங்கள் ஆயத்தமாக இருப்பதற்கு அத்தகைய அன்பு உங்கள் இதயங்களில் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

*நான் வேதத்தை வாசிக்கும்போது, போதகரும் சிருஷ்டிகருமான கிறிஸ்து தரித்திரரானார் என்பதைக் குறித்தும் நான் நித்திய ஐசுவரியங்களைக் பெற முடியும் என்பதைக் குறித்தும் ஆச்சரியப்படுகிறேன்; எனக்கு ஜீவன் கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர் மரித்தார்; அவருடைய ராஜ்யத்திற்காக*

*விலைமதிப்பற்ற ஆத்துமாக்களை இரட்சிப்பதில் அவர் எனக்கு மிகுந்த பாக்கியத்தையும், மிகுந்த ஆர்வத்தின் எடுத்துக்காட்டையும், ஒழுக்கத்தையும், விசுவாசத்தையும் தருகிறார்.*

*வட்டம்:  ஆம்  தீர்மானிக்கவில்லை*

*சிறந்த போதகராகிய கிறிஸ்துவின் அன்பின் முன்மாதிரியைப் பின்பற்ற நான் தெரிவுச்செய்கிறேன், இதனால் செயலில் நடைமுறை அன்பு எப்படி இருக்கும் என்பதை அவரது பிள்ளைகளுக்கு நிரூபிக்கிறேன். நான் அவருடைய அன்பின் நிருபத்தை எழுதி உலகிற்கு வழங்க விரும்புகிறேன்.*

*வட்டம்:  ஆம்  தீர்மானிக்கவில்லை*

*அன்பின் வல்லமையை நான் உணர்ந்து அவருடைய முன்மாதிரியைப் பார்க்கையில், அவர் என்னை நேசிப்பது போல் மற்றவர்களை நேசிக்க வேண்டும் என்பது என் இருதயத்தின் விருப்பம். தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு என்னைச் சார்ந்திருப்பதால் எனக்கு இந்த பாக்கியத்தை அளிக்கவில்லை, மாறாக எனக்குள் ஒரு நற்குண உணர்வை வளர்ப்பதற்காக அளிக்கிறார் என்பதை நான் அறிவேன்.*

*வட்டம்:  ஆம்  தீர்மானிக்கவில்லை*

*நான் அவருடைய பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, இழந்துப்போன மற்றும் மரணத்திற்கு ஏதுவான இந்த உலகத்திற்கு தொடர்ந்து நற்செய்தியை எடுத்துச் செல்ல அவருடைய கரங்களாகவும் கால்களாகவும் அர்ப்பணிக்கப்பட நான் தினமும் கிறிஸ்துவில் நிலைத்திருக்கத் தெரிவுச் செய்கிறேன்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*




## பாடம் 17

## நடைமுறையில் அன்பு

(1) தேவன் தம்முடைய பார்வையில் விலையேறப்பெற்றதாக எண்ணுகிற,

கிறிஸ்துவிலிருந்து வரும் எந்த வரத்தை, தம்மை பின்பற்றுகிறவர்களிடம் காண விரும்புகிறார?

*அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. (1 பேதுரு 3: 4)*

ஆத்துமாவின் மீது மிக அழகான உடையை அணிய அவர் நமக்குக் கட்டளையிடுகிறார். எந்த வெளிப்புற அலங்காரமும் மதிப்பினாலும் அல்லது அன்பினாலும் இந்த தேவனுடைய பார்வையில் "விலையேறப்பெற்றதாக" 1 பேதுரு 3: 4 இருக்கிற, "சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணத்தோடு", ஒப்பிட கூடியதல்ல.

சாந்தமான மற்றும் அமைதியான ஆவியின் ஆபரணமாகிய கிறிஸ்துவின் வரமானது, விலையேறப்பெற்றவரான எந்த தவறும் செய்யாதவரால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது, தேவனிடமிருந்து தேடுவதன் மூலம் நாம் ஒவ்வொருவரும் அதன் மதிப்பை நாமே கண்டிப்பாக கண்டுபிடிக்க வேண்டும். எப்படியினும், மனிதர்கள் நம்மை மதிப்பிடுவார்கள், இந்த ஆபரணத்தை அணிந்தால், கிறிஸ்துவுடனான நமது சீஷத்துவத்தின் அடையாளத்தை சுமக்கிறோம். நாம் உன்னதமானவரால் மதிக்கப்படுகிறோம்; ஏனென்றால் நாம் அணிந்திருக்கும் ஆபரணம் அவருடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இந்த

விலைமதிப்பற்ற ரத்தினம் தேடப்பட வேண்டிய ஒன்றாகும் வேண்டும்.

(2) மற்றவர்களை நேசிக்கும்போது, நம்முடைய உதட்டால் மட்டும் சேவை செய்வதை கர்த்தர் விரும்பாமல், எப்படி அன்புக்கூர வேண்டுமென்று அவர் கூறுகிறார்?

*என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம். (1 யோவான் 3:18)*

"வசனத்தினாலல்ல" "கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்." என்று அப்போஸ்தலன் எழுதுகிறான். மற்றவர்களுக்கு உதவவும் ஆசீர்வதிக்கவும் தூண்டுதல் உள்ளிருந்து தொடர்ந்து தோன்றும்போது கிறிஸ்தவ குணம் பூரணமடைகிறது. விசுவாசியின் ஆத்துமாவைச் சுற்றியுள்ள இந்த அன்பின் சூழ்நிலையே அவனை வாழ்க்கைக்கு வாழ்வின் சுவையாக மாற்றுகிறது மற்றும் தேவன் அவனது வேலையை ஆசீர்வதிக்க உதவுகிறது.

தேவன் மீதான உயர்ந்த அன்பு மற்றும் ஒருவருக்கொருவர் மீதான சுயநலமற்ற அன்பு -இது நம் பரலோகத் தகப்பன் அளிக்கும் சிறந்த வரம். இந்த அன்பு ஒரு மனக்கிளர்ச்சியல்ல, மாறாக அது ஒரு தெய்வீக கொள்கை, ஒரு நிரந்தர வல்லமை.
பரிசுத்தப்படுத்தப்படாத இருதயம் அந்த அன்பை உருவாக்கவோ அல்லது உற்பத்திச் செய்யவோ முடியாது. இயேசுவானவர் ஆட்சி செய்யும் இருதயத்தில் மட்டுமே இது காணப்படுகிறது. "அவர் முந்தி

நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்." தெய்வீக கிருபையால் புதுப்பிக்கப்பட்ட இருதயத்தில், அன்பானது செயல்களை ஆளும் கொள்கையாக இருக்கிறது. இது குணத்தை மாற்றியமைக்கிறது, மனக்கிளர்ச்சிகளை நிர்வகிக்கிறது, உணர்வுகளை கட்டுப்படுத்துகிறது மற்றும் பாசங்களை மேம்படுத்துகிறது. இந்த அன்பு, ஆத்துமாவில் செழித்தோங்கி, வாழ்க்கையை இனிமையாக்குகிறது மற்றும் சுற்றியுள்ள எல்லாவற்றின் மீதும் சுத்திகரிக்கும் ஆதிக்கத்தை செலுத்துகிறது.

(3) உலகத்திற்கு கிறிஸ்துவின் அன்பின் தூதுப்பணியை நாம் சுமந்துச் செல்லும்படிக்கு பட்டியலிடப்பட்டுள்ள இந்த நடைமுறைகளில் எட்டாவது நடைமுறை வழியை சுருக்கமான விவரிக்கவும்:-

*"அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்." (ஏசாயா 58: 6-7)*

நாம் அனைவரும் சுய தியாகம் செய்யும் பணியாளர்களாக இருக்க வேண்டும்

என்று தேவன் விரும்புகிறார். சத்தியத்தின் ஒவ்வொரு பகுதியும் நம் அன்றாட வாழ்க்கையில் ஒரு நடைமுறை பயன்பாட்டைக் கொண்டுள்ளது. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்பவர்கள் பாக்கியவான்கள். கேட்டால் மட்டும் போதாது; நாம் அதன்படி செயல்பட வேண்டும், செய்ய வேண்டும். கட்டளைகளைச் செய்வதில் தான் பெரிய பலன் கிடைக்கும். ஏழைகளுக்கும், துன்பத்தில் இருக்கிறவர்களுக்கும் மற்றும் அவமானப்பட்டவர்களுக்கும் பரிதாபம் மற்றும் இரக்கமுள்ள செயல்களால் தங்கள் நற்குணத்தின் தயாளத்தை வழங்குபவர்கள், பாதிக்கப்பட்டவர்களை விடுவிப்பது மட்டுமல்லாமல், தங்கள் சொந்த மகிழ்ச்சிக்கு பெரிதும் பங்களிக்கிறார்கள் மற்றும் ஆத்துமா மற்றும் உடலின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் வழியில் செல்கின்றனர். ஏசாயா தனது மக்கள் செய்யும் எந்த வேலையை தேவன் ஏற்றுக்கொள்வார் மற்றும் ஆசீர்வதிப்பார் என்று தெளிவாக விவரித்துள்ளான்.

(4) நாம் அன்பிலும் மற்றும் கிறிஸ்துவின் ஆவியிலும் நிரப்பப்பட்டால், மற்ற விசுவாசிகளோடான நம் உறவில் எந்த அன்பின் பண்புகள் வெளிப்படும்?

*நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். (பிலிப்பியர் 2: 2)*

கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகக் கூறும் ஒவ்வொருவரும் தன்னை

குறைவாகவும் மற்றவர்களை அதிகமாகவும் மதிக்கட்டும். ஒன்றாக இணைந்து செல்லுவோம்! ஐக்கியத்தில் வலிமையும் வெற்றியும் உள்ளது; முரண்பாடு மற்றும் பிளவுகளில், பலவீனம் மற்றும் குறைபாடு உள்ளது. இந்த வார்த்தைகள் பரலோகத்தில் இருந்து என்னிடம் கூறப்பட்டுள்ளது ... அனைவரும் கிறிஸ்துவின் ஜெபத்திற்கு பதிலளிக்க நாடுவோமாக: "ஒருவருக்கொருவர் அன்பு இருந்தால் நீங்கள் என் சீஷர்கள் என்பதை எல்லா மனிதர்களும் அறிவார்கள் “அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்…நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல” ஓ, என்ன ஒற்றுமை இது! “நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்” என்று கிறிஸ்து கூறுகிறார்.

(5) நாம் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருந்தால் மற்றும் அவருடைய அன்பு நம் மூலமாக ஊற்றெடுத்து ஓடினால், நாம் மற்றவர்களை எப்படி நடத்துவோம்?

*உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக; தீமையை வெறுத்து, நன்மையைப்பற்றிக்கொண்டிருங்கள். சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். (ரோமர் 12: 9-10)*

இரட்சகரின் உதாரணமே சோதிக்கப்படுகிறவர்களுக்கும் தவறு செய்பவர்களுக்கும் நம் சேவையின் தர

அளவாக இருக்க வேண்டும். அவர் நம்மீது வெளிப்படுத்திய அதே ஆர்வம், கனிவு மற்றும் நீடியப் பொறுமை ஆகியவை மற்றவர்களிடமும் காட்டப்பட வேண்டும். “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்” என்று அவர் கூறுகிறார் யோவான் 13:34. . கிறிஸ்து நம்மில் நிலைத்திருந்தால், நாம் சேவை செய்ய வேண்டிய அனைவரிடமும் அவருடைய தன்னலமற்ற அன்பை வெளிப்படுத்துவோம். இரக்கமும் உதவியும் தேவைப்படும் ஆண்களையும் பெண்களையும் நாம் காணும்போது, "அவர்கள் தகுதியானவர்களா?" ஆனால் "நான் அவர்களுக்கு எப்படி நன்மை செய்ய முடியும்?" என்று கேட்கமாட்டோம்.

நமக்காக கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பூமிக்குரிய ஆசீர்வாதமும் செலுத்தப்பட்ட நித்தியமான விலைக்கிரயத்தின் காரணமாக வந்துள்ளது. மனிதன் அழிந்துப்போகாமல், நித்திய ஜீவனைப் பெறும்படிக்கு அவனை மீட்பதற்கு இவ்வளவு பெரிய விலை கொடுக்கப்பட்டிருப்பதால், கிறிஸ்து தம்முடைய விலையேறப்பெற்ற ஜீவனைக் கொடுத்தவர்களைக் இரட்சிப்பதற்காக நாம் கிறிஸ்துவின் உடன் வேலையாட்களாக மாறும் பாக்கியத்தைக் குறித்து நாம் எவ்வளவு சந்தோஷப்பட வேண்டும். கர்த்தராகிய இயேசு தாம் யாருக்காக மிகப் பெரிய தியாகம் செய்தாரோ அவர்களை நேசிக்கிறார். விசுவாசிக்கிற அனைவருக்கும் ஜீவனையும் அழியாத தன்மையையும் வெளிச்சத்திற்கு கொண்டு வர அவர் தனது சொந்த

ஜீவனைக் கொடுத்தார். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" {யோவான் 17: 3} கிறிஸ்துவைப் ஏற்றுக்கொள்பவர்கள் அவருடன் ஒத்துழைப்புடன் இருக்கிறார்கள், மேலும் அவர்களின் ஜீவனுக்குரிய வேலையை தவறாக நினைக்க மாட்டார்கள். கிறிஸ்து சொன்ன வார்த்தைகளுக்கு அவர்கள் செவிசாய்ப்பார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுவார்கள், மேலும் தேவனின் கடமைகள் குறித்து மேலும் மேலும் புத்திசாலித்தனமானவர்களாக மாறிவிடுவார்கள், மற்றும் அவர்கள் யாரிடமெல்லாம் தொடர்பு கொள்கிறார்களோ அவர்களிடமெல்லாம் கிறிஸ்துவின் வாழ்க்கையில் வெளிப்படுத்தப்பட்ட அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துவார்கள்.

(6) கிறிஸ்து பிதாவுடன் ஐக்கியமாக இருப்பதுப்போல நாம் கிறிஸ்துவுடன் ஐக்கியத்திலிருக்கும்போது, இந்த சீஷத்துவம் உலகத்திற்கு எவ்வாறு வெளிப்படுத்தப்படும்?

*நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார். (யோவான் 13:35)*

கிறிஸ்துவுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையிலான ஒற்றுமையானது, பிதாவுக்கும் குமரானுக்கும் இடையே இருக்கும் ஒற்றுமையைப் போல ஜீவனுள்ளதாயும், உண்மையுள்ளதாயும் மாறாததாகவும் இருக்க வேண்டும். இந்த ஐக்கியமானது

பரிசுத்த ஆவியானவர் உள்வாசம் செய்வதின் கனி. தேவனுடைய உண்மையான பிள்ளைகள் அனைவரும் கிறிஸ்துவுடனும் அவர்களது சகோதரர்களுடனும் உள்ள தங்கள் ஐக்கியத்தை உலகிற்கு வெளிப்படுத்துவார்கள். கிறிஸ்துவை தங்கள் இருதயத்தில் நிலைத்திருக்க செய்பவர்கள் சகோதர அன்பின் பலனைப் பெறுவார்கள். தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்களாக அவர்கள் கிறிஸ்தவ அன்பு மற்றும் ஐக்கியம், ஆவி, வார்த்தைகள் மற்றும் செயல்பாட்டை வளர்ப்பது, போற்றுவது மற்றும் நிலைநிறுத்துவது உறுதி என்பதை அவர்கள் உணர்வார்கள்.

தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதானது, இராஜரீக குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், என்பது பலர் நினைப்பதை விட அதிக பொருள் பதிந்த ஒன்று. தேவனால் அவருடைய பிள்ளைகளாகக் கருதப்படுபவர்கள் கிறிஸ்துவை போன்ற அன்பை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்துவார்கள். அவர்கள் உலகிற்கு உலகத்திற்கு கிறிஸ்துவை சரியாக பிரதிநிதித்துவப்படுத்துவது என்ற ஒரு நோக்கத்திற்காக வாழ்ந்து உழைப்பார்கள். அவர்களின் அன்பு மற்றும் மற்றும் ஒற்றுமையால் தெய்வீக நற்சான்றுகளை தாங்கி இருப்பதை உலகிற்கு காண்பிப்பார்கள். அன்பு மற்றும் சுய வெறுப்பின் பெருந்தன்மையால், அவர்கள் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு தாங்கள் இரட்சகரின் உண்மையான பின்தொடர்பவர்கள் என்பதைக் காண்பிப்பார்கள். “நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால்

நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.”

(7) மற்றவர்களிடம் நாம் கிறிஸ்துவைப்போன்ற அன்பையும், இரக்கத்தின் கிரியைகளையும் காட்டி மற்றும் ஊக்கப்படுத்தும் வார்த்தைகளை பேசும்போது, அது எதற்கு ஒப்பிடப்படக்கூடும்?

*ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம். (நீதிமொழிகள் 25:11)*

கிறிஸ்து நேசித்ததைப் போல நேசிப்பது என்பது எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும், அன்பான வார்த்தைகள் மற்றும் இனிமையான தோற்றங்களால் சுயநலமின்மையை வெளிப்படுத்துவதாகும். இதை தருபவர்களுக்கு அது எந்த பண செலவையும் ஏற்படுத்தாது. ஆனால் அது ஆத்துமாவைச் சுற்றி நறுமணத்தை விட்டுச்செல்கிறது. அதன் விளைவை ஒருபோதும் மதிப்பிட முடியாது. அதை பெறுபவருக்கு மட்டுமல்ல, கொடுப்பவருக்கும் ஒரு ஆசீர்வாதம்; ஏனென்றால் அவர்கள் அவற்றின் மேல் எதிர்வினையாற்றுகிறார்கள்.
உண்மையான அன்பு என்பது பரலோகத்தில் உருவான விலைமதிப்பற்ற பண்பு, இது மற்றவர்களுக்கு விநியோகிக்கப்படுவதால் நறுமணத்தின் விகிதத்தை அதிகரிக்கிறது.
கிறிஸ்துவின் அன்பு ஆழமானது மற்றும் மெய் ஆர்வம் கொண்டது, அதை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் கட்டுக்கடங்காத நீரோடை போல பாய்கிறது. அவருடைய அன்பில் சுயநலம் இல்லை. பரலோகத்தில் பிறந்த

இந்த அன்பு இருதயத்தில் ஒரு நிலையான தத்துவமாக இருந்தால், அது ஒரு பரிசுத்தமான உறவில் நாம் மிகவும் நேசிப்பவர்களுக்கு மட்டுமல்லாமல், நம்மை தொடர்பு கொள்ளும் அனைவருக்கும் அது தன்னை தெரியப்படுத்தி விடும். இது சிறிய கவனத்தை ஈர்க்கவும், சலுகைகளை வழங்கவும், இரக்கமுள்ள செயல்களைச் செய்யவும், கனிவான, உண்மையான மற்றும் ஊக்கமளிக்கும் வார்த்தைகளைப் பேசவும் வழிநடத்தும். இரக்கத்தின்மேல் பசி தாகம் உள்ள இருதயங்களுக்கு இரக்கம் காட்ட இது நம்மை வழிநடத்தும்.

(8) இந்த வசனப்பகுதியிலுள்ள தேவனுடைய அன்பு மற்றும் முன்மாதிரியின் 16 நடைமுறைரீதியான பண்புகளை பட்டியலிடுங்கள்:-

*அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோகும், அறிவானாலும் ஒழிந்துபோம்.*
*(1 கொரிந்தியர் 13: 4-8)*

ஒரு மனிதன் தன் கையை உடற்பயிற்சி செய்யாவிட்டால், அது பலவீனமாகி, தசை வலிமையில் குறைபாடு ஏற்படும்.

கிறிஸ்தவன் தனது ஆவிக்குரிய வல்லமைகளைப் பயன்படுத்தாவிட்டால், அவன் குணத்தின் வலிமையையும், ஒழுக்க நெறி வலிமையையும் பெற மாட்டான். அன்பு மிகவும் விலைமதிப்பற்ற தாவரமாகும், அது செழிப்படைய வேண்டுமென்றால், வளர்க்கப்பட வேண்டும். அன்பின் விலைமதிப்பற்ற தாவரம் கனிவாக நடத்தப்பட (பயிற்சிக்கப்பட) வேண்டும், அது வலுவாகவும் உள்ளூரம் வாய்ந்ததாகவும் மற்றும் கனிகளை தருவதில் சிறந்ததாகவும் இருக்கும், இது முழு தன்மையையும் வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவைப் போன்ற இயல்பு சுயநலமற்றதும், இரக்கமுள்ளதும், சாத்தானின் சோதனைகளுடன் போராடுபவர்களின் ஆத்துமாக்களை காயப்படுத்தாதுமானது. பாடுகள் மற்றும் சோதனைகள் தங்கத்தை வெளிக்கொணர்ந்து குப்பையை உட்கொள்ளும் அளவுக்கு நிர்வகிக்கப்பட்டு சோதிக்கப்படுபவர்களின் உணர்வுகளில் அது நுழையும். இது தேவன் அனைவருக்கும் நியமிக்கும் நடைமுறை. இந்த, கிறிஸ்துவின் பள்ளியில், அனைவரும் பொறுமையாகவும், தாழ்மையுடனும், தாராளமாகவும், உன்னதமாகவும் இருக்க ஒவ்வொரு நாளும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இருவரும் தங்கள் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். ஜீவனுள்ள விசுவாசத்துடன் கலந்த ஜெபத்தில் நீங்கள் அனைவரும் தேவனை மிகவும் தீவிரமாகத் தேட வேண்டும், மேலும் தேவனுடைய வடிவமைக்கும் கரம் உங்கள் குணாதிசயத்தில் அவரது சொந்த சாயலை வெளிப்படுத்தும்.

ஒவ்வொரு மணி நேரமும் தேவனுடைய கிருபையின் ஐசுவரியம் நமக்குத் தேவை, பிறகு நாம் ஒரு சிறந்த, நடைமுறை அனுபவத்தைப் பெறுவோம், ஏனென்றால் தேவன் அன்பாக இருக்கிறார். அன்பில் நிலைத்திருப்பவன் தேவனில் நிலைத்திருக்கிறான். அன்பு அதிகம் தேவைப்படுவோருக்கு கொடுங்கள். மிகவும் அவமானகரமான, மிகவும் விரும்பத்தகாத மனநிலையைக் கொண்டவர்களுக்கு நம் அன்பு, கனிவு, மற்றும் இரக்கம் ஆகியவை தேவை. நம் பொறுமையை சோதிப்பவர்களுக்கு அதிக அன்பு தேவை.

(9) தேவனுடைய தெய்வீக அன்பு இருதயத்தில் நிலைத்திருக்கும்போது, தேவையிலுள்ளவர்களுக்கு கிறிஸ்துவைப்போன்ற எந்த பண்பு விலக்கப்படாது?

*ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்கு தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? (1 யோவான் 3:17)*

கிறிஸ்துவின் வாழ்க்கை என்பது தேவனுடையஅன்பின் தெய்வீகச் செய்திகளால் நிரப்பப்பட்ட ஒரு வாழ்க்கையாகும், மேலும் இந்த அன்பை மற்றவர்களுக்கு பெரிய அளவில் வழங்க அவர் தீவிரமாக விரும்பினார். இரக்கம் அவரது முகத்திலிருந்து வெளிப்பட்டது, அவருடைய நடத்தை தயவு, பணிவு, உண்மை மற்றும் அன்பால் வகைப்படுத்தப்பட்டது. அவரது சபை சேனையின் ஒவ்வொரு உறுப்பினரும் சபையின் வெற்றியில் பங்குப்பெற

விரும்பினால் அதே குணங்களை வெளிப்படுத்த வேண்டும். கிறிஸ்துவின் அன்பு மிகவும் அகலமானது, மகிமை நிறைந்தது, அதனுடன் ஒப்பிடுகையில், மனிதர்கள் பெரிதாக மதிக்கும் அனைத்தும் அற்பமானதாகி விடுகின்றன. அதன் ஒரு பார்வையை நாம் பெறும்போது, தேவன் தமது ஒரேபேறான குமாரனின் வரத்தில் மனிதர்களுக்கு அளித்த அன்பின் ஐசுவரியத்தின்ஆழத்தை நாம் உரத்துக்கூறுகிவோம்!

கிறிஸ்து வெளிப்படுத்திய அதே கனிவான இரக்கத்தை வெளிப்படுத்தும்படி நம்மை அழைக்கும் போது தெய்வீக அன்பு வேண்டுகோள் இருதயத்தை அதிகமாக தொடுகிறது. தன் சகோதரனிடம் தன்னலமற்ற அன்பு கொண்ட மனிதன் மட்டுமே தேவன் மீது உண்மையான அன்பைக் கொண்டிருக்கிறான். உண்மையான கிறிஸ்தவன் விருப்பப்பட்டு ஆத்துமாவை அழிவிற்கும், எச்சரிக்கை இல்லாமல், மற்றும் அக்கறை இல்லாமல் செல்ல அனுமதிக்க மாட்டான். மகிழ்ச்சியற்ற தன்மையில் முழ்கடித்துவிடும்படிக்கும், மற்றும் சோர்வடைந்து விடும்படிக்கும் அல்லது போர்களத்தில் சாத்தானிடம் தோல்வியடைந்து விடும்படிக்கும் அவன் தவறுசெய்து தன்னை ஒதுக்கி வைத்துக்கொள்ள மாட்டான்.

(10) பரிசுத்த ஆவியின் வல்லமையினால், ஆத்துமாவிற்கு சுத்திகரிப்பை உண்டுப்பண்ணுகிறதும் ஒருவருக்கொருவர் மனதார அன்புகூருகிறதுமான எதற்கு நாம் கண்டிப்பாக கீழ்ப்படிய வேண்டும்?

*ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி,*

*ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள். (1 பேதுரு 1:22)*

சத்தியத்தின் புளிப்பூட்டும் பொருளானது இருதயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆசைகளை ஒழுங்குபடுத்துகிறது, எண்ணங்களை தூய்மையாக்குகிறது மற்றும் மனநிலையை இனிமையாக்குகிறது. மனதின் திறன்களையும் ஆத்துமாவின் ஆற்றல்களையும் துரிதப்படுத்துகிறது. இது உணரும் திறனை, அன்பை அதிகரிக்கிறது.

தேவனுடைய வார்த்தையானது மனித குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருடனான நமது தொடர்பை பரிசுத்தப்படுத்தும் விளைவை ஏற்படுத்துவதாகும். சத்தியத்தின் புளிப்பூட்டும் பொருளானது போட்டி மனப்பான்மையை, லட்சியத்தின் அன்பை, முதன்மையாயிருப்பதின் விருப்பத்தை உருவாக்காது. உண்மையான, பரலோகத்தில் பிறந்த அன்பு சுயநலமற்றது மற்றும் மாறக்கூடாதது. இது மனிதப் புகழைச் சார்ந்தது அல்ல. தேவனுடைய கிருபையைப் பெறும் அவனுடைய இருதயமானது தேவனுடைய அன்பினாலும் மற்றும் கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்கள் மீதான அன்பினால் நிரம்பி வழிகிறது. சுயமானது அங்கீகாரத்திற்காக போராடவில்லை. மற்றவர்கள் அவனை நேசிக்கிறார்கள் மற்றும் மகிழ்விக்கிறார்கள், அவர்கள் அவனுடைய தகுதிகளை பாராட்டுகிறார்கள், என்பதற்காக

நேசிக்கவில்லை, மாறாக அவர்கள் கிறிஸ்துவினால் விலைக்கிரயமாக கொள்ள சுதந்திரம் என்பதற்காக நேசிக்கிறான். அவனது நோக்கங்கள், வார்த்தைகள் அல்லது செயல்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டாலோ அல்லது தவறாக சித்தரிக்கப்பட்டாலோ, அவன் எந்தத் தவறும் செய்ய மாட்டான், ஆனால் தன்னுடைய வழியின் சமநிலையைத் தொடர்கிறான். அவன் கனிவானவன், தன்னைப் பற்றிய தாழ்மையான சிந்தனை கொண்டவன், ஆனால் நம்பிக்கை நிறைந்தவன், எப்போதும் தேவனுடைய இரக்கம் மற்றும் அன்பை நம்புகிறான்.

முகத்தோற்றம் மாற்றப்பட்டுள்ளது. கிறிஸ்து இருதயத்தில் நிலைத்திருந்து அவரை நேசிப்பவர்கள் மற்றும் அவருடைய கற்பனைகளைக் கடைப்பிடிப்பவர்களின் முகங்களில் பிரகாசிக்கிறார். சத்தியம் அங்கே எழுதப்பட்டுள்ளது. பரலோகத்தின் இனிமையான சமாதானம் வெளிப்படுகிறது. மனித அன்பை விட, ஒரு பழக்கமான கனிவு வெளிப்படுகிறது.

(11) நாம் நம்முடைய சுய சிந்தனையை அப்புறப்படுத்தி, கர்த்தருடைய கட்டளயான மற்றவர்களுடனான நடைமுறை அன்பை பின்பற்றினால், எந்த ஆசீர்வாதம் நமக்கு திரும்பி வரும்?

*பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ*

*எனக்கு உகந்த உபவாசம். அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். (ஏசாயா 58: 7-8)*

மகிழ்ச்சியான பாடங்களில் தங்குவதற்கு தங்கள் மனதை ஒழுங்குபடுத்துவது ஒரு மதக் கடமை என்று உணராதவர்கள் வழக்கமாக இரண்டு உச்சங்களில் ஒன்றில் இருப்பதைக் காணலாம்: அற்பமான உரையாடல்கள், சிரிப்பு, தொடர்ச்சியான உற்சாகமான பொழுதுபோக்கு மற்றும் நகைச்சுவைகளால் அவர்க்ள் மகிழ்ச்சியடைவார்கள். அல்லது சோதனைகள் மற்றும் மனப்போராட்டங்களை எவருமே அனுபவித்திராதது அல்லது புரிந்து கொள்ள முடியாததது என்று நினைத்து பெரும் மனச்சோர்வடைவார்கள். பொருத்தமான உழைப்பு, அவர்களின் அனைத்து ஆற்றல்களுக்கும் ஆரோக்கியமான உடற்பயிற்சி, அவர்களிடமிருந்து இப்படிப்பட்ட தங்களைக் குறித்த எண்ணங்களை திரும்பப் பெற வைக்கும். கரங்களும் மனமும் பயனுள்ள உழைப்பில் ஆக்கிரமிக்கப்பட வேண்டும், மற்றவர்களின் சுமைகளை குறைக்க வேண்டும்; இவ்வாறு வேலையில் ஈடுபத்திக்கொள்கிறவர்கள் தங்களுக்கு நன்மை அடைவார்கள். மனதை சுயத்திலிருந்து விலக்க வேண்டும், அதன் ஆற்றல்கள் மற்றவர்களை மகிழ்ச்சியாகவும் சிறப்பாகவும் ஆக்குவதற்கான வழிமுறைகளை வகுப்பதில் பயன்படுத்தப்பட வேண்டும். “திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும்

**படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.” (யாக்கோபு 1:27).**

*நான் கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றிய தேவனுடைய வார்த்தையைப் படிக்கும்போது, "கனிவான மற்றும் சாந்தமான ஆவியில்" அழகையும் மதிப்பையும் பார்க்கிறேன். தேவனுடைய பார்வையில் விலைமதிப்பற்ற இந்த பண்புகள் என் வாழ்க்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே எனது ஜெபம்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*நான் தேவன் மட்டுமே அளிக்கக்கூடிய தேவன் மீதான அன்பு மற்றும் மற்றவர்களிடம் சுயநலமற்ற அன்பைாகிய வரத்தை விரும்புகிறேன். அது அவருடைய மகிமைக்காக என் குணத்தை மாற்றியமைக்கட்டும், என் மனக்கிளர்ச்சிகளை நிர்வகிக்கட்டும், என் உணர்வுகளை கட்டுப்படுத்தட்டும், என் பாசங்களை மேம்படுத்தட்டும்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*நான் என் வாழ்வில் செயல்முறைப்படுத்த நான் தேர்ந்தெடுத்த அன்பு மற்றும் கிருபையால் நான் கிறிஸ்துவின் சீடராக*

*இருக்கிறேன் என்பதை உலகம் பார்க்க வேண்டும் என்பதே எனது ஜெபம்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*நான் என் இருதயத்தில் சத்தியத்தின் புளிப்பூட்டும் பொருளை பெறும்படி தேவனிடம் கேட்கிறேன், அது என் ஆசைகளை ஒழுங்குபடுத்தி, என் எண்ணங்களை தூய்மைப்படுத்தி, கிறிஸ்துவின் தூதுப்பணியை உலகிற்கு எடுத்துச் செல்லும் கரங்களாகவும் கால்களாகவும் நான் இருக்க வேண்டும்.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*



## பாடம் 18

## நம் சத்துருக்களை நேசித்தல்

(1) ஒரு கிறிஸ்தவர்களாக நாம் நம்முடைய சத்துருக்களை எவ்வாறு நடத்த அழைக்கப்படுகிறோம் என்பதை விளக்கும் மூன்று வார்த்தைகள் யாது?

*நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை*

*ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். (மத்தேயு 5:44)*

அன்பு அதிகம் தேவைப்படுவோருக்கு கொடுங்கள். மிகவும் அவமானகரமான, மிகவும் விரும்பத்தகாத மனநிலையைக் கொண்டவர்களுக்கு நம் அன்பு, கனிவு, மற்றும் இரக்கம் ஆகியவை தேவை. நம் பொறுமையை சோதிப்பவர்களுக்கு அதிக அன்பு தேவை. இந்த உலகத்தை நாம் ஒரு முறை மட்டுமே கடந்து செல்கிறோம்; நாம் செய்யக்கூடிய எந்த ஒரு நல்ல காரியத்தையும், கிறிஸ்து தம்முடைய பணியில் செய்தார் என்று கூறப்பட்டிருக்கும் அதே ஆவியுடன் நாம் மிகவும் ஆர்வத்துடன், சோர்வின்றி செய்ய வேண்டும். அவர் தோல்வியடைய மாட்டார் அல்லது சோர்வடைய மாட்டார். கரடுமுரடான, பிடிவாதமான, மோசமான மனநிலைகளிலுள்ளவர்களே மிகவும் உதவி தேவைப்படுகிறவர்கள். அவர்களுக்கு எப்படி உதவ முடியும்? கிறிஸ்து வீழ்ச்சியடைந்த மனிதனை கையாண்டு அவனுக்கு வெளிப்படுத்தின இந்த அன்பை நடைமுறைப்படுத்துவதினால் மட்டுமே உதவ முடியும். நீங்கள் ஒருவேளை அவர்களுடைய தகுதிக்கு தகுந்தாற்போல் அவர்களை நடத்தலாம். ஆனால் கிறிஸ்து நம்மை இவ்வாறு நடத்தினால் என்ன செய்வது? நாம் தகுதியானவர்களாக இராதப்போதும், அவர் நம்மை தகுதியானவர்கள் போல் நடத்தினார்.

நாம் இன்னும் தகுதியற்றவர்களாக இருந்தாலும், கிறிஸ்து

தகுதியுடையவராக இருப்பதால், அவருடைய கிருபையினாலும் அன்பினாலும் தகுதியுடையவர்களாக நடத்தப்படுகிறோம். சில குணநலன்களை அவைகள் உயர் தகுதி வாய்ந்தவைகள் என்று நீங்கள் நினைப்பது போல் அணுகும்போது, நீங்கள் அவைகளிடமிருந்து உங்கள் நம்பிக்கையின் கடைசி இழையை துண்டித்துவிட்டு, உங்கள் செல்வாக்கை கெடுத்து, ஆத்துமாவை அழித்துக்கொள்வீர்கள். அது உங்களுக்குரிய விலையை அது கொடுக்குமா? நிச்சயமாக இல்லை, நான் இல்லை என்று நூறு முறை சொல்கிறேன். அனைத்து உதவிகளும் தேவைப்படும் இந்த ஆத்துமாக்களை பிணைப்பதற்கு, அன்பான, பரிதாபமுள்ள, இரக்கமுள்ள இருதயத்தோடு, கிறிஸ்துவைப் போன்ற அன்பால் நிரம்பி வழிவது சாத்தியமானால் நீங்கள் ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இலட்சித்து, ஏராளமான பாவங்களை மறைப்பீர்கள். அன்பின் செயல்முறையை நாம் சிறப்பாக முயற்சி செய்துப்பார்த்திருக்க வேண்டாமா?

இங்கு பார்க்கப்படும் கொள்கைகள் கவனத்தில் கொள்வதற்கு அடிக்கடி தவறப்படுகிறதா?
அவைகளைப் பின்பற்றுவதன் மூலம் தவிர்க்கப்படக்கூடிய தீமையின் அளவு எந்த வகையிலும் சிறியதல்ல: ஏனென்றால், அப்போஸ்தலனாகிய பவுலின் இருதயம் மனமாற்றத்திற்கு முன்பு இருந்ததைப் போல, சில சமயங்களில் துன்புறுத்துபவர்களின் இருதயங்கள் தெய்வீக உணர்வுகளுக்கு தொய்விற்குள்ளானது. தேவன் குறிப்பிட்டபடி அவருடைய முழு சித்தத்தையும் நிறைவேற்ற முயற்சிப்பது

எப்போதும் சிறந்தது. அதன் அவர் விளைவுகளை கவனித்துக்கொள்வார்.

(2) நம்முடைய சத்துருக்களை நேசிக்கும்படிக்கு கூறினப்பின்னர், கிறிஸ்து எந்த முக்கியமான வழிமுறைகளை விவரிக்கிறார்?

*நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சினேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். (மத்தேயு 5:44)*

இந்த கடமையை முன்வைக்கும் முன், இரட்சகர் தமது சீஷர்களிடம் இவ்வாறு கூறினார்: “உங்கள் சத்துருக்களைச் சினேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்.” கிறிஸ்து தமது சத்துருக்களைக் இரட்சிக்கும்படியாக தமது ஜீவனைக் கொடுத்து அன்பை வெளிப்படுத்தின அதே அன்பினால் நம் சத்துருக்களை நேசிக்க வேண்டும். பலர், “இது கடினமான கட்டளை; ஏனென்றால், என்னால் முடிந்தவரை என் சத்துருக்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள விரும்புகிறேன்.” என்று சொல்லக்கூடும், ஆனால் உங்கள் சொந்த விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுவது நமது இரட்சகர் கொடுத்த கொள்கைகளை நிறைவேற்றாது. “உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்” உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதனால் நீங்கள்

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தங்கள் சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" என்று அவர் கூறுகிறார். இந்த வேதவசனப்பகுதி கிறிஸ்தவ பரிபூரணத்தின் ஒரு கட்டத்தை விளக்குகிறது. நாம் தேவனுக்கு சத்துருக்களாக இருந்தபோது, கிறிஸ்து நமக்காக தமது ஜீவனைக் கொடுத்தார். நாம் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

கிறிஸ்து அவர்களை நேசிப்பது போல நம் சத்துருக்களை நேசிப்பதன் மூலம் கிறிஸ்துவின் பெரிதான அன்பை தினமும் பிரதிநிதித்துவப்படுத்துவோமாக. நாம் கிறிஸ்துவின் கிருபையை பிரதிநிதித்துவப்படுத்தினால், வெறுப்பின் வலுவான உணர்வுகள் உடைந்து பல இருதயங்களில், உண்மையான அன்பு கொண்டு வரப்படும். இப்போது காணப்படுவதை விட அதிகமான மனமாற்றங்கள் பின்தொடரும்.

(3) நாம் உணவு மற்றும் பானம் கொடுத்து தீமைக்கு பதிலாக நன்மை செய்யும்போது, அவர்களுடைய மனசாட்சியில் எவ்வித தாக்கம் ஏற்படும்?

*அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். (ரோமர் 12:20)*

நியாயத்தீர்ப்பு வரும் வரை, ஒரு வகையான, கருத்தற்ற செயல்பாட்டின்

சீரற்ற, நியாயமற்ற மற்றும் தகுதியற்ற செயல்பாடு உண்டுப்பண்ணும் விளைவை நாம் அறிந்துக்கொள்ள முடியாது. சத்துருக்களிடமிருந்து வந்த ஆத்திரமூட்டுதல் மற்றும் அநீதிக்குப் பின்னர், நீங்கள் அவர்களை ஒரு அப்பாவியான நபராகக் கருதி, அவர்களிடம் விசேஷமான இரக்கச் செயல்களைக் காட்ட நீங்கள் கடினமாக உழைப்பீர்கள் என்றால், நீங்கள் ஒரு கிறிஸ்தவரின் பங்கைச் செய்கிறீர்கள், இதனால் அவர்கள் ஆச்சரியப்படுவார்கள் மற்றும் வெட்கப்படுவார்கள். ஒருவேளை நீங்கள் அவர்களுடைய மோசமான செயல்களை வெளிப்படையாக கண்டித்து அதை சுட்டிக்காட்டி புரிய வைப்பதை விட இப்படி செய்வது அவர்களின் செயல்களையும் அர்த்தத்தையும் தெளிவாகப் பார்க்க வைக்கும்.

நீங்கள் அவர்களின் தவறான நடவடிக்கையை அவர்கள் முன் வைத்திருந்தால், அவர்கள் பிடிவாதத்திலும், மீறுதலிலும் தங்களை வளர்த்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் கனிவாகவும் கருத்தாகவும் நடத்தப்படும்போது அவர்கள் தங்கள் நடவடிக்கையின் போக்கை மிகவும் ஆழமாகவும் மற்றும் உங்களுடையதை விட மாறுபடுவதையும் உணர்கிறார்கள். பிறகு . . . நீங்கள் ஒருவருக்கு நன்மை அளிக்கும் ஒரு நிலையை ஆக்கிரமித்து இருக்கிறீர்கள்; நீங்கள் அவர்களின் ஆத்துமாக்களிடம் ஆர்வ அக்கறையைக் காட்டும்போது, நீங்கள் ஒரு கபடதாரியல்ல என்பதை அவர்கள் அறிகிறார்கள், மேலும் நீங்கள் சொல்லும் ஒவ்வொரு கூறும் வார்த்தையையும் நீங்கள் அர்த்தம் நிறைந்ததாக்குகிறீர்கள்.

(4) தம்மை தீமையால் எதிர்க்கொண்டவகள் மேல் கிறிஸ்து எவ்வாறு எதிர்வினையாற்றினார்?

*அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். (1 பேதுரு 2:23)*

இயேசுவின் முழு பூமிக்குரிய வாழ்க்கையும் இந்தக் கொள்கையின் வெளிப்பாடாக இருந்தது. நம்முடைய இரட்சகர் அவருடைய சத்துருக்களுக்கு ஜீவ அப்பத்தைக் கொண்டுவருவதற்காகவே பரலோகத்திலிருந்த தம் வீட்டை விட்டு வெளியேறினார். தொட்டிலில் இருந்து கல்லறை வரை அவர் மேல் கொடுமைகள் மற்றும் துன்புறுத்தல்கள் குவிந்திருந்தாலும், அவரிடமிருந்து அவர்கள் அன்பை, மன்னிக்கும் வெளிப்பாடாக மட்டுமே கிடைக்கப் பெற்றனர். “அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை” ஏசாயா 50: 6. என்று ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் அவர் கூறுகிறார்.

(5) தேவனுடைய பிள்ளைகளின் பரலோக முக்கியத்துவம் வாய்ந்த எந்த செயல் நாம் தேவனுடைய குடும்பத்தின் ஒரு பகுதியாக இருக்கிறோம் என்பதற்கு சாட்சிப் பகருகிறது?

*உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்;*

*அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. (லூக்கா 6:35)*

தேவனுடைய இயல்பில் பங்காளிகளாக இருப்பவர்களே அவருடைய பிள்ளைகள். நாம் தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் என்பதை நிரூபிப்பதற்கு; இது பூமிக்குரிய பதவி அல்ல, பிறப்பு, தேசியம் அல்லது மத சலுகை அல்ல, இந்த அன்பானது, அனைத்து மனித இனத்தையும் தழுவிய அன்பு. தேவனுடைய ஆவிக்கு இருதயம் முழுமையாக மூடப்படாத பாவிகளும்கூட தயவான செயலுக்கு மறுஉத்தரவளிப்பார்கள்; அவர்கள் வெறுப்பிற்கு பதிலாக வெறுப்பையும் அன்பிற்கு பதிலாக அன்பையும் கொடுப்பார்கள். ஆனால் தேவனுடைய ஆவி மட்டுமே வெறுப்புக்கு அன்பை அளிக்கிறது. நன்றி இல்லாதவர்களுக்கும் தீயவர்களுக்கும் தயவுசெய்து, எந்த எதிர்பார்ப்புமில்லாமல் நன்மைச் செய்வது, பரலோகத்தின் அரசுரிமையின் அடையாளமாகும், உயர்ந்தவரின் பிள்ளைகள் தங்கள் உயர்நிலையை வெளிப்படுத்தும் உறுதியான அடையாளமாகும்.

(6) பொறாமை, சுயநலம், மற்றும் பெருமை ஆகியவை இருக்குமிடத்தில் இருந்துக்கொண்டு மற்றும் கிறிஸ்துவினுடைய அன்பின் ஆவியுடன் இணைந்திருப்பதற்கு தடையாகவும் இருப்பது எது?

*வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு (யாக்கோபு 3:16)*

சுயநலமும் பெருமையும் இயேசு கிறிஸ்துவுடன் நம்மை ஆவிக்குள் ஒன்றிணைக்கும் தூய அன்பைத் தடுக்கிறது. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துங்கள் ... இந்த அன்பு உண்மையிலேயே வளர்க்கப்பட்டால், வரையறுக்கப்பட்டவர்கள் வரையறுக்கப்பட்டவர்களுடன் ஒன்று கலந்து, எல்லாரும் நித்தியமானவருக்குள் மையங்கொள்வார்கள். மனிதத்தன்மை மனிதத்தன்மைடன் ஒன்றிணையும், நித்தியமான அன்பின் இருதயத்துடன் அனைவரும் பிணைக்கப்படுவார்கள். ஒருவர் மீது ஒருவர் காட்டும் இந்த சுத்திகரிக்கப்பட்ட அன்பு பரிசுத்தமானது. இப்படி ஒருவர் மீது ஒருவர் காட்டும் இந்த மாபெரும் பணியில், கிறிஸ்தவ அன்பானது உயர்ந்தாக, நிலையானதாக, மதிப்புமிக்கதாக, தன்னலமற்றதாக, பார்க்கப்படுவதை விட - அதிக கிறிஸ்தவ கனிவை, அதிக கிறிஸ்தவ நற்குணம் மற்றும் கண்ணியத்தை பாதுகாக்கிறது, மேலும் தேவனுடைய அரவணைப்பில் மனித சகோதரத்துவத்தையும் மனிதனின் உரிமைகளில் தேவன் முதலீடு செய்த கண்ணியத்தையும் உறுதிப்படுத்துகிறது. இந்த கௌரவமான கிறிஸ்தவர்கள் தேவனுடைய கனத்திற்காகவும் மற்றும் மகிமைக்காகவும் எப்போதும் வளர்க்கப்பட வேண்டும்.

(7) மற்றவர்களை அன்புகூருவதை, கிறிஸ்து நடைமுறை வார்த்தைகளில் எவ்வாறு எளிமையாக சுருக்குகிறார்?

*ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ,*

*அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம். (மத்தேயு 7:12)*

“உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்” இப்படிப்பட்ட பாடத்தின் பலனாக ஆசீர்வதிக்கப்பட்ட விளைவுகள் தோன்றும். “நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.” பரிசுத்த இருதயத்துடன் ஒருவரையொருவர் நேசிப்பதைத் தடுப்பதற்கு போதுமான அளவு வலுவான நோக்கங்கள் இங்கே இருந்தாலும். கிறிஸ்து நமக்கு உதாரணமாக இருக்கிறார். அவர் நன்மை செய்கிறவராய் சுற்றிச் திரிந்தார். அவர் மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்காக வாழ்ந்தார். அன்பு அவரது அனைத்து செயல்களையும் அழகுபடுத்தி மேம்படுத்தியது. நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ அதை மற்றவர்கள் செய்யும்படி கட்டளையிடப்படவில்லை; மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய விரும்புகிறார்களோ அதே சூழ்நிலையில் நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டும். நாம் அளவிடும் அளவீடு தான் எப்போதும் நமக்கு மீண்டும் அளவிடப்படுகிறது.

தூய அன்பு அதன் செயல்பாடுகளில் எளிமையானது மற்றும் வேறு எந்த செயலின் கொள்கையிலிருந்தும் வேறுபட்டது. செல்வாக்கின் அன்பும் மற்றவர்களின் மதிப்பிற்கான விருப்பமும் ஒரு ஒழுங்கான வாழ்க்கை மற்றும் அடிக்கடி குற்றம் சாட்டாத உரையாடலை உருவாக்கக்கூடும். சுய மரியாதை தீமையின் தோற்றத்தைத் தவிர்க்க நம்மை வழிநடத்தக்கூடும்.

ஒரு சுயநல இதயம் தாராளமான செயல்களைச் செய்யக்கூடும், தற்போதுள்ள உண்மையை ஒப்புக்கொள்ளக்கூடும், மேலும் தாழ்மையையும் பாசத்தையும் வெளிப்புறமாக வெளிப்படுத்தக்கூடும், ஆனால் நோக்கங்கள் வஞ்சகமாகவும் மற்றும் தூய்மையற்றதாகவும் இருக்கும்; இப்படிப்பட்ட இருதயத்திலிருந்து புறப்படும் செயல்களால் தூய அன்பின் கொள்கைகளுக்கு ஆதரவை கைவிட்டு, வாழ்க்கையின் சுவையையும் மற்றும் உண்மையான பரிசுத்தத்தின் பலன்களையும் இழக்க நேரிடும், அன்பை போற்றி வளர்க்க வேண்டும், ஏனெனில் அதன் செல்வாக்கு தெய்வீகமானது.

(8) கிருபாவரத்தை பெற்றவர்களாகவும், ஒரு நல்ல உக்கிராணக்காரனாகவும் இருப்பதற்கு, சத்துருக்களுக்கு மட்டுமல்லாமல் தேவனுடைய பிள்ளைகள் எல்லாருக்குமாக நமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு யாது?

*அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். (1 பேதுரு 4:10)*

மீட்பின் திட்டம் தொடங்கி ஒரு வரமாக முடிவடையும் போது, அது முன்னோக்கி கொண்டுச் செல்லப்பட வேண்டும். நமக்காக இரட்சிப்பின் விலைக்கிரயத்தைக் கொடுத்த அதே தியாகத்தின் ஆவி பரலோக வரத்தில் பங்காளிகளாக மாறும் அனைவரின் இருதயங்களிலும் வாசம் செய்கிறது. “அவனவன் பெற்ற வரத்தின்படியே

நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்” என்று அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறான். இயேசு தம் சீஷர்களை அனுப்பியபோது இவ்வாறு கூறினார்: “இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள்” கிறிஸ்துவிடம் முழு இரக்கத்தில் இருக்கும் அவரிடம், சுயநலமாகவோ அல்லது பிரத்தியேகமாகவோ எதுவும் இருக்க முடியாது. ஜீவத் தண்ணீரைக் குடிப்பவன் அந்த ஜீவத் தண்ணீர் அவருக்குள் இருப்பதைக் காண்பான், “நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்.” அவனுக்குள் இருக்கும் கிறிஸ்துவின் ஆவி வனாந்திரத்தில் ஊற்றெடுக்கும் நீரூற்று போன்றது, அனைவரையும் புதுப்பிக்க பாய்கிறது, மேலும் அழிவதற்கு ஆயத்தமாக இருப்பவர்களை, ஜீவத் தண்ணீரைக் குடிக்க ஆர்வமாக்குகிறது. கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்த உபதேசம், சுயத்தை வெறுக்கவும், மற்றவர்களுக்கு ஒளியை வழங்கவும், மற்றும் ஒளியை விரிவுப்படுத்துவதற்கான பல வழிகளைக் கொடுக்கவும், கடுமையான கடமைகளின் கீழ் விசுவாசிக்கிற அனைவரையும் கொண்டுவருகிறது. அவர்கள் பரலோகத்துடன் தொடர்பில் இருந்தால் தேவ தூதர்களுடன் இணக்கமாக வேலையில் ஈடுபடுவார்கள்.

(9) அன்பின் தேவன் மற்றும் அவருடைய பிள்ளைகளின் 5 பண்புகள் யாது?

*மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மனவுருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து. (1 பேதுரு 3: 8)*

தேவனுடைய வார்த்தை அவருடைய ஒவ்வொரு பிள்ளைகளிடம் கட்டளையிடப்படுகிறது: “மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மனவுருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து.” 1 பேதுரு 3: 8. பொறுமையானது தெய்வபக்தி இப்போது சேர்க்கப்படாவிட்டால் மனிதன் அந்த சகோதர தயவைக் காட்ட மாட்டான். உலகத்துக்கான தம்முடைய பணியில், கிறிஸ்து மனிதனுக்கு தேவனுடைய ஆவியின் கிருபைகளைக் காட்டினார், இது ஏற்றுக்கொள்ளப்படும்போது, முழு மனிதனையும், வெளிப்புறமாகவும் உள்புறமாகவும் வடிவமைத்து, அவனது பெருமையைக் குறைத்து, தன்னை மிகவும் மதிக்காமல் தன்னுடைய சகோதரனை தேவனுடைய பார்வையில் விலைமதிப்பற்றவனாக மதிக்கும்படிக்கு அவனை வழிநடததுகிறது. ஏனெனில் கிறிஸ்து அவனுடைய ஆத்துமாவுக்கு அளவற்ற விலைக்கிரயத்தைக் கொடுத்திருக்கிறார். மனிதன் தேவனுடைய சுதந்திரமாக மதிக்கப்படுகையில், நாம் இரக்கமாகவும், இணக்கமாகவும் அன்பாகவும் இருந்து, அவருக்கு கீழ்ப்படியாமல் இருக்க மாட்டோம்.

இயேசு கிறிஸ்துவின் மதம் உண்மையான பரலோக நாகரீகத்தின் ஒரு அமைப்பு மற்றும் உணர்வை கனிவின் நடைமுறைக்கு வழிவகுத்து, இரக்கத்தை பழக்கவழக்கமாக்குகிறது. தெய்வபக்தியைக் கொண்டிருப்பவன், ஏணியில் ஒரு படி மேலே சென்று இந்த கிருபை சேர்த்துக்கொள்வான் ஏணியின் உயரங்கள் உயர, தேவனுடைய கிருபை அவனது வாழ்க்கையில், அவனது உணர்வுகளில், கொள்கைகளில் வெளிப்படுகிறது. அவன் கற்றுக் கொண்டிருக்கிறான், தேவனை ஏற்றுக்கொள்வதற்கான விதிமுறைகளை எப்போதும் கற்றுக் கொண்டிருக்கிறான், மேலும் குணத்தில் கிறிஸ்துவைப்போன்று மாறுவதே பரலோகத்தின் சுதந்திரத்தைப் பெறுவதற்கான ஒரே வழி.

இரக்கத்தின் முழு திட்டமானது கோபத்தில் உள்ளதை கனிவாக்குவதும், பழக்க வழக்கங்களில் முரட்டுத்தனமாக இருப்பதைச் செம்மைப்படுத்துவதுமாகும். உள்ளான மாற்றமானது வெளிப்புற செயல்களில் தன்னை வெளிப்படுத்துகிறது. தேவனுடைய கிருபையின் ஆவியானது குணங்களின் மாற்றத்தில் மறைந்திருக்கும் ஆற்றலுடன் கிரியைச் செய்கிறது. கிறிஸ்துவின் மதம் ஒரு புளிப்பு புரையூட்டுப்பொருள், கரடுமுரடான மற்றும் நேர்மையற்ற செயலை ஒருபோதும் வெளிப்படுத்தாது. நாகரீகம் வேதத்தின் நல்லொழுக்கம். சகோதரத்துவத்தின் இந்த இரக்கத்தின் நல்லொழுக்கம் கிறிஸ்துவின் வாழ்க்கையை பண்பிடுகிறது. கிறிஸ்து வெளிப்படுத்தியதைப் போன்ற நாகரீகம் பூமியில் ஒருபோதும் வெளிப்படுத்தப்படவில்லை, அதன் மதிப்பை நாம் மிகைப்படுத்த முடியாது.

(10) நம்மை விட உயர்வான மதிப்பை நாம் யாருக்கு காட்ட வேண்டும், நாம் யாருடைய ஆர்வத்தை பார்க்க வேண்டும்?

*நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். (பிலிப்பியர் 2: 3-4)*

மனிதன் மீதான அன்பை வெளிப்படுத்த பரலோகத்தின் மாட்சிமை இவ்வளவு செய்ய முடிந்தால், இருள் மற்றும் துன்பத்தின் குழியில் இருந்து ஒருவருக்கொருவர் உதவ மனிதர்கள் என்ன செய்ய ஆயத்தமாக இருக்கக்கூடாது! “நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்” “ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.” என்று கிறிஸ்து கூறினார்.
நம்முடைய அன்பு அடிக்கடி சுயநலமாக இருக்கிறது, ஏனென்றால் நாம் அதை வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்குள் கட்டுப்படுத்துகிறோம். நாம் கிறிஸ்துவுடன் நெருங்கிய ஐக்கியம் மற்றும் கூட்டுறவுக்குள் வரும்போது, நம் அன்பும், இரக்கமும் மற்றும் நமது நற்குணத்தின் செயல்களும் ஆழமாக சென்று பயிற்சியின் மூலம் விரிவடைந்து வலுவடையும்.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களின் அன்பும் ஆர்வமும் உலகைப் போலவே பரந்ததாக இருக்க வேண்டும். "எனக்கு மற்றும் எனக்காக” மட்டுமே வாழ்பவர்கள் பரலோகத்தை இழப்பார்கள். ஒரு குடும்பமாக அன்பை வளர்க்கும்படி, உங்களைப் பற்றி குறைவான உணர்திறனிலிருந்து மற்றவர்களின் துக்கங்கள் மற்றும் சோதனைகளுக்கு அதிக உணர்திறனுக்கு மாறும்படிக்கு தேவன் உங்களை அழைக்கிறார். உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் பெரிதும் மதித்து நேசித்த இந்த சுயநல ஆவி, ஆசாரியரும் லேவியருமானவரால் சரியாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. அவருக்கு உதவி தேவை என்பதை அவர்கள் கண்டனர், ஆனால் வேண்டுமென்றே அவரை தவிர்த்தனர்

(11) மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்காக ஏதோ ஒரு அளவில் தேவன் நம் அனைவரின் மேல் எதை பொழிந்திருக்கிறார்?

*அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்தும், கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான். (மத்தேயு 25:15)*

சத்தியத்தின் இரட்சிப்பின் அறிவுக்குள் இன்னும் பல ஆத்துமாக்கள் கொண்டு வரப்பட உள்ளன. ஊதாரி மைந்தன் தனது தந்தையின் வீட்டிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறான், பசியால் அழிக்கப்படுகிறான். அவன் நம் இரக்கத்திற்குரியவனாக இருக்க வேண்டும். "தங்கள் பாவங்களில் அழிந்துபோகிறவர்களை தேவன் எப்படி கருதுகிறார்?" என்று நீங்கள்

கேட்கக்கூடும். நான் உங்களுக்கு கல்வாரியை சுட்டிக்காட்டுகிறேன். தேவன் "அவருடைய ஒரேபேறான குமாரனை கொடுத்தார், அவரை விசுவாசிக்கிற எவரும் அழிந்துப்போகாமல், நித்திய ஜீவனைப் பெறுவார்கள்" யோவான் 3:16.
இரட்சகரின் ஈடு இணையற்ற அன்பை நினைத்துப் பாருங்கள். நாம் பாவிகளாக இருக்கும்போது, கிறிஸ்து நம்மை நித்திய மரணத்திலிருந்து இரட்சிக்க மரித்தார். கிறிஸ்து உங்களை நேசித்திருக்கும் மிகுந்த அன்புக்கு ஈடாக, நீங்கள் அவருக்கு உங்கள் நன்றி பலியை கொண்டுவர வேண்டும். உங்களையே நீங்கள் நன்றி பலியாக தரவேண்டும். உங்கள் நேரத்தை, உங்கள் தாலந்தை நன்றி பலியான நீங்களே உங்களை ஒரு நன்றியுணர்வின் பலியாக வழங்க வேண்டும்.
இழந்துப்போனவர்களை மீட்பதற்காக உங்கள் நேரம், உங்கள் திறமைகள், உங்கள் வழிமுறைகள்-அனைத்தும் அன்பின் அலையில் உலகிற்கு பாய வேண்டும். இயேசுவின் அன்பை நீங்கள் ஏற்றுக்கொள்வதையும் அவருடன் மகிழ்ச்சியான ஒத்துழைப்புடன் அதன் நறுமண செல்வாக்கின் கீழ் வேலை செய்வதையும் அவர் சாத்தியமாக்கியுள்ளார். ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கான அவருடைய திட்டம் அதிகாரத்துடன் முன்னெடுக்கப்படும்படிக்கு உங்கள் உடைமைகளை சுயநலமற்ற சேவையில் பயன்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார்.  அவருடைய வேலைக்கு உங்கள் பிரிக்கப்படாத, முழு ஆற்றலை நீங்கள் வழங்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

**(12) கிறிஸ்துவின் மீதுள்ள அன்பினால் தங்கள் அன்பையும் தாலந்தையும் மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்காக பயன்படுத்தியவர்கள் எந்த ஆச்சரியமான சத்தத்தைக் கேட்பார்கள்?**

***அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான். (மத்தேயு 25:23)***

**அவர் நம்மிடம் ஒப்படைத்த திறமைகளை நாம் பயன்படுத்தியதை கர்த்தர் ஆராய்வார். தேவனோடு சேர்ந்து சக பணியாளராக இருப்பதற்கு விருப்பமான ஒவ்வொரு ஆத்துமாவின் சேவையைப் பாதுகாப்பதற்காக அவர் தமது சொந்த இரத்தத்தின் விலைக்கிரயத்தையும், சுய வெறுப்பு மற்றும் தியாகம் மற்றும் துன்பங்களையும் செலுத்தியுள்ளார். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திறமைகளின் வரங்களைப் பயன்படுத்த தங்கள் பொறுப்புணர்வை அனைவரும் உணர்ந்தால், இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும்! ஒரு தாலந்து பயன்படுத்தப்பட்டால் வருமானம் அதிகரிக்கக்கூடும் மற்றும் அதிகரிக்க வேண்டும். பெரிய தாலந்துகள், திறமைகள் உள்ளவர்களால் தொட முடியாத மனங்களையும், இருதயங்களையும், மிகக் குறைந்த வரம் என்று எண்ணபடுகின்ற மற்றும் தாழ்மையான சேவை உள்ளவர்களால் தொடக்கூடும்.**

இப்போது நமக்கு வேலை செய்ய மிகவும் சாதகமான நேரம். தனியாள் சந்திப்பு ஊழியம் மிகவும் மதிப்பு வாய்ந்தது. இயேசு கிறிஸ்து மீதான அன்பிலும், மனித ஆத்துமாக்களின் மீதான அன்பிலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் சத்தியம் கொண்டு செல்லப்பட வேண்டும், அடுப்பபடியில் இருக்கிற ஒவ்வொருவரையும் நீங்கள் அணுகி பேச முடியும். ... பரிசுத்த ஆவியானவர் ஒரு பணியாளர் என்பதை மனதில் கொள்ளவும். தேவனுக்காக வேலை செய்யும் எந்த மனித முகவர்களும் தனியாக இல்லை.
விடாமுயற்சி, கனிவு, இரக்கம், ஜெபம் மற்றும் அன்பு ஆகியவற்றின் உழைப்பு ஆகியவை பிரசங்கங்களை விட அதிகம் கிரியைச்செய்யும். கர்த்தராகிய இயேசு, பாவத்தின் சாபத்திலிருந்து உலகைக் இரட்சிப்பதற்காக தமது ஜீவனைக் கொடுத்ததில், நம் கண்கள் இதுவரை கண்டிராத பெரிய காரியங்களை கண்டது. பரிசுத்த ஆவியானவர் தாம் யாரால் கிரியைச் செய்ய முடியும் என்று தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு ஊடகத்திற்காகக் காத்திருக்கிறார். சாத்தான் எப்போதும் வெற்றிபெற மாட்டான். தேவனுடைய ஆவியைப் பெற பாத்திரங்கள் ஆயத்தமானவுடன் சபையின் மீது ஊற்றப்படும்.

*சளைக்காத முயற்சியும், தயவும் கொண்டவர்கள்தான் அதற்குத் தகுதியானவர்கள் என்பதை நான் இப்போது உணர்கிறேன். தனிநபர்கள் மற்றும் நான் தொடர்பு கொள்ளும் அனைவரிடமும் நான் அவரை பிரதிபலிக்கும் அவரது இரக்கமுள்ள, அனுதாபமான, இதயப்பூர்வமான*

அன்பினால் என்னை நிரப்பும்படி நான் கிறிஸ்துவை வேண்டுகிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

அவருக்காக நான் துன்புறுத்தப்படும்போது, வெறுப்பிற்கு பதிலாக அன்பையும், தீமைக்கு பதிலாக நன்மையையும் திரும்பக் கொடுக்கும்படி தேவனுடைய ஆவியானவர் என்னில் வசிக்க நான் ஜெபிக்கிறேன். கிறிஸ்து சிலுவையில் காட்டிய அதே மன்னிப்பின் ஆவிக்காக நான் ஜெபிக்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

மீட்பின் திட்டம் ஒரு வரத்தோடு எவ்வாறு தொடங்குகிறது மற்றும் முடிவடைகிறது என்பதை நான் பார்க்கிறேன், மற்றவர்களின் இரட்சிப்பிற்காக அதை முன்னெடுத்துச் செல்லும் பாக்கியம் எனக்கு உள்ளது. இந்த பாக்கியத்தின் விசுவாசமான உக்கிராணக்காரனாக இருக்கவும், அவர் எனக்கு அளித்த தாலந்துகள் மற்றும் வளங்களை மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்காக பயன்படுத்தவும் தேவனுடைய ஆவிக்காக நான் ஜெபிக்கிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

தந்தையின் உதடுகளிலிருந்து, "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று அந்த

*ஆசீர்வாத வார்த்தைகளைக் கேட்பது என் இருதயத்தின் ஆசை. அவருக்கு மகிமையைத் திருப்பித் தருவதற்காக நான் மகிழ்ச்சியுடன் அவருடைய காலடியில் என் கிரீடத்தை சமர்ப்பிப்பேன்!*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*



பாடம் 19

அன்பின் விளைவு

(1) "ஒளியில் நிலைத்திருப்பது" என்றால் என்ன மற்றும் அதை நம்முடைய வாழ்வில் நடைமுறைப்படுத்தினால் அதன் விளைவு என்ன?

*தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. (1 யோவான் 2:10)*

அவன் ஒளியிலிருக்கிறான். தேவன் தம்மிடமிருந்து தொடர்ந்து வெளிப்படும் ஒளியால் சூழப்பட்டிருக்கிறார். தேவனிடமிருந்து வெளிப்படும் ஒளியின் கதிர்களில் நடப்பதே கிறிஸ்தவர்கள் செய்யக்கூடிய ஒரு சிறந்த செயல். ஒரு பயணி இருண்ட மற்றும் தெரியாத

சாலையில் ஒரு வழிகாட்டியின் ஒளியைப் பின்தொடர்வது போல், தேவனுடைய பிள்ளைகள் தங்கள் வாழ்க்கைப் பாதையில் கர்த்தருடைய ஒளியைப் பின்தொடர்வார்கள் (2 கொரி. 4: 6; எபே. 5: 8).

நாம் ஒளியில் நடந்தால், தேவனோடு நடக்கிறோம், அவரிடமிருந்து வெளிச்சம் பிரகாசிக்கிறது, அவருடன் மட்டுமல்ல, கர்த்தரைப் பின்தொடரும் மற்றவர்களுடனும் ஐக்கியம் இருக்கிறது. ஒரே தேவனைச் சேவித்தல், ஒரே சத்தியங்களை நம்புதல், வாழ்க்கைப் பாதையில் ஒரே வழிமுறைகளைப் பின்பற்றுவது, நாம் ஒற்றுமையாக நடப்பதில் தோல்வியடைய முடியாது. நமக்கும் நம் சகோதரர்களுக்கும் இடையேயான மோசமான விருப்பத்தின் சிறிய அறிகுறியானது, நம்முடைய சொந்த நடத்தையை மறுபரிசீலனை செய்ய வைக்க வேண்டும், நாம் பிரகாசிக்கும் வாழ்க்கைப் பாதையிலிருந்து விலகிச் செல்லவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தேவன் அன்பாக இருக்கிறார் (அதி 4:8), தேவன் ஒளியாக இருக்கிறார் (அதி 1:5), மேலும் வெறுப்பை உண்டாக்கும் சூழ்நிலைகள் இருந்தபோதிலும் தன் சகோதரனை தொடர்ந்து நேசிப்பவன் தேவனுடனான ஒரு வாழ்க்கையை நிச்சமாக வாழ்ந்துக்கொண்டிருக்கவேண்டும், ஆகவே அவரது ஒளியில் வாழ்கிறவனாக இருக்க வேண்டும்.

வெறுக்கிறவன். அப்படிப்பட்ட மனிதன் அன்பானவனுக்கு முற்றிலும் மாறுபட்டவன் (வ. 10). தேவனுடைய ஜீவன் தரும் ஒளியில் நிலைத்திருக்க

அல்லது வசிப்பதற்குப் பதிலாக, அவன் ஆவிக்குரிய இருளில் வாழ்கிறான்.

(2) மற்றவர்கள் நம்மை எப்படி நடத்துகிறார்கள் என்பதை பார்க்காமல், மற்றவர்களை நாம் மனதார நேசித்தால், அவர்களுடனான உறவில் எதை சாதிப்போம்?

*அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள். (1 பேதுரு 4: 8))*

நீடியப்பொறுமையுள்ள மற்றும் தயவான அன்பானது ஒரு அறியாமையை மன்னிக்க முடியாத குற்றமாகப் பெரிதாக்காது, மற்றவர்களின் தவறுகளுக்கு மூலதனமாகவும் இருக்காது. தப்பிதங்கள் பொறுமையோடும் மற்றும் கருத்தோடும் அணுகப்பட வேண்டும் என்று வேதம் தெளிவாகப் போதிக்கிறது. சரியான போக்கைப் பின்பற்றினால், வெளிப்படையான மூர்க்கதனமாக துடிக்கும் இருதயம் கிறிஸ்துவுக்காக வெல்லப்படலாம். இயேசுவின் அன்பு திரளான பல பாவங்களை மூடுகிறது. அவரது இரக்கம் ஒரு நேர்மறையான அவசியம் ஏற்பாட்டாலொமிய மற்றவர்களின் தவறுகளை வெளிப்படுத்துவதற்கு வழிவகுக்காது.

(3) நாம் கர்த்தரை நம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் மற்றும் முழு பெலத்தோடும் உண்மையாக நேசிக்கும்போது, நம்முடைய அயலகத்தாரை நான் எவ்வாறு நடத்துவோம்?

*இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார். (மாற்கு 12:31)*

ஒரு மனிதன் தன் சகோதரர்கள் மீது கிறிஸ்துவைப் போன்ற அன்பைக் கொண்டிருக்காமல், நித்திய வாழ்க்கையின் நம்பிக்கையை கொண்டிருக்க முடியும் என்று நினைப்பது மிகப் பெரிய மற்றும் மிக மோசமான வஞ்சகமாகும். தேவனையும் அவனது அண்டை வீட்டாரையும் நேசிப்பவன் ஒளியாலும் மற்றும் அன்பாலும் நிரப்பப்படுகிறான். தேவன் அவனிலும் அவனைச் சுற்றிலும் இருக்கிறார். கிறிஸ்தவர்கள், கிறிஸ்து தம் ஜீவனை கொடுத்திருக்கிற தங்களைச் சுற்றியுள்ளவர்களை விலைமதிப்பற்ற ஆத்துமாக்களாக நேசிக்கிறார்கள். அன்பில்லாத கிறிஸ்தவர் என்று யாரும் கிடையாது; ஏனென்றால் "தேவன் அன்பாக இருக்கிறார்," மற்றும் " அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை" தேவனுக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கனி இதுவே.

(4) விடுதலையும், அன்பும் நிறைந்த தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்

அழகை பிடித்துக்கொண்டப்பின்னர், குணநலனுக்கு ஆசீர்வாதத்தையும், பெலனையும் தருகிற எதை கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டும்?

*சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாய், தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான். (யாக்கோபு 1:25)*

ஒரு மனிதன் தன் கையை உடற்பயிற்சி செய்யாவிட்டால், அது பலவீனமாகி, தசை வலிமையில் குறைபாடு ஏற்படும். கிறிஸ்தவன் தனது ஆவிக்குரிய வல்லமைகளைப் பயன்படுத்தாவிட்டால், அவன் குணத்தின் வலிமையையும், ஒழுக்க நெறி வலிமையையும் பெற மாட்டான். அன்பு மிகவும் விலைமதிப்பற்ற தாவரமாகும், அது செழிப்படைய வேண்டுமென்றால், வளர்க்கப்பட வேண்டும். அன்பின் விலைமதிப்பற்ற தாவரம் கனிவாக நடத்தப்பட (பயிற்சிக்கப்பட) வேண்டும், அது வலுவாகவும், உள்ளூரம் வாய்ந்ததாகவும் மற்றும் கனிகளை தருவதில் சிறந்ததாகவும் இருக்கும், அது முழு தன்மையையும் வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவைப் போன்ற இயல்பு சுயநலமற்றதும், இரக்கமுள்ளதும், சாத்தானின் சோதனைகளுடன் போராடுபவர்களின் ஆத்துமாக்களை காயப்படுத்தாதுமானது. பாடுகள் மற்றும் சோதனைகள் சோதிக்கப்படுபவர்களின் உணர்வுகளில் பிரவேசித்து. தங்கத்தை வெளிக்கொணர்ந்து குப்பையை உட்கொள்ளும் அளவுக்கு நிர்வகிக்கப்பட்டும்.

இது தேவன் அனைவருக்கும் நியமிக்கும் நடைமுறை. இந்த, கிறிஸ்துவின் பள்ளியில், அனைவரும் பொறுமையாகவும், தாழ்மையுடனும், தாராளமாகவும், உன்னதமாகவும் இருக்க ஒவ்வொரு நாளும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியஇருவரும் தங்கள் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். ஜீவனுள்ள விசுவாசத்துடன் கலந்த ஜெபத்தில் நீங்கள் அனைவரும் தேவனை மிகவும் தீவிரமாகத் தேட வேண்டும், அப்போது தேவனுடைய வடிவமைக்கும் கரம் உங்கள் குணாதிசயத்தில் அவரது சொந்த சாயலை வெளிப்படுத்தும். சோதனைகள் வரும், ஆனால் மேற்கொள்ள முடியாது. மேலும் இயேசுவின் தட்டுதலுக்கும், குரலுக்கும் இருதயத்தைத் திறப்பதில் காணப்படும் கிருபையின் மூலம், கிறிஸ்தவ குணமும் அனுபவமும் மேலும் மேலும் அழகாகவும் பரலோகமாகவும் வளர்ந்து வரும்.

கிறிஸ்து தமக்குள்ளே அளவற்ற விலைக்கிரயத்தால் வாங்கிய ஆத்துமாக்களுடன் நாம் கையாள்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தேவன் உங்களை நேசிக்கிறார், தேவன் உங்களுக்காக மரித்தார் என்று தவறு செய்பவனிடம் சொல்லுங்கள். அவர்களுக்காக அழுங்கள், அவர்களுடன் ஜெபம் செய்யுங்கள். அவர்கள் மீது கண்ணீர் சிந்துங்கள், ஆனால் அவர்கள் மீது கோபப்பட வேண்டாம். அவன் கிறிஸ்துவினால் விலைக்கிரயத்திற்கு வாங்கப்பட்ட சொத்து. ஒவ்வொருவரும் தங்கள் அனைத்து செயல்களிலும் அன்பை வெளிப்படுத்தும் ஒரு தன்மையைத் தேடுவார்களாக.

“என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.” கிறிஸ்து தமது குணத்தில் வெளிப்படுத்திய மற்றும் அவரது பிள்ளைகளுக்குக் கட்டளையிட்ட அந்த அன்பு இல்லாமல் ஒவ்வொரு நாளும் வாழ்வதை விட வாழாமல் இருப்பது நல்லது. “நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது” என்று கிறிஸ்து கூறினார்.

நாம் ஒரு கடினமான, உணர்ச்சியற்ற, அறமற்ற உலகில் வாழ்கிறோம். சாத்தானும் மற்றும் அவனது சேனைகளும் கிறிஸ்து தமது விலைமதிப்பற்ற ஜீவனைக் கொடுத்த ஆத்துமாக்களை வஞ்சிக்க ஒவ்வொரு கலையையும் இயக்குகிறார்கள். தேவனை நேர்மையாகவும் உண்மையாகவும் நேசிக்கும் அனைவரும் கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அந்த ஆத்துமாக்களை நேசிப்பார்கள்.

(5) கிறிஸ்துவைப்போன்ற அன்பினால் தயவு என்னும் வரத்தை நாம் கொடுக்கும்போது, அதன் விளைவு யாது?

*”கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்” (லூக்கா 6:38)*

நாம் பலனைப் பற்றி சிந்திக்காமல், சேவையைப் பற்றி சிந்திக்க வேண்டும்; எனினும் இந்த ஆவியில் காட்டப்படும் இரக்கம் அதன் பிரதிபலனை ஒருபோதும் இழக்காது. "அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்." தேவனே சிறந்த பரிசு என்பது உண்மையாக இருந்தாலும், அந்த பரிசு மற்றவர்களைத் தழுவிக்கொள்கிறது, ஆத்துமா அதைப் பெற்று குணாதிசயத்தில் ஒன்றிணைவதினால் மட்டுமே அனுபவிக்க முடியும். விருப்பம் மட்டுமே விருப்பத்தை மேன்மைப்பாராட்ட முடியும். மனிதகுலத்தின் சேவைக்காக தேவனுக்கு நம்மை நாமே கொடுப்பதுப் போல, அவர் நமக்கு தம்மைத் தாமே கொடுக்கிறார்.

தன்னில் வரத்தின் ஐசுவரியத்தைப் பெறாமல், தேவனுடைய ஆசீர்வாதம் மற்றவர்களுக்குப் பாய்வதற்கு யாரும் தனது சொந்த இருதயத்திலும் வாழ்க்கையிலும் இடம் கொடுக்க முடியாது. மலை ஓடைகள் கடலை அடைய ஒரு கால்வாயை வழங்குவதினால் மலைப்பகுதிகள் மற்றும் சமவெளிகளுக்கு அதனால் எந்த இழப்பும் ஏற்படாது. அவைகள் கொடுத்ததை நூறு மடங்கு திருப்பிச் செலுத்தப்பட்டு விடும். தன் வழியில் பாடி ஓடிக்கொண்டிருக்கும் நீரோடை அதன் கொடையை மற்றும் பலனை விட்டுச் செல்கிறது. அதன் கரையில் உள்ள புல் புத்துணர்ச்சியான பச்சை நிறத்தில் உள்ளது, மரங்கள் செழிப்பான பசுமை நிறைந்தது, பூக்கள் அதிக அளவில் உள்ளன.
கோடையின் வெப்பத்தின் கீழ் பூமி வெறுமையாகவும் பழுப்பு நிறமாகவும் இருக்கும்போது, ஒரு பசுமைக்கோடு

நதியின் போக்கைக் குறிக்கிறது. மலையின் பொக்கிஷத்தை கடலுக்குள் தாங்குவதற்கு தனது மடியைத் திறந்த சமவெளியானது புத்துணர்ச்சியும் அழகும் பெறுகிறது, தேவனுடைய கிருபையை உலகிற்கு வெளியேற்றுவதற்கான ஒரு வாய்க்காலாகத் தங்களை கொடுக்கும் அனைவருக்கும் ஈடேற்றத்திற்கு ஒரு பிரதிபலிக்கும் சாட்சியாக உள்ளது. {MB 81-82}

(6) மீட்பின் வரத்தை பெற்றவர்களாக, அதை மற்றவர்களோடு செயல்படுத்தும்போது நம்முடைய பாக்கியம் மற்றும் உயர் அழைப்பு யாது?

*அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். (1 பேதுரு 4:10).*

மீட்பின் திட்டமானது ஆரம்பமாகி ஒரு வரமாக முடிவடையும் போது, அது முன்னோக்கி கொண்டுச் செல்லப்பட வேண்டும். நமக்காக இரட்சிப்பின் விலைக்கிரயத்தைக் கொடுத்த அதே தியாகத்தின் ஆவி பரலோக வரத்தில் பங்காளிகளாக மாறும் அனைவரின் இருதயங்களிலும் வாசம் செய்கிறது. "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்" என்று அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறான். இயேசு தம் சீஷர்களை அனுப்பியபோது இவ்வாறு கூறினார்:

“இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள்”

கிறிஸ்துவிடம் முழு இரக்கத்தில் காணப்படும் அவரிடம், சுயநலமாகவோ அல்லது பிரத்தியேகமாகவோ எதுவும் இருக்க முடியாது. ஜீவத் தண்ணீரைக் குடிப்பவன் அந்த ஜீவத் தண்ணீர் அவருக்குள் இருப்பதைக் காண்பான், “நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்.” அவனுக்குள் இருக்கும் கிறிஸ்துவின் ஆவி வனாந்திரத்தில் ஊற்றெடுக்கும் நீரூற்று போன்றது, அனைவரையும் புதுப்பிக்க பாய்கிறது, மேலும் அழிவிற்கு ஆயத்தமாக இருப்பவர்களை, ஜீவத் தண்ணீரைக் குடிக்கும்படிக்கு ஆர்வமாக்குகிறது. கிறிஸ்துவில் வாழ்ந்த அதே அன்பு மற்றும் சுய தியாக உணர்வுதான் அப்போஸ்தலனாகிய பவுலை அவனது பன்முக உழைப்புகளுக்குத் தூண்டியது. “கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்.” “பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.” என்று அவன் கூறுகிறான்.

நம்முடைய கர்த்தர், உலகத்தில் நாம் அவரிடம் காணும் பூரணத்தையும் போதுமான தன்மையையும் பிரதிபலிக்க வேண்டும் என்று அவருடைய சபையை வடிவமைத்தார். நாம் தேவனுடைய இரக்கத்தை தொடர்ந்து பெறுகிறப்படியால், அதைக் கொடுப்பதன்

மூலம் நாம் கிறிஸ்துவின் அன்பையும் நன்மையையும் உலகிற்குப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். மீட்பின் பணியை முன்னெடுத்துச் செல்ல பரலோகமெல்லாம் தீவிரமாய் செயல்பட்டு பூமியின் ஒவ்வொரு பகுதிக்கும் தூதர்களை அனுப்புகிறது அதே வேளையில், ஜீவனுள்ள தேவனுடைய சபையும் கிறிஸ்துவோடு கூட உடன் வேலையாட்களாக இருக்க வேண்டும். நாம் அவருடைய இரகசிய சரீரத்தின் உறுப்பினர்கள். அவர் சரீரத்தின் அனைத்து உறுப்புகளையும் கட்டுப்படுத்தும் தலையாக இருக்கிறார். இயேசு தாமே, அவருடைய எல்லையற்ற இரக்கத்தில், மனித இருதயங்களில் கிரியைச் செய்கிறார், ஆவிக்குரிய மாற்றங்களை மிகவும் அற்புதமாகச் செய்கிறார், அதை தேவதூதர்கள் ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் பார்க்கிறார்கள். குருவின் குணாதிசயங்களைக் காட்டும் அதே தன்னலமற்ற அன்பு அவரது உண்மையான பின்னடியார்களின் குணத்திலும் வாழ்க்கையிலும் காணப்படுகிறது. இந்த உலகத்தில் இருக்கும் போது மனிதர்கள் அவருடைய தெய்வீக சுபாவத்தில் பங்காளிகளாக மாற வேண்டுமென்று கிறிஸ்து எதிர்பார்க்கிறார், இதனால் தேவனுடைய துதிக்காக அவருடைய மகிமையை பிரதிபலிப்பது மட்டுமல்லாமல், உலகின் இருளை பரலோகத்தின் பிரகாசத்தினால் ஒளிரச் செய்கிறார். "நீங்கள் உலகின் ஒளி." என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள் இவ்வாறு நிறைவேறுகிறது.

(7) தேவையிலுள்ள சிறியவர்களுக்கு நம்முடைய இருதயத்திலிருந்து அன்பை நடைமுறைப்படுத்தினால், பரலோகத்தின்

கண்களுக்கு முன் நாம் யாருக்கு சேவைச் செய்கிறோம்?

*அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். (மத்தேயு 25:40)*

ஒவ்வொரு செயலும், நீதி மற்றும் இரக்கம் மற்றும் நற்குணத்தின் ஒவ்வொரு கிரியையும், பரலோகத்தில் இசையை உருவாக்குகிறது. தகப்பன் தமது சிங்காசனத்திலிருந்து, அவற்றை செய்பவர்களை தமது விலைமதிப்பற்ற பொக்கிஷங்களுடன் பிடித்துக் கொள்கிறார். “என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” ஏழைகளுக்கு அல்லது உபத்திரவத்தில் உள்ளவர்களுக்கு செய்கின்ற ஒவ்வொரு இரக்கமுள்ள செயலும் இயேசுவிற்கு செய்யப்பட்டது போல காணப்படுகிறது. யார் ஏழைகளுக்கு உதவி செய்கிறார்களோ, அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் அனுதாபப்படுகிறார்களோ, மற்றும் அனாதையுடன் நட்பு கொள்கிறாரோ, அவர்கள் தங்களை இயேசுவோடு மிக நெருக்கமான உறவில் கொண்டு வருகிறாரகள்.

(8) மற்றவர்களுக்கான நம்முடைய அநீதியின் செயல்களுக்கு பதிலாக, இறுதி நியாயத்தீர்ப்பில் நியாயந்தீர்க்கப்படும் உள்ளார்ந்த அன்பின் சில செயல்கள் யாது?

*பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்;வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார்.(மத்தேயு 25: 35-36)*

ஜெபம், அறிவுரை மற்றும் பேச்சு போன்றவை அடிக்கடி பிணைக்கப்படும் மலிவான கனிகள். நல்ல படைப்புகளில் வெளிப்படும் கனிகளானது, தேவையிலுள்ளவர்கள், தகப்பனில்லாதவர்கள் மற்றும் விதவைகள் ஆகியோரைக் கவனித்துக்கொள்ளும் உண்மையான கனிகளாகும், மற்றும் அவைகள் ஒரு நல்ல மரத்தில் இயற்கையாக வளருபவைகள்… பாரத்தினாலும், துக்கத்தினாலும் சோர்ந்த இருதயங்களின் மேல் இருதயம் இரக்கங்கொள்ளும்போது, தேவையிலுள்ளவர்களுக்கு கரங்கள் நீளும்போது, நிர்வாணிகள் வஸ்திரங்களால் உடுத்தப்படுகையில், உங்கள் அடுப்படியிலும் இருதயத்திலும் ஒரு அந்நியனை வரவேற்று அமர வைக்கும்போது, தேவதூதர்கள் மிகவும் அருகில் வருகிறார்கள், மற்றும் ஒரு பதிலளிக்கும் பெரும் வல்லமையானது பரலோகத்திலிருந்து மறுமொழி தருகிறது. ஒவ்வொரு செயலும், நீதி மற்றும் இரக்கம் மற்றும் நற்குணத்தின் ஒவ்வொரு கிரியையும், பரலோகத்தில் இசையை உருவாக்குகிறது…

நம் பரலோகத் தகப்பன் நம் பாதையில் ஆசிர்வாதங்களை மறைத்துவைத்திருக்கிறார், சிலர் தங்கள் இன்பத்தை இழக்க நேரிடும் என்ற பயத்தில் அதைத் தொட மறுக்கிறார்கள். நன்மைச் செய்கிற வாய்ப்புகளை எட்டிப்பிடிக்கும் தூரத்தில் வைத்து, நாம் அதை தழுவிக்கொள்கிறோமா என்று தேவதூதர்கள் காத்திருக்கிறார்கள் - அவர்கள் பதிலுக்கு நம்மை ஆசீர்வதிக்கும்படியாக, நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கிறோமா என்று காத்திருக்கிறார்கள். சில ஏழைகள், சில பணக்காரர்கள், சில துன்பப்பட்டவர்கள்- என அனைவருக்கும் குணாதிசயத்தை வளர்ப்பதற்கான வாய்ப்பை கொடுப்பதற்கு கர்த்தர் தாமே நம்மை வித்தியாசப்படுத்தியுள்ளார். ஏழைகள் வேண்டுமென்றே தேவனால் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள், அதனால் நாம் சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டு, நம் இருதயத்தில் இருப்பதை வளர்த்துக் கொள்ளலாம்.

(9) நாம் உண்மையாகவே தேவனை நேசித்தால், பரலோகத்திற்கு பாத்திரவான்களாக இருந்தால், மகா நியாயத்தீர்ப்பின் அளவுகோல் என்னவாக இருக்கும்?

*நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. (யோவன் 15:12)*

மனிதனுக்கான அன்பு என்பது தேவனுடைய அன்பின் பூமிக்குரிய வெளிப்பாடு. இந்த அன்பை உள்வாங்குவதற்காக, நம்மை ஒரு

குடும்பத்தின் பிள்ளைகளாக்க, மகிமையின் ராஜா நம்முடன் ஒன்றானார். அவர் விட்டுச்செல்லும்போது சொன்ன வார்த்தைகள், "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்" (யோவான் 15:12); அவர் உலகத்தை நேசித்தபடியே நாம் எப்போது நேசிக்கிறோமோ, அப்போது அவருடைய பணி நிறைவேறியது. நாம் பரலோகத்திற்கு பொருத்தப்பட்டவர்கள் ஆகிறோம்; ஏனென்றால் நம் இருதயத்தில் பரலோகம் இருக்கிறது. {DA 641}

கர்த்தர் நல்லவர். அவர் இரக்க உள்ளம் கொண்டவர். அவர் தமது ஒவ்வொரு பிள்ளையையும் நன்கு அறிந்தவர். நாம் ஒவ்வொருவரும் என்ன செய்கிறோம் என்பது அவருக்குத் தெரியும். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கடன் கொடுக்க வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். நீங்கள் உங்கள் கடன் பட்டியலையும் உங்கள் குற்றஞ்சாட்டும் பட்டியலையும் போடாமல், தேவனைத் தம் பணியைச் செய்ய சற்று விடுவீர்களா? தேவன் உங்களுக்குக் கொடுத்த வேலையில் நீங்கள் பங்குக்கொண்டால் உங்களுக்குப் மகிமையின் கிரீடம் வழங்கப்படும்.

(10) நியாயத்தீர்ப்பின் மகா நாளில், கிறிஸ்து நேசித்தப்பிரகாரம் உலகத்திலிருக்கிறவர்களை நேசித்தவர்களுக்கு எந்த ஆசீர்வாதமான வார்த்தைகள் கேட்கப்படும்?

*அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால்*

*ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். (மத்தேயு 25:34)*

நியாயத்தீர்ப்பு நாளில், தங்கள் அன்றாட வாழ்க்கையில் உண்மையாக இருந்தவர்கள், பாராட்டுதல் அல்லது லாபத்தைப் பற்றி சிந்திக்காமல் தங்கள் வேலையைப் பார்த்து விரைவாகச் செய்தவர்கள் “வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்” என்ற வார்த்தையை கேட்பார்கள். அவர்கள் செய்த சிறந்த சொற்பொழிவுகளுக்காகவோ, அவர்கள் வெளிப்படுத்திய அறிவுசார் ஆற்றலுக்காகவோ அல்லது அவர்கள் கொடுத்த தாராளமான நன்கொடைகளுக்காகவோ கிறிஸ்து அவர்களைப் பாராட்டவில்லை. பொதுவாக கவனிக்கப்படாத சிறிய விஷயங்களைச் செய்ததால்தான் அவர்களுக்கு பாராட்டும் பரிசும் கிடைக்கிறது. “பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்” என்று அவர் கூறுகிறார்.

அனைவரின் காரியங்களும் தேவனுக்கு முன்பாக மறுபரிசீலனைக்கு வரும் போது, அவர்கள் எதை அறிவித்தார்கள்? என்ற கேள்வி ஒருபோதும் கேட்கப்படாது, ஆனால், அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் வார்த்தையை

செயல்களில் செய்பவர்களாக இருந்தார்களா? அவர்கள் தங்களுக்காக வாழ்ந்தார்களா? அல்லது அவர்கள் தங்களை விட மற்றவர்களுக்கு முன்னுரிமை அளித்து, தங்களை வெறுத்து, தயவின் செயல்களில், அன்பின் செயல்களில் மற்றவர்களை ஆசீர்வதிப்பதை பயிற்சித்தார்களா? என்று கேட்கப்படுவார்கள். இது அவர்களின் வாழ்க்கையாக இருந்தது என்று பதிவுகள் காட்டினால், அவர்களின் குணங்கள் கனிவு, சுய வெறுப்பு மற்றும் நற்குணம் ஆகியவற்றால் குறிக்கப்பட்டிருந்தால், அவர்கள் கிறிஸ்துவிடமிருந்து "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்ற ஆசீர்வதிக்கப்பட்ட உறுதிப்பாட்டையும் ஆசீர்வாதத்தையும் பெறுவார்கள்.

*இருண்ட மற்றும் தெரியாத சாலையில் ஒரு பயணியாக வழிகாட்டியைப் பின்தொடர்ந்து தேவனிடமிருந்து வெளிவரும் ஒளியின் கதிர்களில் நடக்க வேண்டும் என்பது என் இருதயத்தின் ஆசை.*

*வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை*

*இந்த வெளிச்சம் அன்பு என்பதை நான் புரிந்துகொள்கிறேன், தேவனுடைய அன்பு மற்றவர்களுக்கும் ஒளியின் வாய்க்காலாக பாய வேண்டும் என்று நான் விரும்புகிறேன், நான் பரலோகத்தின் ராஜ்ஜியத்திற்கு*

கிறிஸ்துவின் சக பணியாளராக இருக்கக்கூடும்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

அன்பு என்பது ஒரு உணர்ச்சி மட்டுமல்ல, அது ஒரு செயல் என்பதை நான் உணர்கிறேன். அன்பின் ஆவிக்குரிய வல்லமையைப் பயன்படுத்த வேண்டும் என்பதே எனது விருப்பம், அது என் வாழ்க்கையில் ஒரு வலிமையான சக்தியாக இருக்கக்கூடும், அது மற்றவர்களுக்குப் பாயும் ஆற்றலைப் போல இருக்கக்கூடும்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

மற்றவர்களிடம் அன்பு செலுத்துவது பாலைவனத்தில் ஒரு நல்ல நீரூற்றைப் போல அல்லாமல் கொடுப்பவருக்கு மீண்டும் பாய்ந்து ஆவிக்குரிய வளர்ச்சியைக் கொண்டுவருகிறது என்பதை நான் புரிந்துகொள்கிறேன். நான் இதை என் வாழ்க்கையில் விரும்புகிறேன்.

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை

“உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” என்ற தகப்பனின்

ஆசீர்வாதமான வார்த்தைகளைக்
கேட்பது என் இருதயத்தின் விருப்பம்,

வட்டம்: ஆம் தீர்மானிக்கவில்லை